சென்னை
மதுரை
கோவை
திருச்சி
திருநெல்வேலி
வேலூர்
தருமபுரி
புது தில்லி
விழுப்புரம்
நாகப்பட்டினம்
http://www.dinamani.com

# தினமணி

வெள்ளிக்கிழமை
19 செப்டம்பர் 2025
சென்னை
14 பக்கங்கள் ரூ.9




# நேபாளத்தில் அமைதியை மீட்டெடுக்க ஆதரவு

## பிரதமர் மோடி உறுதி

**புது தில்லி, செப். 18:** நேபாள இடைக்கால அரசின் பிரதமர் சுசீலா கார்கியுடன் பிரதமர் நரேந்திர மோடி வியாழக்கிழமை தொலைபேசி மூலம் பேசினார். அப்போது, நேபாளத்தில் அமைதி-ஸ்திரத்தன்மையை மீட்டெடுக்கும் அவரது முயற்சிகளுக்கு இந்தியாவின் வலுவான ஆதரவை பிரதமர் மோடி உறுதி செய்தார்.

நேபாள இடைக்கால பிரதமராக அண்மையில் பதவியேற்ற சுசீலா கார்கியுடன் தொலைபேசியில் உரையாடியுள்ள முதல் வெளிநாட்டுத் தலைவர் பிரதமர் மோடி ஆவார்.

அண்டை நாடான நேபாளத்தில் ஆட்சியாளர்களின் ஊழல் மற்றும் சமூக ஊடகங்களுக்கு விதிக்கப்பட்ட தடையால் வெகுண்டெழுந்த இளம் தலைமுறையினர், கடந்த செப்டம்பர் 8-ஆம் தேதி பெரும் போராட்டத்தில் ஈடுபட்டனர். அப்போது, காவல் துறையினரால் 19 பேர் சுட்டுக் கொல்லப்பட்டதால் பெரும் வன்முறை வெடித்தது.





நாடாளுமன்றம், உச்சநீதிமன்றம், அதிபர், பிரதமர், அமைச்சர்கள்-அரசியல்வாதிகளின் வீடுகள், அரசுக் கட்டடங்கள், காவல் நிலையங்கள் மற்றும் வணிக வளாகங்கள் சூறையாடப்பட்டு, தீக்கிரையாக்கப்பட்டன. வன்முறையில் 72 பேர் உயிரிழந்தனர்.

இந்த வன்முறை எதிரொலியாக, பிரதமர் பதவியில் இருந்து கே.பி. சர்மா ஒலி கடந்த செப்டம்பர் 9-ஆம் தேதி ராஜிநாமா செய்தார். பிரதமர் விலகலால் அரசியல் குழப்பம் ஏற்பட்ட நிலையில், போராட்டக் குழுவினர் உள்பட பல்வேறு தரப்பினருடன் ஆலோசித்து, நேபாள உச்சநீதிமன்ற முன்னாள் தலைமை நீதிபதி சுசீலா கார்கியை (73) இடைக்கால பிரதமராக அதிபர் ராமசந்திர பெளடேல் கடந்த செப்டம்பர் 12-ஆம் தேதி நியமித்தார்.

நேபாளத்தின் முதல் பெண் பிரதமர் என்ற பெருமையுடன் அன்றைய தினமே சுசீலா கார்கி பதவியேற்றுக் கொண்டார். அவரது பரிந்துரையின்பேரில் நாடாளுமன்ற கீழவை கலைக்கப்பட்டது. அடுத்த ஆண்டு மார்ச் 5-ஆம் தேதி புதிதாக நாடாளுமன்றத் தேர்தல் நடைபெறவுள்ளது.

**பிரதமர் மோடி உறுதி:** இந்தச் சூழலில், சுசீலா கார்கியுடன் பிரதமர் மோடி வியாழக்கிழமை தொலைபேசி மூலம் பேசினார். இது தொடர்பாக அவர் வெளியிட்ட எக்ஸ் பதிவில், 'நேபாள இடைக்கால அரசின் பிரதமர் சுசீலா கார்கி உடனான உரையாடல் ஆக்கபூர்வமாக அமைந்தது. சமீபத்திய வன்முறையில் நேரிட்ட உயிரிழப்புகளுக்கு ஆழ்ந்த இரங்கல் தெரிவித்ததுடன், அமைதி-ஸ்திரத்தன்மையை மீட்டெடுக்கும் அவரது முயற்சிகளுக்கு இந்தியாவின் வலுவான ஆதரவையும் உறுதி செய்தேன்.

நேபாள தேசிய தினம் வெள்ளிக்கிழமை (செப். 19) கொண்டாடப்படும் நிலையில், அவருக்கும் நாட்டு மக்களுக்கும் வாழ்த்து தெரிவித்தேன்' என்று குறிப்பிட்டுள்ளார்.

### 'தேர்தலை நடத்த உயர் முன்னுரிமை'

இரு பிரதமர்கள் உரையாடல் குறித்து நேபாள வெளியுறவு அமைச்சகம் வெளியிட்ட செய்திக் குறிப்பில் கூறப்பட்டுள்ளதாவது:

நேபாளத்தின் முதல் பெண் பிரதமர் என்ற வரலாற்றுச் சிறப்புமிக்க நியமனத்துக்காக பிரதமர் சுசீலா கார்கிக்கு பிரதமர் மோடி வாழ்த்து தெரிவித்தார். 'இளைஞர்களின் விருப்பத்தைப் பிரதிபலிக்கும் வகையில், ஊழலற்ற நிர்வாகம் மற்றும் பொறுப்புடைமைக்கான வலுவான உறுதிப்பாட்டுடன் தேர்தலை நடத்துவதே இடைக்கால அரசின் உயர் முன்னுரிமையாகும். இந்தியா-நேபாளம் இடையிலான நெருங்கிய, வரலாற்றுச் சிறப்புமிக்க உறவுகள், இருதரப்பு மக்கள் ரீதியிலான தொடர்புகளால் தொடர்ந்து வலுப்படும்' என்று பிரதமர் மோடியிடம் கார்கி குறிப்பிட்டார்.

நேபாள அரசின் முன்னுரிமைகளுக்கு இந்தியாவின் முழு ஆதரவு-ஒத்துழைப்பை பிரதமர் மோடி உறுதி செய்தார். பரஸ்பர பலன்களுக்காக, இருதரப்பு ஒத்துழைப்பு மற்றும் கூட்டாண்மைக்கு வலுவான உத்வேகத்தைத் தொடர இரு பிரதமர்களும் உறுதிபூண்டனர். நேபாளத்துக்கான இந்தியாவின் ஆதரவை வரவேற்ற கார்கி, பிரதமர் மோடிக்கு பிறந்த நாள் வாழ்த்து தெரிவித்தார் என்று அதில் கூறப்பட்டுள்ளது.

## தலைமைத் தேர்தல் ஆணையர் மீது ராகுல் காந்தி குற்றச்சாட்டு

**புது தில்லி, செப். 18:** பாஜகவின் வாக்குத் திருட்டுக்கு தேர்தல் ஆணையம் உடந்தையாக இருப்பதாகக் குற்றஞ்சாட்டி வந்த எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் காந்தி, 'வாக்குத் திருடர்களை தலைமைத் தேர்தல் ஆணையர் ஞானேஷ்குமார் பாதுகாக்கிறார்' என்ற பகிரங்க குற்றச்சாட்டை வியாழக்கிழமை முன்வைத்தார்.

(விரிவான செய்தி உள்ளே)

## பாகிஸ்தான்-சவூதி பாதுகாப்பு ஒப்பந்தம்: இந்தியா ஆய்வு

**புதுதில்லி, செப். 18:** பாகிஸ்தான்-சவூதி அரேபியா மேற்கொண்டுள்ள பாதுகாப்பு ஒப்பந்தம் குறித்து ஆய்வு செய்து வருவதாக வெளியுறவு அமைச்சகம் தெரிவித்துள்ளது.



ரியாத்தில் சவூதி அரேபியா பட்டத்து இளவரசரும் பிரதமருமான முகமது பின் சல்மானுடன் பாதுகாப்பு ஒப்பந்தம் மேற்கொண்ட பாகிஸ்தான் பிரதமர் ஷாபாஸ் ஷெரீஃப்.

அண்மையில் சவூதி அரேபியாவுக்குச் சென்ற பாகிஸ்தான் பிரதமர் ஷாபாஸ் ஷெரீஃப் பாதுகாப்பு ஒப்பந்தம் ஒன்றை அந்நாட்டு பட்டத்து இளவரசரும் பிரதமருமான முகமது பின் சல்மானுடன் மேற்கொண்டார்.

அதன்படி பாகிஸ்தான்-சவூதி அரேபியா ஆகிய இரு நாடுகளில் எந்த நாட்டின் மீது ராணுவ நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டாலும், அது மற்றொரு நாட்டின் மீதும் மேற்கொள்ளப்பட்டதாகவே கருதப்படும் என்று கூட்டறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தற்போதைய சர்வதேச சூழலில் இந்தியாவைத் தவிர வேறு எந்த நாடும் பாகிஸ்தான் மீது ராணுவத் தாக்குதல் நடத்தவில்லை. எனவே, இந்தியாவுக்கு எதிராக சவூதி அரேபியாவை தங்களுடன் கூட்டு சேர்க்கும் நோக்கில் பாகிஸ்தான் இந்த ஒப்பந்தத்தை மேற்கொண்டுள்ளதாகத் தெரிகிறது.

பாகிஸ்தான் பயங்கரவாதிகள் இந்தியா மீது தாக்குதல் நடத்த முயற்சித்தால் ஆபரேஷன் சிந்தூர் நடவடிக்கை மீண்டும் தொடங்கப்படும் என்று இந்தியா ஏற்கெனவே எச்சரித்துள்ளது. இந்தச் சூழ்நிலையில் சவூதி அரேபியாவுடன் பாகிஸ்தான் மேற்கொண்டுள்ள பாதுகாப்பு ஒப்பந்தம் முக்கியத்துவம் பெற்றுள்ளது.

தில்லியில் வியாழக்கிழமை இது தொடர்பாக வெளியுறவு அமைச்சக செய்தித் தொடர்பாளர் ரண்தீர் ஜெய்ஸ்வால் கூறியதாவது:

தேசப் பாதுகாப்பு விஷயத்தில் எவ்வித சமரசத்துக்கும் இடமில்லை என்பதில் மத்திய அரசு உறுதியாக உள்ளது. பாகிஸ்தான்-சவூதி அரேபியா பாதுகாப்பு ஒப்பந்தம் தொடர்பான செய்தி அரசின் கவனத்துக்கு வந்துள்ளது. இரு நாடுகளும் மிக நீண்டகாலப் பேச்சு நடத்தி ஓர் ஒப்பந்தத்தை மேற்கொண்டுள்ளதாகத் தெரிகிறது. இது நமது தேசப் பாதுகாப்பு, பிராந்திய, சர்வதேச ஸ்திரத்தன்மையில் ஏதாவது தாக்கத்தை ஏற்படுத்துமா என்பது குறித்து ஆய்வு செய்யப்படும் என்றார்.

## அதிமுக விவகாரத்தில் அமித் ஷா தலையிடவில்லை

**சேலம், செப். 18:** அதிமுக உள்கட்சி விவகாரத்தில் மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா தலையிடவில்லை என்று அக்கட்சியின் பொதுச் செயலர் எடப்பாடி கே.பழனிசாமி தெரிவித்தார்.



சேலம், ஓமலூரில் வியாழக்கிழமை அவர் செய்தியாளர்களிடம் கூறியதாவது:

நான் தில்லி சென்று வந்தபிறகு பல்வேறு விமர்சனங்கள் வந்துள்ளன. உள்துறை அமைச்சர் அமித் ஷாவை சந்திக்கிறேன் என ஏற்கெனவே தெரிவித்துவிட்டுதான் சென்றேன். அரசு காரில் சென்று குடியரசு துணைத் தலைவர் சி.பி.ராதாகிருஷ்ணனைச் சந்தித்துவிட்டு உள்துறை அமைச்சரையும் சந்தித்தேன்.

அமித் ஷாவை அவரது வீட்டில் சந்தித்துவிட்டு, வெளியே வந்தபோது கைக்குட்டையால் எனது முகத்தை துடைத்ததை, நான் முகத்தை மறைத்துச் சென்றதாக சில ஊடகங்கள் அவதூறாகச் செய்தி வெளியிட்டன. இது எந்த விதத்தில் நியாயம்? இதையே முதல்வரும் குறிப்பிட்டுப் பேசுகிறார். முதல்வர் தரம்தாழ்ந்து பேசுவது ஏற்புடையதல்ல.

**நீக்கப்பட்டவர்கள் குறித்து கேட்க வேண்டாம்:** அதிமுக உள்கட்சி விவகாரத்தில் தலையிட மாட்டேன் என உள்துறை அமைச்சர் அமித் ஷா ஏற்கெனவே திட்டவட்டமாகக் கூறியுள்ளார். தில்லியில் அவரைச் சந்தித்தபோதுகூட அதிமுக உள்கட்சி விவகாரங்கள் குறித்து பேசப்படவில்லை.

எனவே, கட்சியிலிருந்து நீக்கப்பட்டவர்கள் குறித்து இனி கேட்க வேண்டாம். கட்சியின் கட்டுப்பாட்டை யார் மீறினாலும் ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

நான் தென்மாவட்டங்களில் சுற்றுப்பயணம் செய்தபோது, பசும்பொன் முத்துராமலிங்கத் தேவருக்கு பாரத ரத்னா கொடுக்க வலியுறுத்த வேண்டுமென என்னிடம் கோரிக்கை வைத்தனர். அதன் அடிப்படையில்தான் உள்துறை அமைச்சர் அமித் ஷாவிடம் நான் அந்தக் கோரிக்கையை வைத்தேன் என்றார்.



# காஸா விவகாரம்: முதல்வர் வேண்டுகோள்



**சென்னை, செப். 18:** காஸா விவகாரத்தில் இந்தியா உறுதியான நிலைப்பாட்டுடன் இருக்க வேண்டுமென முதல்வர் மு.க.ஸ்டாலின் கேட்டுக் கொண்டுள்ளார்.

இதுகுறித்து 'எக்ஸ்' தளத்தில் அவர் வியாழக்கிழமை வெளியிட்ட பதிவு: உயிருக்குப் போராடும் காஸாவை உலகம் கண்டுகொள்ளாமல் இருக்கக் கூடாது. காஸாவில் அரங்கேறி வரும் கொடுமைகளை, வார்த்தைகளால் விவரிக்க முடியாத அளவுக்கு அதிர்ந்து போயிருக்கிறேன்.

பச்சிளம் குழந்தைகளின் அழுகுரல், பட்டினியில் தவிக்கும் சிறார்கள், மருத்துவமனைகள் மீது நடத்தப்படும் குண்டு வீச்சு, ஐநா, விசாரணை ஆணையமே அங்கு இனப்படுகொலை நடந்து வருவதாக அளித்துள்ள அறிக்கை ஆகிய அனைத்தும், எந்த மனிதரும் எப்போதும் அனுபவிக்கக் கூடாத துன்பங்களை அங்கு அனுபவித்து வருவதையே காட்டுகிறது. அப்பாவி மனித உயிர்கள் இப்படி கொல்லப்படும்போது, அமைதியாக இருக்கக் கூடாது. நம் ஒவ்வொருவரின் மனசாட்சியும் விழிக்க வேண்டும். இந்தியா உறுதியான நிலைப்பாட்டுடன் பேச வேண்டும். உலகம் மொத்தமும் ஒன்றிணைய வேண்டும். இந்தக் கொடூரத்தை இப்போதே தடுத்து நிறுத்த நாம் அனைவரும் இணைந்து செயல்பட வேண்டும் என்று பதிவிட்டுள்ளார்.

### தொகுப்பூதிய முரண்பாடு

# தமிழக அரசுக்கு சமக்ர சிக்ஷா ஊழியர்கள் கோரிக்கை

**சென்னை, செப். 18:** தொகுப்பூதிய முரண்பாடுகளைக் களைய வேண்டும் என ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வித் திட்டத்தின் (சமக்ர சிக்ஷா) கீழ் பணியாற்றும் ஊழியர்கள் தமிழக அரசுக்கு கோரிக்கை விடுத்துள்ளனர்.

இது தொடர்பாக தமிழ்நாடு அண்ணா கணக்காளர்கள் சங்கத்தின் பொதுச் செயலாளர் இல.பிரபு வெளியிட்ட அறிக்கையில் கூறியிருப்பதாவது:

தமிழகத்தில் ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வித் திட்டத்தின் கீழ்கடந்த 15 ஆண்டுகளாக கணக்காளர்கள், கணினி விவரப் பதிவாளர் கள், கணினி நிரல் தொகுப்பாளர்கள், கட்டடப் பொறியாளர்கள் உள்பட 1,428 பேர் முழு நேர தொகுப்பூதியப் பணியாளர்களாக பணி யாற்றி வருகின்றனர். இதில் பெரும்பாலானோர் பெண் ஊழியர்கள் ஆவர்.

தமிழக அரசின் பல்வேறு அரசுத் துறைகளில் பணியாற்றி வரும் தொகுப்பூதிய ஊழியர்களிடையே எந்த வகையான ஊதிய பாகுபாடும் இல்லாத நிலையில், பள்ளிக் கல்வித் துறையில் ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வித் திட்டத்தில் உள்ள ஊழியர்களிடையே தொகுப்பூதிய முரண்பாடுகள் உள்ளன. அதாவது ஒரே கல்வித் தகுதியில் பணிபுரியும் ஊழியர்கள் வெவ்வேறு தொகுப்பூதியம் பெற்று வருகிறார்கள். இந்த ஊதிய முரண்பாடுகளை களைந்து அதிகபட்ச தொகுப்பூதிய நிர்ணயம் செய்யும் அதிகாரம் பெற்றவர் சமக்ர சிக்ஷா இயக்குநர் ஆவார்.

ஆனால் எங்களது ஊதிய முரண்பாடுகள் குறித்து கடந்த மூன்று ஆண்டுகளாக சமக்ர சிக்ஷா இயக்குநருக்கு கோரிக்கை விடுத்தும் எந்தப் பலனும் இல்லை.

அதேபோன்று தமிழக முதல்வரின் தனிப்பிரிவு, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர், பள்ளிக் கல்வித் துறை அதிகாரிகள் உள்ளிட்டோரிடம் இது தொடர்பாக மனு அளித்தும் எங்களது தொகுப்பூதிய முரண்பாடு களையப்படவில்லை.

எனவே, இது குறித்து தமிழக முதல்வர், பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் தலையிட்டு ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வித் திட்டத்தின் கீழ் பணியாற்றும் ஊழியர்களின் தொகுப்பூதிய முரண்பாடுகளை களைந்து அதிகபட்ச ஊதியம் நிர்ணயிக்க சமக்ர சிக்ஷா இயக்குநருக்கு உத்தரவிட வேண்டும் என அதில் தெரிவித்துள்ளார்.

# பொருளாதார மேம்பாட்டுக்கு கடல்வழி வணிக ஊக்குவிப்பு அவசியம்

### அமைச்சர் எ.வ.வேலு

**சென்னை, செப். 18:** தமிழகம் ஒரு டிரில்லியன் டாலர் பொருளாதாரத்தை எட்ட, கடல் வழி வணிகத்தை மேலும் ஊக்குவிக்க வேண்டியது அவசியம் என்று பொதுப் பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறுதுறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு வலியுறுத்தினார்.

சென்னையில் வியாழக்கிழமை நடைபெற்ற நீலப் பொருளாதார மாநாட்டை அமைச்சர் எ.வ. வேலு தொடங்கி வைத்தார். அதில் அவர் பேசியதாவது:

தமிழ்நாட்டின் கடற்கரை பிற மாநில கடற்கரைகளைப் போன்று இல்லாமல், ஒரு தீபகற்ப கடற்கரைப் பகுதி. பன்னாட்டுக் கப்பல்கள் செல்லும் வழித்தடத்துக்கு மிக அருகில் கடற்கரை கொண்ட பகுதியாக உள்ளது.

தமிழ்நாடு மிகப்பழைமையான கடல்சார் வரலாற்றைக் கொண்டது. கப்பல் கட்டுதலில் மிகச்சிறந்த தொழில்நுட்பங்கள், பழங்காலத்தில் இருந்தே தமிழ்நாட்டில் இருந்ததற்கான சான்றுகள் உள்ளன.




சென்னையில் வியாழக்கிழமை நடைபெற்ற கடல் வழி வணிகத்தை ஊக்குவித்தல் தொடர்பான நீலப் பொருளாதார மாநாட்டை தொடங்கி வைத்த பொதுப்பணி, நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் அமைச்சர் எ.வ.வேலு. உடன் சென்னை மற்றும் காமராஜர் துறைமுக ஆணையத்தின் தலைவர் சுனில் பாலிவால், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறைச் செயலர் ஆர்.செல்வராஜ், தமிழ்நாடு கடல்சார் வாரிய முதன்மைச் செயலர் டி.என்.வெங்கடேஷ், இந்திய தொழில் கூட்டமைப்பின் தமிழ்நாடு துணைத் தலைவர் சி.தேவராஜன்.

ஒரு டிரில்லியன் டாலர் பொருளாதாரத்தை எட்ட வேண்டும் என்ற இலக்குடன் பயணத்துக் கொண்டிருக்கும் தமிழகத்துக்கு நீலப் பொருளாதாரம் அதாவது கடல் வழி வணிகத்தை மேலும் ஊக்குவிக்க வேண்டியது தலையாய கடமையாகும். அதற்கு வணிகத் துறைமுகங்கள், மீன்பிடித் துறைமுகங்கள், கடல்சார் சுற்றுலா மேம்பாடு, கப்பல் கட்டுதல் மற்றும் பழுதுபார்த்தல் ஆகிய துறைகளில் மேலும் முன்னேற்றமடைய திட்டங்களை வகுக்க வேண்டும்.

கடல்மார்க்கமாக கப்பல்கள் மூலம் கொண்டு செல்லப்படும் சரக்குகளின் கட்டணமானது ரயில் அல்லது சாலை மார்க்கமாக எடுத்துச் செல்லப்படும் கட்டணத்துடன் ஒப்பிடும்போது குறைவு. மேலும், சுற்றுப்புறச் சூழல் மாசின்றி சரக்குகளை ஓரிடத்திலிருந்து மற்றோர் இடத்துக்குக் கொண்டு செல்ல இயலும்.

தமிழ்நாட்டில் கடற்கரைப் பகுதிகளுக்கு ரயில் இணைப்பும் போதிய அளவில் உள்ளது. இதனை துறைமுக மேம்பாட்டாளர்கள் கருத்தில் கொண்டு துறைமுகங்கள் அமைக்கவும், தொழில் தொடங்கவும் முன்வர வேண்டும் என்றார் அமைச்சர் எ.வ.வேலு.

இந்த மாநாட்டில், சென்னை மற்றும் காமராஜர் துறைமுக ஆணையத்தின் தலைவர் சுனில் பாலிவால், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறுதுறைமுகங்கள் துறைச் செயலர் இரா.செல்வராஜ், தமிழ்நாடு கடல்சார் வாரிய துணைத் தலைவர் மற்றும் தலைமை செயல் அலுவலர் டி.என். வெங்கடேஷ், துறைமுக மேம்பாட்டாளர்கள் உள்பட பலர் பங்கேற்றனர்.

# சென்னையில் மின் விபத்துகளை தவிர்க்க சீரமைப்புப் பணி தீவிரம்

### மின்வாரியத் தலைவர் ஜெ.ராதாகிருஷ்ணன்

**சென்னை, செப். 18:** சென்னை மாநகர் மற்றும் புறநகர் பகுதிகளில் மின் விபத்துகளைச் சீரமைப்பதற்கான பணிகள் தீவிரமாக மேற்கொள்ளப்பட்டு வருவதாக மின்வாரியத் தலைவர் ஜெ.ராதாகிருஷ்ணன் தெரிவித்தார்.

சென்னை மாநகர், புறநகர் பகுதிகளில் பெரும்பாலான இடங்களில் புதை மின்வடங்கள் மூலமும் பிற பகுதிகளில் மேல்நிலைக் கம்பிகள் மூலமும் மின்விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. இந்த நிலையில் சாலை தோண்டும் பணிகளின்போது, பல இடங்களில் புதைமின் வடங்கள் சேதப்படுத்தப்படுகின்றன.

சேதமாகும் மின்வடங்கள் அப்படியே விட்டு செல்லப்படுவதால், மழைக் காலங்களில் மின் விபத்துகள் ஏற்படுகின்றன.

கடந்த சில நாள்களுக்கு முன்பு கண்ணகி நகரில் பெண் தூய்மைப் பணியாளர் மின்சாரம் பாய்ந்து உயிரிழந்ததைத் தொடர்ந்து சென்னை மாநகர், புறநகர் பகுதிகளில் சேதமடைந்த புதைமின் வடங்களை கணக்கெடுக்க சிறப்புக் குழுக்கள் அமைத்து பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இதுகுறித்து மின்வாரியத் தலைவர் ஜெ.ராதாகிருஷ்ணன் கூறியதாவது: தமிழகம் முழுவதும் மின் விபத்து தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. குறிப்பாக, சென்னையில் மின் விபத்தை ஏற்படுத்தும் வகையிலான புதைமின் வடங்கள் மற்றும் மின்விபத்து பகுதிகளைக் கண்டறிய தனி குழுக்கள் அமைக்கப்பட்டன.

கடந்த 2 வாரங்களுக்கு மேலாக இந்தக் குழுக்கள் நடத்திய ஆய்வில், 700 புதைமின்வட சேதங்கள் உள்பட 3000-க்கும் மேற்பட்ட மின்விபத்துகள் ஏற்படும் பகுதிகள் கண்டறியப்பட்டன.

இதில், புதைமின்வட சேதங்கள் உள்பட 1,500-க்கும் மேற்பட்ட மின் உபகரண சேதங்கள் கண்டறியப்பட்டு சரிசெய்யப்பட்டுள்ளன.

இன்னும் ஒரு வாரத்துக்குள் மீதமுள்ள சேதங்களும் சரிசெய்யப்பட்டு மின் விபத்து உயிரிழப்புகள் முற்றிலும் தடுக்கப்படும் என்றார் அவர்.

# சுதந்திரப் போராட்ட வீரர்கள் – முன்னாள் ராணுவத்தினருக்கு ஓய்வூதியம் உயர்வு

### அரசாணை வெளியீடு

**சென்னை, செப். 18:** சுதந்திரப் போராட்ட வீரர்கள், முன்னாள் ராணுவ வீரர்களுக்கான ஓய்வூதியத்தை உயர்த்தி தமிழக அரசு அரசாணை வெளியிட்டுள்ளது.

இதுகுறித்து பொதுத் துறை சார்பில் வெளியிடப்பட்ட உத்தரவு: சுதந்திர தினத்தையொட்டி, கோட்டை கொத்தளத்தில் தேசியக் கொடியை ஏற்றி வைத்து உரையாற்றிய முதல்வர் மு.க.ஸ்டாலின், சுதந்திரப் போராட்ட வீரர்கள், முன்னாள் ராணுவத்தினருக்கான ஓய்வூதியம் ரூ.21 ஆயிரத்தில் இருந்து ரூ.22 ஆயிரமாக உயர்த்தி வழங்கப்படும் என்று அறிவித்தார். இதனை செயல்படுத்தும் வகையில், ஓய்வூதியம், குடும்ப ஓய்வூதியம் ஆகியன உயர்த்தப்படுகிறது. இதற்கு கூடுதலாக செலவாகும் ரூ.27.63 லட்சத்துக்கு ஒப்புதல் அளிக்கப்படுகிறது என்று அரசின் உத்தரவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேபோன்று, வீரபாண்டிய கட்டபொம்மன், மருது சகோதரர்கள், முத்துராமலிங்க விஜயரகுநாத சேதுபதி, வ.உ.சிதம்பரனார் ஆகியோரின் வழித்தோன்றல்களுக்கு வழங்கப்பட்டு வரும் சிறப்பு ஓய்வூதியம் ரூ.10 ஆயிரத்து 500-லிருந்து ரூ.11 ஆயிரமாக வழங்கப்படும் என்றும் தமிழக அரசு வெளியிட்ட மற்றொரு உத்தரவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.


**பாங்க் ஆஃப் பரோடா / बैंक ऑफ़ बड़ौदा / Bank of Baroda**

**சௌகார்பேட் கிளை**
பழைய எண்.25, புது எண். 45, நட்டன் புளூர், இருசப்ப மேஸ்திரி தெரு, பார்க் டவுன் போஸ்ட், சென்னை - 600001
தொலைபேசி : 044 23454 307/308/309

**சுவாதீன அறிவிப்பு**

இடம் : சென்னை, தேதி : 18.09.2025 — அங்கீகாரம் பெற்ற அலுவலர், பாங்க் ஆஃப் பரோடா

**கடன் மீட்பு தீர்ப்பாயம்-III, சென்னை**
6வது தளம், கூடுதல் அலுவலக கட்டிடம், சாஸ்திரி பவன், ஹாடோஸ் ரோடு, நுங்கம்பாக்கம், சென்னை - 600 006.

TRC எண்.44/2024

இந்தியன் வங்கி, சௌகார்பேட்டை கிளை ...சான்றிதழ் வைத்திருப்பவர்
எதிரிடை
M/s. கிரீன் ஸ்டூடியோ மற்றும் மற்றொருவர் ...சான்றிதழ் கடன்தாரர்கள்

**கோரிக்கை அறிவிப்பு**

கடன் பாக்கி வசூலிப்பு மற்றும் திவால் சட்டம் 1993-ன் பிரிவுகள் 25-28-ன் கீழ் (அவ்வப்போது திருத்தப்பட்டது) மற்றும் வருமான வரிச் சட்டம் 1961 இரண்டாவது அட்டவணையின் 2வது விதியின் கீழ் அறிவிப்பு

பெறுநர், (1) M/s. கிரீன் ஸ்டூடியோ, பிரதிநிதியாக இதன் மொத்த உரிமையாளர் : திரு. K. ராஜ் விக்னேஷ், எண்.10, வாசுதேவபுரம் தெரு, மேற்கு மாம்பலம், சென்னை - 600 033 & M/s. கிரீன் ஸ்டூடியோ, பிரதிநிதியாக இதன் மொத்த உரிமையாளர் : திரு. K. ராஜ் விக்னேஷ், பழைய எண்.73A, புதிய எண்.9, 2வது தளம், A-பிளாக், 5வது தெரு, அண்ணா நகர் கிழக்கு, சென்னை. (2) G. கதிரேசன், எண்.10, வாசுதேவபுரம் தெரு, மேற்கு மாம்பலம், சென்னை - 600 033 & G. கதிரேசன், எண்.14, பசுபதி தெரு, கோத்தாரி நகர், ராமாபுரம், சென்னை.

1. 08.10.2023 தேதியிட்ட OA எண்.133/2013 உத்தரவின்படியான நிபந்தனைகளின்படி உங்களிடமிருந்து வசூலிக்கப்பட வேண்டியுள்ள தொகையான ரூ.1,29,63,194.17 ...

4. மாற்றுமுறை சேவை மூலம் பட்டுவாடா முடிவடைய வேண்டியதால், ஆங்கிலம் மற்றும் தமிழ் பதிப்பின் ஒரு இதழில் கோரிக்கை அறிவிப்பை பத்திரிக்கை பரிசுரம் செய்ய தீர்ப்பாயம் உத்தரவிட்டுள்ளது. நீங்கள் ஆஜராவதற்காக அடுத்த விசாரணை தேதி 30.09.2025 அன்று முற்பகல் 11.00 மணிக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

17 செப்டம்பர் 2025 அன்று எனது கையொப்பத்துடன் தீர்ப்பாயத்தின் முத்திரையிடப்பட்டது.

(E. சசிகுமார்)
மீட்பு அதிகாரி.

**UNIMONI FINANCIAL SERVICES LIMITED**
RO: N.G. 12 & 13 Ground Floor, North Block, Manipal Centre, Dickenson Road, Bangalore - 560 042. CIN No.U85110KA1995PLC018175

**பொது அறிவிப்பு**

இதன் மூலம் பொது மக்களுக்கு தெரிவிப்பது என்னவென்றால் யூனிமோனி ஃபினான்ஷியல் சர்வீசஸ் லிமிடெட் மூலம் அடமானம் வைக்கப்பட்ட தங்க ஆபரணங்கள் 10.00 am-க்கு, **23.09.2025** அன்று கீழே கொடுக்கப்பட்டுள்ள அந்தந்த மையங்களில் ஏலத்தில் விடப்படும். ஏலத்தில் விடப்படக்கூடிய தங்க ஆபரணங்கள் அவர்களின் கடனைச் செலுத்த தவறிய எங்கள் பல்வேறு வாடிக்கையாளர்களின் கடன் கணக்கை சேர்ந்தவைகள். இந்தக் கடன் வாங்கியவர்களுக்கு ஏலம் பற்றிய அறிவிப்புகள் முறைபாக வழங்கப்பட்டுள்ளன. ஏலத்தில் விடப்படக்கூடிய தங்க ஆபரணங்கள் கிளையின் பெயருடன் கீழே குறிப்பிட்டுள்ள பல்வேறு வாடிக்கையாளர்களின் தவணை கடந்த கடன் கணக்கை சேர்ந்தவைகள்.

**Auction Centre Address & Loan Nos: ADYAR (CHV - First Floor, Eastlyn Building No 40 /37 - 1A, Adayar, MG Road - 600041,Contact:9840087218)2121374, ANNANAGAR (CAN - First Floor, AD 5/2, Lind Avenue, Anna Nagar West, Tower Metro - 600 040, Contact:8129702293) , 2179549, 2175530, MOUNT ROAD (CHE -No 142, Ground Floor, U.H Center, Greams Road -600006, Contact:9840087217)2177483, 2163546, PERAMBUR (CPR - Shop No 68, Madhavaram High Rperambur -600011,Contact No:9840287217), 2173717, TIRUVALLUR (TVR - No 95, Ground Floor, Jn Road, Thulasi Aranganathan Maligai, Opp Taluk Office - 602 001, Contact No:8056220790), 2157384, 2193509, 2193514, KANCHIPURAM (KAC - Building No: 508, 509, Gandhi Road - 631 501, Contact : 9790936110) 2120374.**

(Reserves the right to alter the number of accounts to be auctioned &/ postpone / cancel the auction without any prior notice.)

**கடன் மீட்பு தீர்ப்பாயம்-III, சென்னை**
6வது தளம், கூடுதல் அலுவலக கட்டிடம், சாஸ்திரி பவன், ஹாடோஸ் ரோடு, நுங்கம்பாக்கம், சென்னை - 600 006.

TRC எண்.45/2024

இந்தியன் வங்கி, சௌகார்பேட்டை கிளை ...சான்றிதழ் வைத்திருப்பவர்
எதிரிடை
M/s. ஸ்ரீ மீனாட்சி ஃபவுண்டேஷன் & மற்றொருவர் ...சான்றிதழ் கடன்தாரர்கள்

**கோரிக்கை அறிவிப்பு**

கடன் பாக்கி வசூலிப்பு மற்றும் திவால் சட்டம் 1993-ன் பிரிவுகள் 25-28-ன் கீழ் (அவ்வப்போது திருத்தப்பட்டது) மற்றும் வருமான வரிச் சட்டம் 1961 இரண்டாவது அட்டவணையின் 2வது விதியின் கீழ் அறிவிப்பு

1. 10.09.2013 தேதியிட்ட OA எண்.135/2013 உத்தரவின்படியான நிபந்தனைகளின்படி உங்களிடமிருந்து வசூலிக்கப்பட வேண்டியுள்ள தொகையான ரூ.93,45,220.72 ...

3. சான்றிதழ் கடன்தாரர் எண்.1 மற்றும் 2-க்கு கோரிக்கை அறிவிப்பு பட்டுவாடா ஆகாமல் திரும்பிவிட்டது.

4. மாற்றுமுறை சேவை மூலம் பட்டுவாடா முடிவடைய வேண்டியதால், ஆங்கிலம் மற்றும் தமிழ் பதிப்பின் ஒரு இதழில் கோரிக்கை அறிவிப்பை பத்திரிக்கை பரிசுரம் செய்ய தீர்ப்பாயம் உத்தரவிட்டுள்ளது. நீங்கள் ஆஜராவதற்காக அடுத்த விசாரணை தேதி 30.09.2025 அன்று முற்பகல் 11.00 மணிக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

17 செப்டம்பர் 2025 அன்று எனது கையொப்பத்துடன் தீர்ப்பாயத்தின் முத்திரையிடப்பட்டது.

(P. பிரேம்குமார்)
மீட்பு அதிகாரி.

**SUNDARAM HOME** — Sundaram Finance Group —

பதிவு அலுவலகம்: எண் 21, பட்டுல்லாஸ் சாலை, சென்னை-600002.
பெருநிறுவன அலுவலகம்: சுந்தரம் டவர்ஸ், எண் 46, ஒயிட்ஸ் சாலை, சென்னை-600014.
கிளை அலுவலகம்: சர்வே எண் 196/2 பாகம், HIG பிளாட் எண் 2712, முதல் தளம், காக்களூர் பிரதான சாலை, TNHB, காக்களூர், திருவள்ளூர் - 602001.

**சுவாதீன அறிவிப்பு**

**பிரிவு 13(4)-இன்கீழ் வழங்கப்பட்ட பிற்சேர்க்கை IV அதனுடன் கடனீட்டுச் சொத்து (அமலாக்கம்) விதிகள் 2002, விதி 8(1) ஆகியவற்றின்படி**

சுந்தரம் ஹோம் ஃபைனான்ஸ் லிமிடெட் நிறுவனத்தின் அதிகாரப்பூர்வ அலுவலர் கடனீட்டுச் சொத்துக்களை ரொக்கமாக்குதல் மற்றும் சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கச் சட்டம் (SARFAESI) 2002, பிரிவு 13(12)-இன் கீழும் அதனுடன் கடனீட்டுச் சொத்து (அமலாக்கம்) விதிகள் 2002, விதி 3-இன் கீழுள்ள உரிமைகளைப் பயன்படுத்தியும் **பிரிவு 13(2)-இன் கீழான 31.03.2025 நாளிட்ட கோரிக்கை அறிவிப்பினைக் கடன்தாரர்: திரு. விஜயகுமார் A, கூட்டுக் கடன்தாரர்: திருமதி அஸ்வினி B** ஆகியோருக்கு அனுப்பி அதில் குறிப்பிட்டுள்ள **கடன் கணக்கு எண் SKT20240075**–இன் பேரில் நிலுவையிலுள்ளதும் வர வேண்டியுள்ளதுமான **31.03.2025 நாள்படி ரூ.10,44,888/- (ரூபாய் பத்து இலட்சத்து நாற்பத்து நான்காயிரத்து எண்ணூற்று எண்பத்தெட்டு மட்டும்)** மற்றும் தொகை பெறப்படும் நாள் வரையிலான மேல்வட்டி, செலவினங்கள் மற்றும் இதர கட்டணங்கள் முதலானவை ஏதும் செலுத்தப்பட வேண்டியிருப்பின் அவை உட்பட அனைத்தையும் சேர்த்து அவ்வறிவிப்பு கிடைத்த நாளிலிருந்து 60 நாட்களுக்குள் செலுத்துமாறு கோரியிருந்தார்.

கடன்தாரர்(கள்) அத்தொகையை மேலே குறிப்பிட்டபடி செலுத்தத் தவறியபடியால் கடன்தாரர்களுக்கும் பொதுமக்களுக்கும் இதன் மூலம் தெரிவிப்பது யாதெனில், அதிகாரப்பூர்வ அலுவலர் மேற்கூறிய சட்டத்தின் பிரிவு 13(4) மற்றும் அதனுடன் SARFAESI சட்டம் விதி 8-இன் கீழ் தமக்குள்ள உரிமைகளைப் பயன்படுத்திக் கீழே குறிப்பிட்டுள்ள சொத்தை **18.09.2025** அன்று தனது சுவாதீனத்தில் எடுத்துக் கொண்டுள்ளார்.

மேற்கூறிய சட்டத்தின் பிரிவு 13, உட்பிரிவு (8)-இன்படி கடனீட்டுச் சொத்துக்களை மீட்கக் கடன்தாரருக்கு இதன் மூலம் அழைப்பு விடுக்கப்படுகிறது.

எனவே கடன்தாரர்களுக்குக் குறிப்பாகவும் பொதுமக்களுக்குப் பரவலாகவும் இதன் மூலம் எச்சரிக்கையிடுவது யாதெனில், அச்சொத்தின் மீது எந்தவொரு பேரமோ ஒப்பந்தமோ வைத்துக் கொள்ள வேண்டாம். மீறினால் அது **18.09.2025 நாள்படியான ரூ.11,90,336/- (ரூபாய் பதினொரு இலட்சத்து தொண்ணூறாயிரத்து முந்நூற்று முப்பத்தாறு மட்டும்)** மற்றும் தொகை பெறப்படும் நாள் வரையிலான மேல்வட்டி, செலவினங்கள் மற்றும் இதர கட்டணங்கள் ஏதும் செலுத்தப்பட வேண்டியிருப்பின் அவை உட்பட அனைத்தையும் சேர்த்து **சுந்தரம் ஹோம் ஃபைனான்ஸ் லிமிடெட்** நிறுவனத்துக்குச் செலுத்துவதற்குக் கட்டுப்பட்டதாகும்.

**சொத்து அட்டவணை:** இன்றியமையாப் பகுதிகள் அனைத்துடனும் கூடிய நிலம் மற்றும் கட்டடம். மொத்தப் பரப்பளவு 1294 சதுர அடி, ஏக்கர் 0.04 சென்ட் கொண்ட நிலத்தில் அடங்கியது, சர்வே எண் 224/5, பட்டா எண் 115-இன்படி மற்றும் பரப்பளவு 841 சதுர அடிக் கட்டுமானப்பரப்பு கொண்ட RCC கட்டடம் உட்பட. அமைவிடம் - எண் 02, பிளாசபாளையம் கிராமம், திருவள்ளூர் தாலுகா, திருவள்ளூர் மாவட்டம். இது திருவள்ளூர் (முன்பு காஞ்சிபுரம்) பதிவு மாவட்டம் மற்றும் திருவேலங்காடு சார்பதிவு மாவட்டத்துக்கு உட்பட்டது. **எல்லைகள் பின்வருமாறு:** வடக்கு: சர்வே எண் 224/2 - முனியன் நிலம், தெற்கு: சாலை, கிழக்கு: சர்வே எண் 224/6 - சம்பத் நிலம், மேற்கு: சர்வே எண் 228/3 - லச்சிகன் நிலம். அளவு: வடக்குப் பக்கம் - 29 அடி, தெற்குப் பக்கம் - 29 அடி, கிழக்குப் பக்கம் - 29 அடி, மேற்குப் பக்கம் - 29 அடி.

நாள்: 18.09.2025 — சுந்தரம் ஹோம் ஃபைனான்ஸ் லிட்., சார்பில் அதிகாரப்பூர்வ அலுவலர்

**சிட்டி யூனியன் வங்கி லிமிடெட்**
CUB — TRUST AND EXCELLENCE SINCE 1904
கடன் வசூல் மற்றும் நிர்வாகத் துறை
நிர்வாக அலுவலகம் : எண்.24-B, காந்தி நகர், கும்பகோணம் - 612001. மின்னஞ்சல் : crmd@cityunionbank.in
போன் : 0435-2432322, ஃபேக்ஸ் : 0435-2431746

**சொத்து சுவாதீன அறிவிப்பு (அசையா சொத்து)**

பதிவு அலுவலகம் : எண்.149, T.S.R. (பெரிய) தெரு, கும்பகோணம், தஞ்சாவூர் மாவட்டம், தமிழ்நாடு - 612 001, CIN - L65110TN1904PLC001287.
தொலைபேசி : 0435-2402322, ஃபேக்ஸ் : 0435-2431746, இணையதளம் : www.cityunionbank.com

இடம் : சோழிங்கநல்லூர், தேதி : 16-09-2025 — அதிகாரப்பூர்வ அதிகாரி

**கேன் ஃபின் ஹோம்ஸ் லிமிடெட்**
Can Fin Homes Ltd
செங்கல்பட்டு கிளை
மனை எண்.28, தரை தளம், வாயர் கிருஷ்ணசாமி தெரு, வேதாச்சலம் நகர், செங்கல்பட்டு - 603 001.
போன் : 044 - 27426466/ 7625079168
CIN NO.L85110KA1987PLC008699 — E Mail : Chengalpattu@canfinhomes.com

**சுவாதீன அறிவிப்பு (விதி 8(1)) [அசையா சொத்துக்கு]**

தேதி : 19.09.2025, இடம் : செங்கல்பட்டு — அதிகாரப்பூர்வ அதிகாரி, கேன் ஃபின் ஹோம்ஸ் லிமிடெட்


## வரி விளம்பரம்


**PUBLIC NOTICE**

**CHANGE OF NAME**

**CHANGE OF NAME**
I, **JANI ANSER BASHA,** son of Thiru Jani Basha, born on 10th September 1969, (District of Birth: Chennai), residing at No. 11, Swarna Homes 1st Floor, Teeds Garden 6th Street, Perambur, Chennai-600 011, shall henceforth be known as **ANSAR BASHA**
Jani Anser Basha
Chennai, 4th September 2025.

**CHANGE OF NAME**
I, **VEDACHALAM MAHESUWARI,** wife of Thiru Saravanan, born on 30th Apirl 1964, (District of Birth: Chennai), residing at Old No. 6, New No. 81, Kannagi Street, Avvai Nagar, Choolaimedu, Chennai-600 094, shall henceforth be known as **MAHESUWARI S**
Vedachalam Mahesuwari
Chennai, 20th August 2025.

**CHANGE OF NAME**
I, **REMYA KRISHNAN,** wife of Thiru Bijukumar B, born on 20th June 1989, (District of Birth: Kottayam - Kerala), residing at No. E4/19, 7th Cross Road, Madras Avenue, IIT Madras, Chennai-600 036, shall henceforth be known as **RAMYA KRISHNAN**
Remya Krishnan
Chennai, 26th August 2025.

**CHANGE OF NAME**
I, **SHAANU M,** son of Thiru S Mani, born on 2nd June 1994, (District of Birth: Thiruvannamalai), residing at Plot No. 129, Dyas Homes, F3, Gangai Nagar 1st Street, Iyyenchery, Urapakkam, Kancheepuram-603 210, shall henceforth be known as **AJAYKARTHI M**
Shaanu. M
Kancheepuram, 25th August 2025.

ஞாயிற்றுக்கிழமைதோறும் தினமணி கதிர் — இளமை! புதுமை! இனிமை!


Himalaya®
SINCE 1930
உங்களுக்கு பிடித்த இயற்கை தயாரிப்புகள்
இப்போது புதிய விலையில் மிகுந்த சேமிப்புடன்!
இந்தியர் நலனுக்காக இந்தியாவில் உருவான பிராண்டு
செப்டம்பர் 22, 2025 முதல் MRP-ல் மாற்றம் அமலுக்கு வருகிறது
Gentle Baby Soap 75 g ₹70 ₹62
Gentle Baby Shampoo 200 ml ₹240 ₹214
Baby Hair Oil 200 ml ₹300 ₹267
Diaper Rash Cream 50 g ₹150 ₹141
Complete Care toothpaste 150 g ₹110 ₹98
Neem & Turmeric Soap 125 g ₹68 ₹61
Anti-Hair Fall Shampoo 340 ml ₹359 ₹319
PartySmart Capsules 5 s ₹120 ₹113
Kids Orange Toothpaste 80 g ₹150 ₹133
Liv.52 Syrup 200 ml ₹250 ₹234
Rumalaya Liniment Rollon 60 ml ₹170 ₹159
Koflet Syrup 100 ml ₹125 ₹117
Gasex Tablets 100 s ₹220 ₹206
Adult Diaper Pants XL 10 s ₹650 ₹609
Pilex Tablets 60 s ₹250 ₹234
Fresh Coat 400 ml ₹630 ₹561
*MRP என்பது, திருத்தப்பட்ட GST விகித நிலைகளின் அடிப்படையில் உருவாக்கப்பட்டதாகும்; இது 22 செப்டம்பர் 2025 முதல் நடைமுறைக்கு வருகிறது.
சில நாட்களுக்கு பழைய மற்றும் புதிய MRP உள்ள பொருட்கள் சந்தையில் இருக்கும்.
18% ஜிஎஸ்டி விகிதத்திலிருந்து 5% விகிதத்திற்கு மாற்றப்படும் தயாரிப்புகளுக்கான அதிகபட்ச சில்லறை விலையில் (MRP) குறைப்பு 11.02% ஆகும்^.
GST 12% இலிருந்து 5% ஆக குறையும்போது, MRP 6.25% குறையும்^.
^ரூபாயுக்கு அருகிலான முழு எண்ணாக முறையிடப்பட்டது

# ஆன்மிக சிந்தனை

ஒருவர் முக்தி அடைய வேண்டும் என்று விரும்பினால் முதலில் ஒரு நல்ல குருவை நாட வேண்டும்.

–ரமண மகரிஷி

மனுஷர் பேசும் வீணான வார்த்தைகள் யாவையும் குறித்து நியாயத்தீர்ப்பு நாளிலே கணக்கொப்புவிக்கவேண்டும்

மத்தேயு 12:36

மேலும், (இறைநம்பிக்கையாளர்களான அவர்கள் எத்தகையவர்கள் எனில்), வீணானவற்றை விட்டு விலகியிருக்கின்றார்கள்.

(அல்குர்ஆன் 23.3)

# இன்றும் நாளையும்

## வெள்ளிக்கிழமை

(19–9–2025)

**விசுவாவசு ஆண்டு, புரட்டாசி–3**

*பிறை:* தேய்பிறை

**திதி** : திரயோதசி நள்ளிரவு 12.55 வரை பிறகு சதுர்த்தசி.

**நட்சத்திரம்** : ஆயில்யம் காலை 9.29 வரை பிறகு மகம்

**யோகம்** : மரணயோகம்

**ராகுகாலம்** : காலை 10.30 – 12.00 மணி.

**எமகண்டம்** : பிற்பகல் 3.00 – 4.30 மணி.

**சூலம்** : மேற்கு.

**நல்ல நேரம்** : காலை 6 – 7 மணி. மாலை 5 – 6 மணி

**இன்றைய விசேஷம்:** பிரதோஷம். இராமேஸ்வரம் ஸ்ரீ பர்வதவர்த்தினியம்மன் தங்கப் பல்லக்கில் புறப்பாடு. சங்கரன்கோவில் ஸ்ரீ கோமதியம்மன் தங்கப் பாவாடை தரிசனம். திருமாலிருஞ்சோலை ஸ்ரீ கள்ளழகர் கோயிலில் ஸ்ரீ சுந்தரவல்லித் தாயார் புறப்பாடு. கீழ்த்திருப்பதி ஸ்ரீ கோவிந்தராஜப் பெருமாள் திருமஞ்சனம், மாலை ஊஞ்சல் சேவை. மாடவீதி புறப்பாடு. திருத்தணி ஸ்ரீ முருகப் பெருமான் கிளி வாகன சேவை. கரூர் தான்தோன்றிமலை ஸ்ரீ கல்யாண வெங்கட ரமண சுவாமிக்கு திருமஞ்சன சேவை. பெருஞ்சேரி ஸ்ரீ வாகீஸ்வரர், படைவீடு ஸ்ரீ ரேணுகாம்பாள் புறப்பாடு. தூத்துக்குடி ஸ்ரீ பாகம்பிரியாள், வீரவநல்லூர் ஸ்ரீ மரகதாம்பிகை தலங்களில் அபிஷேகம். லால்குடி ஸ்ரீ சப்தரிஷீஸ்வரர் கோயிலில் அபிஷேகம். திருமயிலை, திருவான்மியூர், பெசன்ட்நகர், திருவிடைமருதூர் தலங்களில் மாலை சுவாமி ஸ்ரீ அம்பாள் ரிஷப வாகனத்தில் பவனி.

| | |
|---|---|
| மேஷம் | புகழ் |
| ரிஷபம் | வெற்றி |
| மிதுனம் | பெருமை |
| கடகம் | வாழ்வு |
| சிம்மம் | கண்ணியம் |
| கன்னி | நலம் |
| துலாம் | நன்மை |
| விருச்சிகம் | நிறைவு |
| தனுசு | உறுதி |
| மகரம் | மகிழ்ச்சி |
| கும்பம் | நம்பிக்கை |
| மீனம் | பயணம் |

## சனிக்கிழமை

(20–9–2025)

**விசுவாவசு ஆண்டு, புரட்டாசி–4**

*பிறை:* தேய்பிறை

**திதி** : சதுர்த்தசி நள்ளிரவு 1.02 வரை பிறகு அமாவாசை.

**நட்சத்திரம்** : மகம் காலை 9.57 வரை பிறகு பூரம்

**யோகம்** : அமிர்த / சித்தயோகம்

**ராகுகாலம்** : காலை 9.00 – 10.30 மணி.

**எமகண்டம்** : நண்பகல் 1.30 – 3.00 மணி.

**சூலம்** : கிழக்கு.

**நல்ல நேரம்** : காலை 7 – 8 மணி. மாலை 5 – 6 மணி

**இன்றைய விசேஷம்:** மாத சிவாராத்திரி. ஸஸ்திரஹத பிதுர் மஹாளயம். குச்சனூர் ஸ்ரீ சனிபகவான் அலங்கார திருமஞ்சன சேவை. ஸ்ரீவில்லிபுத்தூர் சமீபம் திருவண்ணாமலை ஸ்ரீ ஸ்ரீனிவாசப் பெருமாள் கருட வாகனத்தில் புறப்பாடு. அருணந்தி சிவாச்சாரியார் குரு பூஜை. மன்னார்குடி ஸ்ரீ ராஜகோபால சுவாமி, திருவல்லிக்கேணி ஸ்ரீ பார்த்தசாரதிப் பெருமாள், கீழ்த்திருப்பதி ஸ்ரீ கோவிந்தராஜப் பெருமாள் தலங்களில் ஸ்ரீ வரதராஜ மூலவருக்கு திருமஞ்சன சேவை. உப்பிலியப்பன் கோவில் ஸ்ரீ ஸ்ரீனிவாசப் பெருமாள் ஸ்திர வார திருமஞ்சன சேவை. ஸ்ரீ வைகுண்டம் ஸ்ரீ வைகுண்டபதி, திருவட்டாறு ஸ்ரீ ஆதிகேசவப் பெருமாள் தலங்களில் திருமஞ்சன சேவை. திருஇந்தளூர் ஸ்ரீ பரிமளரெங்கராஜர் புறப்பாடு. திருமாலிருஞ்சோலை ஸ்ரீ கள்ளழகர் புறப்பாடு. ஸ்ரீரங்கம் ஸ்ரீ நம்பெருமாள், திருவள்ளூர் ஸ்ரீ வைத்ய வீரராகவப் பெருமாள் தலங்களில் திருமஞ்சன சேவை.

| | |
|---|---|
| மேஷம் | கவனம் |
| ரிஷபம் | உண்மை |
| மிதுனம் | யோகம் |
| கடகம் | விருத்தி |
| சிம்மம் | கட்டுப்பாடு |
| கன்னி | நற்செயல் |
| துலாம் | பயணம் |
| விருச்சிகம் | கடமை |
| தனுசு | பாராட்டு |
| மகரம் | பொறுமை |
| கும்பம் | வெற்றி |
| மீனம் | நிறைவு |

# மின் திருட்டு: ரூ.9 லட்சம் அபராதம்

**சென்னை, செப். 18:** சென்னை தெற்கு (எண்: 2) மின் பகிர்மான வட்டத்தில் மின்வாரிய அமலாக்கத் துறை அதிகாரிகள் நடத்திய திடீர் ஆய்வில் 8 மின் இணைப்புகளில் மின்திருட்டு கண்டறியப்பட்டு, ரூ.9.01 லட்சம் அபராதம் விதிக்கப்பட்டது.

மின்வாரியத்தின் சென்னை அமலாக்கக் கோட்டத்துக்கு உள்பட்ட அதிகாரிகள் அண்மையில் சோழிங்கநல்லூர் கோட்டம், சென்னை தெற்கு–2 மின் பகிர்மான வட்டத்துக்கு உள்பட்ட பகுதிகளில் திடீர் கூட்டாய்வில் ஈடுபட்டனர். அப்போது, 8 இணைப்புகளில் மின் திருட்டு கண்டறியப்பட்டு ரூ.9,01,772 அபராதம் விதிக்கப்பட்டது.

**புகார் தெரிவிக்கலாம்:** மின் திருட்டு தொடர்பான புகார்களை சென்னை அமலாக்கக் கோட்டத்தின் செயற்பொறியாளருக்கு 94458 57591 என்ற எண்ணில் தெரிவிக்கலாம் என்று மின்வாரியம் தெரிவித்துள்ளது.

# இன்றைய நிகழ்ச்சிகள்

**சுதந்திரப் போராட்ட வீராங்கனை ராணி வேலுநாச்சியார் சிலை திறப்பு விழா:** முதல்வர் மு.க.ஸ்டாலின், அமைச்சர்கள் உள்ளிட்டோர் பங்கேற்பு, காந்தி மண்டப வளாகம், கிண்டி, காலை 10.

**தேசிய ஆவணக் காப்பாளர்கள் குழு விழா**: 2–ஆம் நாள் நிகழ்வுகள், தமிழ்நாடு ஆவணக்காப்பக வரலாற்று ஆராய்ச்சித் துறை, காந்தி இர்வின் சாலை, எழும்பூர், காலை 9.30.

**தமிழ் தாத்தா உ.வே.சா.– சிறப்பு சொற்பொழிவு:** ஓய்வு பெற்ற நீதிபதி பிரபா ஸ்ரீதேவன், டாக்டர் பிரதீப் சக்ரவர்த்தி உள்ளிட்டோர் பங்கேற்பு, ரோஜா முத்தையா ஆராய்ச்சி நூலகம், சி.பி.டி. வளாகம், தரமணி, மாலை 5.30.

**செங்கல்பட்டு மாவட்ட தடகள சங்கம் சார்பில் 39–ஆவது மாவட்டங்களுக்கு இடையிலான ஜூனியர் தடகள போட்டிகள்:** தமிழ்நாடு விளையாட்டு பல்கலைக்கழகம், வண்டலூர், காலை 6.

**ஸ்ரீமத் ஆதிவண்சடகோப ஸ்வாமி உற்சவம்:** திருவல்லிக்கேணி ஸ்ரீ அஹோபில மடம், திருவல்லிக்கேணி, காலை 7.

**மயிலாப்பூர் ஆர்ட்ஸ் அகாதெமி–இசை நிகழ்ச்சி:** பாரதிய வித்யா பவன், கிழக்கு மாட வீதி, மயிலாப்பூர், மாலை 6.30.

# நாளைய மின் தடை

**சென்னை, செப். 18:** மின்வாரிய பராமரிப்புப் பணி காரணமாக கிண்டி, தாம்பரம், செம்பியம், ஆவடி, ஆழ்வார்திரு நகர், எழும்பூர் மற்றும் அதைச் சுற்றியுள்ள பகுதிகளில் சனிக்கிழமை (செப்.20) காலை 9 முதல் மாலை 5 வரை மின் விநியோகம் நிறுத்தப்படும்.

இதுகுறித்து தமிழ்நாடு மின் பகிர்மானக் கழகம் வெளியிட்ட செய்திக் குறிப்பு:

**மின்தடை பகுதிகள்:**

**கிண்டி:** லேபர் காலனி, தொழிற்பேட்டை, டி.எஸ்.மினி, பாலாஜி நகர், நாகிரெட்டித் தோட்டம், ஈக்காட்டுத்தாங்கல், காந்தி நகர் பிரதான சாலை, சர்தார் காலனி, ஜே.என்.சாலை, கலைமகள் நகர், அச்சுதன் நகர் 1–ஆவது பிரதான சாலை, அருளையம்பேட்டை, தெற்கு மற்றும் வடக்குக் கட்டடம், முத்துராமன் தெரு, கணபதி காலனி, டின்னி செக்டார், லேசர் தெரு.

**தாம்பரம்:** மெப்ஸ்.

**செம்பியம்:** சிம்சன், ஒசூர் கார்டன், ஐபிஎல் கம்பெனி, பைமெட்டல் பேரிங், சிம்சன், டாஃபே கம்பெனி, டீச்சர்ஸ் காலனி, சந்தோஷ் நகர், வீனஸ் நகர், கடப்பா சாலை, சாரதி நகர், கலைமகள் நகர், வில்லிவாக்கம் சாலை, முகாம்பிகை நகர்.

**ஆவடி:** கிரீன் பீல்டு, சோமசுந்தரம் அவென்யூ, வெங்கடாசலம் நகர், கமலம் நகர், லலிதாம்பாள் நகர், அன்னை தெரசா நகர், வெங்கடேஸ்வரா நகர், ஒரகடம் சொசைட்டி.

**ஆழ்வார் திருநகர்:** லட்சுமி நகர், ராதா அவென்யூ, ஏ.கே.ஆர். நகர், ராதா நகர், வேலன் நகர் 5 முதல் 9–வது தெருக்கள்.

**எழும்பூர்:** ஹட்கின்சன் சாலை, சிங்கர் தெரு, சுப்பையா தெரு, பாரக்ஸ் சாலை, சைடன்ஹாம்ஸ் சாலை, கற்பூர முதலி தெரு, திருவேங்கடம் தெரு, மாட்டுக்கார வீரபத்ரன் தெரு, கடூர் சடையப்பன் தெரு, முத்து கிராமணி தெரு, சர்ச் சாலை, ஈ.வி.கே. சம்பத் சாலை, கெல்லிஸ் சாலை தெரு, பிரான்சன் கார்டன் தெரு, கா தியேட்டர், எஸ்.ஐ. குவாட்டர்ஸ், கே.ஜி.ரோடு, உமா காம்ப்ளக்ஸ், பிரான்சன் கார்டன், பால்ஃபோர் சாலை மற்றும் அதைச் சுற்றியுள்ள பகுதிகள்.

# திருவான்மியூர், வேளாங்கண்ணி கடற்கரைகளில் மாற்றுத்திறனாளிகளுக்கான சிறப்பு நடைபாதை

## துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின்

**திருவொற்றியூர், செப். 18:** திருவான்மியூர், வேளாங்கண்ணியில் மாற்றுத்திறனாளிகளுக்கான சிறப்பு நடைபாதைகள் விரைவில் அமைக்கப்படும் என்று துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் தெரிவித்தார்.

சென்னை பெட்ரோலியம் கார்ப்பரேஷன் (சிபிசிஎல்) நிறுவனத்தின் சமூகப் பொறுப்பு திட்டத்தின் கீழ், மாற்றுத்திறனாளிகளுக்கான உபகரணங்கள் வழங்கும் விழா சென்னை புது வண்ணாரப்பேட்டையில் வியாழக்கிழமை நடைபெற்றது.

விழாவில் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் சிறப்பு அழைப்பாளராகக் கலந்து கொண்டு வட சென்னை பகுதிக்குள்பட்ட 300 மாற்றுத்திறனாளிகளுக்கு ரூ.75 லட்சம் மதிப்பிலான உபகரணங்களை வழங்கினார்.



சென்னை திருவொற்றியூரில் சிபிசிஎல் நிறுவனத்தின் சமூகப் பங்களிப்பு நிதியின் கீழ் மாற்றுத்திறனாளிகளுக்கு உபகரணங்களை வழங்கிய துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின். உடன், அமைச்சர் பி.கே.சேகர்பாபு, மேயர் ஆர்.பிரியா, நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் கலாநிதி வீராசாமி, சட்டப்பேரவை உறுப்பினர்கள் எஸ்.சுதர்சனம், தாயகம் கவி, ஆர்.டி.சேகர், ஆர்.மூர்த்தி, ஜே.ஜே.எபினேசர், கே.பி.சங்கர், சிபிசிஎல் நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் ஹெச்.சங்கர், இயக்குநர் (நிதி ரோகித் குமார் அகர்வாலா.

விழாவில் அவர் பேசியதாவது: மாற்றுத்திறனாளிகளின் நலனைக் கருத்தில் கொண்டு அவர்களுக்கென தனித் துறையை உருவாக்கி தமிழக அரசு செயலாற்றி வருகிறது. மாற்றுத்திறனாளிகள் வசதிக்காக 840 தாழ்தளப் பேருந்துகள் இயக்கப்படுகின்றன. மெரீனா கடற்கரையில் கடல் அலையில் கால் நனைக்க வேண்டும் என்பதற்காக மாற்றுத்திறனாளிகளுக்கான சிறப்பு நடைபாதை அமைக்கப்பட்டுள்ளது.

இதேபோல, திருவான்மியூர், நாகை மாவட்டம் வேளாங்கண்ணி ஆகிய இடங்களிலும் விரைவில் சிறப்பு நடைபாதைகள் அமைக்கப்படும் என்றார்.

முன்னதாக, சேப்பாக்கம்–திருவல்லிக்கேணி தொகுதிக்கு கழிவுநீர் சுத்திகரிப்பு இயந்திரங்கள் வாங்குவதற்காக ரூ.5 கோடிக்கான காசோலையை சிபிசிஎல் அதிகாரிகள், துணை முதல்வர் உதயநிதியிடம் வழங்கினர்.

நிகழ்ச்சியில், தமிழக இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, மக்களவை உறுப்பினர் கலாநிதி வீராசாமி, மாநகராட்சி மேயர் பிரியா, சிபிசிஎல் மேலாண்மை இயக்குநர் சங்கர், இயக்குநர் (நிதி) ரோகித் குமார் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

# சிஎம்டிஏ வளர்ச்சித் திட்டப் பணிகள் விரைவில் பயன்பாட்டுக்கு வரும்

## அமைச்சர் பி.கே.சேகர்பாபு

**சென்னை, செப். 18:** சென்னையில் பெருநகர வளர்ச்சிக் குழுமம் சார்பில் நடைபெற்றுவரும் திட்டப் பணிகள் விரைவில் முடிக்கப்பட்டு மக்கள் பயன்பாட்டுக்கு வரும் என இந்து சமய அறநிலையத் துறை அமைச்சரும், சென்னை பெருநகர வளர்ச்சிக் குழுமத் தலைவருமான பி.கே.சேகர்பாபு தெரிவித்தார்.

சென்னை மாநகராட்சியில் சென்னை பெருநகர வளச்சிக் குழுமம் (சிஎம்டிஏ) சார்பில் ராயபுரம் மண்டலம் ஏழுகிணறு குலோப் திருமண மண்டபம் அருகே பல்நோக்கு மையம், வால்டாக்ஸ் சாலையில் சமுதாயக் கூடம், அம்மன்கோயில் தெருவில் சென்னை மேல்நிலைப் பள்ளியில் கூடுதல் வகுப்பறைகள் கட்டப்பட்டு வருகின்றன.

இந்தப் பணிகளை அமைச்சர் பி.கே.சேகர்பாபு வியாழக்கிழமை பார்வையிட்டார்.

பின்னர் அவர் செய்தியாளர்களிடம் கூறியதாவது:

சென்னையில் பெருநகர வளர்ச்சிக் குழுமம் சார்பில் தொடங்கப்பட்ட பணிகள் நிலை குறித்து தொடர்ந்து ஆய்வு மேற்கொள்ளப்படுகிறது.

இந்தப் பணிகள் விரைந்து முடிக்கப்பட்டு மக்கள் பயன்பாட்டுக்கு கொண்டுவரப்படும். திமுக அரசின் செயல்பாடுகளை மக்கள் பாராட்டி வருகின்றனர் என்றார்.

ஆய்வின் போது, மாநகராட்சி வடக்கு வட்டார துணை ஆணையர் கட்டா ரவி தேஜா உள்ளிட்டோர் உடனிருந்தனர்.

# மத்திய அமைச்சரின் செயலராக இருந்த தமிழக ஐஏஎஸ் அதிகாரி மாநிலப் பணிக்கு மாற்றம்

## சுப்ரியா சாகு, காகர்லா உஷா மத்திய பணிக்கு விருப்பம்

**சென்னை, செப். 18:** மத்திய அமைச்சரின் செயலராகப் பணியாற்றி வந்த ஐஏஎஸ் அதிகாரி கிருஷ்ணனுண்ணி, மீண்டும் மாநிலப் பணிக்கு மாற்றப்பட்டுள்ளார். இதனிடையே, சுப்ரியா சாகு, காகர்லா உஷா ஆகியோர் மத்திய அரசுப் பணிக்குச் செல்ல விருப்பம் தெரிவித்துள்ளனர்.

கடந்த 2012–ஆம் ஆண்டு தமிழகப் பிரிவைச் சேர்ந்த ஐஏஎஸ் அதிகாரி கிருஷ்ணனுண்ணி. அவர், மத்திய வர்த்தகம், தகவல் தொழில்நுட்பம் மற்றும் மின்னணு துறையின் இணையமைச்சர் ஜிதின் பிரசாதாவின் தனிச் செயலராக கடந்த ஆண்டு ஆகஸ்ட் மாதம் நியமிக்கப்பட்டார்.

துணைச் செயலர் நிலையில் ஐந்தாண்டுகளுக்கு அவர் அந்தப் பொறுப்பில் நியமனம் செய்யப்பட்டு இருந்தார். 11 மாதங்கள் நிறைவடைந்த நிலையில், அவர் மத்திய அரசுப் பணியில் இருந்து விடுவிக்கப்பட்டார்.

அவருக்கு மாநில அரசில் இது வரை பொறுப்புகள் ஏதும் வழங்கப்படவில்லை.

இதனிடையே, தமிழக வனம், சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத் துறை கூடுதல் தலைமைச் செயலர் சுப்ரியா சாகு, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை கூடுதல் தலைமைச் செயலர் காகர்லா உஷா ஆகியோர் மத்திய அரசுப் பணிக்குச் செல்ல விருப்பம் தெரிவித்துள்ளதாக கூறப்படுகிறது.

சில அரசுத் துறைகளின் செயலர்கள் மற்றும் ஆட்சியர்கள் பணியிடமாற்றம் செய்யப்பட உள்ளனர். இதற்கான உத்தரவு விரைவில் வெளியாகும் எனத் தகவல்கள் கூறுகின்றன.

# வக்ஃப் திருத்தச் சட்டம் ரத்து கோரி தில்லியில் நவம்பர் 16–இல் மாநாடு: எம்.எச். ஜவாஹிருல்லா

**சென்னை, செப். 18:** வக்ஃப் திருத்தச் சட்டத்தை முழுமையாக ரத்து செய்யக் கோரி புதுதில்லியில் நவ.16–இல் ஜனநாயக அமைப்புகள், மனித உரிமை ஆர்வலர்கள் பங்கேற்கும் மாநாடு நடத்தப்படும் என்று மனிதநேய மக்கள் கட்சியின் தலைவர் எம்.எச்.ஜவாஹிருல்லா கூறினார்.

இதுகுறித்து அவர் சென்னையில் செய்தியாளர்களிடம் வியாழக்கிழமை கூறியதாவது:

வக்ஃப் திருத்தச் சட்டம் தொடர்பாக உச்சநீதிமன்றம் வழங்கிய இடைக்கால உத்தரவு அதிருப்தி, ஏமாற்றத்தை அளிக்கிறது.

இந்த உத்தரவு முஸ்லிம்களின் அடிப்படை உரிமைகள் மற்றும் அரசமைப்பு அளிக்கும் மத சுதந்திரத்தை மீறும் வகையில் உள்ளது.

குறிப்பாக, வக்ஃப் திருத்தச் சட்டம் 2025 என்பது வக்ஃப் சொத்துகளை அபகரிப்பதற்கான திட்டமிட்ட சதியாகவே கருதுகிறோம். ஆகவே, இந்த சட்டத்தை முழுமையாக ரத்து செய்ய வேண்டும். மாறாக, வக்ஃப் சட்டம் 2013–ஐ நடைமுறைப்படுத்த வேண்டும்.

இந்த கோரிக்கையை வலியுறுத்தி மாவட்ட அளவிலான விழிப்புணர்வு கூட்டங்கள், வட்டமேசை மாநாடுகள், பேரணிகள், சிறை நிரப்பும் போராட்டங்களை நடத்தத் திட்டமிட்டுள்ளோம்.

இதன் தொடர்ச்சியாக, புது தில்லி ராம்லீலா மைதானத்தில் நவ. 16– ஆம் தேதி பல்வேறு அரசியல் தலைவர்கள், ஜனநாயக அமைப்புகள், மனித உரிமை ஆர்வலர்கள், இஸ்லாமியர்கள் பங்கேற்கும் மாபெரும் மாநாடு நடத்தப்படும் என்றார் அவர்.

# தூய்மைப் பணியாளர்கள் பேரணி

**சென்னை, செப். 18:** பெருநகர சென்னை மாநகராட்சியில் மண்டலம் 5,6 பகுதியைச் சேர்ந்த என்யூஎல்எம் பிரிவு தூய்மைப் பணியாளர்கள் உழைப்போர் உரிமை இயக்கம் சார்பில் கோரிக்கையை வலியுறுத்தி வியாழக்கிழமை பேரணி நடத்தினர்.

ராயபுரம், திரு.வி.க.நகர் மண்டலங்களின் (5, 6) தூய்மைப் பணியை கடந்த ஜூலையில் தனியார் நிறுவனத்திடம் மாநகராட்சி ஒப்படைத்தது.

இதற்கு எதிர்ப்பு தெரிவித்து என்யூஎல்எம் பிரிவைச் சேர்ந்த உழைப்போர் உரிமை இயக்கத்தினர் பல்வேறு கட்ட போராட்டங்களை நடத்தி வருகின்றனர். இந்தக் கோரிக்கைகளை வலியுறுத்தி வியாழக்கிழமை பேரணியை நடத்தினர்.

சென்னை எழும்பூர் லேன்ஸ் கார்டன் ரவுண்டானாவில் இருந்து ராஜரத்தினம் விளையாட்டரங்கம் வரை நடைபெற்ற பேரணியில் 100–க்கும் மேற்பட்டோர் பங்கேற்றனர். பின்னர் பொதுக்கூட்டம் நடைபெற்றது.

பேரணி மற்றும் பொதுக்கூட்டத்தில் உழைப்போர் உரிமை இயக்கத்தின் தலைவர் வழக்குரைஞர் கு.பாரதி, ஆலோசகர் வழக்குரைஞர் குமாரசாமி, உரிமை இயக்க பொறுப்பாளர் எஸ்.சுரேஷ் மற்றும் ஏஐசிசிடியு தலைவர் சங்கர் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

கூட்டத்தில் தூய்மைப் பணியாளர்கள் போராட்டப் பிரச்னையில் முதல்வர் மு.க.ஸ்டாலின் தலையிட்டு தீர்வு காண வேண்டும் உள்ளிட்ட தீர்மானங்கள் வலியுறுத்தப்பட்டன.

# தனியார் பள்ளி ஆசிரியர்களுக்கும் நல்லாசிரியர் விருதுகள் வழங்கப்படும்

## அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி

**தாம்பரம், செப். 18:** அடுத்த ஆண்டு முதல் சி.பி.எஸ்.சி., ஐ.சி.எஸ்.இ. உள்ளிட்ட அனைத்து தனியார் பள்ளி ஆசிரியர்களுக்கும் நல்லாசிரியர் விருதுகள் வழங்கப்படும் என்று தமிழக பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி தெரிவித்தார்.

சென்னை, பல்லாவரம் வேல்ஸ் உயர் தொழில்நுட்பக் கல்வி நிறுவனத்தில் அரசு, தனியார் பள்ளி ஆசிரியர்–ஆசிரியைகள் 1,000 பேருக்கு நல்லாசிரியர் விருதுகள் வழங்கும் விழா வியாழக்கிழமை நடைபெற்றது.




பல்லாவரம் வேல்ஸ் உயர் தொழில்நுட்பக் கல்வி நிறுவனத்தில் வியாழக்கிழமை நடைபெற்ற நல்லாசிரியர் விருது வழங்கும் விழாவில் ஆசிரியர்களுக்கு சிறப்பு நல்லாசிரியர் விருது வழங்கிய அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி. உடன், பள்ளிக் கல்வித் துறை இயக்குநர் எஸ்.கண்ணப்பன், வேல்ஸ் பல்கலைக்கழக வேந்தர் ஐசரி கே.கணேஷ் உள்ளிட்டோர்.

விழாவில் அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி சிறப்பு அழைப்பாளராகக் கலந்து கொண்டு விருதுகளை வழங்கிப் பேசியதாவது: தமிழக பள்ளிக் கல்வித் துறையின் அனைத்துத் திட்டங்களும் சிறப்பாக செயல்பட ஆசிரியர்கள்தான் முக்கியக் காரணம். இதுவரை அரசு, அரசு உதவி பெறும் பள்ளிகளில் பணிபுரியும் ஆசிரியர்களுக்கு வழங்கப்பட்டு வந்த சிறந்த ஆசிரியர்களுக்கான டாக்டர் ராதாகிருஷ்ணன் விருதை அடுத்த ஆண்டு முதல் சி.பி.எஸ்.சி., ஐ.சி.எஸ்.இ. உள்ளிட்ட அனைத்து தனியார் பள்ளிகளில் பணிபுரியும் ஆசிரியர்களுக்கும் வழங்கி கௌரவிக்கவுள்ளோம் என்றார் அவர்.

நிகழ்வில், மயிலாப்பூர் பி.எஸ். சீனிவாசா உயர்நிலைப் பள்ளி ஆசிரியை ரேவதி, பல்லாவரம் மறைமலை அடிகளார் பள்ளி ஆசிரியர் ரவி காசி வெங்கட்ராமன், சென்னை காது கேளாதோர் பள்ளி ஆசிரியை விஜயலட்சுமி, தூத்துக்குடி பண்டாரம்பட்டி அரசு தொடக்கப் பள்ளி தலைமை ஆசிரியர் நெல்சன் பொன்ராஜ், கோவை அரசூர் அரசுப் பள்ளி தலைமை ஆசிரியர் கண்ணன் ஆகிய 5 பேருக்கு சிறப்பு நல்லாசிரியர் விருதுகள் வழங்கப்பட்டன.

இதில், பள்ளிக்கல்வித் துறை இயக்குநர் எஸ்.கண்ணப்பன், வேல்ஸ் உயர்தொழில்நுட்பக் கல்வி நிறுவனத்தின் வேந்தர் ஐசரி கே.கணேஷ், வேல்ஸ் கல்விக் குழுமத்தின் துணைத் தலைவர் ப்ரீத்தா கணேஷ் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

## நிதியுதவி...



சென்னையில் நடைபெற்ற நிகழ்ச்சியில் பெங்களூரு சாய் ஆஷ்ரயா சூப்பர் ஸ்பெஷாலிட்டி மருத்துவமனையில் குழந்தைகள், பெரியவர்களுக்கான இதய சிகிச்சைகள் மேற்கொள்ள ரூ.55 லட்சம் நிதியுதவி வழங்கிய ஜிஆர்டி ஜூவல்லர்ஸ் நிர்வாகத்தினர்.

# கால்சென்டர் நடத்தி ரூ.2.5 கோடி மோசடி: 2 பெண்கள் கைது

**புதுச்சேரி, செப். 18:** சென்னை புழலில் கால்சென்டர் நடத்தி ரூ.2.5 கோடி அளவுக்கு மோசடி செய்ததாக 2 பெண்களை புதுவை இணையவழி குற்றத் தடுப்புப் பிரிவு போலீஸார் கைது செய்தனர்.

இதுகுறித்து புதுவை முதுநிலை காவல் கண்காணிப்பாளர் நித்யா ராதாகிருஷ்ணன் செய்தியாளர்களிடம் வியாழக்கிழமை கூறியது:

புதுவையைச் சேர்ந்த ஒருவருக்கு தனியார் வங்கியில் கடன் பெற்றுத் தருவதாகவும், அதற்காக ரூ.5,000 அனுப்புமாறும் சென்னை புழலில் செயல்படும் கால்சென்டரிலிருந்து பேசியுள்ளனர். அவரும் அதை நம்பி ரூ.5,000–ஐ அனுப்பியுள்ளார். தொடர்ந்து, படிப்படியாக அவரிடமிருந்து ரூ.71,000 வரை மோசடி செய்துள்ளனர். இது தொடர்பான புகாரில், புதுவை இணையவழி குற்றத் தடுப்புப் பிரிவு போலீஸார் விசாரணை நடத்தினர். இதில், சென்னை புழல் பகுதியில் 15 பெண்களைக் கொண்டு கால்சென்டர் நடத்தப்பட்டதுடன், அவர்களிடம் பொதுமக்கள் பலரின் கைப்பேசி தகவல்களைக் கொடுத்து வங்கிக் கடன் வாங்கித் தருவது உள்ளிட்டவை தொடர்பாக பேசுமாறு பணி வழங்கியுள்ளனர்.

அதன்படி, இந்த கால்சென்டரில் ரூ.2.5 கோடி வரை மோசடி நடந்துள்ளதும், அவர்களின் வங்கிக் கணக்கில் ரூ.50 லட்சம் இருந்ததும் விசாரணையில் தெரியவந்தது. இப்போது அந்த வங்கிக் கணக்கு முடக்கப்பட்டுள்ளது. அவர்களிடம் இருந்து 42 சிம்கார்டுகள், 17 கைப்பேசிகள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன.

இது தொடர்பாக சசிகலா பொன்செல்வி (34), முனிராதா (28) ஆகிய 2 பெண்களை புதன்கிழமை கைது செய்தோம். இதைத் தவிர, சென்னையில் இது போன்று மோசடியில் ஈடுபட்டு வரும் 2 கால் சென்டர்கள் குறித்தும் கண்டறிந்துள்ளோம். அது தொடர்பாக நடவடிக்கை எடுக்குமாறு தமிழக போலீஸாருக்கு தகவல் கொடுத்துள்ளோம் என்றார்.

# இரு தொழிலதிபர்கள் தொடர்புடைய 6 இடங்களில் அமலாக்கத் துறை சோதனை

**சென்னை, செப். 18:** சென்னையில் இரு தொழிலதிபர்கள் தொடர்புடைய 6 இடங்களில் அமலாக்கத் துறையினர் வியாழக்கிழமை சோதனை செய்தனர்.

சென்னை சைதாப்பேட்டை ஸ்ரீநகர் தெற்கு மாட வீதியைச் சேர்ந்தவர் ராமகிருஷ்ண ரெட்டி. இவர் கட்டுமான நிறுவனம், ரியல் எஸ்டேட் நிறுவனம் நடத்தி வருகிறார். இந்த நிலையில், ராமகிருஷ்ண ரெட்டி வீடு, திருவான்மியூரில் அவரது நிறுவனத்தின் அலுவலகம், கல்பாக்கத்தில் உள்ள மற்றொரு அலுவலகம் ஆகியவற்றில் அமலாக்கத் துறை அதிகாரிகள் வியாழக்கிழமை காலை ஒரே நேரத்தில் சோதனை செய்தனர். அப்போது, துணை ராணுவப் படையினர் துப்பாக்கியுடன் பாதுகாப்புப் பணியில் ஈடுபடுத்தப்பட்டனர். ராமகிருஷ்ண ரெட்டி மீது எழுந்த சட்டவிரோத பணப்பரிமாற்ற புகார் தொடர்பாக சோதனை நடைபெற்றதாக அமலாக்கத் துறையினர் தெரிவித்தனர்.

ஏற்கெனவே, வீடு கட்டித் தருவதாக 120 பேரிடம் பல கோடி ரூபாய் பணத்தை பெற்றுக்கொண்டு மோசடி செய்ததாக சென்னை பெருநகர காவல் துறையின் மத்திய குற்றப்பிரிவு வழக்குப் பதிவு செய்து, கடந்த 2017–ஆம் ஆண்டு கைது நடவடிக்கை எடுத்தது.

இதற்கிடையே ராமகிருஷ்ண சட்டவிரோத பணப் பரிமாற்ற முகாந்திரம் இருந்ததால், அவர் தொடர்புடைய இடங்களில் அமலாக்கத் துறையினர் வியாழக்கிழமை சோதனை செய்தனர். இதில், பல முக்கிய ஆவணங்கள் கைப்பற்றப்பட்டதாகக் கூறப்படுகிறது.

**நகைக் கடை உரிமையாளர்:** புரசைவாக்கம் பகுதியைச் சேர்ந்தவர் மோகன்லால் கட்டாரியா. இவர், சென்னை பூக்கடை என்எஸ்சி போஸ் சாலை, மும்பை, மதுரை, திருநெல்வேலி உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் நகைக் கடை வைத்துள்ளார். மேலும் இவர், தமிழகம், மகாராஷ்டிரம், ஆந்திரம், கர்நாடகம், கேரளம், மேற்கு வங்கம் ஆகிய மாநிலங்களில் தங்கம், வைர நகைகள் மொத்த வியாபாரமும் செய்து வருகிறார். ஆண்டுக்கு ரூ.5,000 கோடி வரை நகை வணிகத்தில் ஈடுபடுவதாகக் கூறப்படுகிறது.

இந்த நிலையில், மோகன்லால் மீது வரி ஏய்ப்பு புகார் வந்ததையடுத்து, வருமானவரித் துறையினர் கடந்த 2020, 2021, 2023 ஆகிய ஆண்டுகளில் சோதனை நடத்தினர். இதற்கிடையே மோகன்லால் கட்டாரியா மீது சட்டவிரோத பணப்பரிமாற்ற புகார் எழுந்தது. இதுதொடர்பாக அமலாக்கத் துறையினர் விசாரணை செய்தனர்.

இந்த நிலையில், அமலாக்கத் துறையினர், புரசைவாக்கத்தில் மோகன்லால் கட்டாரியா வீடு, கீழ்ப்பாக்கம் தம்புசாமி தெருவில் உள்ள பங்களா, என்எஸ்சி போஸ் சாலையில் உள்ள அவரது நகைக் கடை ஆகியவற்றில் வியாழக்கிழமை திடீர் சோதனை செய்தனர். இந்தச் சோதனை இரவு வரை நீடித்தது. சோதனையில் பல முக்கிய ஆவணங்கள் கைப்பற்றப்பட்டதாகக் கூறப்படுகிறது.

சோதனை முழுமையாக நிறைவடைந்த பின்னரே, கைப்பற்றப்பட்ட ஆவணங்கள், நகை, பணம் குறித்த விவரங்களை தெரிவிக்க முடியும் என அமலாக்கத் துறை அதிகாரிகள் தெரிவித்தனர்.




## வழக்கு விசாரணைக்கு வெளிமாநிலப் பயணம்: அனுமதி வழங்க டிஜிபிக்கு அதிகாரம்

### தமிழக அரசு உத்தரவு

**சென்னை, செப். 18:** புலனாய்வு அதிகாரிகள், வழக்குகளில் துப்பு துலக்குவதற்காக விமானம் மூலம் வெளிமாநிலம் செல்ல அனுமதி வழங்கும் அதிகாரம் தமிழக காவல் துறையின் தலைமை இயக்குநருக்கு வழங்கப்பட்டது.

தமிழக காவல் துறையில் முக்கியமான குற்ற வழக்குகளில் துப்பு துலக்குவதற்கும், குற்றவாளிகளைக் கைது செய்வதற்கும் புலனாய்வு அதிகாரிகள் அவ்வபோது வெளி மாநிலங்களுக்கு விமானம் மூலம் செல்கின்றனர். ஆனால் அவர்கள், வெளி மாநிலம் செல்வதற்கு அனுமதி வழங்குவது, அதற்குரிய செலவினங்களை ஏற்றுக்கொள்வது போன்றவை முறைப்படுத்தப்படாமல் இருந்தன.

இதனால் நிர்வாக ரீதியாகவும், அமைப்பு ரீதியாகவும் சில வேளைகளில் இடர்ப்பாடு ஏற்பட்டு வந்தது. மேலும் சில நேரங்களில் வெளி மாநிலங்களுக்கு புலனாய்வு அதிகாரிகளும், போலீஸாரும் செல்வதில் தாமதம் ஏற்பட்டது. இதனால் சில வழக்குகளில் குற்றவாளிகள் போலீஸாரிடம் சிக்காமல் தப்பியோடிய சம்பவங்களும் நிகழ்ந்தன. வழக்கு விசாரணையிலும் பின்னடைவு ஏற்பட்டது.

இதைக் கருத்தில் கொண்டு கடந்த சட்டப்பேரவை கூட்டத்தின்போது முதல்வர் மு.க.ஸ்டாலின், முக்கிய வழக்குகளில் துப்பு துலக்கவும், குற்றவாளிகளைக் கைது செய்யவும் புலனாய்வு அதிகாரிகளும், போலீஸாரும் வெளி மாநிலங்களுக்கு செல்வதற்கு அனுமதியளிக்கும் அதிகாரம் தமிழக காவல் துறை தலைமை இயக்குநருக்கு வழங்கப்படும் என அறிவித்தார்.

அதன்படி, டிஜிபிக்கு இந்த அதிகாரத்தை வழங்கும் வகையில் தமிழக அரசு அரசாணையை புதன்கிழமை வெளியிட்டது. இந்த உத்தரவின் விளைவாக தமிழக காவல் துறையில் நீண்ட நாள்களாக இருந்த ஒரு பிரச்னைக்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட்டிருப்பதாக போலீஸார் தெரிவித்தனர்.

## தங்கம் பவுனுக்கு ரூ.400 குறைவு

**சென்னை, செப். 18:** சென்னையில் ஆபரணத் தங்கத்தின் விலை வியாழக்கிழமை பவுனுக்கு ரூ.400 குறைந்து விற்பனையானது.

சென்னையில் தங்கம் விலை இந்த வாரம் தொடக்கம் முதலே ஏற்ற, இறக்கமாக இருந்து வருகிறது. இதன்படி, புதன்கிழமை தங்கம் விலை பவுனுக்கு ரூ.80 குறைந்து ரூ.82,160-க்கு விற்பனையான நிலையில், வியாழக்கிழமை கிராமுக்கு ரூ.50 குறைந்து ரூ.10,220-க்கும், பவுனுக்கு ரூ.400 குறைந்து ரூ.81,760-க்கும் விற்பனையானது.

வெள்ளி விலையும் கிராமுக்கு ரூ.1 குறைந்து ரூ.141-க்கும், ஒரு கிலோ கட்டி வெள்ளி ரூ.1.41 லட்சத்துக்கும் விற்பனையானது.

## சீர்காழி அரசு மருத்துவமனையில் ஊசி செலுத்தப்பட்ட கர்ப்பிணிகள் உள்பட 27 பேருக்கு நடுக்கம், காய்ச்சல்



தீவிர சிகிச்சைக்காக அவசர ஊர்தி மூலம் சிதம்பரம் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லப்பட்ட கர்ப்பிணி.

**சீர்காழி, செப். 18:** மயிலாடுதுறை மாவட்டம், சீர்காழி அரசு மருத்துவமனையில் புதன்கிழமை இரவு ஊசி செலுத்தப்பட்ட கர்ப்பிணிகள் உள்பட 27 பேருக்கு காய்ச்சல் மற்றும் நடுக்கம் ஏற்பட்டது.

இதில், கர்ப்பிணி ஒருவர் தீவிர சிகிச்சைக்காக சிதம்பரம் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு அனுப்பிவைக்கப்பட்டார்.

சீர்காழி அரசு மருத்துவமனை மகப்பேறு சிகிச்சை பிரிவில் கர்ப்பிணிகள் மற்றும் குழந்தை பெற்றவர்களுக்கு மருத்துவர்கள் புதன்கிழமை இரவு வழக்கமாக செலுத்தும் ஊசியை செலுத்தினர். அவர்களில் பலருக்கு சிறிது நேரத்தில் நடுக்கம் மற்றும் காய்ச்சல் ஏற்பட்டுள்ளது.

தகவலறிந்த தலைமை மருத்துவர் அருண் ராஜ்குமார் மற்றும் மகப்பேறு மருத்துவர்கள், பாதிக்கப்பட்ட கர்ப்பிணிகள் மற்றும் குழந்தை பெற்ற தாய்மார்களுக்கு மாற்று மருந்து கொடுத்தனர். பின்னர், அனைவரது உடல்நிலையும் சீரானது. கர்ப்பிணி ஒருவர் மட்டும் தீவிர சிகிச்சைக்காக சிதம்பரம் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டார்.

இதுதொடர்பாக, சீர்காழி அரசு மருத்துவமனை தலைமை மருத்துவர் அருண் ராஜ்குமார் வெளியிட்ட செய்திக் குறிப்பு:

சீர்காழி அரசு மருத்துவமனை மகப்பேறு பிரிவில் புதன்கிழமை 27 கர்ப்பிணி மற்றும் 20 பிரசவித்த தாய்மார்கள் சிகிச்சை பெற்று வந்தனர். இவர்களில் 27 பேருக்கு இரவு 8.30 மணிக்கு ஊசி செலுத்தப்பட்டது. சில நிமிஷங்களில் 27 பேருக்கும் குளிர் காய்ச்சல் ஏற்பட்டதாக தகவல் கிடைத்தது.

மருத்துவக் குழுவினர் சென்று 27 பேருக்கும் மாற்று மருந்து வழங்கினர். இவர்களில் பிரசவத்துக்காக அனுமதிக்கப்பட்ட 9 கர்ப்பிணிகளில் ஒருவர் மட்டும் அருகில் உள்ள சிதம்பரம் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு தீவிர சிகிச்சைக்காக அனுப்பிவைக்கப்பட்டார். மற்றவர்கள் உடல் நிலை 2 மணி நேரத்தில் சீரானது என்றார்.

மாவட்ட ஆட்சியர் ஹெச்.எஸ். ஸ்ரீகாந்த், நலப்பணிகள் இணை இயக்குநர் பானுமதி ஆகியோர் சிகிச்சை பெற்றுவரும் கர்ப்பிணிகளின் உடல் நிலை மற்றும் சிகிச்சை குறித்து கேட்டறிந்தனர். இந்த சம்பவம் தொடர்பாக, சீர்காழி போலீஸார் விசாரித்து வருகின்றனர்.

### அமைச்சர் மா.சுப்பிரமணியன் விளக்கம்



**சென்னை, செப். 18:** சீர்காழி அரசு மருத்துவமனையில் ஆன்ட்டிபயாட்டிக் மருந்துகள் செலுத்திக் கொண்ட 27 பேர் மயக்கமடைந்தது குறித்து மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் விளக்கமளித்துள்ளார்.

இதுகுறித்து அவர் கூறியதாவது:

சீர்காழி சம்பவத்தில் பாதிக்கப்பட்ட கர்ப்பிணிகள் அனைவரும் நலமுடன் உள்ளனர். குறிப்பிட்ட அந்த மருந்தில்தான் பிரச்னை எனத் தெரியவந்துள்ளது. அதே நேரம், மாநிலத்தில் மற்ற இடங்களில் எவ்வித பாதிப்பும் ஏற்படவில்லை.

எனவே, சீர்காழி மருத்துவமனையின் மருந்து சேமிப்புக் கிடங்கில் ஆய்வு செய்யப்பட்டுள்ளது. மேலும், மருந்துகளும் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளன.

இதற்கான முடிவுகள் வந்தப்பின் அடுத்தகட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

அதுவரை அந்தப் பகுதியில் அந்த மருந்துகள் செலுத்தாமல் இருக்க அறிவுறுத்தப்பட்டுள்ளது. மற்ற இடங்களிலும், கண்காணிக்கப்பட்டு உரிய முறையில் மருந்துகள் செலுத்துவது உறுதிப்படுத்தப்படும் என்றார் அவர்.


### தமிழ்நாடு அரசு
### நிதித் துறை, சென்னை -9

**தமிழ்நாடு அரசின் 10 ஆண்டுகால பிணையப் பத்திரம், தமிழ்நாடு அரசின் 7.05 சதவீத தமிழ்நாடு அரசு பிணையப் பத்திரங்கள் 2031 மறுவெளியீடு, தமிழ்நாடு அரசின் 7.15 சதவீத தமிழ்நாடு அரசு பிணையப் பத்திரங்கள் 2032 மறுவெளியீடு மற்றும் தமிழ்நாடு அரசின் 7.19 சதவீத தமிழ்நாடு அரசு பிணையப் பத்திரங்கள் 2033 மறுவெளியீடு பிணையப் பத்திரம் ஏலத்தின் மூலம் விற்பனை செய்தல்**

1. தமிழ்நாடு அரசு மொத்தம் **ரூ.4000 கோடி மதிப்பில் ரூ.1000 கோடி மதிப்புள்ள 10 ஆண்டுக்காலப் பிணையப் பத்திரம், ரூ.1000 கோடி மதிப்புள்ள பிணையப் பத்திரம் 7.05 சதவீத தமிழ்நாடு அரசு பிணையப் பத்திரங்கள் 2031 மறுவெளியீடு, ரூ.1000 கோடி மதிப்புள்ள பிணையப் பத்திரம் 7.15 சதவீத தமிழ்நாடு அரசு பிணையப் பத்திரங்கள் 2032 மறுவெளியீடு மற்றும் ரூ.1000 கோடி மதிப்புள்ள பிணையப் பத்திரம் 7.19 சதவீத தமிழ்நாடு அரசு பிணையப் பத்திரங்கள் 2033 மறுவெளியீடு** ஏலத்தின் மூலம் விற்பனை செய்ய முன்வந்துள்ளது. இந்தப் பிணையப் பத்திரங்கள், குறைந்தபட்சம் ரூ.10,000/-க்கும் அதன் பின்னர் ரூ.10,000/-ன் மடங்குகளிலும் ஏலம் விடப்படும். இந்திய ரிசர்வ் வங்கியின் மும்பை (கோட்டை) அலுவலகம் **செப்டம்பர் 23, 2025** அன்று இந்த ஏலத்தை நடத்தும்.

2. மாநில அரசின் பிணையப் பத்திரங்களை ஏலம் விடுவதற்கான பொது அறிவிக்கையின் இணைப்பு-IIன் திருத்தியமைக்கப்பட்ட போட்டியற்ற ஏலம் கேட்பு வசதி திட்டத்தின்படி (Revised Scheme for Non-Competitive Bidding Facility) விற்பனைக்காக அறிவிக்கப்பட்டுள்ள அந்த பிணையப் பத்திரங்களில், தகுதியுள்ள தனி நபர்கள் மற்றும் நிறுவனங்களுக்கு, ஒரு ஏலக் கேட்பிற்கு உச்சவரம்பாக அறிவிக்கப்பட்ட தொகையில் ஒரு சதவீதம் என்பதற்கு உட்பட்டு 10 சதவீதம் வரை ஒதுக்கீடு செய்யப்படும். இத்திட்டத்தின் கீழ் ஒரு முதலீட்டாளர் ஒரு ஏலக் கேட்பினை மட்டுமே வங்கி அல்லது முதன்மைத் தரகர் (Primary Dealer) மூலமாக சமர்ப்பிக்கலாம்.

3. ஆர்வமுள்ளவர்கள், ஏலக் கேட்பினை இந்திய ரிசர்வ் வங்கியின் ஒருங்கிணைந்த வங்கி சேவை முறையில் (Reserve Bank of India Core Banking Solution (E-Kuber) System) மின்னணு படிவத்தில் (electronic format) **செப்டம்பர் 23, 2025** அன்று கீழ்க்குறிப்பிட்டுள்ள முறையில் சமர்ப்பிக்கலாம்:

அ) போட்டி ஏலக் கேட்புகள் மின்னணு வாயிலாக இந்திய ரிசர்வ் வங்கியின் ஒருங்கிணைந்த வங்கி சேவை முறையில் முற்பகல் **10.30** மணியிலிருந்து **11.30** மணிக்குள் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

ஆ) போட்டியற்ற ஏலக் கேட்புகள் மின்னணு வாயிலாக இந்திய ரிசர்வ் வங்கியின் ஒருங்கிணைந்த வங்கி சேவை முறையில் முற்பகல் **10.30** மணியிலிருந்து **11.00** மணிக்குள் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

4. ஏலம் கேட்பவர் ஆண்டொன்றுக்கு எதிர்பார்க்கக் கூடிய வட்டி விகிதத்தினை இரண்டு தசம ஸ்தானத்தில் தெரியப்படுத்த வேண்டும். ஒரு முதலீட்டாளர் வெவ்வேறு வட்டி விகிதத்தில் ஒன்றுக்கு மேற்பட்ட போட்டி ஏலக் கேட்பினை மின்னணு படிவத்தில் இந்திய ரிசர்வ் வங்கியின் ஒருங்கிணைந்த வங்கி சேவை முறையில் (Reserve Bank of India Core Banking Solution (E-Kuber) System) சமர்ப்பிக்கலாம். இருப்பினும், ஒரு நபர் கோரும் மொத்த ஏலக் கேட்புகள் அறிவிக்கப்பட்ட தொகைக்கு மேலாக செல்லக்கூடாது.

5. ஏலத்தின் முடிவுகள் **செப்டம்பர் 23, 2025** அன்று இந்திய ரிசர்வ் வங்கியின் இணையதளத்தில் வெளியிடப்படும். ஏலம் கிடைக்கப் பெற்றவர்கள், தங்களது ஏலங்களில் தெரிவிக்கப்பட்ட பிணையப் பத்திரங்களுக்கான விலையை இந்திய ரிசர்வ் வங்கி மும்பை (கோட்டை) அல்லது சென்னையில் செலுத்தத்தக்க வகையிலான வங்கியாளர் காசோலை (Bankers' Cheque) அல்லது கேட்போலையை (Demand Draft) **செப்டம்பர் 24, 2025** அன்று வங்கிப்பணி நேரம் முடிவதற்குள் சமர்ப்பிக்க வேண்டும்.

6. **தமிழ்நாடு அரசின் 10 ஆண்டுகால பிணையப் பத்திரம்** ஏலத்தில் இந்திய ரிசர்வ் வங்கியால் தீர்மானிக்கப்படக் கூடிய வட்டி வீதத்தில் 6 மாதத்திற்கு ஒரு முறை **மார்ச் 24 மற்றும் செப்டம்பர் 24** ஆகிய தேதிகளில் வழங்கப்படும், **தமிழ்நாடு அரசு பிணையப் பத்திரங்கள் 2031 மறுவெளியீடு பிணையப் பத்திரங்களுக்கு 7.05 சதவீத, தமிழ்நாடு அரசு பிணையப் பத்திரங்கள் 2032 மறுவெளியீடு பிணையப் பத்திரங்களுக்கு 7.15 சதவீத மற்றும் தமிழ்நாடு அரசு பிணையப் பத்திரங்கள் 2033 மறுவெளியீடு பிணையப் பத்திரங்களுக்கு 7.19 சதவீத** ஏலத்தில் இந்திய ரிசர்வ் வங்கியால் தீர்மானிக்கப்படக் கூடிய வட்டி வீதத்தில் 6 மாதத்திற்கு ஒரு முறை **மார்ச் 17 மற்றும் செப்டம்பர் 17** ஆகிய தேதிகளில் வழங்கப்படும். இந்தப் பிணையப் பத்திரங்கள் அரசு பிணையப் பத்திரங்கள் சட்டம், 2006 (Government Securities Act, 2006) மற்றும் அரசு பிணையப் பத்திரங்கள் ஒழுங்குமுறை விதிகள், 2007 (Government Securities Regulations, 2007) ஆகியவற்றின்படி நிர்வகிக்கப்படும்.

7. இந்த பிணையப் பத்திரங்கள் மாற்றிக் கொடுக்கத் தக்க (Ready Forward Facility) தகுதியுடையதாகும்.

8. மற்ற விவரங்களுக்கு, தமிழ்நாடு அரசின் **செப்டம்பர் 18, 2025 நாளிட்ட பிரத்யேக அறிவிக்கை எண். 842(L)/W&M-II/2025, எண். 843(L)/W&M-II/2025, எண். 844(L)/W&M-II/2025 மற்றும் எண். 845(L)/W&M-II/2025** – ஐக் காண்க.

**த. உதயச்சந்திரன்**
**அரசு முதன்மை செயலாளர்**
**நிதித் துறை, சென்னை- 09.**

செ.ம.தொ.இ./ 1092 /வரைகலை/2025


ஞாயிற்றுக்கிழமைதோறும் தினமணி கதிர் இளமை! புதுமை! இனிமை!






## கனரா வங்கி

சிறப்பு சொத்து மீட்பு மேலாண்மை கிளை II, சென்னை [7901]
எண்.9 & 10, சர் தியாகராய சாலை, தியாகராய நகர், சென்னை-17
தொலைபேசி எண். 9740145622
மின்னஞ்சல் : cb7901@canarabank.com

### மின்னணு ஏல விற்பனை அறிவிப்பு

குறைந்தபட்ச கேட்பு விலை ₹ 34,00,000/- | டேவணித்தொகை ₹ 3,40,000/- | ஏல உயர்வுத்தொகை ₹ 25,000/-

சொத்தினை பார்வையிடும் தேதி: 06.10.2025, நேரம் காலை 11 மணி முதல் மாலை 4 மணி வரை

மின் ஏல தேதி மற்றும் நேரம் 08.10.2025 காலை 11.30 மணி முதல் மதியம் 12.30 மணி வரை

Portal of E-Auction: https://baanknet.com

தேதி : 17.09.2025; இடம் : சென்னை
அதிகாரப்பூர்வ அதிகாரி, கனரா வங்கி

## SBI பாரத ஸ்டேட் வங்கி

ஒடுக்கப்பட்ட சொத்து மீட்பு கிளை - II
எண். 44, முதல் தளம், எல்டாம்ஸ் சாலை, தேனாம்பேட்டை, சென்னை-600 018. மின்னஞ்சல் முகவரி: sbi.70674@sbi.co.in கிளை தொடர்பு எண் : 9498652620

அதிகாரப்பூர்வ அலுவலர் விவரங்கள்: பெயர்: திருமதி. மீனாகுமாரி.P - கைபேசி 9790960729
தொடர்புக்கு : நகர வழக்கு அலுவலர் பெயர்: திரு.சுரேந்தர்.S கைபேசி :9514251429

### அசையா சொத்துகளின் விற்பனைக்கான மின் ஏல விற்பனை அறிவிப்பு (8(6) விதியை காண்க)

... விவரிக்கப்பட்டுள்ள கடன்தாரர்களிடமிருந்து வசூலிக்கப்பட வேண்டிய பாக்கித்தொகையினை வசூலிக்கும் பொருட்டும் சொத்தானது "உள்ள இடத்தில் உள்ளவாறு" மற்றும் "உள்ளது உள்ளவாறு" மற்றும் "என்ன உள்ளதோ அப்படியே" எனும் அடிப்படையில் கீழே குறிப்பிட்டுள்ள தேதியில் விற்பனை செய்யப்படவிருக்கிறது.

**வ.எண்.1:** கடன்தாரர் பெயர் மற்றும் முகவரி: குடியிருப்பு முகவரி & நிரந்தர முகவரி: (கடன்தாரர்) செல்வி. ஹேமமாலினி. R, த/பெ. திரு. இராஜன், குடியிருப்பு முகவரி: (இணைகடன்தாரர்) திருமதி. G. பத்மாவதி க/பெ. திரு. இராஜன், ஃப்ளாட் எண்.G-1, G.V.மிருதுளா ஃப்ளாட்ஸ், மனை எண்.3, 2வது தெரு, 4வது குறுக்கு, வைஷ்ணவி நகர், திருமுல்லைவாயல், சென்னை - 600 062, குடியிருப்பு முகவரி: (கடன்தாரர்) செல்வி. ஹேமமாலினி. R, த/பெ. திரு. இராஜன், எண். 27D, 2வது தளம், மஹேஸ்வரி ஹோம், மஹேஸ்வரி தெரு, தேவி நகர், அண்ணனூர், சென்னை – 600 109. நிரந்தர முகவரி: (இணைகடன்தாரர்) திருமதி. G. பத்மாவதி க/பெ. திரு. இராஜன், கதவு எண்.7, பிளாக் எண்.15,3வது குறுக்குத் தெரு, பள்ளிச்செல்வம் நகர், எருக்கஞ்சேரி, சென்னை - 600 118. அலுவலகத்தின் முகவரி: (கடன்தாரர்) செல்வி. ஹேமமாலினி. R, த/பெ. திரு. இராஜன், Adrenalin Esystems Ltd,6th Floor, Next Level Buildings,Intellect Design Arena East Wing, மனை எண்.3/G3, Sipcot It Park, சிறுசேரி, சென்னை - 600 130. (கடன்தாரர்) செல்வி. ஹேமமாலினி. R, த/பெ. திரு. இராஜன், (இணைகடன்தாரர்) திருமதி.G.பத்மாவதி க/பெ. திரு. இராஜன், இருவரின் சொத்தின் முகவரி: லதா ஃப்ளாட்ஸ், ஃப்ளாட் எண்.A-F1, முதல் தளம், கதவு எண்.9, மனை எண்.12, பழைய எண்.51, புதிய எண்.16, மணிமேகலை தெரு, ஸ்ரீ சக்தி நகர், திருமுல்லைவாயல், சென்னை - 600 062.

நிலுவைத் தொகை : 18.09.2025 அன்றுள்ளபடி ரூ.38,04,165/- (ரூபாய் முப்பத்து எட்டு இலட்சத்து நான்காயிரத்து நூற்று அறுபத்து ஐந்து மட்டும்) மேலும் எதிர்கால வட்டி, கட்டணங்கள் மற்றும் செலவினங்கள் உட்பட.

**அசையா சொத்தின் விளக்கம்**

அட்டவணை 'A' சொத்து: வட சென்னை பதிவு மாவட்டம் மற்றும் அம்பத்தூர் சார்பதிவு மாவட்டத்திற்குட்பட்ட, திருவள்ளூர் மாவட்டம், அம்பத்தூர் வட்டம், ஆவடி நகராட்சி எல்லைகளுக்குட்பட்ட, பழைய கிராம எண்.SI, புதிய கிராம எண்.16 திருமுல்லைவாயல் கிராமம் பழைய சர்வே எண்.648/16A, பட்டா எண்..2614 இன்படி புதிய சர்வே எண்.648/16A2 இல் அடங்கிய "ஸ்ரீ சக்தி நகர்", மணிமேகலை தெரு, மனை எண்.12,கதவு எண்.9 இல் அமைந்துள்ள 2971ச.அடி விஸ்தீரணம் கொண்ட வீட்டு மனை அதனைச் சார்ந்த அனைத்து துண்டு மற்றும் பகுதி, பின்வரும் நிலத்தின் எல்லைகள்: வடக்கில் : 20அடி அகல சாலை; தெற்கில் ; மனை எண்கள்.16 & 17; கிழக்கில் ; சர்வே எண். 648/21 மற்றும் மேற்கில் : மனை எண்.11; கிழக்கு மேற்காக வட புறம் :43அடி; கிழக்கு மேற்காக தென் புறம் :42 ½ அடி; வடக்குத் தெற்காக கிழக்கு புறம் :68 அடி; வடக்குத் தெற்காக மேற்கு புறம் : 71 அடி; அனைத்தின் மொத்தப் பரப்பளவு 2971ச.அடி. அட்டவணை - "B" மேற்குறிப்பிட்ட அட்டவணை -A சொத்தின் பாகத்தில் பிரிக்கப்படாத பங்கு 323ச.அடி நிலம். 'லதா ஃப்ளாட்ஸ்' என்ற பெயரில் உள்ள கட்டிடத்தின் (பொதுப் பரப்புகள் உட்பட) முதல் தளத்தில் உள்ள 755ச.அடி சூப்பர் கட்டிடப் பரப்பு கொண்ட ஒரு குடியிருப்பு ஃப்ளாட் எண்.F1 மற்றும் பார்க்கிங் இடம். (2-2-2017 தேதியிட்ட ஆவண எண்.1062/2017 மற்றும் ஆவண எண் 1063/2017 இன் கீழ் அடங்கியது) [Asset Id : 200015365741 ; Security Id : 400015399205]

சுவாதீன நிலை: மெய்நிலை

குறைந்தபட்ச கேட்பு விலை ₹ 29,95,000/- | டேவணித்தொகை ₹ 2,99,500/- | ஏல உயர்வுத்தொகை ₹ 50,000/-

சொத்துகளைப் பார்வையிடும் தேதி: 29.09.2025 ; நேரம் : காலை 11 மணி முதல் மாலை 4 மணி வரை

**வ.எண்.2** கடன்தாரர் பெயர் மற்றும் முகவரி: கடன்தாரர்: திரு. இராமநாதன்.J த/பெ. திரு.ஜெயராமன், குடியிருப்பு முகவரி: எண்.7, பழைய எண்.22, வோல்டாஸ் காலனி, 2வது தெரு, நங்கநல்லூர், சென்னை-600061. மேலும் ஒரு முகவரி: பழைய எண்.15, 16, புதிய எண்.10, கன்னிகா காலனி, 2வது தெரு, சென்னை-600061. அலுவலகத்தின் முகவரி: UPSPL Integrated Service Pvt Ltd, புதிய எண்.5, பழைய எண்.18, கிழக்கு அவென்யூ, கேசவபெருமாள்புரம், R.A.புரம், சென்னை-600028. சொத்தின் முகவரி: ஃப்ளாட் எண்.S2, கிழக்கு முகமாக, 2வது தளம், பிளாக் எண்.16A, கணபதி நகர், காட்டுப்பாக்கம் கிராமம், சென்னை-600 056.

நிலுவைத் தொகை : 18.09.2025 அன்றுள்ளபடி ரூ.83,50,135/- (ரூபாய் எண்பத்து மூன்று இலட்சத்து ஐம்பதாயிரத்து நூற்று முப்பத்து ஐந்து மட்டும்) மேலும் எதிர்கால வட்டி, இதர, கட்டணங்கள் மற்றும் செலவினங்கள் உட்பட.

**அசையா சொத்தின் விளக்கம்**

அசையா சொத்தின் விவரம்: அட்டவணை "A" (மொத்த சொத்து) ; தென் சென்னை பதிவு மாவட்டம் மற்றும் குன்றத்தூர் சார்பதிவு மாவட்டத்திற்குட்பட்ட, திருவள்ளூர் மாவட்டம், பூவிருந்தவல்லி வருவாய் வட்டம், பூவிருந்தவல்லி ஊராட்சி ஒன்றிய எல்லைகளுக்குட்பட்ட, காட்டுப்பாக்கம் கிராமம் சர்வே எண்.211, பட்டா எண்.1526 இன்படி புதிய சர்வே எண்.211/9 இல் அடங்கிய 18.08.2014 தேதியிட்ட கடித எண். 508/2014/A3 பிரதிநிதி குழுவின்படி, சென்னை-8, CMDA உறுப்பினர் செயலாளர் வழங்கிய, பூவிருந்தவல்லி, பூவிருந்தவல்லி ஊராட்சி ஒன்றிய, ஆணையாளர் துணைப்பிரிவு அங்கீகாரம் PPA எண். 37932/2014, "கணபதி நகர்" என்ற பெயரில் உள்ள மனைப்பிரிவு, (துணைப்பிரிவுமனை எண்.16A இன் பரப்பளவு 1900ச.அடி மற்றும் மனை எண்.16B இன் பரப்பளவு 1998ச.அடி.) மனை எண்.16 இன் விஸ்தீரணம் 3898ச.அடி நிலம், வீட்டு மனை அதனைச் சார்ந்த அனைத்து துண்டு மற்றும் பகுதி. எல்லைகள்: வடக்கில்: திரு. விமலநாதன் அவர்களின் உரிமைப்பெற்ற மனை; தெற்கில்: திருமதி. ஜெயலட்சுமி அவர்களின் உரிமைப் பெற்ற மனை; கிழக்கில்: மனை எண்.17 ; மேற்கில்:24அடி சாலை; நாற்பரப்புகள்: கிழக்கு மேற்காக வட புறம்: 58அடி 75அங்குலங்கள்; கிழக்கு மேற்காக தென் புறம்: 60அடி 05அங்குலங்கள்; வடக்குத் தெற்காக கிழக்கு புறம்: 70அடி 25அங்குலங்கள்; வடக்குத் தெற்காக மேற்கு புறம்: 60அடி 05அங்குலங்கள்; ஆக மொத்த விஸ்தீரணம் 3898ச.அடி நிலம். அட்டவணை "B" (இதன் மூலம் தெரிவிக்கப்பட்ட சொத்து) : மூல ஆவணதாரரின் பெயர் திரு.J. இராமநாதன்: அட்டவணை-"A" இல் 3898ச.அடி விஸ்தீரணத்தில் பிரிக்கப்படாத பங்கு 302ச.அடி காலி நிலம் மற்றும் பிளாக்.16B இன் இரண்டாம் தளத்தில் உள்ள (பொதுப் பரப்பு உட்பட) 890ச.அடி கட்டிடப் பரப்பு கொண்ட ஃப்ளாட் எண்.S2. (திரு.J. இராமநாதன் அவர்கள் பெயரில் உள்ள ஆவண எண்.13490/2021)

சுவாதீன நிலை: மெய்நிலை

குறைந்தபட்ச கேட்பு விலை ₹ 43,85,000/- | டேவணித்தொகை ₹ 4,38,500/- | ஏல உயர்வுத்தொகை ₹ 50,000/-

சொத்துகளைப் பார்வையிடும் தேதி: 29.09.2025 ; நேரம் : காலை 11 மணி முதல் மாலை 4 மணி வரை

மின் ஏலத் தேதி & நேரம்: வ.எண். 1 & 2: **08.10.2025** நேரம்: காலை 11 மணி முதல் மாலை 4 மணி வரை (தலா 10 நிமிடங்கள் கொண்ட கால நீட்டிப்புகள் தொடர்ந்து தரப்படும்).

**வ.எண்.3** கடன்தாரர் பெயர் மற்றும் முகவரி: (கடன் விண்ணப்பத்தின் போது விண்ணப்பதாரரின் குடியிருப்பு முகவரி) திரு. லோகநாதன். G, த/பெ. திரு. கோதண்டராமன், எண்.59, S-1, 2வது தளம், பவானி ஃப்ளாட்ஸ், கண்ணதாசன் தெரு, சந்தோஷ் நகர் விரிவு, மதனந்தபுரம், முகலிவாக்கம், சென்னை - 600 125. (கடன் விண்ணப்பத்தின் போது விண்ணப்பதாரரின் அலுவலக முகவரி) Nandhitha Financial Services, 9A / 6, முதல் தளம், முதல் குறுக்குத் தெரு, இரண்டாவது அவின்யூ, அசோக் நகர், சென்னை - 600 083. சொத்தின் முகவரி: ஃப்ளாட் எண்.G-3, 3வது தளம், "JC"S ஸ்வாதி நெஸ்ட், பூவிருந்தவல்லி நெடுஞ்சாலை, நெற்குன்றம் கிராமம், மதுரவாயல் வட்டம், சென்னை - 600 107.

நிலுவைத் தொகை : 17.09.2025 அன்றுள்ளபடி ரூ. 1,02,98,004/- (ரூபாய் ஒரு கோடியே இரண்டு இலட்சத்து தொண்ணூற்று எட்டாயிரத்து நான்கு மட்டும்) மேலும் எதிர்கால வட்டி, இதர, கட்டணங்கள் மற்றும் செலவினங்கள் உட்பட.

**அசையா சொத்தின் விளக்கம்**

அசையா சொத்தின் விவரம்: சொத்தின் அட்டவணை 'A' வகை எண்.1 தென் சென்னை பதிவு மாவட்டம் மற்றும் விருகம்பாக்கம் சார்பதிவு மாவட்டத்திற்குட்பட்ட, திருவள்ளூர் மாவட்டம், அம்பத்தூர் வட்டம், சென்னை மாநகராட்சி எல்லைகளுக்குட்பட்ட, நெற்குன்றம் கிராமத்தின் சர்வே எண்.16/3C, பட்டாவின்படி புதிய சர்வே எண்.16/3C1A இல் அடங்கிய பூவிருந்தவல்லி நெடுஞ்சாலையில் அமைந்துள்ள பரப்பளவு ( 4500 சதுர அடியில் CMDA-விற்கு சாலை சரிப்படுத்துதலுக்காக தானமளிக்கப்பட்ட 568சதுர அடி கழித்தபின்) 3932சதுர அடி விஸ்தீரணம்கொண்ட காலி நிலம் அதனைச் சார்ந்த அனைத்து துண்டு மற்றும் பகுதி, நிலத்தின் எல்லைகள்: வடக்கில்: பூவிருந்தவல்லி நெடுஞ்சாலை, தெற்கில்: வகை எண்.II சொத்து, கிழக்கில்: திரு. ஸ்ரீனிவாசலு நாயுடு அவர்களின் உரிமைப்பெற்ற வீடு, மேற்கில்: திரு. கோவிந்தராஜு நாயுடு அவர்களின் உரிமைப்பெற்ற வீடு. வகை எண்.2 தென் சென்னை பதிவு மாவட்டம் மற்றும் விருகம்பாக்கம் சார்பதிவு மாவட்டத்திற்குட்பட்ட, திருவள்ளூர் மாவட்டம், அம்பத்தூர் வட்டம், சென்னை மாநகராட்சி எல்லைகளுக்குட்பட்ட, நெற்குன்றம் கிராமத்தின் சர்வே எண்.16/3C, பட்டாவின்படி புதிய சர்வே எண்.16/3C2 இல் அடங்கிய பூவிருந்தவல்லி நெடுஞ்சாலையில் அமைந்துள்ள பரப்பளவு 4836சதுர அடி விஸ்தீரணம்கொண்ட காலி நிலம் அதனைச் சார்ந்த அனைத்து துண்டு மற்றும் பகுதி, நிலத்தின் எல்லைகள்: வடக்கில்: வகை.1 சொத்து, தெற்கில்: சர்வே எண்.17 இன் நிலம் கிராம நத்தத்தில் உள்ள வாகனப் பாதை, கிழக்கில்: திருமதி. சுசீலா அவர்களின் உரிமைப்பெற்ற வீடு, திருமதி. கவிதா அவர்களின் உரிமைப்பெற்ற நிலம் மற்றும் திரு. T.ஸ்ரீனிவாசன் அவர்களின் உரிமைப்பெற்ற சர்வே எண்.22 இல் உள்ள நிலம், மேற்கில்: திரு. T. கோவிந்தராஜுலு நாயுடு அவர்களின் உரிமைப்பெற்ற சர்வே எண்.16/3B இல் உள்ள நிலம். நாற்பரப்புகள்: கிழக்கு மேற்காக வட புறம் 36 அடி மற்றும் 9அங்குலங்கள்; கிழக்கு மேற்காக தென் புறம் 37 அடி மற்றும் 6அங்குலங்கள்; வடக்குத் தெற்காக கிழக்கு புறம் 130அடி மற்றும் 6 அங்குலங்கள்; வடக்குத் தெற்காக மேற்கு புறம் 130 அடி மற்றும் 6 அங்குலங்கள்; வகை எண். 3 தென் சென்னை பதிவு மாவட்டம் மற்றும் விருகம்பாக்கம் சார்பதிவு மாவட்டத்திற்குட்பட்ட, திருவள்ளூர் மாவட்டம், அம்பத்தூர் வட்டம், சென்னை மாநகராட்சி எல்லைகளுக்குட்பட்ட நெற்குன்றம் கிராமத்தின், சர்வே எண்.22/2A3, பட்டாவின்படி புதிய சர்வே எண்.22/2A3B இல் அடங்கிய பூவிருந்தவல்லி நெடுஞ்சாலையில் அமைந்துள்ள பரப்பளவு 4200சதுர அடி விஸ்தீரணம்கொண் காலி நிலம் அதனைச் சார்ந்த அனைத்து துண்டு மற்றும் பகுதி, எல்லைகள்; வடக்கில்: திருமதி.S. ஷியாமளாதேவி அவர்களின் உரிமைப்பெற்ற நிலம், தெற்கில்: சர்வே எண்.22/2B இல் உள்ள நிலம், கிழக்கில்: சர்வே எண்.22/2B இல் உள்ள நிலம், மேற்கில்: வகை எண்கள்.1 & II இன் சொத்துக்கள். நாற்பரப்புகள்: கிழக்கு மேற்காக வட புறம் 50அடி; கிழக்கு மேற்காக தென் புறம் 50அடி; வடக்குத் தெற்காக கிழக்கு புறம் 84அடி; வடக்குத் தெற்காக மேற்கு புறம் 84அடி. வகை எண். I முதல் III வரையுள்ள சொத்துக்களின் 3932 + 4836 + 4200 = கூட்டுபரப்பளவு 12968சதுர அடி. அட்டவணை 'B' சொத்து குறிப்பிடப்பட்ட அட்டவணை A சொத்தில் பிரிக்கப்படாத பங்கு 454சதுர அடி நிலம். அட்டவணை - C எண்.G3 என எண்ணிடப்பட்ட ஸ்டில்ட் தளத்தில் ஒரு மூடிய கார் நிறுத்தம் (கட்டுமானதாரரால் முடிவு செய்யப்பட்ட பொதுப் பரப்பு உட்பட) மூன்றாம் தளத்தில் 980சதுர அடி கட்டிடப் பரப்பு கொண்ட ஃப்ளாட்/அபார்ட்மெண்ட் எண்.G3. (திரு.G. லோகநாதன் அவர்கள் பெயரில் உள்ள சொத்தின்ஆவண எண்.6133/2022) [Asset ID: 200063892521, Security Id – 400063092087]

சுவாதீன நிலை: அடையாள

குறைந்தபட்ச கேட்பு விலை ₹ 66,00,000/- | டேவணித்தொகை ₹ 6,60,000/- | ஏல உயர்வுத்தொகை ₹ 75,000/-

சொத்துகளைப் பார்வையிடும் தேதி: 14.10.2025 ; நேரம் : காலை 11 மணி முதல் மாலை 4 மணி வரை

மின் ஏலத் தேதி & நேரம்: வ.எண். 3: **28.10.2025** நேரம்: காலை 11 மணி முதல் மாலை 4 மணி வரை (தலா 10 நிமிடங்கள் கொண்ட கால நீட்டிப்புகள் தொடர்ந்து தரப்படும்).

மேற்குறிப்பிட்டுள்ள அனைத்து சொத்துகளும் வங்கிக்கு தெரிந்தவரை வில்லங்கங்கள் ஏதுமில்லை.
விற்பனைக்கான விரிவான விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுக்கு https://www.baanknet.com/
கடன் வழங்கியவரான பாரத ஸ்டேட் வங்கியின் இணையதளமான www.sbi.co.in என்ற இணைப்பில் காணலாம்.

தேதி: வ.எண்.1& 2: 18.09.2025; வ.எண்.3: 17.09.2025
இடம்: சென்னை
அதிகாரப்பூர்வ அலுவலர், SBI, SARB - II , சென்னை

ஞாயிற்றுக்கிழமைதோறும் தினமணி கதிர் இளமை! புதுமை! இனிமை!

## SMFG INDIA CREDIT COMPANY LIMITED

அசையா சொத்துகளின் விற்பனைக்கான விற்பனை அறிவிப்பு

கோரிக்கை அறிவிப்பு தொகை ரூ.73,47,045/-
ரிசர்வ் விலை: ரூ.1,30,89,840/- | EMD: ரூ.13,09,000/-
மின் ஏலம் தேதி: 07.10.2025
தேதி: 19/09/2025, இடம்: சென்னை
SMFG இந்தியா கிரெடிட் கம்பெனி லிமிடெட்

## பிரமல் ஃபைனான்ஸ் லிமிடெட் (PFL)

பதிவு அலுவலக முகவரி: பதிவு அலுவலக முகவரி: யூனிட் எண் 601, 6-ஆவது தளம், பிரமல் அமிதி பில்டிங், பிரமல் அகஸ்தியா கார்ப்பரேட் பார்க், கமணி ஜங்ஷன், தீயணைப்பு நிலையம் எதிரில், LBS மார்க், குர்லா(மேற்கு) மும்பை-400070
CIN : L65910MH1984PLC032639, இணையத்தளம்:- www.piramalfinance.com

### கோரிக்கை அறிவிப்பு

கடனீட்டு சொத்துக்களை ரொக்கமாக்குதல் மற்றும் சீரமைத்தல் மற்றும் கடனீட்டு சொத்து மீதான உரிமைகள் அமலாக்க சட்டம் 2002-இன் பிரிவு 13(2) மற்றும் அதனுடன் கடனீட்டு சொத்து (அமலாக்கம்) விதிகள் 2002 விதி 3(1)-இன் கீழ் கோரிக்கை அறிவிப்பு. கடனீட்டு சொத்துகளை ரொக்கமாக்குதல் மற்றும் சீரமைத்தல் மற்றும் கடனீட்டு சொத்து மீதான உரிமை அமலாக்க சட்டம்-2002-இன் (மேற்படி சட்டம்) கீழ், கீழே கையொப்பம் இட்டு இருப்பவர் பிரமல் ஃபைனான்ஸ் லிமிட்டெட் (PFL) (முன்னாள்: பிரமல் கேப்பிட்டல் அண்டு ஹவுசிங் ஃபைனான்ஸ் லிமிட்டெட்) நிறுவனத்தின் அதிகாரப்பூர்வ அலுவலராக இருக்கிறபடியால், மேற்கூறிய சட்டத்தின் பிரிவு 13(12) மற்றும் அதனுடன் தொடர்புடைய கடனீட்டு சொத்து (அமலாக்கம்) விதிகள் 2002, விதி 3-இன் கீழ் தனக்கு கிடைத்துள்ள அதிகாரத்தை செயலுறுத்தி, முன்சொன்ன சட்டத்தின் 13(2) பிரிவின் கீழ் கோரிக்கை அறிவிப்பு அனுப்பி, பின்வரும் கடன்தாரர்(களை) ["முன்சொன்ன கடன்தாரர்(கள்)"] அவரவர்களுக்கான கோரிக்கை அறிவிப்புகளில் குறிப்பிடப்பட்டுள்ள தொகையை திருப்பிச்செலுத்த கோரி இருந்தார். அந்த விபரங்கள் கீழேயும் கொடுக்கப்பட்டுள்ளன. மேற்சொன்னவை தொடர்பாக மீண்டும் வெளியிடப்படும் இந்த அறிவிப்பும் மூலம் ,முன் சொன்ன கடன்தாரர்(கள்) இந்த அறிவிப்பு பிரசுரமான 60 நாள்களுக்குள் கீழே குறிப்பிடப்பட்டுள்ள தொகையை கீழே குறிப்பிடப்பட்டுள்ள நாளில் இருந்து தொகை செலுத்தப்படும் / அல்லது கடனை அடைக்கும்வரையிலான நாள் வரையான மேற்சொன்ன கோரிக்கை அறிவிப்பு(கள்) விளக்கத்தின்படி மேல் வட்டியுடன், தொகையை கடன் ஒப்பந்தப்படியும் குறிப்பிட்ட கடன்தாரர்(கள்) தாக்கல் செய்த ஆவணங்கள்/ எழுத்து மூலங்கள் இருந்தால் அதன் படியும் PFL-க்கு செலுத்துமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது. இந்த கடனை அடைப்பதற்கான ஈட்டுறுதியாக கீழ்க்காணும் சொத்துகள் PFL நிறுவனத்தாரிடம் குறிப்பிட்ட கடன்தாரர்களால் முறையே அடமானம் வைக்கப்பட்டுள்ளன.

| கடன்தாரர்(கள்) / ஜாமீன்தாரர்(கள்) பெயர் | கோரிக்கை அறிவிப்பு நாள் மற்றும் தொகை - NPA நாளுடன் | கடனீட்டு சொத்து விவரம் (அசையாச் சொத்து) |
|---|---|---|
| (கடன் குறியீட்டு எண் BLSA00040180, சென்னை - கோடம்பாக்கம் கிளை) ரூபேஷ் V (கடன்தாரர்) R அனிதா (கூட்டுக்கடன்தாரர் 1) | 11-08-2025/ரூ. 2067462.82/- (ரூபாய் இருபது லட்சத்து அறுபத்தேழாயிரத்து நானூற்று அறுபத்திரண்டு மற்றும் எண்பத்திரண்டு பைசா மட்டும்) NPA (09-07-2025) | அனைத்து இன்றியமையாத பகுதிகளும் பாகங்களும் கொண்ட காலி நிலம் அமைவிடம்: பிளாட் எண்.72 அமையப்பெற்ற சர்வே எண்.540/4, பட்டாவின்படி பழைய சர்வே எண்.540/4 பாகம், புதிய T.S.எண்.29/11, வார்டு எண்.C பிளாக் எண்.23, பழைய எண். 50, புதிய எண்.12 விஸ்தீரணம் 1650 சதுர அடி பரப்பளவு கொண்டது இது திருவள்ளூர் மாவட்டம், ஆவடி வட்டம், கோயில்பதாகை கிராமத்தில், சுதர்சனம் நகர்-3 இல் அமைந்துள்ளது. |
| (கடன் குறியீட்டு எண் HLSA00054763 சென்னை - கோடம்பாக்கம் கிளை) ஆனந்தன் சிவராமன் (கடன்தாரர்) நளினி பிரகாஷ் (கூட்டுக்கடன்தாரர் 1) | 11-08-2025/ ரூ. 3061667/- (ரூபாய் முப்பது லட்சத்து அறுபத்து ஒராயிரத்து அறுநூற்று அறுபத்தேழு மட்டும்) NPA (04-07-2025) | அனைத்து இன்றியமையாத பகுதிகளும் பாகங்களும் கொண்ட நிலம் மற்றும் கட்டடம் அமைவிடம்: பிளாட் எண்.10 ( மேற்குப்பாகம் ) அமையப்பெற்ற சர்வே எண்: 158/1A பட்டாவின்படி புதிய சர்வே எண்: 158/1A15 பரப்பளவு 1035 சதுர அடி இது திருவள்ளூர் மாவட்டம், திருவள்ளூர் வட்டம், வேப்பம்பட்டு கிராமத்தில், DTCP ஒப்புதல் எண்.243/88 இல் "ஸ்ரீ பவானி நகர்" இல் அமைந்துள்ளது. |

முன்சொன்ன கடன்தாரர்கள் மேற்சொன்னபடி தொகையை PFL நிறுவனத்துக்கு கட்டத் தவறினால், மேற்சொன்ன சட்டத்தின் பிரிவு 13(4)ன் மற்றும் உரிய விதிகளின்படி மேலே உள்ள கடனீட்டு சொத்துகள் மீது PFL நிறுவனம் நடவடிக்கை மேற்கொள்ளும். அதன் செலவினங்கள் பின்விளைவுகள் சார்த்த பொறுப்புகள் அனைத்தையும் கடன்தாரர்களே ஏற்க வேண்டி இருக்கும் மேற்படி கடன்தாரர்கள், மேற்சொன்ன சட்டத்தின் படி PFL நிறுவனத்தாரின் எழுத்துப்பூர்வ முன் அனுமதி இன்றி விற்பனை குத்தகை அல்லது வேறுவகையில் மேற்சொன்ன சொத்துகளை கைமாற்றி விடுவது தடை செய்யப்பட்டுள்ளது. மேற்சொன்ன சட்டம் அல்லது விதிகளின் ஷரத்துகளை மீறுவோர் அல்லது மீறத்துணைபுரிவோர் மேற்படி சட்டத்தின்கீழ் சிறையில் அடைக்கப்படலாம் மேலும் / அல்லது அபராதம் கட்ட நேரலாம்.

நாள்: 19.09.2025 | இடம்: சென்னை - தமிழ்நாடு
ஒம்/- (அதிகாரப்பூர்வ அலுவலர்), பிரமல் ஃபைனான்ஸ் லிமிட்டெட்

## RBL வங்கி லிட்

RBL BANK
நிர்வாக அலுவலகம்:1-வது சந்து, ஷாபுரி, கோல்ஹாப்பூர்-416 001.
கிளை அலுவலகம்: RBL வங்கி லிட்., சாய் கல்யாணி டவர்ஸ், எண் 56/105, G.N செட்டி சாலை, தி.நகர், சென்னை-600017. கட்டுப்பாட்டு அலுவலகம்: ஒன் இந்தியா புல்ஸ் மையம், டவர் 2B, 6ஆவது தளம், 841, சேனாபதி பாபட் மார்க், லோயர் பரேல் (மேற்கு), மும்பை-400013. தேசியச் செயல்பாட்டு மையம்: டெக்னிபிளெக்ஸ்-1, 9ஆவது தளம், வீர சவார்க்கர் மேம்பாலத்துக்கு அப்பால், கோரேகான் (மேற்கு), மும்பை-400062.

### SARFAESI சட்டம் 2002, பிரிவு 13(2)-இன் கீழான ஈட்டுறுதி அறிவிப்பு

கீழே பத்தி எண் 2-இல் குறிப்பிடப்பட்டுள்ள விண்ணப்பதாரர் மற்றும் கூட்டு விண்ணப்பதாரர் ஆகியோருக்கு ஈடு பெற்றுக் கடனளித்த RBL வங்கி லிமிடெட் நிறுவனமான நாங்கள் உங்கள் அனைவருக்கும் தெரிவிப்பது யாதெனில் அசலையும் வட்டியையும் செலுத்துவதில் / திருப்பிச் செலுத்துவதில் நீங்கள் செய்த பிழைகளின் காரணமாக எங்கள் பதிவேடுகளில் உள்ள உங்கள் கணக்கு செயல்படாச் சொத்தாக வகைப்படுத்தப்பட்டது. தற்பொழுது தொகையை அதன் மேல் வட்டியுடன் RBL வங்கி லிட்., நிறுவனத்துக்கு நீங்கள் செலுத்த வேண்டிய வகையில் நிலுவையில் உள்ளது.
நாங்கள் மீண்டும் மீண்டும் கோரிக்கை விடுத்தும் நீங்கள் உங்கள் கணக்கில் / கணக்குகளில் நிலுவையில் இருந்த தொகையை / தொகைகளைச் செலுத்தவும் இல்லை உங்கள் பொறுப்புக்களைத் தீர்க்கவும் இல்லை. ஆதலால் கடனீட்டுச் சொத்துக்களை ரொக்கமாக்குதல் மற்றும் சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கச் சட்டம் 2002, அதிகாரம் III, பிரிவு 13(2)-இன் கீழ் அறிவிப்பினை வெளியிட்டு மேற்குறிப்பிட்ட தொகையை ஒப்பந்த விகிதப்படியான அதன் உரிய மேல் வட்டியுடன் செலவினங்கள், கட்டணங்கள், இதர தொகைகள் அனைத்தையும் சேர்த்து அவ்வறிவிப்பு நாளிலிருந்து 60 நாட்களுக்குள் முழுமையாகச் செலுத்தி உங்கள் பொறுப்புக்களைத் தீர்க்குமாறு அழைப்பு விடுத்திருந்தோம்.

| வ. எண் | கடன்தாரர் பெயர், கடன் தொகை மற்றும் கடன் கணக்கு எண் | அடகு வைக்கப்பட்டுள்ள சொத்தின் விவரம் | NPA நாள் மற்றும் நிலுவைத்தொகை |
|---|---|---|---|
| 1 | 1) திரு. பாபு, த/பெ. திரு. பலராமன், எண் 27, 6ஆவது தெரு, Y-பிளாக், 13ஆவது பிரதான சாலை, அண்ணாநகர், சென்னை – 600040. (கடன்தாரர்) மற்றும் மறைந்த திரு. பலராமன் மற்றும் மறைந்த திருமதி புஷ்பா ஆகியோரின் சட்டப்பூர்வ வாரிசு), 2) திரு. L.B. வெங்கடேசன், த/பெ. திரு. பலராமன், எண் 27, 6ஆவது தெரு, Y-பிளாக், 13ஆவது பிரதான சாலை, அண்ணாநகர், சென்னை – 600040. (கூட்டுக் கடன்தாரர் மற்றும் மறைந்த திரு. பலராமன் மற்றும் மறைந்த திருமதி புஷ்பா ஆகியோரின் சட்டப்பூர்வ வாரிசு), 3) திரு. L.B. பாலகுமார், த/பெ. திரு. பலராமன், எண் 27, 6ஆவது தெரு, Y-பிளாக், 13ஆவது பிரதான சாலை, அண்ணாநகர், சென்னை – 600040. (கூட்டுக் கடன்தாரர், அடமானதாரர் மற்றும் மறைந்த திரு. பலராமன் மற்றும் மறைந்த திருமதி புஷ்பா ஆகியோரின் சட்டப்பூர்வ வாரிசு), 4) P.B. கல்பனா, த/பெ. திரு. பலராமன், எண் 27, 6ஆவது தெரு, Y-பிளாக், 13ஆவது பிரதான சாலை, அண்ணாநகர், சென்னை – 600040. (கூட்டுக் கடன்தாரர் மற்றும் மறைந்த திரு. பலராமன் மற்றும் மறைந்த திருமதி புஷ்பா ஆகியோரின் சட்டப்பூர்வ வாரிசு). கடன் கணக்கு எண்: 809000346992. | இன்றியமையாப் பகுதிகள் அனைத்துடனும் கூடிய சொத்து. பிளாட் எண் 3013, Y-பிளாக் 6ஆவது தெரு, 13ஆவது பிரதான சாலை, அறிஞர் அண்ணா நகர், சென்னை – 40, மேற்கு சென்னை அருகமைவுத் திட்டத்தின் ஒப்புதலளிக்கப்பட்ட வரைபடத்தில் அடங்கியது, RS எண் 207/10 பாகம் மற்றும் 207/14-A பாகம், கோயம்பேடு கிராமம், சென்னை. எல்லைகள் பின்வருமாறு: வடக்கு: 30 அடிச் சாலை, தெற்கு: பிளாட் எண் 3017, கிழக்கு: பிளாட் எண் 3014, மேற்கு: 48 அடிச் சாலை. அளவு: வடக்கில் - 40 அடி 6 அங்குலம், தெற்கில் - 45 அடி, கிழக்கில் - 80 அடி, மேற்கில் - 75 அடி, தெற்கு மேற்காக – 7 அடி. பரப்பளவு ஏறக்குறைய 1 கிரவுண்டு 1208 சதுர அடி. இது அண்ணா நகர் சார்பதிவு மாவட்டம் மற்றும் மத்திய சென்னை பதிவு மாவட்டத்துக்கு உட்பட்டது. | NPA நாள்: 05.09.2025<br>மொத்தத் தொகை ரூ.72,46,944.60/-<br>08.09.2025 நாள்படி மொத்த நிலுவைத்தொகை<br>கோரிக்கை அறிவிப்பு நாள்: 09.09.2025 |

தற்பொழுது RBL வங்கி லிட்., நிறுவனத்தின் அதிகாரப்பூர்வ அலுவலர் உங்கள் பொறுப்புக்களை நீங்கள் முழுமையாகத் தீர்க்கும் பொருட்டு மேற்கூறிய விதிகளின்படி கோரிக்கை அறிவிப்பின் உள்ளடக்கங்களை இங்கே வெளியிடுகிறார். தவறினால் மேற்கொண்டு எந்த அறிவிப்பும் இன்றி நீங்கள் எங்கள் பெயருக்குத் தாக்கல் செய்துள்ள பின்வரும் கடனீட்டுச் சொத்தின் மீது மேற்கூறிய சட்டத்தின் கீழான உரிமைகளில் எதையும் அல்லது எல்லாவற்றையும் பயன்படுத்தி நாங்கள் நடவடிக்கை மேற்கொள்ள நேரிடும்.
மேற்கண்ட சட்டத்தின்படி குறிப்பிட்ட கடனுக்குத் தொடர்புடைய கடன்தாரர்கள் மற்றும் ஜாமீன்தாரர்கள் ஆகியோருக்கு எதிராக RBL வங்கி லிட்-க்கு இருக்கும் உரிமைகளுக்கும் பெறக்கூடிய தீர்வுகளுக்கும் பாதகமேற்படாதவாறு இந்த அறிவிப்பு வெளியிடப்படுகிறது என்பதை நினைவில் கொள்க. மேற்கூறிய சட்டத்தின் பிரிவு 13(13)-இன்படி எங்கள் முன் ஒப்புதல் இல்லாமல் மேற்குறிப்பிட்ட கடனீட்டுச் சொத்தை விற்கவோ அதன் மீது வேறெந்த நடவடிக்கையையும் மேற்கொள்ளவோ விற்பனை, குத்தகை அல்லது வேறெந்த வழியிலும் அதைப் பெயர் மாற்றம் செய்யவோ நீங்கள் தடை செய்யப்பட்டுள்ளீர்கள் என்பதை அறிய வேண்டுகிறோம்.

இடம்: சென்னை, நாள்: 19.09.2025
அதிகாரப்பூர்வ அலுவலர், RBL வங்கி லிட்.

## kotak கோட்டக் மஹிந்திரா வங்கி லிமிடெட்

பதிவு அலுவலக முகவரி: 27, BKC, C27, G பிளாக், பாந்த்ரா குர்லா வளாகம், பாந்த்ரா (கி), மும்பை-400051.
கிளை அலுவலகம்: 4ஆவது தளம், சாம்சன் டவர்ஸ், 402L, பாந்தியன் சாலை, எழும்பூர், சென்னை-600008.
கூட்டுரிமை நிறுவன அடையாள எண்: L65110MH1985PLC038137, www.kotak.com

### SARFAESI சட்டம் 2002, பிரிவு 13(2)-இன் கீழான சார்பு செய்யப்படாத கோரிக்கை அறிவிப்பு வெளியீடு

தற்பொழுது இதன் மூலம் அறிவிப்பது யாதெனில், கோட்டக் மஹிந்திரா வங்கி லிட்., ("வங்கி" / "KMBL") நிறுவனத்திடமிருந்து பெற்ற கடன் வசதியின் அசலையும் வட்டியையும் திருப்பிச் செலுத்தத் தவறிய கீழே குறிப்பிடப்பட்டுள்ள கடன்தாரரின் / ஜாமீன்தாரர்களின் / அடமானதாரர்களின் கடன் கணக்கானது செயல்படாச் சொத்தாக (NPA) வகைப்படுத்தப்பட்டுள்ளது. இது குறித்து, கடனீட்டுச் சொத்துக்களை ரொக்கமாக்குதல் மற்றும் சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கச் சட்டம் 2002 ("SARFAESI சட்டம்"), பிரிவு 13(2)-இன் கீழான அறிவிப்புகள் பின்வரும் கடன்தாரரின் / ஜாமீன்தாரர்களின் / அடமானதாரர்களின் கடைசியாகத் தெரிந்த முகவரிகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டன. ஆனால் அவை சார்பு செய்யப்படாமல் / சேர்ப்பிக்கப்படாமல் திரும்பி வந்துவிட்டபடியால் அவ்வறிவிப்புகளின் உள்ளடக்கங்கள் இந்தப் பொது அறிவிப்பின் வாயிலாகத் தெரிவிக்கப்படுவதோடு அறிவிப்பு தொடர்பாக மேலும் விவரங்கள் அறிய அசல் அறிவிப்பினை / அஞ்சல் உறையினைக் கீழே கையொப்பமிட்டுள்ளவரிடம் பெற்றுக் கொள்ள வேண்டுகிறோம்.

| | |
|---|---|
| கடன்தாரரின் பெயர் | திரு.முருகேசன் P., த/பெ. திரு.பெருமாள் (கடன்தாரர் &/அல்லது அடமானதாரர்), முகவரி: எண் 1233, விஷ்ணு சீனிவாசன் அபார்ட்மெண்ட்ஸ், 3ஆவது தளம், வெஸ்ட் எண்டு காலனி, முகப்பேர், சென்னை-600050. இன்னொரு முகவரி: M/s. ஸ்ரீ சரவணா மெட்டல் கார்ப்பரேஷன், எண் 524, பழைய எண் 255, தங்கசாலைத் தெரு, பூங்கா நகர், சென்னை-600003. இன்னொரு முகவரி: பரிணாம் அபார்ட்மெண்ட், 1b, 1ஆவது தளம், பு.எண் 48, ப.எண் 34, ஆஸ்பிரின் தோட்டம், 1ஆவது தெரு, கீழ்ப்பாக்கம், சென்னை-600010. இன்னொரு முகவரி: கதவு எண் 59, புரசைவாக்கம் நெடுஞ்சாலை, புரசைவாக்கம், சென்னை-600007. இன்னொரு முகவரி: சீபிரோஸ் ஆர்கேடியா 501, 5ஆவது தளம், 811, பூந்தமல்லி நெடுஞ்சாலை, சென்னை-600010. |
| ஜாமீன்தாரர்களின் / அடமானதாரர்களின் பெயர் | திருமதி. திலகம், க/பெ. திரு.முருகேசன் (ஜாமீன்தாரர் & / அல்லது அடமானதாரர்) |
| 13(2)-இன் கீழான கோரிக்கை அறிவிப்பின் நாள் | 08.09.2025 |
| NPA நாள் | 02.06.2025 |
| மொத்தக் கடன் நிலுவை | கடன் கணக்கு எண் 8483TL0100000016 மற்றும் கடன் கணக்கு எண் 1713327538 ஆகியவற்றின் பேரிலான நிதி வசதிகள் தொடர்பாக 08.09.2025 நாள்படி ரூ.77,92,955.93 (ரூபாய் எழுபத்தேழு இலட்சத்துத் தொண்ணூற்று இரண்டாயிரத்துத் தொள்ளாயிரத்து ஐம்பத்தைந்து மற்றும் பைசா தொண்ணூற்று மூன்று மட்டும்) தொகை 09.09.2025 முதல் அத்தொகை முழுமையாகவும் இறுதியாகவும் செலுத்தப்படும் / பெறப்படும் வரையிலானதும் கூட்டு வட்டி அடிப்படையிலானதும் ஒப்பந்த விகிதப்படியானதுமான அதன் மேல் வட்டி, இதர கட்டணங்கள் உட்பட. |
| கடனீட்டுச் சொத்தின் / சொத்துக்களின் விவரங்கள் | KMBL நிறுவனத்திடம் அடமானம் வைக்கப்பட்டுள்ள அசையாச் சொத்துக்களின் விவரங்கள்:- சொத்தின் உரிமையாளர்கள்: திரு. முருகேசன் மற்றும் திருமதி திலகம்: இன்றியமையாப் பகுதிகள் அனைத்துடனும் கூடிய சொத்து, பழைய கதவு எண் 255, (முந்தைய கதவு எண் 14), புதிய கதவு எண் 524, தங்கசாலைத் தெரு, பூங்கா நகர், சென்னை-600003, புரசைவாக்கம் வட்டம், RS எண் 9872, பிளாக் எண் 79, முத்தியால்பேட்டை கிராமம், பரப்பளவு ஏறக்குறைய 1996 சதுரடி மற்றும் அங்குள்ள கட்டடம், வசதிகள் உட்பட. நிலத்தின் எல்லைகள் பின்வருமாறு:- வடக்கு: காமவல்லி அம்மாள் அவர்களின் வீடு RS எண் 9864 மற்றும் RS எண் 9873, தெற்கு: ஜெயா போன் வளாகம், RS எண் 9871/2 மற்றும் RS எண் 9871/3, கிழக்கு: தங்கசாலைத் தெரு, மேற்கு: சிதம்பர செட்டியார் வீடு, RS எண் 9871/2 மற்றும் 9864. இது சௌகார்பேட்டை சார்பதிவு அலுவலகத்துக்கும் வடசென்னை பதிவு மாவட்டத்துக்கும் உட்பட்டது. இத்துடன் ஏற்கெனவே அங்குள்ள அனைத்துக் கட்டடங்கள் மற்றும் கட்டுமானங்கள் ஆகியவையும் குறிப்பிட்ட அடமானங்கள் மேற்கொள்ளப்பட்டது முதல் / அதன் பின்னர் எந்த நேரத்திலும் அங்கு எழுப்பப்படக்கூடிய / கட்டப்படக்கூடிய கட்டடங்கள் மற்றும் கட்டுமானங்கள் உள்ளது உள்ளபடி மற்றும் அங்குள்ள அனைத்துச் சேர்க்கைகள், அனைத்துப் பொருத்துதல்கள், அனைத்துச்சாமான்கள் ஆகியவற்றுடன் தற்பொழுது அங்குள்ளவையும் எதிர்காலத்தில் ஏற்படக்கூடியவையுமான தரையோடு இணைந்துள்ள அல்லது தரையோடு இணைந்துள்ள எதனோடும் நிலையாகப் பிணைந்துள்ள அனைத்து ஆலைகள் மற்றும் இயந்திரங்கள் உட்பட.<br>KMBL நிறுவனத்திடம் அடகு வைக்கப்பட்டுள்ள அசையும் சொத்துக்களின் விவரங்கள்:- தற்பொழுதுள்ளவையும் எதிர்காலத்தில் ஏற்படக்கூடியவையுமான கடன்தாரருடைய அனைத்து மூலப்பொருள் கையிருப்புகள், தயாரிப்பில் உள்ள சரக்குகள், பகுதியாகச் செய்து முடிக்கப்பட்ட மற்றும் முழுவதும் செய்து முடிக்கப்பட்ட சரக்குகள், வாடிக்கையாளர் பொருட்கள் & உதிரிப்பொருட்கள் மற்றும் பேரேட்டுக் கடன்கள், முறிச்சீட்டுகள், ஆவணப்படுத்தப்பட்டவை அல்லது பிற, சுவாதீனம் செய்யப்பட்டவை அல்லது கடன்தாரருடைய கட்டுப்பாட்டிலானவை அல்லது அன்னார் கட்டுப்பாட்டில் இல்லாதவை, தற்பொழுது அங்கே தனியாக இருப்பவை அல்லது பெட்டிகளில் இருப்பவை அல்லது தற்பொழுது மேற்படி இடத்தில் இருப்பவை அல்லது சேமிக்கப்பட்டுள்ளவை அல்லது அருகில் இருப்பவை அல்லது இனி வரக்கூடியவை என இது தொடரும் காலம் வரையில் கடன்தாரருடைய தொழிற்சாலைகள், வளாகங்கள், கிடங்குகள் ஆகிய இடங்களில் இருப்பவை அல்லது அவ்வப்பொழுது உள்ளே கொண்டு வரப்படுபவை அல்லது இவ்விடத்தின் பாற்படுபவை அல்லது சேமிக்கப்படுபவை அல்லது அருகில் இருப்பவை அல்லது இதர இடங்களில் கடன்தாரருடைய ஆணை அல்லது இடமாற்றம் காரணமாக எந்தத் தரப்பினராலும் வைத்திருக்கப்படக்கூடியவை அல்லது இனிமேல் வைத்திருக்கப்படக்கூடியவை அல்லது போக்குவரத்தில் இருப்பவை அல்லது கடலில் நிறுத்தி வைக்கப்பட்டிருப்பவை அல்லது சேர்ப்பிப்புக்கான ஆணையின் கீழானவை முதலான அனைத்து இதர அசையும் சொத்துக்கள் உட்பட.<br>தற்பொழுதுள்ளவையும் எதிர்காலத்தில் ஏற்படக்கூடியவையுமான உதிரிப்பொருட்கள், கருவிகள், துணைப்பொருட்கள் முதலான நிறுவப்பட்டவை அல்லது நிறுவப்படாதவை மற்றும் சுவாதீனம் செய்யப்பட்டவை அல்லது கடன்தாரருடைய கட்டுப்பாட்டிலானவை அல்லது அன்னார் கட்டுப்பாட்டில் இல்லாதவை, தற்பொழுது அங்கே தனியாக இருப்பவை அல்லது பெட்டிகளில் இருப்பவை அல்லது தற்பொழுது மேற்படி இடத்தில் இருப்பவை அல்லது சேமிக்கப்பட்டுள்ளவை அல்லது அருகில் இருப்பவை அல்லது இனி வரக்கூடியவை என இது தொடரும் காலம் வரையில் கடன்தாரருடைய தொழிற்சாலைகள், வளாகங்கள், கிடங்குகள் ஆகிய இடங்களில் இருப்பவை அல்லது அவ்வப்பொழுது உள்ளே கொண்டு வரப்படுபவை அல்லது இவ்விடத்தின் பாற்படுபவை அல்லது சேமிக்கப்படுபவை அல்லது அருகில் இருப்பவை அல்லது இதர இடங்களில் கடன்தாரருடைய ஆணை அல்லது இடமாற்றம் காரணமாக எந்தத் தரப்பினராலும் வைத்திருக்கப்படக்கூடியவை அல்லது இனிமேல் வைத்திருக்கப்படக்கூடியவை அல்லது போக்குவரத்தில் இருப்பவை அல்லது கடலில் நிறுத்தி வைக்கப்பட்டிருப்பவை அல்லது சேர்ப்பிப்புக்கான ஆணையின் கீழானவை எனக் கடன்தாரருடைய அனைத்துச் சாதனங்கள் உட்பட.<br>தற்பொழுதுள்ளவையும் எதிர்காலத்தில் ஏற்படக்கூடியவையுமான உதிரிப்பொருட்கள், கருவிகள், துணைப்பொருட்கள் முதலான சுவாதீனம் செய்யப்பட்டவை அல்லது கடன்தாரருடைய கட்டுப்பாட்டிலானவை அல்லது அன்னார் கட்டுப்பாட்டில் இல்லாதவை, தற்பொழுது அங்கே தனியாக இருப்பவை அல்லது பெட்டிகளில் இருப்பவை அல்லது தற்பொழுது மேற்படி இடத்தில் இருப்பவை அல்லது சேமிக்கப்பட்டுள்ளவை அல்லது அருகில் இருப்பவை அல்லது இனி வரக்கூடியவை என இது தொடரும் காலம் வரையில் கடன்தாரருடைய தொழிற்சாலைகள், வளாகங்கள், கிடங்குகள் ஆகிய இடங்களில் இருப்பவை அல்லது அவ்வப்பொழுது உள்ளே கொண்டு வரப்படுபவை அல்லது இவ்விடத்தின் பாற்படுபவை அல்லது சேமிக்கப்படுபவை அல்லது அருகில் இருப்பவை அல்லது இதர இடங்களில் கடன்தாரருடைய ஆணை அல்லது இடமாற்றம் காரணமாக எந்தத் தரப்பினராலும் வைத்திருக்கப்படக்கூடியவை அல்லது இனிமேல் வைத்திருக்கப்படக்கூடியவை அல்லது போக்குவரத்தில் இருப்பவை அல்லது கடலில் நிறுத்தி வைக்கப்பட்டிருப்பவை அல்லது சேர்ப்பிப்புக்கான ஆணையின் கீழானவை என வாங்கப்பட்டுள்ள / பிற்பாடு பணம் செலுத்தப்பட உள்ளவை உள்ளிட்ட இனி வாங்கப்பட உள்ளவை முதற்கொண்டு அனைத்து இயந்திரங்கள், வாகனங்கள், மோட்டார்கள் உட்பட.<br>தற்பொழுதுள்ளவையும் எதிர்காலத்தில் ஏற்படக்கூடியவையுமான கடன்தாரருடைய அனைத்துப் பேரேட்டுக் கடன்கள், பணம், உரிமைகோரல்கள், கோரிக்கைகள், ஒப்பந்தங்கள், உடன்பாடுகள், பணப் போக்குவரத்து தொடர்பான ஈட்டுறுதிகள், வர வேண்டியவை அனைத்து இதர நடப்புச் சொத்துக்கள், தரகுத் தொகைகள் மற்றும் வருமானம்.<br>கடன்தாரர் மற்றும் / அல்லது அவர் சார்பிலான பிறர் பாற்பட்டவை மற்றும் அன்னாருக்கு வரப்பெற்றவை மற்றும் / அல்லது வரக்கூடியவை எனக் கடன்தாரர் தொடர்பான அல்லது மேற்கூறிய அனைத்துச் சொத்துக்கள் தொடர்பான அனைத்து உரிமைகள், உடைமைகள், பாத்தியதைகள், ஆதாயங்கள், உரிமைகோரல்கள், கோரிக்கைகள் எதுவாக இருப்பினும் அதன் பேரிலான அனைத்துப் பேரேட்டுக் கடன்கள், வணிக வரவுகள், அனைத்துப் பணப் போக்குவரத்துகள் மற்றும் வர வேண்டியவை மற்றும் வருமானங்கள் ஆகியவை உட்படவும் இவையல்லாமல் கடன்தாரரின் கைவசமுள்ள பணம் சேர்த்தும் இன்ன பிறவும். |

இந்த அறிவிப்பு வெளியாகும் நாளிலிருந்து 60 நாட்களுக்குள் நிலுவைத்தொகையைச் செலுத்துமாறு மேற்குறிப்பிட்ட அடமானதாரர்களுக்கு / ஜாமீன்தாரர்களுக்கு இதன் மூலம் அழைப்பு விடுக்கப்படுகிறது. தவறினால், குறிப்பிட்ட 60 நாட்கள் முடிந்த பின்னர் SARFAESI சட்டம் 2002-இன் கீழ் அடுத்தகட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். மேலும் விவரங்களும் தகவல்களும் அறிய மேற்குறிப்பிட்ட தரப்பினர், பின்வரும் அதிகாரப்பூர்வ அலுவலரிடம் தொடர்பில் இருக்க வேண்டுகிறோம்: திரு.VK யூனுஸ் முகமது, (கை.) +91-9003305181, மின்னஞ்சல்: vkyunus.mohammed@kotak.com.

நாள்: 19.09.2025
இடம்: சென்னை, தமிழ்நாடு.
ஒம்/- அதிகாரப்பூர்வ அலுவலர், கோட்டக் மஹிந்திரா வங்கி

## HDFC BANK ஹெச்.டி.எஃப்.சி. பேங்க் லிமிடெட்

### விற்பனை அறிவிப்பு (SALE BY PRIVATE TREATY)

### சொத்து விவரம்

... அவென்யூ, சௌபாக்கியா நகர், கயரம்பேடு, எண்.50, கயரம்பேடு கிராமம், செங்கல்பட்டு தாலுகா, காஞ்சிபுரம் மாவட்டம் என்னும் முகவரியில் உள்ள ப்ளாட், மொத்தமுள்ள 2135 சதுர அடி நிலத்தில் 488 சதுர அடி அல்லது 45.336 சதுர மீட்டர் பிரிக்கப்படாத பங்கு நிலம், அதனுடன் இணைந்த துண்டுகளும் பகுதிகளும். எல்லைகள்: வடக்கு: 23 அடி ரோடு, தெற்கு: காலி நிலம் (சர்வே எண்.19/1A2), கிழக்கு: மனை எண்.25, மேற்கு: மனை எண்.27. அளவுகள்: வடக்கு தெற்காக கிழக்கு பக்கம்: 63 அடி, மேற்கு பக்கம்: 59 அடி, கிழக்கு மேற்காக வடக்கு பக்கம்: 35 அடி, தெற்கு பக்கம்: 35 அடி. இந்த சொத்தானது காட்டாங்குளத்தூர் பஞ்சாயத்து யூனியன் எல்லைக்குட்பட்டது.

HDFC ஹெச்.டி.எஃப்.சி. பேங்க் லிமிடெட்
ஒப்பம்/- அதிகாரம் பெற்ற அதிகாரி

Head Office: HDFC Bank House, Senapati Bapat Marg, Lower Parel (West), Mumbai - 400 013

## KVB Karur Vysya Bank

Smart way to bank
சொத்து வசூல் கிளை
எண்.1, பத்மாவதியார் ரோடு, 2-வது தளம், (பீட்டர்ஸ் ரோடு அருகில்) கோபாலபுரம், சென்னை - 600 086. Ph: 044 – 2835 9331/ 33/ 34

### அசையா சொத்து சுவாதீன அறிவிப்பு

Issued under Rule 8(1) of Security Interest (Enforcement) Rules, 2002

பிணைக்காப்பு, நிதிச் சொத்து மறுசீரமைப்பு மற்றும் பிணைக்காப்பு செயலாக்கச் சட்டம், 2002 மற்றும் பிணைக்காப்பு (செயலாக்க) விதிகள், 2002 ன் (Securitisation and Reconstruction of Financial Assets and Enforcement of Security Interest Act, 2002 (Act 54 of 2002)-ன்கீழ் அதிகாரம் பெற்ற அதிகாரியாக நியமிக்கப்பட்டவரான கீழே கையொப்பமிட்ட கரூர் வைஸ்யா பேங்க் லிமிடெட், அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி மூலம், மேற்படி சட்டம் 13(12) பிரிவு மற்றும் விதி 3-ன் படி கீழ்குறிப்பிட்டுள்ள தேதிகளிட்ட கோரிக்கை அறிவிப்பில் (Demand Notice) குறிப்பிடப்பட்ட கடன்பாக்கி தொகை மற்றும் வட்டி, இதர செலவுகளுடன் அறிவிப்பு பெற்ற அறுபது நாட்களுக்குள் திரும்ப செலுத்த வேண்டுமென்று கீழே குறிப்பிட்டுள்ள கடன்தாரர்கள் / ஜாமீன்தாரர்கள் அனுப்பப்பட்டது.

கடன்பெற்ற நபர்கள் வங்கிக்கு செலுத்த வேண்டிய கடன் தொகையை செலுத்த தவறியதால், குறிப்பாக கடன்பெற்ற நபர்களுக்கும் மற்றும் பொது மக்களுக்கும் இதன் மூலம் அறிவிப்பது என்னவென்றால், மேற்படி சட்டத்தின் பிரிவு 13(4) மற்றும் விதி 8-ன்படி கீழே விவரிக்கப்பட்டுள்ள சொத்துக்களை 17.09.2025 தேதியன்று கீழே கையொப்பமிட்டவர் வங்கியின் உடமையாக்கியுள்ளார்.

இது முதற்கொண்டு கடன் பெற்றவரோ அல்லது மற்ற பொதுமக்களோ இந்த சொத்துக்களில் எந்தவிதமான வில்லங்கங்களும் ஏற்படுத்தக்கூடாது என்றும் அவ்வாறு ஏற்படுத்தினால் அது கரூர் வைஸ்யா பேங்க் லிமிடெட், கீழ்குறிப்பிட்டுள்ள கிளைகளுக்கு வரவேண்டிய கீழே கொடுக்கப்பட்டுள்ள கடன் தொகைக்கும் மற்றும் வட்டி, இதர செலவுகளுக்கு கட்டுப்பட்டவை என்றும் இதன் மூலம் தெரிவித்துக்கொள்கிறோம்.

கடனுக்கு ஈடாக அடமானம் வைக்கப்பட்டுள்ள சொத்துக்களை மீட்பதற்குரிய கால வரம்பு குறித்து சட்ட பிரிவு 13(8) ஷரத்துக்களின் மீது கடன்தாரர்களின் கவனம் ஈர்க்கப்படுகிறது.

**வ.எண்.1: (புரசைவாக்கம் கிளை):** கடன்தாரர்: 1.M/s.ஓம் சக்தி என்டர்டெயின்மெண்ட்ஸ், அதன் சார்பாக உரிமையாளர்: Mr.A.மணி, எண்.15, லாலா குட்டி தெரு, பெரியமேடு, சென்னை-600 003 உரிமையாளர் / அடமானதாரர்: 2.Mr.A.மணி, S/o.Mr.அருணாச்சலம், எண்.15, லாலா குட்டி தெரு, பெரியமேடு, சென்னை-600 003 ஜாமீன்தாரர்: 3.Mr.B.ரமேஷ், S/o.Mr.பலராமன், 2/3, வீராசாமி தெரு, பெரியமேடு, சென்னை-600 003; கோரிக்கை அறிவிப்பு தேதி: 21.04.2025; கோரிக்கை அறிவிப்பில் கோரப்பட்ட தொகை: ₹ 2,05,23,934.86; தற்போதைய கடன் நிலுவைத்தொகை: 31.08.2025 அன்றுள்ளபடி ₹ 1,68,57,047.86 மற்றும் 01.09.2025 முதல் வட்டி.

அசையா சொத்து விபரம்: திருவள்ளூர் பதிவு மாவட்டம், பூந்தமல்லி சார்-பதிவு மாவட்டம் எல்லைக்குட்பட்ட, சர்வே எண்.625/4, 625/5 பகுதி, 625/6A & 625/15, பட்டா எண்.452 & 454, கதவு எண்.126, ஆவடி ரோடு, கரையாஞ்சாவடி, பூந்தமல்லி கிராமம், ஸ்ரீபெரும்புதூர் தாலுகா, பூந்தமல்லி, சென்னை-600056 என்றும் முகவரியில் கிழக்கு மேற்காக வடக்கு பக்கம்: 111 அடி, கிழக்கு மேற்காக தெற்கு பக்கம்: 111 அடி, வடக்கு தெற்காக கிழக்கு பக்கம்: 61 அடி, வடக்கு தெற்காக மேற்கு பக்கம்: 61 அடி ஆக மொத்தம் 6771 சதுர அடி நிலம் அதில் 3225 சதுர அடி தரைத்தளம், 3295 சதுர அடி முதல் தளம் கொண்ட வணிக கட்டிடம் (21.01.1993 தேதியிட்ட கட்டிட திட்ட அனுமதி எண்.B/15156/23/93, CMDA, பூந்தமல்லி டவுன் பஞ்சாத்து ஒப்புதல் பெற்ற R.Dis.No.499/1992, B.A.No: 69/92-93 தேதி 05.02.1992), மின் சேவை எண்.232-06-932 & 232-06-170, தண்ணீர் மற்றும் கழிவுநீர் இணைப்பு உட்பட, சொத்து வரி தீர்வை எண்.3345 to 3355 மற்றும் அதனுடன் இணைந்த துண்டுகளும் பகுதிகளும். எல்லைகள்: வடக்கு: அன்வர் பாஷா நிலம், தெற்கு: சர்வே எண்.625/5 பகுதி சொத்து, கிழக்கு: தாரா பாய் மற்றும் Mr.A.ஆஸ்கர் வைத்துக்கொண்ட சொத்து, மேற்கு: ஆவடி ரோடு.

**வ.எண்.2: (சென்னை-ஓமிட்ஸ் ரோடு கிளை):** கடன்தாரர்: 1.M/s.கில்டன் ஏஜென்சீஸ், புதிய எண்.160, பழைய எண்.150, பிராட்வே, சென்னை-600 108 ஜாமீன்தாரர் / குருதீப் சிங்-ன் சட்டப்படியான வாரிசுதாரர்: 2.Mrs.ரோசி குருதீப் சிங், W/o.லேட் Mr.குருதீப் சிங், ப்ளாட் எண்.8, ப்ளாக்-I, எமிரால்டு டவர்ஸ்-III தளம், 81, சுந்தரமணி மெயின் ரோடு, முகப்பேர், அண்ணா நகர் (மேற்கு), சென்னை-600 058 மேலும் முகவரி, எண்.180, 1வது தளம், பைக்ராஃப்ட்ஸ் ரோடு, ராயப்பேட்டை, சென்னை-60014; கோரிக்கை அறிவிப்பு தேதி: 13.07.2022; கோரிக்கை அறிவிப்பில் கோரப்பட்ட தொகை: ₹ 42,76,795.93; தற்போதைய கடன் நிலுவைத்தொகை: ₹ 18,03,147.73 மற்றும் 01.09.2025 முதல் வட்டி.

அசையா சொத்து விபரம்: ஷெட்யூல்-A (மொத்த சொத்து): வட சென்னை பதிவு மாவட்டம், கொன்னூர் சார்-பதிவு மாவட்டம் எல்லைக்குட்பட்ட, சர்வே எண்.438/2 மற்றும் 439-ல் உள்ள 2 ஏக்கர் மற்றும் 22 சென்ட், எண்.81, முகப்பேர் கிராமம், சைதாப்பேட்டை தாலுகா, செங்கை MGR மாவட்டம் என்னும் முகவரியில் 89,454 சதுர அடி நிலம் அதிலுள்ள வீட்டு மனை, அதனுடன் இணைந்த துண்டுகளும் பகுதிகளும். எல்லைகள்: வடக்கு: சர்வே எண்.439 பகுதி மற்றும் 439 பகுதியில் உள்ள நிலம், தெற்கு: சர்வே எண்.102/3 பகுதி மற்றும் ½ / 4 பகுதியில் உள்ள நிலம், கிழக்கு: சர்வே எண்.438/1-ல் உள்ள நிலம், மேற்கு: சர்வே எண்.440 மற்றும் 101-ல் உள்ள நிலம்.

ஷெட்யூல்-B: மேலே விவரிக்கப்பட்டுள்ள ஷெட்யூல்-A மொத்த சொத்தில் 14.65% பிரிக்கப்படாத பங்கு நிலம் அதாவது 13105 சதுர அடி.

ஷெட்யூல்-C: (வங்கியில் அடமானம் வைக்கப்பட்டுள்ளது) வட சென்னை பதிவு மாவட்டம், கொன்னூர் சார்-பதிவு மாவட்டம் எல்லைக்குட்பட்ட, ப்ளாக் எண்.1, ப்ளாட் எண்.T-8, மூன்றாவது தளம், எமிரால்டு டவர், ஜெம் பார்க் அவென்யூ, முதல் மெயின் ரோடு, முகப்பேர் ஏரி ஸ்கீம், சென்னை என்னும் முகவரியில் 717 சதுர அடி ப்ளாட் (பொது இடம் உட்பட) மேற்குறிப்பிட்டுள்ள ஷெட்யூல்-B-ல் மொத்தமுள்ள 13105 சதுர அடி நிலத்தில் 467 சதுர அடி பிரிக்கப்படாத பங்கு நிலம்.

இடம்: சென்னை
தேதி: 17.09.2025
அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி
தி கரூர் வைஸ்யா பேங்க் லிமிடெட்

## CUB சிட்டி யூனியன் வங்கி லிமிடெட்

TRUST AND EXCELLENCE SINCE 1904
கடன் வசூல் மற்றும் நிர்வாகத் துறை
நிர்வாக அலுவலகம் : எண்.24-B, காந்தி நகர், கும்பகோணம் - 612001. மின்னஞ்சல்: crmd@cityunionbank.in,
போன்: 0435-2432322, ஃபேக்ஸ்: 0435-2431746

கடனீட்டு சொத்துக்களை ரொக்கமாக்குதல் / நிதி சொத்துக்களை சீரமைத்தல் ...

மறு ஏல தேதி: 14.10.2025

# இன்று 5 மாவட்டங்களுக்கு 'மஞ்சள்' எச்சரிக்கை

**சென்னை, செப். 18:** தமிழகத்தில் காஞ்சிபுரம், திருவள்ளூர், வேலூர் உள்பட 5 மாவட்டங்களில் வெள்ளிக்கிழமை (செப்.19) பலத்த மழை பெய்ய வாய்ப்புள்ளதால், 'மஞ்சள்' எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இதுகுறித்து வானிலை மையம் சார்பில் வெளியிடப்பட்ட செய்திக்குறிப்பு:

தென்னிந்திய பகுதிகளின் மேல் வளிமண்டல கீழடுக்கு சுழற்சி நிலவுகிறது. இதனால், வெள்ளிக்கிழமை (செப்.19) முதல் செப்.24 வரை தமிழகத்தில் ஒரு சில இடங்களிலும், புதுச்சேரி மற்றும் காரைக்காலில் மிதமான மழை பெய்ய வாய்ப்புள்ளது.

ஓரிரு இடங்களில் இடி, மின்னலுடன் கூடிய பலத்த காற்று மணிக்கு 40 கி.மீ. வேகத்தில் வீசக்கூடும். திருவள்ளூர், ராணிப்பேட்டை, திருவண்ணாமலை, வேலூர் மற்றும் காஞ்சிபுரம் உள்ளிட்ட மாவட்டங்களில் வெள்ளிக்கிழமை பலத்த மழை பெய்ய வாய்ப்புள்ளது.

**மஞ்சள் எச்சரிக்கை:** இதன்காரணமாக வெள்ளிக்கிழமை இந்த மாவட்டங்களுக்கு 'மஞ்சள்' எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. சென்னை நகரின் ஒருசில பகுதிகளில் வெள்ளிக்கிழமை இடி, மின்னலுடன் கூடிய மிதமான மழைக்கு வாய்ப்புள்ளது. எனினும், அதிகபட்ச வெப்பநிலை 93 டிகிரியையொட்டி இருக்கும். வெள்ளிக்கிழமை அதிகபட்சமாக பாளையங்கோட்டையில் 102 டிகிரி பாரன்ஹீட் வெப்பம் பதிவானது.

**மழை அளவு:** தமிழகத்தில் வெள்ளிக்கிழமை காலை 8.30 மணியுடன் முடிந்த கடந்த 24 மணி நேரத்தில் அதிகபட்சமாக திருவள்ளூர் மாவட்டம் ஊத்துக்கோட்டையில் 80 மி.மீ. மழை பதிவானது.

திருப்பூர் தெற்கு(திருப்பூர்), ஆலங்காயம் (திருப்பத்தூர்), சின்னக்கல்லாறு (கோவை)-தலா 70 மி.மீ., காரைக்கால், மின்னல் (ராணிப்பேட்டை), தேன்கனிக்கோட்டை (கிருஷ்ணகிரி), குடியாத்தம் (வேலூர்), குருங்குளம் (தஞ்சை), டேனிஷ்பேட்டை (சேலம்), பத்துக்கண்ணு (புதுச்சேரி), திருப்பூர் வடக்கு தாலுகா அலுவலகம் (திருப்பூர்), ஏற்காடு (சேலம்), மணல்மேடு (மயிலாடுதுறை),வடபுதுப்பட்டு (திருப்பத்தூர்), சீர்காழி(மயிலாடுதுறை)-தலா 50 மி.மீ. மழை பதிவானது.

**மீனவர்களுக்கான எச்சரிக்கை:** தென்தமிழக கடலோரப் பகுதிகள் மன்னார் வளைகுடா மற்றும் அதனையொட்டிய குமரிக்கடலில் சூறாவளிக்காற்று மணிக்கு 55 கி.மீ.வேகத்தில் வீசக்கூடும் என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# 1.5 கோடி ஸ்மார்ட் மீட்டர் பொருத்தும் பணிகள் விரைவில் தொடங்கும்

## மின்வாரியம் தகவல்

**சென்னை, செப். 18:** தமிழகத்தில் 1.5 கோடி ஸ்மார்ட் மீட்டர் பொருத்தும் பணிகள் விரைவில் தொடங்கும் என மின்வாரியம் தெரிவித்துள்ளது.

தமிழகத்தில் மொத்தம் 3 கோடிக்கும் அதிகமான மின் இணைப்புகள் உள்ளன. இந்த இணைப்புகளுக்கு டிஜிட்டல் மீட்டர் மூலம் 2 மாதங்களுக்கு ஒரு முறை கட்டணம் வசூலிக்கப்படுகிறது.

இந்த நிலையில், துல்லியமான மின்பயன்பாட்டை கணக்கெடுக்க தொலைத்தொடர்பு வசதியுடன் கணக்கெடுக்கும் ஸ்மார்ட் மீட்டர் திட்டத்தைச் செயல்படுத்த மாநில அரசுகளுக்கு மத்திய அரசு உத்தரவிட்டிருந்தது. அதன்படி, தமிழகத்தில் அதற்கான பணிகளை தமிழ்நாடு மின்பகிர்மானக் கழகம் முன்னெடுத்தது. இதைத் தொடர்ந்து, ஸ்மார்ட் மீட்டர்களின் செயல்பாடுகள், நிறை, குறைகள் குறித்து தெரிந்துகொள்ள, சோதனை அடிப்படையில் முதல்முறையாக சென்னை தியாகராய நகரில் ஒன்றரை லட்சம் ஸ்மார்ட் மீட்டர்களை பொருத்தி அதன் செயல்பாடுகளை மின்வாரியம் கண்காணித்தது. அதன் செயல்பாடுகள் திருப்தியாக இருந்த நிலையில், அனைத்து மின் இணைப்புகளுக்கும் ஸ்மார்ட் மீட்டர் பொருத்த மின்வாரியம் முடிவு செய்து பணிகளை மேற்கொண்டது. தொடர்ந்து, 3 கோடி ஸ்மார்ட் மீட்டர்களை பொருத்தி, அதை 10 ஆண்டுகளுக்கு பராமரிக்கும் ஒப்பந்த நிறுவனத்தைத் தேர்வு செய்ய கடந்த 2023-இல் மின்வாரியம் ஒப்பந்தம் கோரியது. ஆனால், பல்வேறு காரணங்களால் அது ரத்து செய்யப்பட்டது. தொடர்ந்து, 2-ஆவது முறையாக கோரப்பட்ட ஒப்பந்தமும் ரத்து செய்யப்பட்ட நிலையில், 3-ஆவது முறையாக நிகழாண்டு மார்ச் 14-ஆம் தேதி ரூ.19,235 கோடி மதிப்பில் 3 கோடி ஸ்மார்ட் மீட்டர் கொள்முதலுக்கான ஒப்பந்தம் கோரப்பட்டு, 13 நிறுவனங்கள் தேர்வு செய்யப்பட்டன. இந்த நிறுவனங்கள் முதல் கட்ட ஸ்மார்ட் மீட்டர் தயாரிக்கும் பணிகளை முடித்துள்ளன.

இதுகுறித்து மின்வாரிய அதிகாரிகள் கூறியதாவது:

ஸ்மார்ட் மீட்டர் ஒப்பந்தம் எடுத்துள்ள நிறுவனங்கள் தமிழகத்திலுள்ள 12 மண்டலங்களை தலா 2 மண்டலங்களாகப் பிரித்து 6 கட்டங்களாக ஸ்மார்ட் மீட்டர் பொருத்த திட்டமிட்டுள்ளன. அதன்படி, கோவை மற்றும் ஈரோட்டில் 56.47 லட்சம் மீட்டர்கள், கரூர் மற்றும் திருநெல்வேலியில் 49.97 லட்சம் மீட்டர்கள், மதுரை மற்றும் திருவண்ணாமலையில் 49.77 லட்சம் மீட்டர்கள், திருச்சி மற்றும் தஞ்சையில் 49.67 லட்சம் மீட்டர்கள், காஞ்சிபுரம் மற்றும் விழுப்புரம் 49.6 லட்சம் மீட்டர்கள், சென்னை மற்றும் வேலூரில் 49.34 லட்சம் மீட்டர்களை பொருத்தப்படும். இதில் முதல்கட்டமாக 1.5 கோடி ஸ்மார்ட் மீட்டர்களை பொருத்துவதற்கான பணிகள் ஒருசில மாதங்களில் இந்த நிறுவனங்கள் தொடங்கும்.

இந்த ஸ்மார்ட் மீட்டர்கள் பொருத்தப்பட்டதும், மாதம் இருமுறை மின் கட்டணம் கணக்கிடும் முறை மாற்றப்பட்டு, மாதம் ஒரு முறை மின் கட்டணம் கணக்கிடப்படும். மேலும், இந்த ஸ்மார்ட் மீட்டர்களை ஒப்பந்தம் எடுத்துள்ள நிறுவனங்களே, அடுத்த 7 ஆண்டுகள் 9 மாதங்களுக்கு பராமரிக்கும் என்றனர்.

# திமுக அறக்கட்டளைக்கு எதிராக எந்த உத்தரவும் பிறப்பிக்கக் கூடாது: வருமானவரித் துறைக்கு உத்தரவு

**சென்னை, செப். 18:** திமுக அறக்கட்டளையின் வருமான வரி கணக்கில் வேறு எந்த உத்தரவும் பிறப்பிக்கக் கூடாது என வருமான வரித் துறைக்கு சென்னை உயர்நீதிமன்றம் உத்தரவிட்டது.

கடந்த 2019-ஆம் ஆண்டு நாடாளுமன்றத் தேர்தலின்போது, திமுக பொதுச் செயலர் துரைமுருகன் வீட்டில் வருமான வரித் துறை அதிகாரிகள் சோதனை நடத்தினர். இதில் பணம் மற்றும் ஆவணங்களை அதிகாரிகள் பறிமுதல் செய்தனர்.

இந்த நிலையில், கடந்த 2021-ஆம் ஆண்டு துரைமுருகன் தாக்கல் செய்த வருமான வரிக்கணக்கை பரிசீலித்த வருமான வரித் துறை, துரைமுருகன் கணக்கையும் அவர் சார்ந்துள்ள திமுக மற்றும் திமுக அறக்கட்டளையின் வருமான வரி கணக்கையும் ஒன்றாக ஆய்வு செய்ய முடிவு செய்தது. இந்தப் பணியை வருமான வரித் துறையின் மத்திய வட்டத்துக்கு மாற்றி அதிகாரிகள் உத்தரவிட்டனர்.

இந்த உத்தரவை எதிர்த்து திமுக அறக்கட்டளை சார்பில் தொடரப்பட்ட வழக்கை விசாரித்த சென்னை உயர்நீதிமன்றம், வருமான வரிக் கணக்கை மத்திய வட்டத்துக்கு மாற்றிய உத்தரவை ரத்து செய்து உத்தரவிட்டது. இதை எதிர்த்து வருமான வரித் துறை சென்னை உயர்நீதிமன்றத்தில் மேல்முறையீட்டு மனு தாக்கல் செய்தது.

இந்த வழக்கு தலைமை நீதிபதி எம்.எம்.ஸ்ரீவாஸ்தவா மற்றும் நீதிபதி ஜி.அருள்முருகன் ஆகியோர் அடங்கிய அமர்வில் விசாரணைக்கு வந்தது. அப்போது திமுக தரப்பில் ஆஜரான மூத்த வழக்குரைஞர் பி.வில்சன், திமுக அறக்கட்டளையின் வருமானமும், கட்சியின் பொதுச் செயலர் வருமானமும் வெவ்வேறானது. இவற்றை ஒன்றாக சேர்த்து விசாரிப்பது முறையாக இருக்காது. எனவே இந்த விவகாரத்தில் தனிநீதிபதி பிறப்பித்த உத்தரவு சரியானது என வாதிட்டார்.

அப்போது, வருமான வரித் துறை தரப்பில் ஆஜரான வழக்குரைஞர் ஏ.பி.ஸ்ரீநிவாஸ், இந்த வழக்கில் தனிநீதிபதி பிறப்பித்த உத்தரவு சரியானது அல்ல. எனவே, அந்த உத்தரவுக்கு தடை விதிக்க வேண்டும் என்றார். இதையடுத்து நீதிபதிகள், வருமான வரித் துறை தாக்கல் செய்துள்ள மேல்முறையீட்டு மனுவுக்கு திமுக தரப்பில் பதில் மனு தாக்கல் செய்ய உத்தரவிட்டு விசாரணையை அக்.28-ஆம் தேதிக்கு ஒத்திவைத்தனர்.

மேலும், அதுவரை திமுக அறக்கட்டளையின் வருமான வரி வழக்கில் எந்த உத்தரவையும் வருமான வரித் துறை பிறப்பிக்கக் கூடாது என நீதிபதிகள் பிறப்பித்த உத்தரவில் குறிப்பிட்டுள்ளனர்.

# நடிகர் ரோபோ சங்கர் காலமானார்



**சென்னை, செப். 18:** நடிகர் ரோபோ சங்கர் (46) உடல் நலக்குறைவு காரணமாக சென்னையில் வியாழக்கிழமை காலமானார்.

சின்னத்திரை நிகழ்ச்சிகள் மூலம் பிரபலமான ரோபோ சங்கர், மாரி, புலி, வேலைன்னு வந்துட்டா வெள்ளக்காரன் உள்ளிட்ட பல்வேறு திரைப்படங்களில் நடித்துள்ளார். கடந்த சில மாதங்களுக்கு முன்பு மஞ்சள் காமாலையால் பாதிக்கப்பட்ட ரோபோ சங்கர், சிகிச்சைக்குப் பிறகு குணமடைந்தார்.

சென்னையில் நடைபெற்ற படப்பிடிப்பில் பங்கேற்று வந்த நிலையில், கடந்த புதன்கிழமை காலை படப்பிடிப்பு தளத்தில் ரோபோ சங்கர் திடீரென மயக்கமடைந்தார். அவருக்கு நீர்ச்சத்து குறைபாடு, குறைந்த ரத்த அழுத்தம் ஏற்பட்டதாகக் கூறப்படுகிறது.

உடனடியாக அவர் சென்னை பெருங்குடியில் உள்ள தனியார் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். அங்கு அவருக்கு தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டுவந்தது. வியாழக்கிழமை மாலை அவரது உடல்நிலை பின்னடைவைச் சந்தித்த நிலையில், தீவிர சிகிச்சைப் பிரிவுக்கு மாற்றப்பட்டார். இருப்பினும் சிகிச்சை பலனின்றி வியாழக்கிழமை இரவு அவர் உயிரிழந்தார்.

**முதல்வர் மு.க.ஸ்டாலின்:** திரைக் கலைஞர் ரோபோ சங்கர் மறைவெய்திய செய்தியறிந்து வருத்தமுற்றேன். மேடைகளில் தொடங்கி, சின்னத்திரை - வண்ணத்திரை என விரிந்து, தமிழ்நாட்டு மக்களை மகிழ்வித்தவர். அவரை இழந்து வாடும் குடும்பத்தினருக்கும் - கலையுலகினருக்கும் எனது ஆழ்ந்த இரங்கல்.

**மத்திய இணையமைச்சர் எல்.முருகன்:** தனது தனித்துவமிக்க நகைச்சுவைத் திறன் மூலமாகவும், குணச்சித்திர வேடங்களின் மூலமாகவும் புகழ்பெற்ற ரோபோ சங்கரின் மறைவு அதிர்ச்சி அளிக்கிறது. அவரது குடும்பத்தினர், ரசிகர்களுக்கு ஆழ்ந்த இரங்கல்.

அதேபோல் ரோபோ சங்கர் மறைவுக்கு தமிழக அமைச்சர் தங்கம் தென்னரசு, பாமக தலைவர் அன்புமணி ராமதாஸ், தேமுதிக பொதுச் செயலர் பிரேமலதா விஜயகாந்த், மக்களவை உறுப்பினர் கனிமொழி, மநீம தலைவர் கமல் ஹாசன் எம்.பி. உள்ளிட்டோர் இரங்கல் தெரிவித்துள்ளனர்.

# மிதவைக் கலனில் உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு நிவாரண உதவி: இந்திய கம்யூனிஸ்ட் கோரிக்கை

**சென்னை, செப்.18:** மிதவைக் கலனில் உயிரிழந்த தொழிலாளர்களின் குடும்பங்களுக்கு நிவாரண நிதி வழங்க வேண்டும் என இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலர் மு.வீரபாண்டியன் கோரிக்கை விடுத்துள்ளார்.

இதுகுறித்து அவர் வியாழக்கிழமை வெளியிட்டுள்ள அறிக்கை: தூத்துக்குடி பழைய துறைமுகத்தில் மிதவை கலனில் உள்ள தொட்டியைச் சுத்தம் செய்யும் பணியில் புதன்கிழமை ஈடுபட்ட 3 தொழிலாளர்கள், ஆக்ஸிஜன் கிடைக்காமல் உயிரிழந்துள்ளனர்.

இதுகுறித்து விரிவான விசாரணை செய்து, எதிர்காலத்தில் இத்தகைய விபத்துகள் நிகழாத வகையில் தடுப்பு நடவடிக்கைகளை உறுதி செய்ய வேண்டும். மேலும் பணியில் இருந்தபோது உயிரிழந்த மூன்று தொழிலாளர்களின் குடும்பங்களுக்கும் உரிய நிவாரண நிதி வழங்க வேண்டும் எனத் தெரிவித்துள்ளார்.

# திருநெல்வேலி – சென்னை வந்தே பாரத் ரயிலில் கூடுதல் பெட்டிகள்

**சென்னை, செப். 18:** திருநெல்வேலி – சென்னை வந்தே பாரத் ரயிலில் கூடுதலாக 4 பெட்டிகள் இணைக்கப்படும் என தெற்கு ரயில்வே அறிவித்துள்ளது.

திருநெல்வேலி – சென்னை இடையேயான வந்தே பாரத் ரயில் தற்போது 16 பெட்டிகளுடன் இயக்கப்படுகிறது.

பயணிகள் அதிகரிப்பதால் செப்.24 முதல் மேலும் 4 பெட்டிகள் கூடுதலாக இணைக்கப்படவுள்ளது. இதன்மூலம் கூடுதலாக 312 பயணிகள் பயணிக்கலாம். இந்த ரயிலில் தற்போது சாதாரண இருக்கை வசதி பெட்டிகளில் 1,128 பேர் பயணம் செய்கின்றனர்.

கூடுதல் பெட்டிகள் இணைக்கப்படுவதால் 1,440 பயணிகள் பயணம் செய்ய முடியும் என தெற்கு ரயில்வே வெளியிட்ட செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.


யூனியன் பேங்க் ஆஃப் இந்தியா

பிராந்திய அலுவலகம், சென்னை வடக்கு, எண்:139, 2வது தளம், யூனியன் வங்கி பவன், பிரகாசம் சாலை, பிராட்வே, சென்னை - 600 108
Email: hr.chennai@unionbankofindia.bank

REF No.RO:CHN: :53849:383/2:2025
தேதி: 17.09.2025

**யூனியன் பேங்க் ஆஃப் இந்தியா, பிராந்திய அலுவலகம், சென்னை வடக்கில் உள்ள ஊழியர்களுக்கான மருத்துவமனையில் மருத்துவராக ஒப்பந்த அடிப்படையில் பணிபுரிய விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன**

யூனியன் பேங்க் ஆஃப் இந்தியா, சென்னை மையத்தில் பணிபுரிய தகுதியான மருத்துவர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன விதிமுறைகள் மற்றும் விண்ணப்பம் தொடர்பான விரிவான தகவல்களை www.unionbankofindia.co.in மற்றும் www.eprocure.gov.in ஆகிய வங்கியின் இணையதளங்களில் காணலாம்.

விண்ணப்பத்தை சமர்ப்பிப்பதற்கான கடைசி தேதி 25.09.2025 அன்று இரவு 10.00 மணிக்குள். இது தொடர்பான கூடுதல் விபரங்களுக்கு தொடர்பு கொள்ளவும்: திருமதி. மாலதி. S, Ph: 8903901312, Mail: hr.chennai@unionbankofindia.bank

எந்தவொரு காரணத்தையும் கூறாமல் ஏதேனும் அல்லது அனைத்து விண்ணப்பங்களையும் நிராகரிப்பதற்கு வங்கிக்கு முழு அதிகாரம் உண்டு.

பிராந்திய தலைமை



**New Tirupur Area Development Corporation Ltd.**
"Polyhose Towers" Ist Floor, No: 86, Mount Road, Guindy, Chennai - 600 032

**CORRIGENDUM**

This has reference to advertisement published in this newspaper on 03.09.2025 for Supply of **KBL Make Pumps and Pump Spares** for their plant located in Tirupur and Bhavani.

It is to notify that the last date for receipt of bids is extended till **26.09.2025**. All other terms and conditions remain same.

DIPR/ 5234 /TENDER/2025



**தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம்**
தலைமை அலுவலகம், சென்னை–107.

மின்னணு ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு எண்.26/கபொ.6/064692 /2025, நாள். 18.09.2025

மின்னணு ஒப்பந்தப்புள்ளிகள் பதிவுபெற்ற ஒப்பந்ததாரர்களிடமிருந்து கீழ்கண்ட வேலைக்கு 06.10.2025 2.00 மணிவரை ஒப்பந்தப்புள்ளி பதிவேற்றம் செய்யலாம். மின்னணு ஒப்பந்தப்புள்ளிகள் 07.10.2025 அன்று முற்பகல் 11.30 மணியளவில் திறக்கப்படும்.

| வ.எண். | வேலையின் பெயர் | முன்வைப்புத் தொகை ரூபாயில் |
|---|---|---|
| 1 | சென்னை மாவட்டம், கீழ்பாக்கம், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்திற்கு சொந்தமான 120 ஆண்டுகள் பழைமை வாய்ந்த தலைமை அலுவலக கட்டடத்தை புதுப்பித்தல் மற்றும் நவீன இருக்கை வசதிகள் ஏற்படுத்தும் பணிகள் மேற்கொள்ளுதல். | 96,000.00 |

மின்னணு ஒப்பந்த படிவம் இலவசமாக இணையிறக்கம் செய்யும் நாள் :- 22.09.2025 முதல் 06.10.2025 பிற்பகல் 2.00 மணி வரை.
நிறைவு செய்யப்பட்ட மின்னணு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்படுவதற்கான கடைசி நாளும், நேரமும் :- 06.10.2025 பிற்பகல் 2.00 மணி வரை
மின்னணு ஒப்பந்தப்புள்ளி திறக்கப்படும் நாள் :- 07.10.2025 முற்பகல் 11.30 மணியளவில்.
மேலும் விவரங்களுக்கு இணையதளத்தில் www.tntenders.gov.in பார்க்கவும்.

செ.ம.தொ.இ/5250/ஒப்பந்தப்புள்ளி/2025 — நிர்வாக இயக்குநர்



**TAMIL NADU HOUSING BOARD**
**CHENNAI CIRCLE-I**

**E-Tender Notice**

**E-Tender Notice No. 10/2025-26** — **Date : 18.09.2025**

**Description of Work :** Request for Qualification for Empanelment of Consultancy Firms for feasibility, Market Study and Providing Transaction Advisory Services including Bid Process Management Services for TNHB Built up spaces in Arumbakkam, Peters Colony and in Ashok Nagar schemes.

**EMD** : **Rs.25,000/-**

Tamil Nadu Housing Board wishes to invite Request for Qualification from interested and qualified reputed firms / Consultancy for Empanelment of Consultancy Firms for feasibility, Market Study and Providing Transaction Advisory Services including Bid Process Management Services for TNHB Built up spaces in Arumbakkam, Peters Colony and in Ashok Nagar schemes.

The Terms of reference and Request for Qualification (RFQ) proposal can be downloaded from e-procurement website **https://tntenders.gov.in** from **24.09.2025.** EMD should be paid through online. The Applicant shall furnish as part of its application, a tender fee (non-refundable) of Rs.15,750/- (Rupees Fifteen Thousand Seven Hundred and Fifty) to be paid through e-procurement portal.

- Bid submission Start Date : **24.09.2025**
- Pre-Bid Meeting Date and Time/Place : **29.09.2025 at 3.00 P.M** (No.485,MTB Building, 2nd Floor, Nandanam,Chennai-35)
- Bid Submission End Date and Time : **08.10.2025 at 11.00 A.M**
- Bid Opening Date and Time : **08.10.2025 at 11.30 A.M**

Interested and qualified reputed firms / Consultancy must submit their bids in online e-procurement website **https://tntenders.gov.in**

The Undersigned reserves the right to cancel / reject any or all the tenders without assigning any reasons therefore.

**Superintending Engineer, Chennai Circle-I**

DIPR/ 5248 /TENDER/2025



**பொது அறிவிப்பு**

திருவள்ளூர் மாவட்டம், பொன்னேரி வட்டம், ஏலியம்பேடு கிராமத்தில் உள்ள பல்வேறு சர்வே எண்களில் அடங்கிய மொத்த விஸ்தீரணம் (ஏக்கர் 2.07 சென்ட்) நிலங்களின் தற்போதைய உரிமையாளர்களான viz., 1. திருமதி.நிர்மலா (சர்வே எண்.28/7 - ஏக்கர் 0.79 சென்ட்) மற்றும் 2. திரு.கிரிதர் ராவ் & திருமதி.சுஜாதா சங்கர் (சர்வே எண்.54/11 - ஏக்கர் 1.28 சென்ட்) ஆகியவர்களின் உரிமையில் இருக்கும் மேலே அடைப்பு குறிக்குள் விவரிக்கப்பட்டுள்ள சர்வே எண் மற்றும் விஸ்தீரணம் ஏக்கரில் உள்ள நிலங்களை எங்கள் கட்சிக்காரர் பரிவர்த்தனை செய்ய தீர்மானித்துள்ளார்.

எனவே மேலே குறிப்பிட்டுள்ள சொத்து மீது எவருக்கேனும் (தனி நபர்கள்/ வங்கிகள்/ சங்கங்கள்/நிதி நிறுவனங்கள்) எவ்விதமான உரிமையும், அதிகாரமும், பாத்தியமும் அதில் ஒரு கோரிக்கையும் இருந்தால் அதாவது அதில் ஒப்பந்தம், விற்பனை, உரிமை மாற்றம், உயில், ஒப்படைப்பு, பரிமாற்றம், அடமானம், வாடகை, குத்தகை, பரம்பரையாக உரிமை, தானம், பராமரிப்பு, மைனர் மக்களின் உரிமை, தட பாத்தியம், அபிவிருத்தி உரிமை, அனுபோக பொறுப்பு, அனுபோக வாடகை ஒப்பந்தம் மற்றும் நீதிமன்ற உத்தரவு போன்றவைகள் எவரேனும் பெற்றிருந்தால் அவற்றின் உரிமை நிரூபிக்க தேவையான ஆவணங்களுடன் இந்த அறிவிப்பு வெளியிடப்பட்ட 15 தினங்களுக்குள் கீழ்கண்ட முகவரிக்கு அணுக வேண்டும். அவ்வாறு எவரேனும் அவர்களின் உரிமையை 15 தினங்களுக்குள் தெரிவிக்காவிட்டால் அவர்கள் தங்களுடைய உரிமையை விட்டுக் கொடுத்ததாக கருதப்பட்டு எங்களது கட்சிக்காரர் மேலே குறிப்பிட்டுள்ள உரிமையாளர்களிடமிருந்து நிலத்தை பரிவர்த்தனை செய்ய எவ்வித ஆட்சேபனையும் இல்லை என கருதப்படும்.

எங்களது கட்சிக்காரர் சார்பாக
ஃபாக்ஸ் மண்டல் & அசோசியேட்ஸ்,
வழக்கறிஞர்கள் & வழக்குரைஞர்கள்,
எஃப். எம். ஹவுஸ், எண்.302, அண்ணாசாலை,
தேனாம்பேட்டை, சென்னை - 600 006.
Ph: 044 - 2436 1030 & 044 - 4305 1000
realestate.chennai@foxmandal.in



தமிழ்நாடு அரசு
**மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நல இயக்ககம், சேப்பாக்கம், சென்னை-600005.**

**ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு எண். 2/2025–26** — **நாள்: 12.09.2025**

தமிழக ஆளுநருக்காகவும் மற்றும் ஆளுநரின் சார்பாகவும் ஒப்பந்தப்புள்ளி ஆவணங்களில் விவரிக்கப்பட்ட அனைத்து உதிரிப் பொருட்கள் அடங்கிய 600 எண்ணிக்கையிலான திரவ பெட்ரோலிய வாயு (LPG) மூலம் இயங்கும் தேய்ப்புப் பெட்டிகள் கொள்முதல் செய்ய ஒப்பந்தப்புள்ளி படிவங்கள் வரவேற்கப்படுகின்றன.

| ஒப்பந்தப்புள்ளி எண் | பொருள் விவரம் | ஒப்பந்தப் புள்ளி படிவம் சமர்ப்பிக்க கடைசி நாள்/நேரம் | ஒப்பந்தப்புள்ளி திறப்பு விவரம் | பிணைவைப்புத் தொகை ரூ. |
|---|---|---|---|---|
| 2/2025-26 | 600 எண்ணிக்கையில் திரவ பெட்ரோலிய வாயு (LPG) மூலம் இயங்கும் தேய்ப்புப் பெட்டிகள் உதிரி பொருட்களுடன் கொள்முதல் செய்தல் | 06.10.2025 பிற்பகல் 3.00 மணி வரை | 06.10.2025 பிற்பகல் 4.00 மணி | 40,000/–(ரூபாய் நாற்பதாயிரம் மட்டும்) |

ஒப்பந்தப்படிவத்தினை எவ்வித கட்டணமுமின்றி பதிவிறக்கம் செய்து கொள்ளவும் மேலும் விவரங்களுக்கும் தமிழக அரசின் **https://tntenders.gov.in** எனும் இணையதளத்தை காணவும்.

மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நல ஆணையர்

செ.ம.தொ.இ / **5244** / ஒப்பந்தப்புள்ளி / 2025



**TAMIL NADU STATE AGRICULTURAL MARKETING BOARD**

**Re-tender Notice - Tender Notice No.T.33/Sr.DO/F.1157/2025/Dated.17.09.2025**
**Lumpsum Contract**

For and on behalf of the Governor of Tamil Nadu, sealed tenders will be received for the work mentioned below by the Executive Engineer, Tamil Nadu State Agricultural Marketing Board, Guindy, Chennai-32, for Man power service agency/ Security services upto 3.00 PM on 07.10.2025. The tender will be opened by the Executive Engineer on the same day 07.10.2025 at 3.30PM. in the presence of tenderer present at that time.

| Sl. No | Name of Work. | Value put to Tender. (Rs. in Lakhs) Approx. | EMD Rs. (Including GST) |
|---|---|---|---|
| 1 | Providing Man power engaging sweeper and watch man /security guard(Unarmed) for one year for the premises of International Flower Auction centre in Hosur in Krishnagiri District from October 2025 to September 2026. | 12.96 Lakh | 15,500/- |

Note: 1. The Tender Schedules will be available during Office Hours up to 06.10.2025, after remitting cost of tender schedule of Rs.7,080/- (Including GST) in the shape of D.D., in favour of CEO, TNSAMB, Chennai-32. Payable at Chennai and EMD of Rs. 15,500/- in the shape of D.D in favour of Executive Engineer, TNSAMB, Chennai-32- Payable at Vellore.
2. Further particulars can be obtained from the office of the Executive Engineer, Tamil Nadu State Agricultural Marketing Board, CIPET Road, Guindy, Chennai-32 during office hours i.e., 10.00 am to 5.45 pm on all working days.
3. The Tender received after due date and time will be summarily rejected.
4. Any revision of dates/updates will be intimated through office notice board only.

**Executive Engineer (i/c), TNSAMB, Chennai - 32.**

DIPR/5245/Tender/2025



**தமிழ்நாடு மோட்டார் வாகன பராமரிப்புத்துறை,**
**வேளச்சேரி, சென்னை - 600 042**

தமிழ்நாடு அரசு மோட்டார் வாகன பராமரிப்புத்துறையில் **அரசுத் துறை வாகனங்களுக்கான ஆயில் இனங்கள் கொள்முதல்** செய்வதற்கு செப்டம்பர் **2025 – அக்டோபர் 2025-ல்** ஒப்பந்தப்புள்ளிகள் இணையதளம் மூலம் வரவேற்கப்படுகின்றன. மேற்கண்ட செயல்பாடுகளுக்கான தேதிகள், இ-டெண்டர் விண்ணப்பம் பதிவிறக்கம் துவங்கும் தேதி, இ-டெண்டர் விண்ணப்பம் சமர்ப்பிக்க கடைசி தேதி மற்றும் இ-டெண்டர் திறக்கப்படும் தேதிகள், விதிமுறைகள், வரையறைகள் அடங்கிய அனைத்து விபரங்களையும் அறிய **https://tntenders.gov.in** என்ற இணைய தளத்தைப் பார்த்து தெரிந்து கொள்ளவும்.

இயக்குநர்

செ.ம.தொ.இ./5243/ஒப்பந்தப்புள்ளி/2025



**சேலம் மாநகராட்சி**
SFC ஊக்க நிதியின் (SFC Incentive Fund) பணிகளுக்கு ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு
(இரட்டை உறை முறை)

ந.க.எண் இ3/10368/2025 — நாள்:15.09.2025

1.SFC ஊக்க நிதியின் (SFC Incentive Fund) கீழ் சேலம் மாநகராட்சி சூரமங்கலம் மண்டலத்திற்கு உட்பட்ட கோட்டம் எண்.28ல் செவ்வாய்பேட்டை பால் மார்கெட் பகுதியில் தினசரி மார்கெட் மறுசீரமைக்கும் பணிக்கு ஒப்பந்தப்புள்ளி மேற்கொள்ள தகுதி வாய்ந்த ஒப்பந்ததாரர்களிடமிருந்து இணைய தளத்தின் வாயிலாக (https://tntenders.gov.in) ஒப்பந்தப்புள்ளிகள் வரவேற்கப்படுகிறது.
2.ஒப்பந்தப்புள்ளி சம்பந்தமான விபரங்கள் https://tntenders.gov.in இணையதள முகவரியில் பார்வையிடலாம்.
3.ஒப்பந்தப்புள்ளி ஆவணங்கள் https://tntenders.gov.in இணையதள முகவரியில் 19.09.2025 முதல் 22.10.2025 பிற்பகல் 3.00 மணி வரை பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.
4.ஒப்பந்ததாரர்கள் முன் கலந்தாய்வு கூட்டம் 06.10.2025 அன்று காலை 11.00 மணியளவில் சேலம் மாநகராட்சி மைய அலுவலகத்தில் நடைபெறும்.
5.ஒப்பந்தப்புள்ளி சமர்ப்பிக்க வேண்டிய கடைசி நாள் மற்றும் நேரம்: 22.10.2025 அன்று மாலை 3.00 மணி வரையில்.
6.சேலம் மாநகராட்சி மைய அலுவலகத்தில் ஒப்பந்தப்புள்ளி திறக்கப்படும் நாள் மற்றும் நேரம்:22.10.2025 அன்று மாலை 3.30 மணி.
7.பணியின் மதிப்பீட்டு தொகை மற்றும் டேவணித் தொகை, ஒப்பந்ததாரருக்கான தகுதி உள்ளிட்ட விவரங்களை ஒப்பந்தப்புள்ளி ஆவணத்தின் மூலம் அறியவும்.
8.இது தொடர்பான கூடுதல் விவரங்கள் ஏதும் தேவைப்படின் மாநகராட்சி பொறியியல் பிரிவில் பெற்று கொள்ளலாம்.

| Sl. No | Ward No. | Name of the Work | Estimate Cost (Rs.in lakhs) | EMD Amount in - Rs | Work Completion Period | Contractor Class |
|---|---|---|---|---|---|---|
| 1 | 28 | சேலம் மாநகராட்சி சூரமங்கலம் மண்டலத்திற்கு உட்பட்ட கோட்டம் எண்.28ல் செவ்வாய்பேட்டை பால் மார்கெட் பகுதியில் தினசரி மார்கெட் மறுசீரமைக்கும் பணி | 505.00 | 505000 | 365 Days | Ist Class |

செ.ம.தொ.இ/5247/ஒப்பந்தப்புள்ளி/2025 — ஆணையாளர், சேலம் மாநகராட்சி



**டால்மியா பாரத் சுகர் அண்டு இண்டஸ்ட்ரீஸ் லிமிடெட்**

பதிவு அலுவலகம்: டால்மியாபுரம்– 621651 மாவட்டம்–திருச்சிராப்பள்ளி, தமிழ்நாடு
**CIN :** L15100TN1951PLC000640, **இணையத்தளம்:** www.dalmiasugar.com
தொலைப்பேசி எண். 04329–235132 தொலைநகல் எண். 04329–235111
மின்னஞ்சல்: sec.corp@dalmiasugar.com

**அச்சு வடிவப் பங்குகளை மாற்றுதல் கோரிக்கைகளை மறு-தாக்கல் செய்வதற்கான சிறப்பு சாளரம்**

1. ஜூலை 2, 2025 நாளிடப்பட்ட SEBI சுற்றறிக்கை எண்.SEBI/HO/MIRSD/MIRSD-POD/P/CIR/2025/97 இன் படி, கடைசி நாளாகிய ஏப்ரல் 1, 2019 க்கு முன்பு தாக்கல் செய்யப்பட்டவையும், ஆவணங்கள் / செயல்முறை / அல்லது வேறுவிதமான குறைபாடு காரணமாக, நிராகரிக்கப்பட்ட / திருப்பி அனுப்பப்பட்ட / ஏற்கப்படாதவையுமான, அச்சு வடிவப் பத்திரங்களை மாற்றுவதற்காக மீண்டும்-தாக்கல் செய்வதற்காகவென்றே பிரத்யேகமாக ஒரு சிறப்பு சாளரத்தை இந்திய பங்கு மற்றும் பரிவர்த்தனை வாரியமானது அறிவித்துள்ளது என்று இதன்மூலம் தெரிவிக்கப்படுகிறது.
2. இந்த சிறப்பு சாளராமனது ஆறு மாதங்கள் திறந்திருக்கும் அஃதாவது 07.07.2025 முதல் 06.01.2026 வரை. இந்த சாளரத்தில் மாற்றத்துக்காக மறு-தாக்கல் செய்யப்படும் பங்குகள், டீமேட் வடிவத்தில் மட்டுமே அளிக்கப்படும்.
3. தகுதியுள்ள பங்குதாரர்கள் இந்த சிறப்பு சாளர காலகட்டத்தில் நிறுவன பதிவாளரிடம் முழுமையான ஆவணங்களுடன் மாற்றுவதற்கான தமது கோரிக்கைகளை மீண்டும் சமர்ப்பிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள், முகவரி பின்வருமாறு : KFin டெக்னாலஜிஸ் லிமிடெட், செலினியம் பில்டிங், டவர் B, மனை எண் 31-32, நிதி மாவட்டம், நானக்ராம்குடா, செரிலிங்கம்பள்ளி, ஹைதராபாத், ரங்காரெட்டி- 500032, தெலங்கானா, மின்னஞ்சல்: einward.ris@kfintech.com, தொடர்பு எண்: 1800 309 4001
4. www.dalmiasugar.com என்ற நிறுவன இணையத் தளத்திலும்கூட மேற்சொன்ன SEBI சுற்றறிக்கை கிடைக்கும்.

டால்மியா பாரத் சுகர் அண்ட் இண்டஸ்ட்ரீஸ் லிமிடெட்-க்காக
ஒம்/-
ரச்னா கோரியா
நிறுவனச் செயலாளர்
உறுப்பினர் எண்-FCS6741

இடம் : புது தில்லி
தேதி : செப்டம்பர் 18, 2025



ஞாயிற்றுக்கிழமைதோறும்
தினமணி கதிர்
இளமை! புதுமை! இனிமை!



**எல்&டி பைனான்ஸ் லிமிடெட்**
(முந்தைய பெயர் எல்&டி பைனான்ஸ் ஹோல்டிங்ஸ் லிமிடெட்)
**பதிவு அலுவலகம்:** எல்&டி பைனான்ஸ் லிமிடெட் பிருந்தாவன் பில்டிங், ப்ளாட் நம்பர் 177, சிஎஸ்டி ரோடு, கலினா, சாந்தாகுருஸ் (ஈஸ்ட்), மும்பை - 400 098.
**சிஐஎன் நம்பர்:** L67120MH2008PLC181833
**கிளை அலுவலகம்:** சென்னை

L&T Finance

**டிமாண்ட் நோட்டீஸ்**

**செக்யூரிட்டிசேஷன் அண்ட் ரீகன்ஸ்ட்ரக்ஷன் ஆஃப் பைனான்சியல் அசெட்ஸ் அண்ட் என்ஃபோர்ஸ்மெண்ட் ஆஃப் செக்யூரிட்டி இன்டரஸ்ட் ஆக்ட், 2002ன் பிரிவு 13(12) கீழ் (இதன் பின்பு சட்டம் என குறிப்பிடப்படும்)**

நீங்கள் உங்கள் கடன் கணக்கில் அசல் மற்றும் உரிய வட்டி தொகையை செலுத்தத் தவறியதால் மற்றும் அதனை செலுத்துவதை அலட்சியம் செய்ததால், சட்டத்தின் பிரிவு 13(2)ன் கீழ் உங்கள் அனைவருக்கும் (கடன்தாரர்/கள், உப கடன்தாரர்/கள் மற்றும் உத்தரவாதி/கள்) ஏற்பு சீட்டுடன் பதிவு செய்யப்பட்ட தபால் மூலம் கோரிக்கை அறிவிப்பை அனுப்பினோம். இதன் விளைவாக, இந்திய ரிசர்வ் வங்கியால் வழங்கப்பட்டுள்ள சொத்து வகை தொடர்பான உத்தரவுகளுக்கு ஏற்ப, கணக்கு புத்தகத்தில் உங்கள் கடன் கணக்கு செயல்படாத சொத்து (என்பிஏ) என வகைப்படுத்தப்பட்டு உள்ளது. இந்த அறிவிப்பு வழங்கப்படவில்லை எனத் திருப்பி அனுப்பப்பட்டு விட்டது. எனவே சட்டத்தின் 13(2)ன் கீழ் உங்கள் அனைவருக்கும் இந்த அறிவிப்பை இப்போது நாங்கள் வழங்குகிறோம். மேலும் கீழே இணைக்கப்பட்டுள்ள அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள தொகையை எல்&டி பைனான்ஸ் லிமிடெட்-க்கு (முந்தைய பெயர் எல்&டி ஹோல்டிங்ஸ் பைனான்ஸ் லிமிடெட்) இந்த டிமாண்ட் நோட்டீஸ் அறிவிப்பு தேதியில் இருந்து 60 நாட்களுக்குள், நீங்கள் திருப்பிச் செலுத்தும் தேதி வரையுள்ள அல்லது தொகை நிறுவன கணக்கில் வரவு ஆகும் தேதி வரை கூடுதல் வட்டி மற்றும் இதர கட்டணங்களுடன் திருப்பிச் செலுத்துமாறு கேட்டுக் கொள்கிறோம். இந்த அறிவிப்பின் விதிமுறைகளின் கீழ் உங்கள் பொறுப்புகளை நீங்கள் பூர்த்தி செய்யவில்லை என்றால், சட்டத்தின் பிரிவு 13(4) அல்லது பிரிவு 14ன் கீழ் வழங்கப்பட்ட அனைத்து அல்லது ஏதேனும் ஒரு உரிமையைப் பயன்படுத்தும் நிலைக்கு நாங்கள் உள்ளாக்கப்படுவோம். இது சட்டம் மற்றும் / அல்லது அவ்வப்போது நடைமுறையில் உள்ள வேறு எந்த சட்டத்தின் கீழ் எங்களுக்கு கிடைக்கும் எந்த உரிமைகளையும் பாதிக்காது.

| கடன் கணக்கு எண் | கடன்தாரர்/கள் - உப கடன்தாரர்/கள் பெயர் | டிமாண்ட் நோட்டீஸ் தேதி / என்பிஏ தேதி / பாக்கித் தொகை: என்பிஏ தேதி | அன்று பாக்கித் தொகை (₹) | அசையாச் சொத்தின் (அடமானம்) விளக்கம் |
|---|---|---|---|---|
| H01319130621015335, H01319130621072446 | 1. விமலா N<br>2. நித்தியானந்தன் P | கேட்புத்தொகை அறிவிப்பு தேதி : 08/09/2025<br>NPA தேதி : 31/07/2025 | ரூ.82,33,622.64/- (ரூபாய் எண்பத்து இரண்டு லட்சத்து முப்பத்து மூவாயிரத்து அறுநூற்று இருபத்திரண்டு மற்றும் பைசா அறுபத்து நான்கு மட்டும்) தேதி 03-செப்டம்பர்-2025 படி | அட்டவணை - 1<br>ஒட்டுமொத்த சொத்தின் முகவரி - கதவு எண் 5, மனை எண் 14, பிள்ளையார் கோவில் தெரு, துர்கா நகர், தாம்பரம் சானடோரியம், சென்னை. சர்வே எண் 377/5ச் 1 அளவை 1200 சதுர அடி அமைவிடம் திருநீர்மலை கிராமம், ஆலந்தூர் வட்டம், காஞ்சிபுரம். அளவை கிழக்கு பக்கத்தில் வடக்கிலிருந்து தெற்காக 30 அடி, மேற்கு பக்கத்தில் வடக்கிலிருந்து தெற்காக 30 அடி, வடக்கு பக்கத்தில் கிழக்கிலிருந்து மேற்காக 40 அடி, மற்றும் தெற்கு பக்கத்தில் கிழக்கிலிருந்து மேற்காக 40 அடி, மொத்த அளவை 1200 சதுர அடி, சென்னை பதிவு மாவட்டம், மற்றும் துணை பதிவு மாவட்டத்தில் உள்ளது. சொத்து திருநீர்மலை டவுன் பஞ்சாயத்து வரம்புகளுக்குள் உள்ளது. எல்லைகளாக அமைந்துள்ளவை: |

| எல்லைகள் | | |
|---|---|---|
| | கிழக்கில் | மனை எண் 13 |
| | மேற்கில் | மனை எண் 15 |
| | வடக்கில் | 20 அடி அகல சாலை |
| | தெற்கில் | சர்வே எண் 377/5ச -ல் உள்ள நிலம் |

தேதி: 19.09.2025
இடம்: சென்னை

கையெழுத்து/-
அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி
எல்&டி பைனான்ஸ் லிமிடெட்-க்காக

# தினமணி

நிமிர்ந்த நன்னடை நேர்கொண்ட பார்வை
நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகள்

வெள்ளிக்கிழமை 19-9-2025
விசுவாவசு புரட்டாசி 3 ஹிஜ்ரி 1447 ரபீவுல் அவ்வல் 26


## இப்படியே தொடர்ந்தால் எப்படி?

காஸாவின் மிகப்பெரிய நகரமான காஸா சிட்டியில் பஞ்ச நிலை ஏற்பட்டுள்ளதாக ஐ.நா. நிபுணர் குழுவான ஒருங்கிணைந்த உணவுப் பாதுகாப்பு நிலவர வகைப்படுத்துதல் அமைப்பு (ஐபிசி) கடந்த ஆகஸ்ட் இறுதியில் அறிவித்தது, காஸாவில் இஸ்ரேல் திட்டமிட்ட இனப் படுகொலையை நடத்தி வருவதாக ஐ.நா. மனித உரிமைகள் கவுன்சில் நியமித்த மூவர் கொண்ட ஆணையம் செப்.16-ஆம் தேதி ஆய்வறிக்கை ஒன்றைச் சமர்ப்பித்திருக்கிறது.

ஐ.நா. மனித உரிமைகள் பிரிவு முன்னாள் தலைவர் நவி பிள்ளை தலைமையிலான இந்த மூவர் குழு அளித்த அறிக்கையில், காஸாவில் 2023, அக்டோபர் முதல் இஸ்ரேல் நடத்திவரும் போர் ஹமாஸுக்கு எதிரானதாக இருந்தாலும், அது லட்சக்கணக்கான பொதுமக்களை திட்டமிட்டே கொல்லும் இனப் படுகொலையாக உள்ளது; சர்வதேச சமூகம் இதை முடிவுக்கு கொண்டுவரவும், இதற்குப் பொறுப்பானவர்களைத் தண்டிக்கவும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று வலியுறுத்தப்பட்டுள்ளது.

இனப் படுகொலை குற்றங்களைத் தடுப்பதற்கான ஐ.நா.வின் 1948-ஆம் ஆண்டு மாநாடு, ஐந்து விதமான குற்றங்களை இனப் படுகொலை என வரையறை செய்திருக்கிறது. அவற்றில், கொலைகள், உடல் ரீதியாக அல்லது மன ரீதியாக கடுமையாகத் தீங்கு விளைவித்தல், பாலஸ்தீனர்களை அழிப்பதற்கான திட்டமிட்ட வாழ்க்கைச் சூழலை ஏற்படுத்துதல், பிறப்புகளைத் தடுக்கும் நோக்கிலான நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் ஆகிய நான்கு வகையான குற்றங்களை இஸ்ரேல் ராணுவமும், இஸ்ரேல் ஆட்சியாளர்களும் செய்துவருவதாக ஐ.நா. ஆணையத்தின் அறிக்கை சுட்டிக்காட்டுகிறது.

பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு அரசுக்கு எதிராக மனித உரிமை ஆர்வலர்களால் தொடர்ந்து முன்வைக்கப்படும் இனப் படுகொலை குற்றச்சாட்டுகளுக்கு வலு சேர்க்கும் வகையில் அமைந்த இந்த ஆய்வறிக்கையை, 'திரிக்கப்பட்ட மற்றும் பொய்யான அறிக்கை' என்று வழக்கம்போல இஸ்ரேல் நிராகரித்திருக்கிறது. இதன்மூலம் காஸாவில் மேற்கொண்டுவரும் தாக்குதலை நிறுத்த எந்த அழுத்தம் வந்தாலும் அதைச் சிறிதும் பொருட்படுத்தப் போவதில்லை என்கிற இஸ்ரேலின் எண்ணம் வெளிப்படுகிறது.

இனப் படுகொலை குற்றச்சாட்டு தொடர்பாக ஐ.நா. நியமித்த இந்த ஆணையமோ, ஐ.நா. மனித உரிமைகள் கவுன்சிலோ இஸ்ரேல் மீது நேரடியாக எந்த நடவடிக்கையும் எடுக்க முடியாது. சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் அல்லது சர்வதேச நீதிமன்றத்தில் இஸ்ரேல் மீது வழக்குத் தொடுப்பதற்கு வேண்டுமானால் ஐ.நா. ஆணையத்தின் அறிக்கை பயன்படலாம். ஆனால், சர்வதேச நீதிமன்றத்தால் இதுவரை யாரும் தண்டனைக்கு உள்ளாக்கப்பட்டதில்லை என்பதுதான் உண்மை.

ஏற்கெனவே போர்க் குற்றங்கள், மனிதகுலத்துக்கு எதிரான குற்றங்களுக்காக இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு, முன்னாள் பாதுகாப்பு அமைச்சர் யோயாவ் கலான்ட் ஆகியோருக்கு எதிராக சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் கைது வாரண்ட் பிறப்பித்துள்ளது. ஐ.நா. இனப் படுகொலை தடுப்பு மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட பல தீர்மானங்களுக்கு எதிராக இஸ்ரேல் செயல்படுவதாகவும், காஸாவில் மனிதாபிமான உதவிகளை அனுமதிக்க வேண்டும் எனவும் சர்வதேச நீதிமன்றம் பல உத்தரவுகளைப் பிறப்பித்தும் இஸ்ரேல் இதுவரை எதையும் பொருட்படுத்தவில்லை.

இப்போதைய ஐ.நா. மனித உரிமைகள் கவுன்சில் நியமித்த ஆணையத்தின் ஆய்வறிக்கையும் இஸ்ரேல் மீது உலகளாவிய தாக்கம் எதையும் ஏற்படுத்தப் போவதில்லை என்றாலும், உலக நாடுகளின் மனசாட்சியை இந்த ஆய்வறிக்கை உலுக்கியிருக்கிறது. பாலஸ்தீனர்களை அழிக்க கண்மூடித்தனமான தாக்குதலை நிறுத்த எந்த முயற்சியும் செய்யாமல் கண்களை மூடிக்கொண்டு இருப்பது நியாயம்தானா என்கிற கேள்வியை எழுப்பியிருக்கிறது.

பாலஸ்தீனத்தை தனி நாடாக அங்கீகரிப்பது தொடர்பாக ஐ.நா. பொதுச் சபையில் கடந்த செப்டம்பர் 14-ஆம் தேதி வாக்கெடுப்பு நடைபெற்றது. சுதந்திரமான, இறையாண்மை கொண்ட இஸ்ரேல், பாலஸ்தீனம் என்கிற இரு நாடுகள் தீர்வை முன்வைக்கும் அந்த வாக்கெடுப்பில், 'நியூயார்க் பிரகடனம்' என்ற அந்த தீர்வுக்கு ஆதரவாக இந்தியா, ரஷியா, சீனா, பிரிட்டன் உள்பட 142 நாடுகள் ஆதரவளித்தன; அமெரிக்கா, இஸ்ரேல் உள்பட 10 நாடுகள் மட்டுமே எதிராக வாக்களித்தன; 12 நாடுகள் வாக்கெடுப்பைப் புறக்கணித்தன.

காஸாவில் இஸ்ரேல் ராணுவம் கடந்த 23 மாதங்களாக நடத்தி வரும் தாக்குதலில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 65 ஆயிரத்தைத் தாண்டியுள்ளது. இப்போதைய தரைவழித் தாக்குதலில் காஸா சிட்டி நகரம் குண்டுகளால் சல்லடையாக்கப்பட்டு வருகிறது. இருக்க இடம் இன்றி, உண்ண உணவின்றி, தப்பும் வழியின்றி பெண்கள், குழந்தைகள் என அனைவரும் எந்த நேரமும் மரண பயத்துடன் வாழ்வது கொடுமையிலும் கொடுமை. தஞ்சமடைவதற்குக்கூட உருப்படியாக ஒரு கட்டடமும் இல்லாத நிலை.

ஐ.நா. பொதுச் சபையின் 80-ஆவது அமர்வு கடந்த செப்டம்பர் 9-ஆம் தேதி தொடங்கி நடைபெற்று வருகிறது. வரும் 30-ஆம் தேதி வரை நடைபெறவுள்ள இந்த அமர்வில், முக்கியமான உயர்நிலை விவாதம் செப்டம்பர் 22-ஆம் தேதி தொடங்குகிறது. உலக நாடுகளின் தலைவர்கள் உரையாற்றவிருக்கின்றனர்.

வழக்கம்போல கூடிக் கலையும் கூட்டமாக இல்லாமல் இந்தக் கூட்டத்திலாவது காஸாவில் நடைபெற்றுவரும் கொடுமைக்கு முற்றுப்புள்ளி வைக்க அமெரிக்காவையும், இஸ்ரேலையும் உலக நாடுகளின் தலைவர்கள் வலியுறுத்தி அமைதிக்கு வழிகோல வேண்டும்.

---

**அறிவினான் ஆகுவது உண்டோ பிறிதின்நோய்**
**தம்நோய்போல் போற்றாக் கடை?**

*மற்ற உயிரின் துன்பத்தைத் தன் துன்பம்போல் கருதிக் காப்பாற்றாவிட்டால், பெற்றுள்ள அறிவினால் ஆகும் பயன் உண்டோ?*

திருக்குறள் (எண் 315) *அதிகாரம்: இன்னா செய்யாமை*

---

# திருப்புமுனை நடவடிக்கை !



**உதயை மு. வீரையன்**

உலகில் எப்போதாவது அதிசயங்கள் நடப்பது உண்டு. இதற்குக் காரணங்கள் தேடிக் கொண்டிருக்கவேண்டியது இல்லை. அதற்காக நாம் மகிழ்ச்சியடையலாம். மனமுவந்து வரவேற்கலாம். 'குணம் நாடி குற்றமும் நாடி அவற்றுள் மிகை நாடி' ஏற்றுக் கொள்ளலாம். அப்படித்தான் ஜிஎஸ்டி வரிக் குறைப்பு வந்திருக்கிறது.

கடந்த செப்டம்பர் 3,4-ஆம் தேதிகளில் நடைபெற்ற ஜிஎஸ்டி கவுன்சில் கூட்டத்தில், 'அடுத்த தலைமுறை ஜிஎஸ்டி சீர்திருத்தங்கள்' எனப்படும் இந்த வரிக் குறைப்புக்கு ஒப்புதல் வழங்கப்பட்டது. 'ஜிஎஸ்டி 2.0' எனப்படும் இது இந்திய மக்களுக்குத் தீபாவளி பரிசு என்று பிரதமர் மோடி நாட்டு மக்களுக்கு அறிவித்துள்ளார்.

நவராத்திரி தொடங்கும் செப்டம்பர் 22 முதல் இந்த வரி விகிதங்கள் குறைக்கப்பட்ட நிலையில் நடைமுறைப்படுத்தப்படுகின்றன. நவராத்திரி தொடங்கி தீபாவளி வரையிலான இந்தப் பருவத்தில் மக்கள் பெருமளவில் பொருள்களை வாங்குவார்கள். வரியைக் குறைத்தால் அவர்கள் பொருள்கள் வாங்குவது அதிகரிக்கும் என்ற நம்பிக்கையில் இது கொண்டு வரப்பட்டுள்ளது.

பொதுவாக இந்தியாவில் வரிகள் அதிகரிக்குமே தவிர குறைவது கிடையாது. 2017-ஆம் ஆண்டு பெருநிறுவனங்களுக்கான கார்ப்பரேட் வரி குறைக்கப்பட்டது. அப்போது, அடித்தட்டு மக்களின் ஜிஎஸ்டி வரி குறைக்கப்படவில்லை. ஆயுள் காப்பீடு மற்றும் மருத்துவக் காப்பீடு எடுத்தாலும் 18% ஜிஎஸ்டி செலுத்த வேண்டியுள்ளது என எதிர்ப்புகள் கிளம்பின.

வரிக் கொடுமைகள் குறித்து எதிர்க்கட்சிகளும், மக்கள் நல அமைப்புகளும் எத்தனையோ போராட்டங்கள் நடத்தின. வரி விகிதங்களில் இருக்கும் முரண்பாடுகள் குறித்து விமர்சனங்கள் எழுந்தன. ஆனால், எதற்கும் அசைந்து கொடுக்காத மத்திய அரசு திடீரென வரிக் குறைப்பு செய்திருக்கிறது.

அமெரிக்காவின் 50% அநியாய வரி விதிப்பால் இந்தியத் தொழில் துறையில் தேக்கம் ஏற்பட்டுள்ளது. மேலும், இந்தியாவில் பல மாநிலங்களில் பேரவைத் தேர்தல்களும் வரவிருக்கின்றன. அத்துடன், அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப் அண்மைக்காலமாக இந்தியாவில் வரி விதிப்பு அதிகம் என்று எச்சரிக்கை செய்துள்ளார். இதெல்லாம் காரணமாக இருக்கலாம். எப்படி இருப்பினும், இதனை மக்கள் நலனில் அக்கறை கொண்ட அனைவரும் வரவேற்க வேண்டும்.

பொதுமக்கள் அன்றாடம் பயன்படுத்தும் பெரும்பாலான பொருள்களுக்கு ஜிஎஸ்டி 13% வரை குறைக்கப்படுவதால் நாட்டின் 140 கோடி மக்களுக்கும் பலன் கிடைக்கும் என்று சென்னையில் நடைபெற்ற வர்த்தக, தொழில் மாநாட்டில் மத்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் தெரிவித்துள்ளார்.

தினந்தோறும் நாம் பயன்படுத்தும் அனைத்துப் பொருள்களிலும் ஜிஎஸ்டி வரியின் தாக்கம் இருக்கும். அந்த வகையில் 5,12,18,28% என்று 4 பிரிவுகளாக இருந்த ஜிஎஸ்டி விகிதங்கள் இப்போது 5, 18% என்று இரண்டு பிரிவுகளாகக் கொண்டு வரப்பட்டுள்ளன. இதில் 350-க்கும் மேற்பட்ட பொருள்களின் விலை குறைக்கப்பட்டுள்ளது.

12% பிரிவில் இருந்த 99 சதவீதப் பொருள்கள் 5% பிரிவுக்குள் வந்துள்ளன. அதேபோல், 18% ஜிஎஸ்டி பிரிவுக்குள் இருந்த 90 சதவீதப் பொருள்கள் 5% பிரிவுக்குள் வந்துள்ளன. இதனால், பெரும்பாலான பொருள்களுக்கு ஜிஎஸ்டி 13% வரை குறைந்துள்ளது.

என்றாலும், இதைப் பொதுமக்களிடம் கொண்டு போய் சேர்க்க வேண்டிய பொறுப்பும் அரசுக்கு உள்ளது. வணிகர்களும், வணிக நிறுவனங்களும் இந்த விலைக் குறைப்பைப் பொறுப்புடன் ஏற்று செயல்படுத்த வேண்டும். விலை ஏறிய எந்தப் பொருளும், விலை குறைந்ததாக வரலாறு இல்லை.

வரி விகிதங்களை 5%, 18% என இரு விகிதங்களாகக் குறைக்க ஜிஎஸ்டி கவுன்சில் ஒப்புதல் அளித்துள்ளது. இதன் காரணமாகப் பெரும்பாலான பொதுப் பயன்பாட்டுப் பொருள்களின் விலை வெகுவாகக் குறையும். உயர் ரக கார்கள், புகையிலைப் பொருள்கள், சிகரெட் போன்ற குறிப்பிட்ட பொருள்களுக்குச் சிறப்பு 40% ஜிஎஸ்டி விதிக்கவும் பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

குட்கா, புகையிலைப் பொருள்கள் தவிர மற்ற அனைத்துப் பொருள்களுக்கான புதிய வரி விகிதங்கள் நவராத்திரியின் முதல் நாளான செப்டம்பர் 22 முதல் நடைமுறைக்கு வரும். தினசரி பயன்பாட்டு உணவுப் பொருள்களுக்கு வரி விதிப்பு இல்லாத நிலை தொடரும். அதுபோல அனைத்து வடிவிலான சப்பாத்தி, பரோட்டா உணவுப் பொருள்களுக்கு இப்போது விதிக்கப்படும் 5% ஜிஎஸ்டி நீக்கப்பட்டு, வரிவிதிப்பு இல்லாத வரம்பில் கொண்டுவரப்படும்.

பற்பசை, பால் புட்டி, குடைகள், சைக்கிள், சீப்பு உள்ளிட்ட நுகர்வோர் பொருள்கள் 5% ஜிஎஸ்டி வரம்புக்குள் கொண்டுவரப்பட்டுள்ளன. இப்போது 28%-லிருந்து 18 சதவீதமாக ஜிஎஸ்டி குறைக்கப்படுவதால் சிமென்ட் விலை குறைய வாய்ப்புள்ளது. மின்சார வாகனங்களுக்கு தற்போதுள்ள 5% ஜிஎஸ்டி தொடரும்.

மேலும், ஜிஎஸ்டியால் மாநிலங்களுக்கு ஏற்பட்ட வருவாய் இழப்பை ஈடு செய்ய வாங்கப்பட்ட கடன் தொகையை முழுமையாகத் திரும்பச் செலுத்தும் வரை, புகையிலை, குட்கா, புகையிலைப் பொருள்கள் மற்றும் சிகரெட் ஆகியவற்றின் மீது தற்போது விதிக்கப்படும் 28% ஜிஎஸ்டி மற்றும் இழப்பீடு செஸ் விதிப்பு தொடரும்.

வரி சீரமைப்பால் மாநிலங்களுக்கு ஏற்படும் வருவாய் இழப்பை ஈடு செய்ய மத்திய அரசு உரிய இழப்பீடு வழங்க வேண்டும் என எதிர்க்கட்சி ஆளும் 8 மாநிலங்கள் மத்திய அரசை வலியுறுத்தியுள்ளன. பாஜக தலைமையிலான தேசிய ஜனநாயகக் கூட்டணியில் அங்கம் வகிக்கும் தெலுங்கு தேசக் கட்சியும் இதை வலியுறுத்தியுள்ளது.

**ஜிஎஸ்டி குறைப்பு மூலம் பெரும்பாலும் அனைத்துப் பொருள்கள் - சேவைகளின் விலை குறையும். இதனால், தேவை அதிகரிக்கும். இது உற்பத்தி அதிகரிப்பை ஊக்குவித்து நாட்டின் பொருளாதாரத்தை மேலும் வளர்க்கும். தொழில் நிறுவனங்கள் இந்திய தயாரிப்புக்கு முன்னுரிமை அளிக்க வேண்டும்.**

அந்தக் கட்சியின் மூத்த தலைவரும், ஆந்திர மாநிலத்தின் நிதியமைச்சருமான பையாவுலா கேசவ் செய்தியாளர்களிடம் கூறுகையில், 'ஜிஎஸ்டி விகிதங்கள் மறுசீரமைப்பு செய்யப்படுவதை ஒரு கூட்டணிக் கட்சியாக தெலுங்கு தேசம் மத்திய அரசுக்கு ஆதரவளிக்கிறது. இது சாமானிய மக்களுக்குச் சாதகமான நடவடிக்கை' என்றார்.

ஜிஎஸ்டி கவுன்சில் கூட்டத்துக்கு முன்னதாக எதிர்க்கட்சிகள் ஆளும் மாநிலங்கள் ஒன்றுகூடி ஆலாசனை நடத்தின. ஹிமாசல் பிரதேசம், ஜார்க்கண்ட், கர்நாடகம், கேரளம், பஞ்சாப், தமிழ்நாடு, தெலங்கானா, மேற்கு வங்கம் ஆகிய 8 மாநிலங்களைச் சேர்ந்த நிதியமைச்சர்கள் இந்தக் கூட்டத்தில் கலந்து கொண்டனர். இதில் வரி விகித மறுசீரமைப்புக்கு ஒப்புதல் தெரிவிக்க வருவாய் பாதுகாப்புக்கான தங்களது கோரிக்கையை மத்திய அரசிடம் மீண்டும் வலியுறுத்துவது என முடிவானது.

இந்த வரி விதிப்பால் மாநிலங்களுக்கு ஏற்படும் வருவாய் இழப்பை ஈடு செய்ய ஆடம்பரப் பொருள்கள் மற்றும் தீமைதரக் கூடிய பொருள்கள்மீது 1 முதல் 290% வரி விதிக்கப்பட்டது. அதன்பின் 2026 மார்ச் 1-ஆம் தேதி வரை நீட்டிக்கப்பட்டது.

இதனிடையே ஜிஎஸ்டி அறிமுகப்படுத்தப்பட்டு 8 ஆண்டுகள் நிறைவானதை ஒட்டி, அதை மேலும் எளிமைப்படுத்தும் விதமாக மக்கள் அன்றாடம் பயன்படுத்தும் பொருள்கள் மீதான ஜிஎஸ்டியை குறைக்கும் வகையில் அடுத்த தலைமுறைச் சீர்திருத்தம் (ஜிஎஸ்டி 2.0) தீபாவளி பண்டிகைக்குள் மேற்கொள்ளப்படும் என சுதந்திர தின உரையில் பிரதமர் மோடி அறிவித்தார்.

அதன்படி, நான்கு விகித ஜிஎஸ்டியில் 12%, 28% ஆகிய விகிதங்களை நீக்கிவிட்டு, 5%, 18% ஆகிய இரு விகித நடைமுறையைப் பின்பற்றுவது, புகையிலை, குட்கா மற்றும் பான்மசாலா போன்ற குறிப்பிட்ட சில பொருள்கள் மீது மட்டும் 40% வரி விதிப்பது தொடர்பான முன்மொழிவை மாநில நிதியமைச்சர்கள் குழுவுக்கு (ஜிஓஎம்) நிதியமைச்சகம் வழங்கியது.

'சரக்கு - சேவை வரி (ஜிஎஸ்டி) விகிதக் குறைப்பு நாட்டின் பொருளாதாரத்தில் மிகப் பெரிய திருப்புமுனையை ஏற்படுத்தும் நடவடிக்கையாகும். சுதந்திரத்துக்குப் பிறகு மேற்கொள்ளப்பட்ட முக்கியமான சீர்திருத்த நடவடிக்கையும் இதுவாகும்' என்று மத்திய வணிகம் மற்றும் தொழில் துறை அமைச்சர் பியூஷ் கோயல் தெரிவித்துள்ளார்.

இதன்மூலம் கிடைக்கும் பலன்களை நுகர்வோருக்கு தொழில் நிறுவனங்கள் முழுமையாக அளிக்க வேண்டும். ஜிஎஸ்டி குறைப்பு மூலம் பெரும்பாலும் அனைத்துப் பொருள்கள் - சேவைகளின் விலை குறையும். இதனால், தேவை அதிகரிக்கும். இது உற்பத்தி அதிகரிப்பை ஊக்குவித்து நாட்டின் பொருளாதாரத்தை மேலும் வளர்க்கும். தொழில் நிறுவனங்கள் இந்தியத் தயாரிப்புக்கு முன்னுரிமை அளிக்க வேண்டும்.

விவசாயம் தொடங்கி குறு, சிறு தொழில்கள், மருந்து உற்பத்தி, மின்னணு சாதனங்கள், சுற்றுலா, காப்பீடு என அனைத்துத் துறைகளிலும் நல்ல மாற்றத்தை ஏற்படுத்த வழிவகை செய்யப்பட வேண்டும். நாட்டில் உள்ள ஒவ்வொருவரும் இதன்மூலம் நேரடியாகவும், மறைமுகமாகவும் பலன் அடைய வேண்டும்.

அரசு எத்தகைய உயர்ந்த திட்டங்களைக் கொண்டுவந்தாலும் அவை மக்களைச் சென்றடைந்தால்தான் மரியாதையாகும்; மதிப்பும் கூடும். ஏழை, எளிய, நடுத்தர மக்களைச் சென்றடையும் திட்டங்களே உயிருள்ள திட்டங்களாகும். விலைவாசி உயர்வதை அரசாங்கம் வேடிக்கை பார்க்கக் கூடாது.

கட்டுரையாளர்:
**எழுத்தாளர்.**

---

# ஒழுங்கின்றி அமையாது உயர்வு !

**முனைவர் என்.மாதவன்**

அண்மையில் பேருந்து பயணத்தின்போது, உரையாடல் ஒன்றைக் கேட்க நேர்ந்தது. பேருந்தின் இரைச்சலையும் மீறி எதிர்முனையில் பேசுவோருக்கு கேட்க வேண்டும் என்ற நோக்குடன் இந்த உரையாடல் நிகழ்த்தப்பட்டது. அதனால், பின்னிருக்கையில் அமர்ந்திருந்தவர்கள் அனைவருக்கும் கேட்டது அந்த உரையாடல்- இவ்வாறு நிறைவு பெற்றது. 'காலையிலே 10 மணிக்கெல்லாம் போயிடாதே; அவங்க எல்லாம் வர்றதுக்கு 11 மணியாகிவிடும்'.

அரசு அலுவலக அதிகாரி ஒருவரைச் சந்திக்க வேண்டிய தேவையின் அடிப்படையில் கேட்கப்பட்ட ஆலோசனை என்பதும் புரிந்தது. 10 மணிக்கு இன்று வரவேண்டிய அதிகாரி 11 மணிக்கு ஏன் வருகிறார் என்றோ, இதே அதிகாரி நேற்று வீட்டுக்கு எத்தனை மணிக்கு திரும்பச் சென்று சேர்ந்தார் என்பதை யாரும் பேசப்போவதில்லை. அதில் அவர்களுக்கு அக்கறையும் இருக்கப் போவதில்லை.

அதுபோல், வீட்டுக்குச் சென்ற பிறகும் தனது வாட்ஸ் ஆப், மின்னஞ்சல் மூலம் வந்த எத்தனை செய்திகளை அவர் பார்த்துப் பதிலளித்திருப்பார். காலையில் எழுந்த நேரம் முதலே மெய்நிகர் வழியாக (வர்ச்சுவல்) அலுவலகம் வந்துவிட்டிருப்பார் என்பதையும் யோசிக்க வாய்ப்பில்லை. இதுபோலவே அலுவலக நேரத்திலும் சொந்தப் பணிகள் இதே பாணியில் குறுக்கிடுவதும் தவிர்க்க இயலாததே.

விதிவிலக்காக நேர்த்தியாக பணிகளைத் திட்டமிடும் அதிகாரிகளும் பணியாளர்களும் இல்லாமல் இல்லை. ஆனால், பெரும்பான்மை நேர்வுகளின் அடிப்படையில் இந்தக் கருத்தோட்டம் குறித்து அலசி ஆராய்வது அவசியமாகிறது.

சென்னை போன்ற பெருநகரங்களில் நெரிசலான சாலைகளில் பயணிப்போர் நிலையைக் கவனித்துப் பார்த்தால் போக்குவரத்து என்பது எவ்வளவு சவாலானது என்பது விளங்கும். இதுபோன்ற நகரங்களில் மிகவும் துல்லியமாகத் திட்டமிட்டால் தவிர அலுவலகங்களுக்கு நேரத்துக்குச் செல்ல இயலாது. அதுபோலவே மீண்டும் வீட்டுக்குச் சென்ற பிறகு முழுமையாக அலுவலகப் பணிகளை மறந்திருக்கும் வாய்ப்பும் இல்லை.

ஒருகாலத்தில் வார இறுதிநாள்களில் கோப்புகளைக் கொண்டு சென்றனர். இப்போது ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு நிமிஷமும் கோப்புகளுடனேயே அலைகின்றனர். ஆனால், பணிகளின் முன்னேற்றம் என்பது கேள்விக்குறியே.

கரோனா பெருந்தொற்றுக்குப் பிறகு, பல்வேறு அலுவலகப் பணிகளும் பெருமளவில் எண்மமயமாகி விட்டது. இதனால், பொதுமக்கள் இருந்த இடத்திலேயே அனைத்து விதமான சேவைகளுக்கும் விண்ணப்பிக்க முடிகிறது. இந்த எண்ம நிர்வாகம் மிகவும் வரவேற்புக்குரியது.

பொதுமக்கள் தங்கள் உரிமைகளை எவ்விதப் பாகுபாடுமின்றி பெற வழிவகை செய்யும் அரிய வாய்ப்பை அளிப்பது; அனைத்து விதமான தரவுகளையும் விரல் நுனியில் வைத்துக்கொள்ள உதவுவது; சரியான தரவுகளின் மூலம்தான் அரசோ, தனியார் நிறுவனம் ஒன்றோ நேர்த்தியாக திட்டம் வகுக்க இயலும் என்பதும் மறுக்க முடியாது. ஆனால், இவ்வாறு அனைத்து அலுவல்களும் எண்மமயமாவதால் அலுவலகப் பணியாளர்களின் வாழ்வு எந்தக் கதியாகிறது என்பதையும் கவனத்தில் கொள்ள வேண்டும்.

முந்தைய காலங்களைப் போல 10 முதல் 5 மணிவரைதான் அலுவலகப் பணி என்றால் எந்த அலுவலகங்களும் இன்று செயல்பட இயலாது. நாட்டின் மக்கள்தொகைப் பெருக்கமும், சேவைகளின் தேவை அதிகரிப்பும் வேலைநேர அதிகரிப்பைக் கூட்டியுள்ளது. சேவைகள் தேவை அதிகரிப்பை ஈடுகட்டும் அளவிலான பணியாளர்களும் அலுவலகங்களில் இல்லை.

ஆனால், அதே நேரம் பணிகளின் முன்னேற்றம் தொடர்பான அறிக்கைகளை ஒவ்வொரு நாளும் எடுத்துவிட இயல்கிறது. இதை அடிப்படையாக வைத்து ஒவ்வோர் உயர் அதிகாரியும் அடுத்தகட்ட பணியாளர்களை மீளாய்வு செய்வதும் நடைபெறுகிறது.

சரி என்னதான் செய்யலாம்? பணிகள் நடைபெற வேண்டாமா? முன்னேற்றம் வேண்டாமா? என்று கேட்பது புரிகிறது. எல்லாவற்றுக்கும் ஒழுங்கு இருப்பதுபோல் மின்னணு யுகத்தில் மனிதர்கள் பணி செய்வதிலும் ஒருவகை ஒழுங்கு என்பது தேவையாகிறது. வேறு வகையில் கூறுவதானால் வாழும் வகையில் ஒழுங்கு.

இந்த ஒழுங்கே உடல் நலனிலும் ஒழுங்கை நிர்வகிக்க உதவும். அவ்வாறான உடல்நல ஒழுங்கே பணித் திறனையும் அதிகரிக்கும். பணித் திறன் அதிகரிப்பே நாட்டின் மனிதவளத்தைக் கூட்டி மொத்த உள்நாட்டு உற்பத்தியை அதிகரித்து நாட்டின் உயர்வை உறுதிசெய்யும்.

எண்ம நிர்வாகத்தோடு பணியாளர்களின் உடலோம்பல் நிர்வாகத்துக்கும் இன்றைய நிர்வாகத்தினர் முக்கியத்துவம் அளிக்க வேண்டும். பல நிறுவனங்கள் உடலோம்பலை அலுவலகத்திலேயே மேற்கொள்ளும் வகையில், அங்கு ஓர் அறையில் உடற்பயிற்சிக் கூடங்கள்கூட அமைத்துக் கொடுக்க முன்வந்துள்ளன. இது ஒரு வகையில் பார்த்தால் ஆரோக்கியமான போக்குதான்.

அதேநேரம் பணியாளரின் தனிப்பட்ட வாழ்வு மேம்பாட்டில் சவால்களைக் குறைக்கும் விதமாக நிர்வாகங்கள் செயல்பட வேண்டும். பணியாளர்கள் உரிய நேரத்துக்கு வீட்டுக்குச் சென்று குடும்பத்தினருடன் நேரம் செலவிடுவதையும் உறுதி செய்ய வேண்டும்.

நிர்வாகத்தின் அனைத்துநிலையில்இருப்போரும் ஒருவிதமான ஒழுங்குக்கு வரவேண்டிய தேவை அதிகரித்துள்ளது. எல்லா நேரமும் எல்லோரும் எல்லாப் பணிகளையும் செய்துகொண்டிருப்பதைவிட குறிப்பிட்ட நேரத்தில் மட்டும் மிகவும் கவனத்தோடும், நேர்த்தியோடும் அமர்ந்து திட்டமிட வேண்டும். அந்தப் பணிகளின் நிறைவை குறிப்பிட்ட காலவரையறை வைத்துக்கொண்டு மட்டும் மீளாய்வு செய்ய வேண்டும்.

இவ்வாறான நேர்த்தியை கடைநிலை அலுவலகம் வரை கொண்டு சென்று, அந்த அலுவலர்களும் அலுவலகப் பணியாளர்களும் இந்த நேர்த்திக்குள் வருவதை உறுதி செய்ய வேண்டும். அவ்வாறு செய்யாமல் அடுத்தடுத்து திட்டமிட்டு எல்லா நேரமும் எல்லோரும் பணி செய்துகொண்டேயிருப்பது போன்ற மாயை ஏற்படுத்துவது தனி மனிதர்களுக்கும்,அலுவலக நடைமுறைகளுக்கும், நாட்டின் முன்னேற்றத்துக்கும் நல்லதல்ல.

ஒருவகையில் செடியை பூமியில் நட்டுவிட்டு ஒவ்வோர் நாளும் அதன் வேரைப் பிடுங்கி, அதன் வளர்ச்சியின் அளவை அளப்பது போன்ற செயல்பாடாகவே அமையும்.

---

### இன்றல்ல அன்றே...

இன்று பல்வேறு விதமான பிரச்னைகளை தமிழக மீனவர்கள் எதிர்கொள்ளும்போது, கச்சத் தீவை மீட்க வேண்டும் என்ற ஒருமித்த கருத்து எல்லோராலும் பேசப்பட்டு வருகிறது ('தீவு மீட்பல்ல தீர்வு!'-ஆசிரியர் உரை, 11.09.25). இன்றைய அரசியல் கட்சிகள் அன்றும் களத்தில் இருந்தன. அண்மையில் கச்சத் தீவுக்குச் சென்ற இலங்கை அதிபர் கூறிய சுற்றுலா மையத்தை அங்கு ஏற்படுத்தும் ஆலோசனை புதிய பரிமாணத்தை ஏற்படுத்தியுள்ளது. பொருளாதாரச் சிக்கலில் உள்ள இலங்கை சுற்றுலாத் துறையின் மூலம் பொருளாதாரத்தை மேம்படுத்தத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டிய கட்டாய சூழலில் உள்ளது. இதில் இரு நாடுகளும் ஆக்கபூர்வ நடவடிக்கை எடுப்பது அவசியம்.

**ப.நரசிம்மன், தருமபுரி.**

### தானம் கொடுத்த பிறகு...

தமிழக அரசியல் களத்தில் கச்சத் தீவு நெடுங்காலமாகவே விவாதப் பொருளாக இருந்து வருகிறது. இரு கட்சிகளும் ஒருவரையொருவர் குற்றஞ்சாட்டியதுண்டு ('தீவு மீட்பல்ல தீர்வு!'-ஆசிரியர் உரை, 11.09.25). கச்சத் தீவைக் கைவிட்டு அரை நூற்றாண்டுக்கும்மேலாகிவிட்டது. அதை மீட்பது அவ்வளவு எளிதல்ல என்பது தெரிந்தும், தெரியாததுபோல் அரசியல்வாதிகள் நாடகமாடுகின்றனர். பிரச்னையின் மையப் புள்ளி இலங்கையில் இழுவலைப் பயன்பாடுதான். நமது வீட்டை அடுத்தவருக்கு தானம் கொடுத்த பிறகு, மீண்டும் அதை நாம் கையகப்படுத்த முடியுமா என்பதுபோல், கச்சத் தீவை மீண்டும் பெற முடியுமா என்பதும் கேள்விக்குறிதான். ஆக்கபூர்வ மாற்று சிந்தனையால் இருதரப்பு ஒத்துழைப்புடன் நல்லதொரு தீர்வை எட்ட வேண்டும்.

**உ.இராசமாணிக்கம், கடலூர்.**

## அன்புள்ள ஆசிரியருக்கு...

edit.dinamani@gmail.com

### மூவரால் திருப்புமுனை

பெண் விடுதலைக்கு வாழ்நாள் முழுவதும் குரல் கொடுத்தவர் மகாகவி பாரதியார் ('பாரதி-மண் விடுதலையும், பெண் விடுதலையும்!'-கட்டுரை-பேராசிரியர் ய. மணிகண்டன்). அவருக்கு பெண் விடுதலை குறித்த தீயை மூட்டியவர் சகோதரி நிவேதிதா தேவி. அடுத்த திருப்புமுனை வை.மு.கோதைநாயகி அம்மாவால் ஏற்பட்டது. அதுவரை எழுத்து வடிவில் இருந்த அவரது பாடல்களுக்கு தெய்வீக சக்தி உண்டு என்பதை உணர்ந்தார். அவரது வாழ்வில் மறுமலர்ச்சியை ஏற்படுத்தியது மூவலூர் ராமாமிர்தம் அம்மையாரும், மருத்துவர் முத்துலட்சுமி ரெட்டி அம்மையாரும் ஆவர். அவர்களை அம்பிகையே அனுப்பியதாகக் கொண்டாடினார். நூற்றாண்டு கடந்தாலும் அவர் என்றும் நம்முடன் மரணமில்லாப் பெருவாழ்வு வாழ்வார் என்பதுதான் நிதர்சனம்.

**எஸ்.வேணுகோபால், சென்னை.**

## அன்பே அனைத்தும்...

சிகாகோவில் சுவாமி விவேகானந்தர் ஆற்றிய உரையை முதலாகக் கொண்ட கருத்துகள் அவசியமானவை ('உலகுக்கு இந்தியாவின் உத்தரவாதம்'-கட்டுரை-சுவாமி விமூர்த்தானந்தர், 12.09.25). சர்வ சமயத்தவர்களும் அவரவர் சமயத்தையே பேசிச் சென்ற அவையில் மனிதத்தையும், அன்பையும், புனிதத்தையும் சகோதர மனப்போக்குடன் சுவாமி விவேகானந்தர் கம்பீரமாக உரையாற்றினார். 2001-இல் அதே தேதி நியூயார்க் நகரில் இரட்டைக் கோபுர தாக்குதலில் பல உயிர்கள் மடிந்ததை நினைவூட்டி மறக்கக் கூடியதல்ல என்று கூறியிருக்கும் விதம் சிந்திக்கவும், கண்ணீர் சிந்தவும் வைக்கிறது. செப்டம்பர் 11 உலகை உயர்த்திய தினமாகவும், உலகை உலுக்கிய தினமாகவும் நினைத்துப் பார்த்து, அன்பே உலகின் திறவுகோல் என்று பேசிய சுவாமி விவேகானந்தரைப் பணிவோம்.

**மா.பழனி, கூத்தப்பாடி.**

### தொடர் கண்காணிப்பு...

பிரசவகால உயிரிழப்புகளும், சிசு மரணங்களும் நம் நாட்டில் குறைந்திருப்பது மகிழ்ச்சியான செய்தியாகும் ('சோர்வடைதல் கூடாது...'-ஆசிரியர் உரை, 12.09.25). நம் நாட்டில் சிசு மரண விகிதம் தொடர்ச்சியாகக் குறைந்து வருவதற்கு முக்கியக் காரணம் மத்திய, மாநில அரசுகள் மேற்கொண்டு வரும் பல்வேறு சிறப்புத் திட்டங்கள், முயற்சிகள்தான். பிரசவத்துக்கு முன்பாக மேற்கொள்ளப்படும் பல்வேறு பரிசோதனைகள், கர்ப்பிணிகளுக்கான ஊட்டச் சத்துகள், தொடர் கண்காணிப்பு எனத் தொடர்ச்சியாக அரசு மேற்கொண்டுவரும் முயற்சிகளின் பலனாக சிசு மரணம் குறைந்திருக்கிறது. ஒருசில மாநிலங்களில் சிசு மரணங்கள் கூடுதலாக இருப்பது சற்று கவலை அளிக்கிறது. தொடர் கண்காணிப்பு, பராமரிப்பு மூலம் ஆரோக்கியமான சமுதாயம் உருவாகும்.

**ஆர்.ஜி.பாலன், திசையன்விளை.**

### அரசின் கடமை

பிரச்னையின் ஆரம்பமே மரங்களை வெட்டுவதுதான். ஒரு நோய் குறித்த பயம் அதற்கு ஒரு பெயரிட்டு அழைக்கும்போது வரும். அந்த பீதி மேலும் அதன் உயிரிழப்பை அதிகரித்துவிடும். இதுதான் வரலாறு ('வெப்பத் தடுப்பு செயல்திட்டம் அவசியம்'-துணைக் கட்டுரை-பேராசிரியர் தி. ஜெயராஜசேகர், 12.09.25). ஆனால், இப்போது 'ஹீட் ஸ்ட்ரஸ்', 'ஹீட் ஸ்ட்ரோக்' என்று புதிது புதிதாக பெயர் வைத்து மனிதனை உளவியல் ரீதியாகப் பயப்பட வைத்து அவன் வாழும் காலம் குறைந்து விடுகிறது. முதியவர்களுக்குச் செயல் திட்டங்கள் வகுத்து நோய் பாதிக்கும் காரணிகளைக் கண்டறிந்து பாதுகாப்பது அரசின் கடமையாகிறது. அவர்களின் உடல் ஆரோக்கியம், மன ஆரோக்கியத்தைப் பேணிக் காக்க வேண்டியது அரசின் கடமை.

**கோ.ராகவேந்திரன், ஜோலார்பேட்டை.**

தனியார் பள்ளிகளுக்கு நிரந்தர அங்கீகாரம்

# கல்வித் துறைச் செயலருக்கு உயர்நீதிமன்றம் உத்தரவு

**சென்னை, செப். 18:** தனியார் பள்ளிகளுக்கு நிரந்தர அங்கீகாரம் வழங்குவது, பள்ளிகளை தரம் உயர்த்துவது தொடர்பாக தனியார் பள்ளிகளின் இயக்குநர் அளித்த பரிந்துரை மீது 12 வாரங்களில் தகுந்த உத்தரவுகளை பிறப்பிக்க கல்வித் துறைச் செயலருக்கு சென்னை உயர்நீதிமன்றம் உத்தரவிட்டது.

தனியார் கல்வி நிறுவனச் சங்கத்தின் மாநில பொதுச் செயலர் பழனியப்பன், சென்னை உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்த மனுவில், தமிழகத்தில் உள்ள தனியார் பள்ளிகளுக்கு நிரந்தர அங்கீகாரம் வழங்குவது தொடர்பாக தனியார் பள்ளிகளின் இயக்குநர் கடந்த மார்ச் மாதம் பரிந்துரைகளை வழங்கினார். அவற்றை பரிசீலித்து தகுந்த உத்தரவு பிறப்பிக்க கல்வித் துறைச் செயலருக்கு உத்தரவிட வேண்டும் என கூறியிருந்தார்.

அதேபோல், கல்வி உரிமைச் சட்டத்தை முழுமையாக அமல்படுத்துவதை உறுதி செய்யும் வகையில், ஆரம்பப் பள்ளிகளை நடுநிலைப் பள்ளிகளாக தரம் உயர்த்துவது தொடர்பாக தனியார் பள்ளிகளின் இயக்குநர் அளித்த பரிந்துரைகளையும் பரிசீலித்து தகுந்த உத்தரவு பிறப்பிக்க வேண்டும் எனக்கூறி தனியாக ஒரு வழக்கும் தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

இந்த வழக்குகள் நீதிபதி ஜி.கே.இளந்திரையன் முன் விசாரணைக்கு வந்தது. அப்போது அரசுத் தரப்பில் ஆஜரான கூடுதல் தலைமை வழக்குரைஞர் ஜெ.ரவீந்திரன் மற்றும் அரசு சிறப்பு பிளீடர் மைக்கேல் சந்துரு ஆகியோர் நிரந்தர அங்கீகாரம், பள்ளிகளை தரம் உயர்த்துவது தொடர்பாக தனியார் பள்ளிகளின் இயக்குநர் பல்வேறு நிபந்தனைகளுடன் பரிந்துரை அளித்துள்ளார். ஒவ்வொரு பள்ளியும் இந்த நிபந்தனைகளை அமல்படுத்தி உள்ளதா என்பதை ஆய்வு செய்து அதன் அடிப்படையில் உத்தரவுகள் பிறப்பிக்கப்படும் என வாதிட்டனர்.

இதையடுத்து நீதிபதி, தனியார் பள்ளிகளுக்கு நிரந்தர அங்கீகாரம் வழங்குவது, பள்ளிகளை தரம் உயர்த்துவது தொடர்பாக தனியார் பள்ளிகளின் இயக்குநர் அளித்த பரிந்துரை மீது 12 வாரங்களில் தகுந்த உத்தரவுகளை பிறப்பிக்க கல்வித் துறைச் செயலருக்கு உத்தரவிட்டார்.

# வழக்குரைஞர்கள் பாதுகாப்புக்கு தனி சட்டம்: சட்டத் துறைச் செயலர் பதிலளிக்க உத்தரவு

**மதுரை, செப். 18:** வழக்குரைஞர்கள் பாதுகாப்புக்கு தனி சட்டத்தை இயற்றக் கோரிய வழக்கில், மாநில சட்டத் துறைச் செயலர், இந்திய, தமிழக பார் கவுன்சில்களின் தலைவர்கள் பதிலளிக்க சென்னை உயர்நீதிமன்ற மதுரை அமர்வு வியாழக்கிழமை உத்தரவிட்டது.



தேனி மாவட்டம், ஆண்டிப்பட்டியைச் சேர்ந்த வழக்குரைஞர் சசிக்குமார் உயர்நீதிமன்ற மதுரை அமர்வில் தாக்கல் செய்த மனுவில், வழக்குரைஞர்களைப் பாதுகாக்கும் வகையில், தமிழ்நாடு வழக்குரைஞர்கள் பாதுகாப்பு சட்டத்தை இயற்ற உத்தரவிட வேண்டும் எனக் கோரினார்.

இந்த மனு உயர்நீதிமன்ற நீதிபதிகள் அனிதா சுமந்த், குமரப்பன் அமர்வு முன் வியாழக்கிழமை விசாரணைக்கு வந்தது. அப்போது, மனுதாரர் தரப்பில் முன்னிலையான வழக்குரைஞர், இந்த நீதிமன்றத்தில் பயிற்சி பெற்ற வழக்குரைஞர் ஒருவர் சில மாதங்களுக்கு முன்பு படுகொலை செய்யப்பட்டார். இதுபோன்ற சம்பவங்கள் தொடர்ந்து நடைபெறுகின்றன. எனவே, வழக்குரைஞர்களைப் பாதுகாக்க தனி சட்டம் கொண்டு வருவது அவசியம் என்றார்.

தமிழக பார் கவுன்சில் தரப்பில் முன்னிலையான வழக்குரைஞர், தனி சட்டம் இயற்றுவது தொடர்பான முன்வரைவு தயார் செய்யப்பட்டு, மாநில அரசுக்கு அனுப்பப்பட்டுள்ளது என்றார்.

இதையடுத்து, நீதிபதிகள் பிறப்பித்த உத்தரவு:

தமிழக சட்டத் துறைச் செயலர், இந்திய, தமிழக பார் கவுன்சில்களின் தலைவர்களை இந்நீதிமன்றம் தாமாக முன்வந்து இந்த வழக்கில் சேர்க்கிறது. அவர்கள் பதிலளிக்க வேண்டும். தமிழக பார் கவுன்சில் தரப்பில் சட்டம் இயற்றுவது தொடர்பாக தயாரிக்கப்பட்ட முன்வரைவை இந்த நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய வேண்டும். இந்த வழக்கு விசாரணை வரும் அக். 17-ஆம் தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது என்றனர் நீதிபதிகள்.

# சாபஹார் துறைமுகத்துக்கு அமெரிக்கா பொருளாதார தடை: இந்தியாவுக்கு பாதிப்பு

**புது தில்லி, செப். 18:** ஈரானில் உள்ள சாபஹார் துறைமுகத்துக்கு அளிக்கப்பட்டு வந்த பொருளாதார தடை விலக்கை திரும்பப் பெறுவதாக அமெரிக்கா வியாழக்கிழமை அறிவித்தது.

ஈரான், ஆப்கானிஸ்தான், ஆர்மேனியா, அஜர்பைஜான், ரஷியா, மத்திய ஆசியா, ஐரோப்பிய நாடுகளுடன் இணைக்க உதவும் சாபஹார் துறைமுகத்தை மேம்படுத்தும் பணியில் ஈடுபட்டுள்ள இந்தியாவுக்கு இது பாதிப்பை ஏற்படுத்தும் என்று கூறப்படுகிறது.


அமெரிக்காவின் வெளியுறவுத் துறை வியாழக்கிழமை வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில், 'ஈரானைத் தனிமைப்படுத்தும் அதிபர் டிரம்ப்பின் கொள்கையின்படி, சாபஹார் துறைமுகத்துக்கு 2018-இல் அளிக்கப்பட்ட பொருளாதாரத் தடை விலக்கு செப்டம்பர் 29-ஆம் தேதி முதல் திரும்பப் பெறப்படுகிறது. இதையடுத்து, அந்த துறைமுகத்தை இயக்கி வருபவர்கள் பொருளாதாரத் தடைக்கு உட்படுவார்கள்.

ஹாங்காங், ஐக்கிய அரபு அமீரகத்தில் உள்ளவர்கள் சட்டவிரோத வர்த்தகத்தின் மூலம் ஈரானின் கச்சா எண்ணெயை விற்பனை செய்து அந்நாட்டு ராணுவத்துக்கு உதவுகின்றனர். இதைத் தடுக்க அமெரிக்கா தொடர்ந்து நடவடிக்கை எடுக்கும்' என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

**இந்தியாவுக்கு பாதிப்பு:** பாகிஸ்தானை புறக்கணித்து ஆப்கானிஸ்தான், மத்திய ஆசியாவை சாலை மற்றும் ரயில் வழித்தடத்துடன் இணைக்கும் சுமார் 7,200 கி.மீ. தொலைவு சர்வதேச வடக்கு-தெற்கு வர்த்தக வழித்தட திட்டத்தை செயல்படுத்த சாபஹார் துறைமுகத்தை இந்தியா மேம்படுத்தி வருகிறது.

இதற்காக 2024-இல் ரூ.100 கோடியை ஒதுக்கி ஈரானுடன் 10 ஆண்டுத் திட்டத்துக்கான ஒப்பந்தத்தை இந்தியா மேற்கொண்டது.

இந்நிலையில், மத்திய ஆசியாவுக்கு வர்த்தகத்தை விரிவாக்கம் செய்ய இந்தியா மேற்கொண்டு வரும் சாபஹார் துறைமுக மேம்பாட்டு திட்டத்துக்கு அமெரிக்கா விதித்துள்ள பொருளாதாரத் தடை பாதிப்பை ஏற்படுத்தும் என்று கூறப்படுகிறது.




# முதுநிலை பட்டதாரி ஆசிரியர் தேர்வு: ஒத்திவைப்பு குறித்து பரிசீலிக்க உத்தரவு

**சென்னை, செப். 18:** முதுநிலை பட்டதாரி ஆசிரியர்களுக்கான போட்டித் தேர்வை 3 வாரங்களுக்கு ஒத்திவைக்கக் கோரிய மனுவை பரிசீலித்து முடிவெடுக்க ஆசிரியர் தேர்வு வாரியத்துக்கு சென்னை உயர்நீதிமன்றம் உத்தரவிட்டது.

திருச்சி மாவட்டம் நாகையநல்லூரைச் சேர்ந்த சுரேஷ்குமார் என்பவர் சென்னை உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்த மனுவில், ஆசிரியர் தேர்வு வாரியம், வரும் அக்.12-ஆம் தேதி முதுநிலை பட்டதாரி ஆசிரியர்களுக்கான போட்டித் தேர்வை நடத்துகிறது. இந்தத் தேர்வில் கல்வியியல், உளவியல் மற்றும் பொது அறிவு குறித்து புதிய பாடத்திட்டம் கூடுதலாக சேர்த்துள்ளனர். பழைய பாடத்திட்டத்தை மாற்றி அமைத்துள்ளனர்.

உரிய கால அவகாசம் இல்லாததால், புதிய பாடத்திட்டத்துடன் கூடிய தேர்வுக்கு தயாராவோர் மன உளைச்சலுக்கு ஆளாகி உள்ளனர். எனவே, இந்தத் தேர்வை 3 வாரங்களுக்கு ஒத்திவைக்கக் கோரி அனுப்பிய மனுவை ஆசிரியர் தேர்வு வாரியத் தலைவர் பரிசீலிக்க உத்தரவிட வேண்டும் என்று கூறியிருந்தார்.

இந்த மனு நீதிபதி ஏ.டி.ஜெகதீஷ் சந்திரா முன் விசாரணைக்கு வந்தது. வழக்கை விசாரித்த நீதிபதி, மனுதாரர் கோரிக்கையை ஆசிரியர் தேர்வு வாரியம் பரிசீலித்து முடிவெடுக்க வேண்டும் என உத்தரவிட்டு வழக்கை முடித்துவைத்தார்.

# பனை மரங்கள் வெட்டப்படுவதைத் தடுக்க கண்காணிப்புக் குழுக்கள்

## தமிழக அரசு உத்தரவு

**சென்னை, செப். 18:** பனை மரங்கள் வெட்டப்படுவதைத் தடுக்க மாவட்ட மற்றும் வட்டார அளவில் கண்காணிப்புக் குழுக்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இதற்கான உத்தரவை வேளாண்மை மற்றும் உழவர் நலத் துறை வெளியிட்டுள்ளது.

இதுகுறித்து துறையின் செயலர் வ.தட்சிணாமூர்த்தி வெளியிட்ட உத்தரவு விவரம்:

பனை மரத்தின் அனைத்துப் பாகங்களும் பயன்தரக் கூடியதாகும். இதன் முக்கியத்துவத்தைக் கருத்தில் கொண்டு, அவை வெட்டப்படாமல் தடுத்து கண்காணிப்பது அவசியம். இதற்கேற்ற வகையில், மாவட்ட மற்றும் வட்டார அளவில் கண்காணிப்புக் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. மாவட்ட அளவிலான குழுவுக்கு ஆட்சியர் தலைவராக இருப்பார். கண்காணிப்புத் தலைவராக வருவாய் கோட்டாட்சியரும், ஒருங்கிணைப்பாளராக மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளரும் இருப்பார்கள். தோட்டக்கலை இணை இயக்குநர், வேளாண் இணை இயக்குநர், கதர் மற்றும் கிராமத் தொழில் வாரியத்தின் மாவட்ட அளவிலான அதிகாரி ஆகியோர் செயல் உறுப்பினராகவும், உறுப்பினர்களாகவும் இருப்பர்.

வட்டார அளவிலான கண்காணிப்புக் குழுவின் தலைவராக தோட்டக்கலை உதவி இயக்குநர் இருப்பார். பனைமரங்கள் கணக்கெடுக்கப்பட்டு அவை பதிவேட்டில் பதிவேற்றம் செய்யப்படும். கண்காணிப்புக் குழுக்கள் மூலமாக விழிப்புணர்வும் ஏற்படுத்தப்படும்.

**வெட்ட அனுமதி:** பனைமரத்தை வெட்டுவதற்கான அனுமதி வழங்க வழிகாட்டு நெறிமுறைகளும் வகுக்கப்பட்டுள்ளன. தவிர்க்க முடியாத சூழ்நிலைகளில் பனைமரம் வெட்ட நேரிட்டால் அதற்கு மாவட்ட அளவிலான குழுவின் அனுமதி அவசியமாகும். மரத்தை வெட்ட வேண்டிய தேவை ஏற்பட்டால் வேளாண் செயலியில் விண்ணப்பிக்க வேண்டும். இதையடுத்து, வட்டார அளவிலான குழுவானது பனை மரத்தை வெட்ட வேண்டியதன் அவசியம் குறித்து ஆராய்ந்து மாவட்ட அளவிலான குழுவுக்கு அறிக்கை அளிக்கும். மாவட்ட அளவிலான குழுவின் கூட்டத்தை குறைந்தபட்சம் 3 மாதங்களுக்கு ஒருமுறையோ அல்லது தேவையின் அடிப்படையிலோ நடத்த வேண்டும்.

பனை மரங்களை வளர்ப்பதை ஊக்குவிக்கும் வகையில், ஒரு மரத்தை வெட்டினால், அதற்கு ஈடாக 10 மரக்கன்றுகளை நட்டு வளர்ப்பதை உறுதி செய்ய வேண்டும். மனுதாரர் பனை மரங்களை உரிய அனுமதி பெற்ற பிறகே வெட்ட வேண்டும். வெட்டப்பட்ட மரத்தின் பாகங்களை ஓரிடத்தில் இருந்து வேறு இடத்துக்கு எடுத்துச் செல்லும்போது, தோட்டக்கலை மற்றும் மலைப் பயிர்கள் துறை மூலம் வழங்கப்பட்ட அனுமதிக் கடிதத்தை காண்பிக்க வேண்டும் என்று அந்த உத்தரவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# தலைமைத் தேர்தல் ஆணையர் மீது ராகுல் குற்றச்சாட்டு

**புது தில்லி, செப். 18:** பாஜகவின் வாக்குத் திருட்டுக்கு தேர்தல் ஆணையம் உடந்தையாக இருப்பதாகக் குற்றஞ்சாட்டி வந்த எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் காந்தி, 'வாக்குத் திருடர்களை தலைமைத் தேர்தல் ஆணையர் ஞானேஷ்குமார் பாதுகாக்கிறார்' என்ற பகிரங்க குற்றச்சாட்டை வியாழக்கிழமை முன்வைத்தார்.



தில்லியில் காங்கிரஸ் தலைமை அலுவலகத்தில் வியாழக்கிழமை நடைபெற்ற பத்திரிகையாளர் சந்திப்பின்போது, கர்நாடக மாநிலத்தில் 2023-இல் நடைபெற்ற சட்டப்பேரவைத் தேர்தலின்போது அலந்த் தொகுதியில் காங்கிரஸ் ஆதரவு வாக்காளர்களை பட்டியலில் இருந்து நீக்கியதைச் சுட்டிக்காட்டி இந்தக் குற்றச்சாட்டை முன்வைத்தார். அவர் மேலும் கூறியதாவது:

கர்நாடக மாநிலத்தில் 2023 தேர்தலின்போது அலந்த் தொகுதியில் காங்கிரஸ் ஆதரவு வாக்காளர்கள் 6,018 பேரை பட்டியலில் இருந்து நீக்க மென்பொருள் ஒன்றைப் பயன்படுத்தி சிலர் முயற்சி செய்தனர். காங்கிரஸ் கட்சிக்கு செல்வாக்கு உள்ள 10 வாக்குச்சாவடிகளைச் சேர்ந்த வாக்காளர்களை அதிக எண்ணிக்கையில் நீக்க முயற்சி நடந்தது.

**கண்டறிந்தது எப்படி?** அலந்த் தொகுதியில், தனது உறவினரின் பெயரை வாக்காளர் பட்டியலில் இருந்து சிலர் நீக்க முயற்சி செய்ததை வாக்குச்சாவடி அளவிலான அதிகாரி ஒருவர் தற்செயலாக கண்டறிந்தபோது இந்த மோசடி தெரியவந்தது.

பட்டியலில் இருந்து பெயரை நீக்கம் செய்வதற்கான விண்ணப்பத்தை மென்பொருளைப் பயன்படுத்தி இணையவழியில் சமர்ப்பித்துள்ளனர். கர்நாடகத்துக்கு வெளியே உள்ள கைப்பேசி எண்கள் இதற்குப் பயன்படுத்தப்பட்டுள்ளன.

இதுகுறித்து விசாரித்துவரும் கர்நாடக மாநில சிஐடி போலீஸார், இந்தப் பெயர் நீக்கத்துக்கான விண்ணப்பங்கள் எங்கிருந்து சமர்ப்பிக்கப்பட்டன என்பதற்கான வலைதள (ஐபி) முகவரி மற்றும் ஒருமுறை கடவுச் சொல் (ஓடிபி) பதிவு விவரங்களைத் தருமாறு தேர்தல் ஆணையத்துக்கு கடந்த 18 மாதங்களில் 18 கடிதங்களை அனுப்பியுள்ளனர். ஆனால், இதுவரை தேர்தல் ஆணையம் அளிக்கவில்லை.

இந்த முறைகேட்டில் ஈடுபட்டவர்கள் யார் என்பது தேர்தல் ஆணையத்துக்குத் தெரியும். வாக்குத் திருடர்களையும், நாட்டின் ஜனநாயகத்தை அழிப்பவர்களையும் தலைமைத் தேர்தல் ஆணையர் ஞானேஷ் குமார் பாதுகாத்து வருகிறார்.

கர்நாடக மாநிலத்தில் வாக்காளர்கள் நீக்கம் தொடர்பாக விசாரணை மேற்கொண்டுவரும் கர்நாடக மாநில சிஐடி போலீஸார் கேட்டுள்ள தகவல்களை தேர்தல் ஆணையம் ஒரு வாரத்துக்குள் கொடுக்க வேண்டும். இல்லையெனில், அரசமைப்பின் கொலைக்கு தேர்தல் ஆணையம் உடந்தையாக இருந்தது உறுதியாகிவிடும்.

வாக்குத் திருட்டு தொடர்பாக ஆதாரங்களை சேகரிப்பதற்கு தேர்தல் ஆணையத்துக்கு உள்ளே இருந்தும் உதவிகள் கிடைத்து வருகின்றன என்றார்.

இந்தமோசடிக்குப்பின்னணியில் யார் உள்ளனர் என்று செய்தியாளர்கள் எழுப்பிய கேள்விக்கு, 'வாக்குத் திருட்டு தொடர்பான 'ஹைட்ரஜன் பாம்' ஆதாரம் வெளியிடப்படும்போது அனைத்தும் தெரியவரும்' என்று ராகுல் பதிலளித்தார்.

## இணையவழியில் வாக்காளரை நீக்க முடியாது: தேர்தல் ஆணையம்

**புது தில்லி, செப். 18:** கர்நாடக மாநிலத்தில் மென்பொருள் மூலம் வாக்காளர்கள் நீக்கம் செய்யப்பட்டது தொடர்பான எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் காந்தியின் குற்றச்சாட்டை மறுத்த இந்திய தேர்தல் ஆணையம், 'இணையவழியில் வாக்காளரை யாரும் நீக்க முடியாது' என்று விளக்கம் அளித்தது.

இதுகுறித்து தேர்தல் ஆணையம் வியாழக்கிழமை வெளியிட்ட செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது: கர்நாடக மாநிலம் அலந்த் தொகுதியில் மென்பொருள் மூலம் வாக்காளர்கள் நீக்கம் செய்யப்பட்டதாக ராகுல் காந்தி முன்வைத்த குற்றச்சாட்டு தவறானது, அடிப்படை ஆதாரமற்றது.

எந்தவொரு நபரும் இணைய வழியில் வாக்காளரை வாக்காளர் பட்டியலில் இருந்து நீக்கம் செய்ய முடியாது. மேலும், சம்பந்தப்பட்ட வாக்காளருக்கு அவரின் கருத்தைத் தெரிவிப்பதற்கான வாய்ப்பு அளிக்கப்படாமல், அவரின் பெயரை வாக்காளர் பட்டியலில் இருந்து நீக்கம் செய்ய முடியாது.

2023-ஆம் ஆண்டு பேரவைத் தேர்தலின்போது அலந்த் தொகுதியில் வாக்காளர் பட்டியலில் இருந்து சில வாக்காளர்களை நீக்கம் செய்வதற்கான முயற்சிகள் நடைபெற்றன. ஆனால், அது வெற்றி பெறவில்லை. இந்த முறைகேடு தொடர்பாக தேர்தல் ஆணைய அதிகாரிகள் தரப்பில் புகார் தெரிவிக்கப்பட்டு காவல் துறையில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டு, விசாரணை நடத்தப்பட்டு வருகிறது என்று தேர்தல் ஆணையம் தெரிவித்தது.

கர்நாடக மாநில தலைமைத் தேர்தல் அதிகாரி வெளியிட்ட செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது: அலந்த் தொகுதியில் வாக்காளர் பட்டியலில் இருந்து பெயர்களை நீக்கம் செய்வதற்காக கடந்த 2022-ஆம் ஆண்டு டிசம்பரில் பல்வேறு கைப்பேசி செயலிகள் மூலமாக 6,018 'படிவம் 7' விண்ணப்பங்கள் சமர்ப்பிக்கப்பட்டன.

இவற்றில், 5,994 விண்ணப்பங்கள் தவறானவை என்று கண்டறியப்பட்டது. முறையாக சமர்ப்பிக்கப்பட்ட 24 விண்ணப்பங்கள் மட்டுமே ஏற்கப்பட்டன என்று தெரிவிக்கப்பட்டது.

**ராகுல் விளக்கம்:** அலந்த் தொகுதி முறைகேடு புகார் தொடர்பாக தேர்தல் ஆணையம் அளித்த விளக்கம் குறித்து தனது எக்ஸ் பக்கத்தில் பதிவிட்ட ராகுல் காந்தி, 'அலந்த் தொகுதியில் வாக்காளர்களை நீக்க முயற்சி நடந்தது தொடர்பாக காங்கிரஸ் சார்பில் போட்டியிட்ட வேட்பாளர் வெளிப்படுத்திய பிறகுதான், அந்த முறைகேடு தொடர்பாக உள்ளூர் தேர்தல் அதிகாரி தரப்பில் போலீஸில் புகார் தெரிவிக்கப்பட்டு முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டது. அந்தத் தொகுதியில் 6,018 வாக்காளர்களை நீக்கும் முயற்சி கண்டறியப்படவில்லை எனில், 2023 தேர்தலில் காங்கிரஸ் வேட்பாளர் தோல்வியைச் சந்தித்திருப்பார்' என்று குறிப்பிட்டார்.

# ஹிண்டன்பர்க் குற்றச்சாட்டு: அதானி மீது தவறு இல்லை

## 'செபி' அறிவிப்பு

**புது தில்லி, செப். 18:** பங்குகளின் விலையை முறைகேடாக உயர்த்தியதாக அதானி குழுமம் மற்றும் அதன் தலைவர் கௌதம் அதானி மீது அமெரிக்காவின் ஹிண்டன்பர்க் நிறுவனம் கூறிய குற்றச்சாட்டு தவறானது என்று இந்திய பங்குச் சந்தை ஒழுங்காற்று வாரியம் (செபி) அறிவித்துள்ளது.

பங்குச் சந்தையில் வீழ்ச்சியின்போது லாபம் ஈட்டும் 'ஷார்ட் செல்லிங்' முறையில் வர்த்தகத்தில் ஈடுபட்டு வந்த ஹிண்டன்பர்க் நிறுவனம் கடந்த 2023-ஆம் ஆண்டு அதானி குழுமம் மீது பல்வேறு குற்றச்சாட்டுகளை முன்வைத்தது. முக்கியமாக வெளிநாடுகளில் போலி நிறுவனங்களைத் தொடங்கி அவற்றின் மூலம் அதானி குழுமம் பங்குகளில் முதலீடு செய்து செயற்கையாக விலை ஏற்றியதாகக் கூறியது. இது அந்த காலகட்டத்தில் பங்குச் சந்தையில் அதானி குழும பங்குகளின் வீழ்ச்சிக்கு வித்திட்டது. இது தொடர்பாக விசாரணைக்கு 'செபி' உத்தரவிட்டது.

இதனிடையே ஹிண்டன்பர்க் நிறுவனமும் மூடப்பட்டது. இந்நிலையில், ஹிண்டன்பர்க் கூறிய குற்றச்சாட்டுகளுக்கு எவ்வித ஆதாரமும் இல்லை என்று 'செபி' அறிவித்துள்ளது.

இது தொடர்பாக கௌதம் அதானி வெளியிட்டுள்ள அறிவிப்பில், 'ஹிண்டன்பர்க் அறிக்கை என்ற பெயரில் மோசடியாக, பொய்யான அறிக்கையை வெளியிட்டு பங்குச் சந்தையில் வேண்டுமென்று வீழ்ச்சியை ஏற்படுத்தினர். இதனால், முதலீட்டாளர்கள்தான் அதிகம் பாதிக்கப்பட்டனர். அது மிகுந்த வேதனையை அளித்தது. எங்கள் நிறுவனம் எப்போதும் நேர்மையாக செயல்பட்டு வருகிறது' என்று கூறியுள்ளார்.

# அனைத்துக் கட்சிகளுக்கும் பொருந்தக்கூடிய வகையில் கூட்டங்களுக்கு விதிமுறைகள்: காவல் துறை பதிலளிக்க உத்தரவு

**சென்னை, செப். 18:** அனைத்துக் கட்சிகளுக்கும் பொருந்தக்கூடிய வகையில் பொதுக்கூட்ட அனுமதிக்கான விதிமுறைகளை வகுக்க வேண்டும் எனவும், இது தொடர்பாக காவல் துறை பதிலளிக்கவும் சென்னை உயர்நீதிமன்றம் உத்தரவிட்டது.

தமிழக வெற்றிக் கழகத்தின் துணைப் பொதுச் செயலர் சி.டி.ஆர்.நிர்மல்குமார் சென்னை உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்த மனுவில், தவெக தலைவர் விஜய் மேற்கொள்ளும் பிரசாரத்துக்கு அனுமதி கோரி அளிக்கப்படும் விண்ணப்பங்களை பாரபட்சமின்றி பரிசீலிக்க காவல் துறைக்கு உத்தரவிட வேண்டும் எனக் கோரியிருந்தார்.

இந்த வழக்கு நீதிபதி என்.சதீஷ்குமார் முன் வியாழக்கிழமை விசாரணைக்கு வந்தது. தவெக தரப்பில் ஆஜரான மூத்த வழக்குரைஞர் வி.ராகவாச்சாரி, தவெக கூட்டத்துக்கு கர்ப்பிணிகள், குழந்தைகள், மாற்றுத்திறனாளிகள், முதியோர் வரக் கூடாது என்பது உள்ளிட்ட நிபந்தனைகளை போலீஸார் விதிக்கின்றனர். கூட்டத்துக்கு அனுமதி கோரி அளிக்கப்படும் விண்ணப்பத்தை கடைசி நேரத்தில் பரிசீலித்து அனுமதி வழங்கப்படுகிறது என்றார்.

அப்போது குறுக்கிட்ட நீதிபதி, பொது மக்கள் இதுபோன்ற கூட்டத்தின்போது ஏற்படும் நெருக்கடியால் பாதிக்கப்படுகின்றனர். சாலைகள் முழுமையாக முடக்கப்படுகின்றன. பொதுச் சொத்துகள் சேதப்படுத்தப்படுகின்றன. இதுபோன்ற சமயங்களில் மக்களின் பாதுகாப்பை உறுதி செய்வது அவசியம் என்றார்.

தொடர்ந்து, தவெக தரப்பில், தவெக தலைவர் நிகழ்ச்சிக்கு பல்வேறு நிபந்தனைகள் விதிக்கப்படுகின்றன. அதேநேரம், கரூரில் புதன்கிழமை நடைபெற்ற 'ரோடு ஷோ'-வின் போது இருபக்கமும் மக்கள் சூழ்ந்திருந்தனர். 200-க்கும் மேற்பட்ட வாகனங்கள் அணிவகுத்துச் சென்றன என வாதிடப்பட்டது.

அப்போது குறுக்கிட்ட அரசு கூடுதல் குற்றவியல் வழக்குரைஞர் ராஜ் திலக், மற்ற கட்சிகளுக்கு விதிக்கப்படும் நிபந்தனைகள்தான் மனுதாரர் கட்சிக்கும் விதிக்கப்பட்டது என்றார்.

அப்போது நீதிபதி, கர்ப்பிணிகள், குழந்தைகள், மாற்றுத்திறனாளிகள் இதுபோன்ற கூட்டங்களுக்கு வருவதைத் தவிர்க்க வேண்டும் என மனுதாரர் கட்சியின் தலைவர் ஏன் கோரிக்கை விடுக்கவில்லை? பிறருக்கு முன்மாதிரியாகத் திகழ்பவர், தன்னைப் பின்பற்றுபவர்களுக்கு ஒழுக்கத்தைச் சொல்லித் தரவேண்டும் என்றார்.

இதையடுத்து, தமிழகத்தில் மற்ற அரசியல் கட்சிகளுக்கு விதிக்கப்படும் நிபந்தனைகளையே தங்களுக்கும் விதிக்க உத்தரவிட வேண்டும் என்று தவெக தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

அப்போது நீதிபதி, இந்தக் கூட்டத்துக்கு அனுமதி அளிப்பதில் காவல் துறைக்கு என்ன சிரமம் உள்ளது என்று கேள்வி எழுப்பினார்.

இதையடுத்து அரசுத் தரப்பில், அரசியல் கட்சிகளின் பொதுக்கூட்டம், ஊர்வலங்களுக்கு அனுமதி வழங்குவது தொடர்பாக அனைத்து மாவட்ட காவல் கண்காணிப்பாளர்களுக்கும் டிஜிபி அறிவுரை வழங்கியுள்ளார். எனவே, அனுமதி கோரும் விண்ணப்பங்களை பரிசீலிக்க காலதாமதம் செய்வதில்லை என்றார்.

மேலும், திருச்சியில் நடைபெற்ற நிகழ்ச்சியின்போது, நிபந்தனைகள் மீறப்பட்டதாகக் கூறி, அதுதொடர்பான புகைப்பட ஆதாரங்களை தாக்கல் செய்தார்.

அதைப் பார்த்த நீதிபதி, இதுபோன்ற நேரங்களில் அசம்பாவிதங்கள் நிகழ வாய்ப்புள்ளது. எனவே, கட்சியினர்தான் கூட்டத்தைக் கட்டுப்படுத்த வேண்டும். சேதப்படுத்தப்பட்ட பொதுச் சொத்துகளுக்கான இழப்பீடு வசூலிக்கப்பட்டதா? இல்லையெனில், இந்த விவகாரத்தில் நீதிமன்றம் தலையிட நேரிடும் என எச்சரிக்கை விடுத்தார்.

மேலும், தவெக தொண்டர்கள் உயரமான இடங்களில் ஆபத்தான சூழலில் நின்றிருந்ததை நானும் பார்த்தேன். எனவே, ஆளும் கட்சி உள்பட அனைத்து அரசியல் கட்சிகள் நடத்தும் மாநாடு, பொதுக்கூட்டம் போன்றவற்றில் கலந்து கொள்பவர்களின் எண்ணிக்கை, பொதுச் சொத்துகளை சேதப்படுத்தக் கூடாது போன்ற வழிகாட்டு நெறிமுறைகளை அரசு உருவாக்க வேண்டும்.

அப்பாவி மக்கள் பாதிக்கப்படுவதையும், பொதுச் சொத்துகளுக்கு சேதம் ஏற்படுவதையும் தடுக்கும் வகையில் பொதுக்கூட்டம் நடத்தும் அரசியல் கட்சிகளிடமிருந்து உத்தரவாதத் தொகையை வசூலிக்க வேண்டும். அரசியல் கட்சிகள் நடத்தும் இதுபோன்ற கூட்டங்களின் போது சேதப்படுத்தப்படும் அப்பாவி பொதுமக்களின் சொத்துகளுக்கு முன்னர் ஆட்சி செய்த கட்சியோ, ஆளும்கட்சியோ நிவாரணம் வழங்கியது உண்டா? என கேள்வி எழுப்பினார்.

பின்னர், அரசியல் கட்சிகளின் கூட்டங்களுக்கு அனுமதி அளிக்கும்போது, அனைத்துக் கட்சிகளுக்கும் பொருந்தக்கூடிய வகையில் விதிமுறைகளை வகுக்க வேண்டும் எனக் கூறி, இதுதொடர்பாக காவல் துறை பதிலளிக்க உத்தரவிட்டு விசாரணையை வரும் செப்.24-ஆம் தேதிக்கு ஒத்திவைத்தார்.

# ஆந்திர மதுபான ஊழல்: தமிழகத்தில் சோதனை

**ஹைதராபாத், செப். 18:** ஆந்திர முன்னாள் முதல்வர் ஜெகன்மோகன் ரெட்டி தொடர்புடைய மதுபான ஊழல் வழக்கில் ஆந்திரம், தெலங்கானா, தமிழகம், கர்நாடகம், தில்லியில் சுமார் 20 இடங்களில் அமலாக்கத் துறையினர் வியாழக்கிழமை சோதனை மேற்கொண்டனர்.

ஆந்திரத்தில் கடந்த 2019 முதல் 2024-ஆம் ஆண்டு வரை முன்னாள் முதல்வர் ஜெகன்மோகன் ரெட்டி தலைமையில் ஒய்எஸ்ஆர் காங்கிரஸ் ஆட்சி நடைபெற்றது. அப்போது, ரூ.3,500 கோடிக்கு மதுபான ஊழல் நடைபெற்றதாகக் குற்றச்சாட்டு எழுந்தது.

ஜெகன் ஆட்சியில் கொண்டுவரப்பட்ட புதிய மதுபானக் கொள்கையின்கீழ் அனைத்து மதுபானக் கடைஉளும் அரசு நிறுவனமான ஆந்திர மாநில மதுபானக் கழகத்தின் கட்டுப்பாட்டில் வந்தன. இதில் பல்வேறு முறைகேடுகள் நடைபெற்றதாகக் கூறப்படுகிறது.

'ஆந்திர மாநில மதுபானக் கழகத்திடம் 111 மது ஆலைகள் பதிவு செய்திருந்த நிலையில், 2019 முதல் 2024 வரை வெறும் 16 மது ஆலைகளிடம் இருந்து ரூ.10,850 கோடிக்கும், 40 ஆலைகளிடம் இருந்து ரூ.23,000 கோடிக்கும் மதுபானம் கொள்முதல் செய்யப்பட்டது; இது, கிட்டத்தட்ட 90 சதவீத கொள்முதலாகும். இதற்கு பிரதிபலனாக, ஆலைகள் தரப்பில் பெருந்தொகை லஞ்சமாக வழங்கப்பட்டுள்ளது. பினாமி-போலி நிறுவனங்கள், ஹவாலா பரிவர்த்தனை எனப் பல்வேறு வழிகளில் லஞ்சப் பணம் கைமாறியுள்ளது.

இளநிலைப் பணியாளர்களின் ஊதியம் என்ற பெயரிலும் பணப் பரிமாற்றம் செய்யப்பட்டுள்ளது. இதன்மூலம் ஜெகன்மோகன் ரெட்டி உள்ளிட்டோர் மாதத்துக்கு ரூ.60 கோடி வரை பலனடைந்துள்ளனர்' என்பது காவல் துறையின் குற்றச்சாட்டாகும்.

இவ்வழக்கில் காவல் துறை சிறப்பு புலனாய்வுக் குழு தரப்பில் இதுவரை மூன்று குற்றப்பத்திரிகைகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன. ஒய்எஸ்ஆர் காங்கிரஸ் எம்.பி. மிதுன் ரெட்டி உள்ளிட்டோர் கைதாகியுள்ளனர். மற்றொருபுறம், பண முறைகேடு தடுப்புச் சட்டத்தின்கீழ் அமலாக்கத் துறையும் தீவிர விசாரணையில் ஈடுபட்டுள்ளது.

இந்நிலையில், ஆந்திரம், தெலங்கானா, தமிழகம், கர்நாடகம் மற்றும் தில்லி-தேசிய தலைநகர் வலயப் பகுதியில் (என்சிஆர்) சுமார் 20 இடங்களில் அமலாக்கத் துறையினர் வியாழக்கிழமை சோதனையில் ஈடுபட்டனர். இதில், சென்னையைச் சேர்ந்த தனியார் நிறுவனங்களுக்கு சொந்தமான இடங்களும் அடங்கும்.

மதுபான ஊழல் குற்றச்சாட்டுகள் அனைத்தும் அடிப்படையற்றவை என்று ஒய்எஸ்ஆர் காங்கிரஸ் திட்டவட்டமாக மறுத்துள்ளது குறிப்பிடத்தக்கது.

# வேலையில்லா பட்டதாரிகளுக்கு மாதம் ரூ.1,000

## பிகார் முதல்வர் நிதீஷ் குமார் அறிவிப்பு

**பாட்னா, செப். 18:** பிகாரில் வேலையில்லாப் பட்டதாரிகளுக்கு மாதம் ரூ.1,000 உதவித்தொகை வழங்கப்படும் என்று அந்த மாநில முதல்வர் நிதீஷ் குமார் வியாழக்கிழமை அறிவித்தார்.

பிகாரில் இந்த ஆண்டு இறுதியில் சட்டப்பேரவைத் தேர்தல் நடைபெறவுள்ளது.

இதில் முதல்வர் நிதீஷ் குமார் தலைமையிலான ஐக்கிய ஜனதா தளம், பாஜக உள்ளிட்ட கட்சிகள் அடங்கிய ஆளும் கூட்டணிக்கும், தேஜஸ்வி யாதவ் தலைமையிலான ராஷ்ட்ரீய ஜனதா தளம், காங்கிரஸ், இடதுசாரி கட்சிகள் அடங்கிய எதிர்க்கட்சிகள் கூட்டணிக்கும் இடையே போட்டி நிலவுகிறது.

முதல்வர் நிதீஷ் குமார் தலைமையில் தேர்தலைச் சந்திப்போம் என பாஜக ஏற்கெனவே அறிவித்துள்ளது.

இரு கூட்டணிகளுமே பல்வேறு தேர்தல் வாக்குறுதிகளை அறிவித்து வருகின்றன. பிகாரில் வேலைவாய்ப்பில் பெண்களுக்கான 35 சதவீத இடஒதுக்கீடு வழங்கப்படும் என்று முதல்வர் நிதீஷ் குமார் ஏற்கெனவே அறிவித்துள்ளார்.

பெண்களுக்கு மாதம் ரூ.2,500 நிதியுதவி, வீடுகளுக்கு 200 யூனிட் இலவச மின்சாரம், ரூ.500 சமையல் எரிவாயு சிலிண்டர் மானியம் உள்ளிட்ட அறிவிப்புகளை தேஜஸ்வி யாதவ் ஏற்கெனவே வெளியிட்டுள்ளார்.

இந்நிலையில், வேலையில்லாப் பட்டதாரி இளைஞர்களுக்கு இரண்டு ஆண்டுகளுக்கு மாதம் ரூ.1,000 உதவித்தொகை வழங்கப்படும் என்று முதல்வர் நிதீஷ் குமார் அறிவித்துள்ளார்.

இது தவிர பள்ளி இறுதி வகுப்பில் தேர்ச்சி பெற்று வேலையில்லாமல் உள்ள 20 முதல் 25 வயதுக் குட்பட்ட அனைவரும் இந்தத் திட்டத்தில் இணையலாம் என்று கூறப்பட்டுள்ளது.

## அமித் ஷாவுடன் சந்திப்பு



பிகார் மாநிலம் பாட்னாவுக்கு வியாழக்கிழமை பயணம் மேற்கொண்ட மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷாவை சந்தித்த முதல்வர் நிதீஷ் குமார்.

பாட்னா வந்துள்ள உள்துறை அமைச்சர் அமித் ஷாவை அவர் தங்கியிருந்த ஹோட்டலுக்குச் சென்று முதல்வர் நிதீஷ் குமார் சந்தித்தார்.

முன்னதாக, கடந்த வாரம் பாஜக தேசியத் தலைவர் ஜெ.பி. நட்டா பிகார் வந்தபோது அவரைச் சந்திக்க நிதீஷ் குமார் மறுத்துவிட்டார்.

ஆனால், இப்போது அமித் ஷாவை அவரை நேரில் சென்று சந்தித்திருப்பது முக்கியத்துவம் பெற்றுள்ளது.

# 'அனைத்து மதங்களையும் மதிக்கிறேன்': உச்சநீதிமன்றத் தலைமை நீதிபதி

## ஹிந்து கடவுளை அவமதித்த குற்றச்சாட்டில் விளக்கம்

**புது தில்லி, செப். 18:** அனைத்து மதங்களையும் மதிக்கிறேன் என உச்சநீதிமன்றத் தலைமை நீதிபதி பி.ஆர்.கவாய் வியாழக்கிழமை தெரிவித்தார்.

கோயிலில் கடவுள் விஷ்ணுவின் சிலையை மீண்டும் நிறுவுவது தொடர்பான வழக்கில் ஹிந்து மத உணர்வுகளை பி.ஆர்.கவாய் புண்படுத்தியதாக குற்றஞ்சாட்டி அவருக்கு எதிராக சமூக வலைதளங்களில் பலரும் கண்டனத்தைப் பதிவு செய்த நிலையில் இதுதொடர்பாக அவர் வியாழக்கிழமை விளக்கமளித்தார்.

மத்திய பிரதேசத்தில் உள்ள உலகப் பாரம்பரிய சின்னங்களில் ஒன்றான கஜுராஹோ கோயில் வளாகத்தில் அமைந்துள்ள ஜவாரி கோயிலில் கடவுள் விஷ்ணுவின் சிலையை மறுகட்டமைப்பு செய்து 7 அடி உயரச் சிலையாக நிறுவ வேண்டும் என உச்சநீதிமன்றத்தில் ராகேஷ் தலால் என்பவர் மனு தாக்கல் செய்தார்.

இந்த மனுவை தலைமை நீதிபதி பி.ஆர்.கவாய் மற்றும் நீதிபதி கே.வினோத் சந்திரன் ஆகியோர் அடங்கிய அமர்வு கடந்த மே 16-ஆம் தேதி தள்ளுபடி செய்தது.

அப்போது பேசிய பி.ஆர். கவாய், 'இது முழுக்க முழுக்க விளம்பர நோக்கத்துடன் தாக்கல் செய்யப்பட்ட மனுவாகும்.

இந்த விவகாரத்துக்கு உங்களது கடவுளிடமே பதில் கோருங்கள். கடவுள் விஷ்ணுவின் தீவிர பக்தர் என்று கூறும் நீங்கள், அவரை வழிபட்டு தியானம் செய்யுங்கள்.

இந்த இடைப்பட்ட காலத்தில் சைவ வழிபாட்டில் உங்களுக்கு ஆட்சேபம் இல்லையென்றால் கஜுராஹோவில் உள்ள பெரிய சிவலிங்கத்தை வழிபடுங்கள்' எனத் தெரிவித்ததாக கூறப்படுகிறது.

இந்தத் தகவல் சமூக வலைதளங்களில் வேகமாகப் பரவிய நிலையில், அவருக்கு பலரும் கண்டனம் தெரிவித்து வந்தனர்.

**விஎச்பி கண்டனம்:** இந்நிலையில், விஸ்வ ஹிந்து பரிஷத் (விஎச்பி) அமைப்பின் தேசியத் தலைவர் ஆலோக் குமார் கூறியதாவது:

பி.ஆர்.கவாயின் கருத்துகள் ஹிந்து மதத்தைப் புண்படுத்தியதாக உணர்கிறோம். இது போன்ற கருத்துகளைத் தவிர்த்திருக்கலாம். நீதிமன்றங்களை நீதிக் கோயில்களாக கருதி பொதுமக்கள் முழு நம்பிக்கை வைத்துள்ளனர்.

மனுதாரர்கள், வழக்குரைஞர்கள், நீதிபதிகள் எனஅனைவருக்கும் அந்த நம்பிக்கையை மேலும் வலுப்படுத்தும் பொறுப்பு உள்ளது என்றார்.

**பி.ஆர்.கவாய் விளக்கம்:** தன் மீதான விமர்சனங்களுக்கு வியாழக்கிழமை பதிலளித்த பி.ஆர். கவாய், 'வழக்கு விசாரணை ஒன்றின்போது நான் கூறிய கருத்துகள் சமூக வலைதளங்களில் திரித்து பரப்பப்படுவதாக தெரிந்து கொண்டேன். அனைத்து மதங்களையும் எப்போதும் மதிக்கிறேன்' என்றார்.

இதைத் தொடர்ந்து, பி.ஆர். கவாய்க்கு ஆதரவு தெரிவித்த சொலிசிட்டர் ஜெனரல் துஷார் மேத்தா, 'உச்சநீதிமன்றத் தலைமை நீதிபதி பி.ஆர்.கவாயை 10 ஆண்டுகளுக்கும் மேலாக அறிவேன். அவர் அனைத்து மதங்களையும் மதித்து நடப்பவர். அவரது கருத்துகள் சமூக வலைதளங்களில் தவறாகப் பரப்பப்பட்டுள்ளது' என்றார்.

அந்த வழக்கு விசாரணையில் இடம்பெற்ற நீதிபதி வினோத் கே.சந்திரன் கூறுகையில், 'தற்காலத்தில் சமூக வலைதளங்கள் சமூக விரோத வலைதளங்களாக மாறி வருகின்றன' என்றார்.

சம்பந்தப்பட்ட வழக்கு விசாரணையில் மனுதாரர் சார்பில் ஆஜரான மூத்த வழக்குரைஞர் சஞ்சய் கௌல், 'சமூக வலைதளங்களில் பகிரப்படுவது போன்ற தவறான கருத்துகளை பி.ஆர்.கவாய் ஒருபோதும் தெரிவிக்கவில்லை' எனத் தெரிவித்தார்.

HDB ஃபைனான்சியல் சர்வீசஸ் லிட்.
பதிவு அலுவலகம்: ராதிகா, 2ஆவது தளம், லா கார்டன் சாலை, நவ்ரங்புரா, அகமதாபாத், குஜராத் - 380009.
மண்டல அலுவலகம்: தரைத்தளம், ஜெனித் ஹவுஸ், கேஷவ்ராவ் கத்யே மார்க், ரேஸ் கோர்ஸ் எதிரில், மகாலஷ்மி, மும்பை-34. தொ.பே.: 022-39586300.
கிளை அலுவலகம்: அலுவலகம்:- பழைய எண் 64, புதிய எண் 84, MNO வளாகம், 1ஆவது தளம், HDB டவர்ஸ், கிரீம்ஸ் சாலை, ஆயிரம் விளக்கு, சென்னை- 600006 -தமிழ்நாடு.

இணைப்பு IV (சுவாதீன அறிவிப்பு) பார்க்க விதி 8(1)

கீழே கையொப்பமிட்டுள்ளவர் M/s. HDB ஃபைனான்சியல் சர்வீசஸ் லிட்.-இன் அதிகாரப்பூர்வ அலுவலர் எனும் முறையில் கடனீட்டுச் சொத்துக்களை ரொக்கமாக்குதல் மற்றும் சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கச் சட்டம் 2002-இன்படி பிரிவு 13(12)-இன் கீழும் அதனுடன் கடனீட்டுச் சொத்து (அமலாக்கம்) விதிகள் 2002, விதிகள் 3, 8 & 9-இன் கீழுள்ள உரிமைகளைப் பயன்படுத்தியும் 30.06.2025 நாளிட்ட கோரிக்கை அறிவிப்பினைக் கடன் கணக்கு எண் - 44816189 -இன் கீழ் அழைக்கப்படும் விண்ணப்பதாரர் / கூட்டு விண்ணப்பதாரர்கள் / ஜாமீன்தாரர்: 1. D கமலக்கண்ணன், எண்: 18/1, புதியது 30, காமராஜ் தெரு, புதூர், அம்பத்தூர், சென்னை-600053, தமிழ்நாடு மற்றும் இன்னொரு முகவரி: எண் 18/1, புதியது 30, காமராஜ் தெரு, புதூர், அம்பத்தூர், சென்னை-600053, 2. K. ஹரிணி, எண் 18/1, புதியது 30, காமராஜ் தெரு, புதூர், அம்பத்தூர், சென்னை -600053, தமிழ்நாடு அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள திருப்பித் தரப்பட வேண்டிய தொகை: 28.06.2025 நாள்படி ரூ.5,044,812.47/- (ரூபாய் ஐம்பது இலட்சத்து நாற்பத்து நான்காயிரத்து எண்ணூற்று பன்னிரண்டு மற்றும் பைசா நாற்பத்தேழு மட்டும்) இத்தொகையை அவ்வறிவிப்பு கிடைத்த நாளிலிருந்து 60 நாட்களுக்குள் திருப்பித் தரப்பட வேண்டும். விண்ணப்பதாரர் / கூட்டு விண்ணப்பதாரர்கள் / ஜாமீன்தாரர் அத்தொகையைத் திருப்பிச் செலுத்தத் தவறியபடியால் இதன் மூலம் விண்ணப்பதாரருக்கும் / கூட்டு விண்ணப்பதாரர்களுக்கும் / ஜாமீன்தாரருக்கும் பொது மக்களுக்கும் தெரிவிப்பது யாதெனில், கீழே கையொப்பமிட்டுள்ளவர் மேற்கூறிய சட்டத்தின் பிரிவு 13(4) மற்றும் அதனுடன் விதிகள் 3, 8 & 9 ஆகியவற்றின்படி பின்வரும் சொத்தினை 17.09.2025 அன்று சுவாதீனம் எடுத்துக் கொண்டுள்ளார்.

எனவே விண்ணப்பதாரருக்கு / கூட்டு விண்ணப்பதாரர்களுக்கு / ஜாமீன்தாரருக்குக் குறிப்பாகவும் பொதுமக்களுக்குப் பரவலாகவும் இதன் மூலம் எச்சரிக்கையிடுவது யாதெனில் அச்சொத்தின் மீது எந்த ஒரு பேரமோ ஒப்பந்தமோ வைத்துக் கொள்ள வேண்டாம். மீறினால் அது M/s. HDB ஃபைனான்சியல் லிட். நிறுவனத்துக்கு 28.06.2025 நாள்படி ரூ.5,044,812.47/- (ரூபாய் ஐம்பது இலட்சத்து நாற்பத்து நான்காயிரத்து எண்ணூற்று பன்னிரண்டு மற்றும் பைசா நாற்பத்தேழு மட்டும்) தொகையை அதன் வட்டி மற்றும் கட்டணங்களுடன் சேர்த்துச் செலுத்துவதற்குக் கட்டுப்பட்டதாகும்.

கடனீட்டுச் சொத்துக்களின் அட்டவணை I: இன்றியமையாப் பகுதிகள் அனைத்துடனும் கூடிய கிரவுண்டு மற்றும் அனைத்து வசதிகளுடன் கூடிய வீடு. அமைவிடம் - எண் 21, ஒரகடம் கிராமம், அம்பத்தூர் தாலுகா, சென்னை மாவட்டம். கிராம நத்தம் சர்வே எண் 161/3, நகர சர்வே நில பதிவு விரிவின்படி, வார்டு - A, பிளாக் எண் 48, நகர சர்வே எண் 103, 99, பிளாட் எண் A, கதவு எண் 18/1, பரப்பளவு 1322 சதுர அடி, 4077-1/2 சதுர அடியில் அடங்கியது. இத்துடன் கட்டப்பட்டுள்ள ஒரு வீடு மற்றும் மின்சார இணைப்பு முதலானவை உட்பட. காமராஜர் தெரு, புதூர், ஒரகடம், அம்பத்தூர், சென்னை – 600 053. எல்லைகள் பின்வருமாறு: வடக்கு: திரு. D. சுரேஷ் அவர்களின் சொத்து, தெற்கு: TS எண் 103-இல் உள்ள சொத்து, கிழக்கு: திரு. ரவி அவர்களின் சொத்து மற்றும் திரு. D. சுரேஷ் சொத்துக்கான 6 அடி வழி மற்றும் 8 அடி பொது வழி, மேற்கு: திரு. தனசேகரன் மற்றும் திரு. பலராமன் ஆகியோரின் சொத்து. அளவு: கிழக்கு மேற்காக வடக்குப் பக்கம் - 39 அடி 6 அங்குலம், கிழக்கு மேற்காகத் தெற்குப் பக்கம் - 40 அடி 0 அங்குலம், வடக்குத் தெற்காகக் கிழக்குப் பக்கம் - 32 அடி 0 அங்குலம், வடக்குத் தெற்காக மேற்குப் பக்கம் - 34 அடி 6 அங்குலம். அனைத்தும் சேர்த்து பரப்பளவு 1322 சதுர அடிக் கொண்ட நிலம் மற்றும் கட்டப்பட்டுள்ள ஒரு வீடு மற்றும் மின்சார இணைப்பு முதலானை உட்பட. பொது வழியின் பரப்பளவு 320 சதுர அடி (8 அடி அகலம் 40 அடி நீளம்), 1/3ஆவது பிரிபடாப்பங்கு சேர்த்து. இது அம்பத்தூர் சார்பதிவு மாவட்டத்துக்கும் வட சென்னை பதிவு மாவட்டத்துக்கும் உட்பட்டது.

மேற்கூறிய சட்டத்தின் உட்பிரிவு 8-இன்படி கடனீட்டுச் சொத்துக்களை மீட்க விண்ணப்பதாரருக்கு / கூட்டு விண்ணப்பதாரர்களுக்கு / ஜாமீன்தாரருக்கு இதன் மூலம் அழைப்பு விடுக்கப்படுகிறது.

நாள்: 19.09.2025 HDB ஃபைனான்சியல் சர்வீசஸ் லிட். சார்பில்
இடம்: சென்னை அதிகாரப்பூர்வ அலுவலர்

CUB TRUST AND EXCELLENCE SINCE 1904
சிட்டி யூனியன் வங்கி லிமிடெட்
கடன் வசூல் மற்றும் நிர்வாகத் துறை
நிர்வாக அலுவலகம்: எண்.24-B, காந்தி நகர், கும்பகோணம் - 612001. மின்னஞ்சல்: crmd@cityunionbank.in,
போன்: 0435-2432322, ஃபேக்ஸ்: 0435-2431746

[illegible]

1. திருமதி.N. பரீதா (மேலும் லேட் A. நாசர் அவர்களின் சட்டப்படியான வாரிசு), க/பெ. லேட் A. நாசர், எண்.44, ப்ளாக் எண்.82C, EWS கோர் யூனிட், சடயன்குப்பம், மணலி புதிய டவுன், சென்னை - 600103.

[illegible]

இடம்: கும்பகோணம், தேதி: 19.09.2025 அதிகாரப்பூர்வ அதிகாரி

பதிவு அலுவலகம்: எண்.149, T.S.R. (பெரிய) தெரு, கும்பகோணம், தஞ்சாவூர் மாவட்டம், தமிழ்நாடு - 612001, CIN: L65110TN1904PLC001287,
போன்: 0435 - 2402322, ஃபேக்ஸ்: 0435 - 2431746, இணையதளம்: www.cityunionbank.com

# உ.பி.யில் ஓநாய் தாக்கி இரு சிறுமிகள் உயிரிழப்பு

**பஹ்ராய்ச், செப். 18:** உத்தர பிரதேசத்தில் கடந்த 20 தினங்களில் ஓநாய்கள் தாக்கியதில் இரு சிறுமிகள் உயிரிழந்தனர்; 9 பேர் காயமடைந்தனர்.

உத்தர பிரதேசத்தின் பஹ்ராய்ச் மாவட்டம், கைசர்கஞ்ச் மற்றும் மாசி வட்டங்களில் உள்ள பத்துக்கும் மேற்பட்ட கிராமங்களில் அண்மைக்காலமாக ஓநாய்களின் தாக்குதல் அதிகரித்துள்ளது. இங்குள்ள ஒரு கிராமத்தில் கடந்த 9ஆம் தேதி, ஜோதி என்ற 4 வயது சிறுமியை ஓநாய் தாக்கி இழுத்துச் சென்றது. அச்சிறுமி அடுத்த நாள் இறந்து கிடந்தார். அதேபோன்று கடந்த 11ஆம் தேதி, சந்தியா என்ற மூன்று மாத பெண் குழந்தையை தாயின் மடியில் இருந்து ஓநாய் இழுத்துச் சென்றது. பின்னர் படுகாயம் அடைந்த நிலையில் அக்குழந்தையின் உடல் கண்டெடுக்கப்பட்டது.

ஓநாய்களின் தாக்குதல் அதிகரித்துள்ளதால் மேற்கண்ட கிராமங்களைச் சேர்ந்த பொதுமக்கள் அச்சமடைந்துள்ளனர். கடந்த 20 தினங்களில் ஓநாய்கள் நடத்திய தாக்குதலில் 9 பேர் காயமடைந்துள்ளனர். இதையடுத்து ஓநாய்களைக் கண்டறிந்து பிடிப்பதற்காக காவல் துறையினர், வனத்துறையினர் உள்பட 100-க்கும் மேற்பட்ட ஊழியர்களை மாவட்ட நிர்வாகம் பணியில் ஈடுபடுத்தியுள்ளது.

இது தொடர்பாக தேவிபடான் வட்டார வனக் காவலர் சிம்ரன் கூறுகையில் 'கிராமவாசிகள் மீது தாக்குதல் நடத்தும் ஓநாய்களைப் பிடிப்பதற்கு கட்டுப்பாட்டு அறை அமைக்கப்பட்டுள்ளது. இதற்காக பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ள குழுக்கள் ட்ரோன்கள், இரவுநேர கேமராக்கள் ஆகியவற்றைப் பயன்படுத்தி ஓநாய்களைத் தேடும் பணியில் ஈடுபட்டுள்ளனர்' என்றார்.

இதனிடையே, ஓநாய் தாக்குதல் நடைபெற்ற கிராமங்களைச் சேர்ந்த மக்கள் கைகளில் தடிகளுடன் ரோந்து சுற்றி வருகின்றனர். ட்ரோன்கள் மூலம் இரு ஓநாய்களின் நடமாட்டத்தை வனத்துறையினர் கண்டறிந்துள்ளனர். எனினும் இதுவரை எந்த ஓநாயும் பிடிபடவில்லை.

உத்தர பிரதேச மாநிலத்தின் இதே பகுதியில் கடந்த ஆண்டு ஓநாய்கள் நடத்திய தாக்குதலில் 9 பேர் கொல்லப்பட்டனர்; 20-க்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர். இப்பகுதியை விலங்குகளால் பாதிப்பு ஏற்படும் மண்டலமாக உ.பி. அரசு அறிவித்துள்ளது.

# சட்டவிரோத வங்கதேச குடியேறிகளின் வாக்குகளைக் காப்பதே ராகுலின் நோக்கம்

## அமைச்சர் அமித் ஷா

**பாட்னா, செப். 18:** சட்டவிரோதமாக இந்தியாவுக்குள் குடியேறிய வங்கதேசத்தவரின் வாக்குகளைக் காப்பதே ராகுல் காந்தி உள்ளிட்ட எதிர்க்கட்சியினரின் நோக்கம் என்று மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா தெரிவித்தார்.

243 தொகுதிகளைக் கொண்ட பிகாரில் இந்த ஆண்டு இறுதியில் சட்டப்பேரவைத் தேர்தல் நடைபெறவுள்ளது. இந்நிலையில் அந்த மாநிலத்துக்குச் சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள அமித் ஷா, பாஜக நிர்வாகிகள், தொண்டர்களைச் சந்தித்தார். அப்போது அவர் பேசியதாவது:

பிகார் பேரவைத் தேர்தலில் நமது வெற்றி மிகப் பிரம்மாண்டமானதாக இருக்க வேண்டும். கடந்த மாதம் வாக்குரிமை என்ற பெயரில் நடத்தப்பட்ட (ராகுலின்) பிரசாரத்தின் நோக்கம் என்ன தெரியுமா? அது சட்டவிரோதமாக ஊடுருவிய வங்கதேசத்தவரின் வாக்குரிமையைப் பாதுகாப்பதற்காகவே நடத்தப்பட்டது.

அண்டை நாடுகளில் இருந்து அத்துமீறி நமது நாட்டுக்குள் ஊடுருவியவர்களுக்கு வாக்குரிமை அளிக்க வேண்டுமா? அரசு நமது குடிமக்களுக்காக அமல்படுத்தும் நலத்திட்டங்களால் ஊடுருவல்காரர்களும் பயனடையலாமா? இந்திய குடிமக்களுக்கான உரிமைகளை எப்படி வெளிநாட்டவருக்கு அளிக்க முடியும்?

ஆனால், ராகுல் மற்றும் அவருடன் கைகோத்துள்ளவர்களுக்கு இந்த ஊடுருவல்காரர்களின் வாக்குகள் தேவை. அவர்கள்தான் முக்கிய வாக்கு வங்கிகள். எனவேதான் அவர்களைக் காப்பாற்றுவதற்கு துடிக்கிறார்கள். இந்த உண்மையை நீங்கள் மாநிலம் முழுவதும் மக்களிடம் எடுத்துச் செல்ல வேண்டும். இப்படிப்பட்ட நபர்கள் ஆட்சிக்கு வந்தால் பிகார் முழுவதும் ஊடுருவல்காரர்கள் குடியேறிவிடுவார்கள். இந்த மண்ணின் சொந்த மக்கள் உரிமைகளைப் படிப்படியாக இழக்க நேரிடும்.

வாக்குத் திருட்டு என்ற பெயரில் ராகுல் பொய்யான குற்றச்சாட்டுகளை சுமத்தி வருகிறார். முன்பு இதர பிற்படுத்தப்பட்டோர், தாழ்த்தப்பட்டோர், பழங்குடியினர் இடஒதுக்கீட்டை பாஜக பறிக்க முடிவு செய்துள்ளது என்று தவறான பிரசாரத்தை மேற்கொண்டார்கள். அது பலிக்கவில்லை என்பதால் இப்போது வாக்குத்திருட்டு என்ற மோசடி பிரசாரத்தை காங்கிரஸ் கட்சியினர் முன்னெடுத்துள்ளனர் என்றார்.

# தேர்வர்கள் கருத்துப் பதிவிடும் வசதி: எஸ்எஸ்சி அறிமுகம்

**புது தில்லி, செப். 18:** மத்திய அரசுப் பணி தேர்வுகளை எழுதும் தேர்வர்கள் தேர்வு தொடர்பான தங்களின் கருத்துகளைப் பதிவிடுவதற்கான வசதியை தனது வலைதளத்தில் மத்திய அரசுப் பணி தேர்வு ஆணையம் (எஸ்எஸ்சி) அறிமுகம் செய்துள்ளது.

மத்திய அரசுத்துறைகளில் அதிகாரி பணியிடங்கள் அல்லாத பிற அலுவலர் பணியிடங்களுக்கு போட்டித் தேர்வுகளை நடத்திவரும் எஸ்எஸ்சி, தேர்வை நியாயமான முறையிலும், வெளிப்படைத்தன்மையுடனும் நடத்த பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. அதன் ஒரு பகுதியாக, தேர்வர்கள் நேரடியாக கருத்து தெரிவிக்கும் நடைமுறையை அறிமுகம் செய்துள்ளது.

இதுகுறித்து எஸ்எஸ்சி வியாழக்கிழமை வெளியிட்ட அறிவிப்பில் கூறியிருப்பதாவது: எஸ்எஸ்சி சார்பில் தற்போது ஒருங்கிணைந்த பட்டதாரி அளவிலான தேர்வு கடந்த செப்டம்பர் 12-ஆம் தேதி தொடங்கி நடத்தப்பட்டு வருகிறது.

வரும் 26-ஆம் தேதி வரை இத்தேர்வு நடைபெற உள்ளது. ஒருசில மையங்களில் ஏற்பட்ட தொழில்நுட்பக் கோளாறுகள் தவிர, நாடு முழுவதும் இத் தேர்வு எந்தவித பிரச்னையும் இன்றி நடைபெற்று வருகிறது. 129 நகரங்களில் அமைந்துள்ள 227 மையங்களில் தினமும் 3 பிரிவுகளாக நடத்தப்படும் இத் தேர்வில் 28 லட்சத்துக்கும் அதிகமான தேர்வர்கள் பங்கேற்கின்றனர். இதுவரை, 5,26,194 பேர் எந்தவித சிக்கலும் இன்றி தேர்வை வெற்றிகரமாக எழுதி முடித்துள்ளனர்.

இந்தத் தேர்வு நடைமுறைகளை மேலும் மேம்படுத்தும் வகையில், தேர்வர்கள் கருத்துகளைப் பதிவிடுவதற்கான வசதி எஸ்எஸ்சி வலைதளத்தில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

இந்த நடைமுறை மூலம், தேர்வர்கள் நேரடியாக தங்களின் குறைகள் மற்றும் கருத்துகளைத் தேர்வு ஆணையத்துக்குத் தெரியப்படுத்தலாம். அந்தக் குறைகளை நிவர்த்தி செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்று தெரிவிக்கப்பட்டது.

# அமெரிக்க வரி விவகாரம்: 8 முதல் 10 வாரங்களில் தீர்வு

## தலைமைப் பொருளாதார ஆலோசகர்

**கொல்கத்தா, செப்.18:** அமெரிக்க வரி விவகாரத்துக்கு 8 முதல் 10 வாரங்களில் தீர்வு எட்டப்பட வாய்ப்புள்ளதாக தலைமைப் பொருளாதார ஆலோசகர் வி.அனந்த நாகேஸ்வரன் வியாழக்கிழமை தெரிவித்தார்.

இந்திய பொருள்கள் மீது அமெரிக்க அதிபர் டிரம்ப் விதித்த 50 சதவீத வரி கடந்த மாதம் 27-ஆம் தேதி அமலான நிலையில், இருதரப்பு உறவில் விரிசல் ஏற்பட்டது.

இதனால் இருதரப்பு வர்த்தக ஒப்பந்தத்தை இறுதி செய்வது தொடர்பாக 6-ஆவது சுற்றுப் பேச்சுவார்த்தை நடத்த இந்தியாவுக்கு ஆக.25 முதல் 29 வரை அமெரிக்க வர்த்தகக் குழு மேற்கொள்ளவிருந்த பயணம் ரத்தானது.

இந்நிலையில், கடந்த வாரம் இந்தியாவுடனான உறவு சிறப்பானது எனவும், விரைவில் இந்தியாவுடன் வர்த்தகப் பேச்சுவார்த்தை நடைபெறும் எனவும் டிரம்ப் கூறினார். டிரம்ப்பின் இந்தக் கருத்தை பிரதமர் நரேந்திர மோடி வரவேற்றார்.

இதன் தொடர்ச்சியாக தெற்கு மற்றும் மத்திய ஆசியாவுக்கான அமெரிக்க வர்த்தக துணைப் பிரதிநிதி பிரெண்டன் லின்ச் தலைமையிலான குழு கடந்த திங்கள்கிழமை இந்தியாவுக்கு வந்தது. அந்தக் குழுவுடன் மத்திய வர்த்தகத் துறை அமைச்சகத்தின் சிறப்புச் செயலர் ராஜேஷ் அகர்வால் தலைமையிலான குழு செவ்வாய்க்கிழமை பேச்சுவார்த்தை நடத்தியது.



வி.அனந்த நாகேஸ்வரன்

இதுகுறித்து கொல்கத்தாவில் பாரத வர்த்தக கூட்டமைப்பு சார்பில் நடத்தப்பட்ட கலந்துரையாடல் நிகழ்ச்சியில் அனந்த நாகேஸ்வரன் பேசியதாவது: அமெரிக்க வரி விதிப்பு பிரச்னைக்குத் தீர்வு காண இருநாட்டு அரசுகளும் பேச்சுவார்த்தை நடத்தி வருகின்றன. இந்த விவகாரத்தில் அடுத்த 8 முதல் 10 வாரங்களில் தீர்வு எட்டப்பட வாய்ப்பிருப்பதாக கருதுகிறேன்.

ஒருவேளை இந்திய பொருள்கள் மீதான அமெரிக்க வரி தொடர்ந்தால் அந்நாட்டுக்கான ஏற்றுமதியும் குறையும்.

கரோனா பெருந்தொற்றுக்குப் பிறகு இந்திய மொத்த உள்நாட்டு உற்பத்தி (ஜிடிபி) வேகமாக வளர்ச்சியடைந்து வருகிறது. கீழ் நடுத்தர வருமான நாடான இந்தியாவில் நிகழ் நிதியாண்டின் ஏப்ரல்-ஜூன் காலாண்டில் உண்மையான ஜிடிபி 7.8 சதவீதம் வளர்ச்சியடைந்துள்ளது.

அடுத்தஇரண்டாண்டுகளுக்குஉற்பத்தி, சேவைகள் மற்றும் வேளாண்மைத் துறை நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு பெரிதும் பங்களிக்கவுள்ளன. ஜிடிபியில் கடன் விகிதம் சீரான நிலையில் உள்ளது. அண்மையில் மேற்கொள்ளப்பட்ட ஜிஎஸ்டி சீர்திருத்தங்களால் மக்களின் நுகர்வு அதிகரிக்கவுள்ளது.

**ரூபாய் மதிப்பு வலுவடையும்:** தற்போது டாலருக்கு நிகரான இந்திய ரூபாயின் மதிப்பு வீழ்ச்சியடைந்துள்ளது. ஆனால் நமது பொருளாதாரம் வேகமாக வளர்ச்சியடைந்து வருவதால் சில ஆண்டுகளில் டாலருக்கு நிகரான இந்திய ரூபாய் மதிப்பு வலுவடையும் என நம்புகிறேன் என்றார்.

## யுஏஇ மூலம் அமெரிக்காவுக்கு ஏற்றுமதி இல்லை: மத்திய வர்த்தக அமைச்சர்

**அபுதாபி, செப்.18:** இந்தியாவில் தயாரிக்கப்படும் பொருள்களை ஐக்கிய அரபு அமீரகம் (யுஏஇ) மூலம் அமெரிக்காவுக்கு ஏற்றுமதி செய்யும் திட்டமில்லை என மத்திய வர்த்தகத் துறை அமைச்சர் பியூஷ் கோயல் வியாழக்கிழமை தெரிவித்தார்.

அபுதாபியில் நடைபெற்ற 13-ஆவது இந்தியா-யுஏஇ முதலீடுகளுக்கான உயர்நிலை ஆலோசனைக் கூட்டத்தில் பங்கேற்றுப் பேசிய அவர், 'இந்தியப் பொருள்களுக்கு அமெரிக்காவில் அதிக வரி விதிக்கப்பட்டாலும் ஐக்கிய அரபு அமீரகம் மூலம் அந்நாட்டுக்கு பொருள்களை ஏற்றுமதியாளர்கள் ஏற்றுமதி செய்வதை நாங்கள் ஊக்குவிக்க மாட்டோம்.

ஒருவேளை ஐக்கிய அரபு அமீரகத்துக்கு இந்தியப் பொருள்களை ஏற்றுமதி செய்து ஆசிய நாடுகள் அல்லது ஆப்பிரிக்க நாடுகள் அல்லது பிராந்தியத்தில் உள்ள பிற நாடுகளுக்கு அனுப்பினாலும் அந்தப் பொருள்கள் இந்தியாவில் தயாரிக்கப்பட்டவை என முத்திரையிட்டால் அதை வரவேற்கிறோம்' என்றார்.

# போதைப் பொருள் தயாரிப்பு-கடத்தல் நாடுகள் பட்டியலில் இந்தியா, சீனா, பாகிஸ்தான்

## டிரம்ப் அறிவிப்பு


**நியூயார்க், செப். 18:** உலக அளவில் போதைப் பொருள்களின் தயாரிப்பு மற்றும் கடத்தல் அதிகமுள்ளதாக, அமெரிக்க அதிபர் டிரம்ப் வெளியிட்ட பட்டியலில் இந்தியா, சீனா, பாகிஸ்தான் உள்பட 23 நாடுகள் இடம்பெற்றுள்ளன.

இந்த நாடுகள், அமெரிக்கா மற்றும் அதன் குடிமக்களுக்கு அச்சுறுத்தலாக உள்ளன என்றும் டிரம்ப் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக, அமெரிக்க நாடாளுமன்றத்தில் அதிபர் டிரம்ப் சமர்ப்பித்த தீர்மானத்தில், 'உலக அளவில் சட்டவிரோத போதைப் பொருள்களின் தயாரிப்பு மற்றும் கடத்தலில் முக்கிய பங்கு வகிக்கும் 23 நாடுகளை அடையாளம் கண்டுள்ளேன்.

ஆப்கானிஸ்தான், பஹாமாஸ், பெலிஸ், பொலிவியா, பர்மா, சீனா, கொலம்பியா, கோஸ்டாரிகா, டொமினிகன் குடியரசு, ஈகுவடார், எல் சால்வடார், கௌதமாலா, ஹைதி, ஹோண்டுராஸ், இந்தியா, ஜமைக்கா, லாவோஸ், மெக்ஸிகோ, நிகரகுவா, பாகிஸ்தான், பனாமா, பெரு, வெனிசூலா ஆகிய 23 நாடுகளும் அமெரிக்காவுக்கான போதைப் பொருள் கடத்தலுக்கு காரணமானவை' என்று குறிப்பிட்டுள்ளார்.

மேலும், 'சர்வதேச ஒப்பந்தங்களின்கீழ் போதைப் பொருள் தடுப்பு முயற்சிகளை மேம்படுத்துவதில் ஆப்கானிஸ்தான், பொலிவியா, பர்மா, கொலம்பியா, வெனிசூலா ஆகிய 5 நாடுகளும் தோல்வி கண்டுவிட்டன; போதைப் பொருளுக்கான மூலப் பொருள் விநியோகத்தில் உலகின் மிகப் பெரிய ஆதாரம் சீனா. மூலப் பொருள் விநியோகத்தைத் தடுக்கவும் குற்றவாளிகளைக் கைது செய்யவும் சீனத் தலைமை வலுவான-நிலையான நடவடிக்கையை எடுக்க வேண்டும்' என்று டிரம்ப் வலியுறுத்தியுள்ளார்.,



இதனிடையே, அமெரிக்க வெளியுறவு அமைச்சகம் அளித்த விளக்கத்தில், 'இப்பட்டியலில் இடம்பெற்றதாலேயே, ஒரு நாட்டின் அரசுத் தரப்பில் போதைப் பொருள் தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவில்லை என்றோ, அமெரிக்காவுக்கு அந்நாட்டு அரசு ஒத்துழைக்கவில்லை என்றோ கூறிவிட முடியாது.

தடுப்பு நடவடிக்கைகள் தீவிரமாக இருந்தாலும், போதைப் பொருள் தயாரிப்பு-கடத்தலுக்கு சாதகமாக உள்ள புவியியல், வர்த்தகம் உள்ளிட்ட பல்வேறு காரணிகளின் அடிப்படையில் பட்டியல் தயாரிக்கப்பட்டுள்ளது' என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

## இந்திய தொழில் நிறுவன அதிகாரிகளின் அமெரிக்க விசா ரத்து

**புது தில்லி, செப்.18:** போதைப்பொருள்களைத் தயாரிக்க பயன்படும் பென்டானில் மூலப்பொருள்கள் கடத்தலில் தொடர்புடைய குற்றச்சாட்டில் சில இந்திய தொழில் நிறுவன அதிகாரிகளின் விசாக்களை (நுழைவு இசைவு) ரத்து செய்வதாக அமெரிக்க தூதரகம் வியாழக்கிழமை தெரிவித்தது.

இருப்பினும், விசா ரத்து செய்யப்பட்டவர்களின் விவரங்களை அமெரிக்க தூதரகம் வெளியிடவில்லை.

இதுகுறித்து தூதரகம் வெளியிட்ட செய்திக் குறிப்பில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது: உடல்நலனுக்கு அச்சுறுத்தலை ஏற்படுத்தக்கூடிய போதைப் பொருள்கள் புழக்கத்தில் இருந்து அமெரிக்கர்களை பாதுகாக்க அதிபர் டொனால்ட் டிரம்ப் தலைமையில் பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அதன் ஒரு பகுதியாக போதைப்பொருள்களை தயாரிக்க பயன்படும் பென்டானில் மூலப் பொருள்கள் கடத்தலில் தொடர்புடைய சில இந்திய தொழில் நிறுவன அதிகாரிகளின் விசாக்கள் ரத்து செய்யப்பட்டுள்ளன. சிலருக்கு விசாக்களை வழங்க மறுத்துள்ளோம்.

அமெரிக்க புலம்பெயர் மற்றும் தேசியவாத சட்டத்தின் பல்வேறு பிரிவுகளின்கீழ் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. விசா ரத்து செய்யப்பட்ட நபர்கள் மட்டுமின்றி அவர்களது குடும்பத்தினரும் அமெரிக்காவுக்குப் பயணிக்க முடியாது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த விவகாரத்தில் சம்பந்தப்பட்ட வணிக நிர்வாகிகள் கடும் விளைவுகளை சந்திக்க நேரிடும் என ஜார்கன் ஆண்ட்ரூ எச்சரித்தார். மேலும், இந்த நடவடிக்கைக்கு முழு ஒத்துழைப்பு அளித்த இந்திய அதிகாரிகளுக்கு அவர் நன்றி தெரிவித்தார்.

# உத்தரகண்டில் கடும் நிலச்சரிவு: ஒருவர் உயிரிழப்பு; 11 பேர் மாயம்

## மீட்புப் பணிகள் தீவிரம்

**கோபேஸ்வர், செப். 18:** உத்தரகண்டின் சமோலி மாவட்ட கிராமங்களில் வியாழக்கிழமை ஏற்பட்ட கடுமையான நிலச்சரிவு மற்றும் வெள்ளத்தில் 30-க்கும் மேற்பட்ட வீடுகள் இடிந்தன. இதில் ஒருவர் உயிரிழந்தார்; இடிபாடுகளில் புதைந்த மேலும் 11 பேரை மீட்கும் பணி தீவிரமாக நடைபெற்று வருகிறது.

இமயமலையையொட்டிய உத்தரகண்ட் மாநிலம், கடந்த சில மாதங்களாக மழை-வெள்ளத்தால் மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளது. மேகவெடிப்புகளால் அவ்வப்போது பலத்த மழை கொட்டித் தீர்ப்பதால், பல்வேறு இடங்களில் பெருவெள்ளமும் நிலச்சரிவுகளும் தொடர்கின்றன.

சமோலி மாவட்டத்தின் நந்தாநகர் பகுதியில் உள்ள குந்தரி லகாபாலி, குந்தரி லகாசர்பானி ஆகிய கிராமங்களில் வியாழக்கிழமை கடும் நிலச்சரிவு ஏற்பட்டது. மலையில் இருந்து சேறுடன் உருண்டு வந்த பாறைகளால், வழியில் இருந்த வீடுகள், கடைகள் உள்பட அனைத்தும் சேதமடைந்தன.

இதேபோல், மோக் பள்ளத்தாக்கு பகுதியில் பெய்த பலத்த மழையால் மோக்ஷா நதியில் கடும் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டது. கரையோரங்களில் ஏற்பட்ட அரிப்பால், துர்மா, சேரா ஆகிய கிராமங்களில் வீடுகள்-கடைகள் இடிந்து விழுந்தன. மேற்கண்ட கிராமங்களில் 20 பேர் காயங்களுடன் மீட்கப்பட்டனர். இடிபாடுகளில் புதைந்தவர்களில் ஒருவரின் உடல் மீட்கப்பட்டது; மேலும் 11 பேரைத் தேடும் பணி நடைபெற்று வருகிறது.



உத்தரகண்ட் மாநிலம் சமோலி மாவட்டத்தில் வியாழக்கிழமை ஏற்பட்ட நிலச்சரிவில் சிக்கிய பெண்ணை மீட்ட பேரிடர் மீட்புப் படையினர்.

**முதல்வர் அவசர ஆலோசனை:** சமோலி மாவட்ட கிராமங்களில் ஏற்பட்ட பாதிப்புகள் குறித்து டேராடூனில் உள்ள கட்டுப்பாட்டு அறையில் இருந்து மாவட்ட ஆட்சியருடன் காணொலி வாயிலாக முதல்வர் புஷ்கர் சிங் தாமி அவசர ஆலோசனை மேற்கொண்டார். மீட்பு-நிவாரணப் பணிகளை விரைவுபடுத்துமாறு ஆட்சியருக்கு அவர் உத்தரவிட்டார்.

பின்னர், செய்தியாளர்களிடம் பேசிய தாமி, 'சமோலி மாவட்டத்தில் நிலச்சரிவு-வெள்ளத்தால் 4 கிராமங்கள் பாதிக்கப்பட்டுள்ளன. 30-க்கும் மேற்பட்ட வீடுகள், ஏராளமான கடைகள், கால்நடைத் தொழுவங்கள் இடிந்துள்ளன. மத்திய-மாநில பேரிடர் மீட்புப் படையினர், இந்திய-திபெத் எல்லைக் காவல் படையினர், காவல் துறையினர், தீயணைப்புத் துறையினர் உள்ளிட்டோர் மீட்புப் பணியில் ஈடுபட்டுள்ளனர்.

நந்தாநகர் பகுதிக்கான போக்குவரத்து துண்டிக்கப்பட்டுள்ளதால், காயமடைந்தவர்களை ஹெலிகாப்டர் மூலம் மருத்துவமனைக்கு கொண்டு செல்ல நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

**அதிகாரிகளுக்கு உத்தரவு:** மாநிலத்தில் மழை-வெள்ளத்தால் சேதமடைந்த சாலைகள், குடிநீர்க் குழாய்களை மறுசீரமைக்கவும், தடைபட்ட மின் விநியோகம் மற்றும் இணைய வசதியை மீண்டும் வழங்கவும் விரைந்து நடவடிக்கை எடுக்க அதிகாரிகளுக்கு உத்தரவிட்டுள்ளேன்.

நிவாரண முகாம்களில் போதிய உணவு, சுத்தமான குடிநீர், மருத்துவ வசதி உள்ளிட்டவற்றை உறுதி செய்யவும் அறிவுறுத்தியுள்ளேன்' என்றார்.

நந்தாநகர் பகுதி ஏற்கெனவே மண்ணில் புதையும் அபாயத்தை எதிர்கொண்டு வருகிறது. வீடுகளில் விரிசல் ஏற்பட்டிருந்த நிலையில், தற்போது நிலச்சரிவால் அவை கடும் பாதிப்பைச் சந்தித்துள்ளன.

இரு தினங்களுக்கு முன்பு, தலைநகர் டேராடூன் மற்றும் அதன் சுற்றுவட்டார பகுதிகளில் மேகவெடிப்பால் பலத்த மழை கொட்டித் தீர்த்தது.

கங்கை, யமுனை, தம்சா ஆகிய நதிகளில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டு, கடும் சேதம் ஏற்பட்டது. வெவ்வேறு சம்பவங்களில் 21 பேர் உயிரிழந்தனர்; 17 பேர் மாயமாகினர் என்பது குறிப்பிடத்தக்கது.

# செப்.30-ஆம் தேதிக்குள் ஒருங்கிணைந்த ஓய்வூதியத் திட்டத்தில் சேர வேண்டும்

## ஊழியர்களுக்கு மத்திய அரசு வலியுறுத்தல்

**புது தில்லி, செப்.18:** ஒருங்கிணைந்த ஓய்வூதியத் திட்டத்தில் இணைய விரும்பும் ஊழியர்கள் வரும் செப்.30-ஆம் தேதிக்குள் விண்ணப்பிக்க வேண்டும் என நிதியமைச்சகம் வியாழக்கிழமை வலியுறுத்தியது.

கடந்த ஏப்.1-ஆம் தேதிமுதல் தேசிய ஓய்வூதிய அமைப்பின்கீழ் (என்பிஎஸ்) ஒருங்கிணைந்த ஓய்வூதியத் திட்டத்தை (யுபிஎஸ்) மத்திய அரசு அறிமுகப்படுத்தியது. இதைத் தேர்ந்தெடுக்கும் ஊழியர்களுக்கு உறுதிசெய்யப்பட்ட ஓய்வூதியம் வழங்கப்படவுள்ளது.

இதுகுறித்து நிதியமைச்சகம் வெளியிட்ட செய்திக் குறிப்பில், 'தகுதியுள்ள மத்திய அரசு ஊழியர்கள் மற்றும் என்பிஎஸ்-இன்கீழ் ஓய்வூதியம் பெற்று வரும் ஊழியர்கள், செப்.30-ஆம் தேதிக்குள் யுபிஎஸ்-ஐ தேர்ந்தெடுக்கலாம்.

கடைசி நேர சிக்கல்களைத் தவிர்க்க தகுதியுள்ள அனைத்து ஊழியர்களும் காலக்கெடுவுக்கு முன்பாகவே இந்தப் பணியை மேற்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது. என்பிஎஸ்-இல் தொடர விரும்பும் ஊழியர்கள் செப்.30-க்குப்பிறகு யுபிஎஸ்-இல் இணையமுடியாது' எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. கடந்த ஜூலை 20 முதல் 31,555 மத்திய அரசு ஊழியர்கள் யுபிஎஸ்-ஐ தேர்ந்தெடுத்துள்ளனர்.

முன்னதாக, யுபிஎஸ் பயனாளிகள் ஒருமுறை மட்டும் என்பிஎஸ்-க்கு மாறிக்கொள்ளும் வசதியை கடந்த ஆக.25-ஆம் தேதி நிதியமைச்சகம் அறிமுகப்படுத்தியது.

இந்த வசதியை ஓய்வூதியத் தேதிக்கு ஓராண்டுக்கு முன்பாகவோ அல்லது விருப்ப ஓய்வுபெறுவதற்கு 3 மாதங்களுக்கு முன்பாகவோ எந்த நேரத்திலும் பயன்படுத்திக்கொள்ளலாம் என நிதியமைச்சகம் தெரிவித்தது.

இதுதவிர யுபிஎஸ்-ஐ தேர்ந்தெடுக்கும் அரசு ஊழியர்கள் பணியின்போது உயிரிழந்தாலோ அல்லது உடல் ஊனமுற்று அவர் பணிநீக்கம் செய்யப்பட்டாலோ மத்திய குடிமைப் பணிகள் (ஓய்வூதியம்) விதிகள்,2021 அல்லது மத்திய குடிமைப் பணிகள் (அசாதாரண ஓய்வூதியம்) விதிகள், 2023-இல் வழங்கப்பட்ட சலுகைகளைப் பயன்படுத்திக்கொள்ளலாம்.

அதேபோல யுபிஎஸ்-ஐ தேர்ந்தெடுக்கும் ஊழியர்களுக்கு வருமான வரிச் சட்டத்தின்கீழ் வரிச் சலுகைகளும் வழங்கப்படுகின்றன.

# ஆளில்லா விமான செயல்திறனில் கவனம்: ராணுவ தலைமைத் தளபதி வலியுறுத்தல்

**கொல்கத்தா, செப்.18:** 'ஆளில்லா விமான செயல்திறனை மேம்படுத்துவதில் ராணுவம் கவனம் செலுத்த வேண்டும்' என்று ராணுவ தலைமைத் தளபதி உபேந்திர துவிவேதி வலியுறுத்தினார்.

பாகிஸ்தான் மற்றும் பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு காஷ்மீர் பகுதிகளில் அமைந்திருந்த பயங்கரவாதி முகாம்கள் மீது மேற்கொள்ளப்பட்ட ஆபரேஷன் சிந்தூர் நடவடிக்கைக்குப் பிறகு, ஆளில்லா விமான (ட்ரோன்) தொழில்நுட்ப மேம்பாட்டில் பாதுகாப்புப் படைகள் தீவிர கவனம் செலுத்தி வருகின்றன.

அதன் ஒரு பகுதியாக, அருணாசல பிரதேசத்தின் லிகாபலியில் உள்ள ஆளில்லா விமான தொழில்நுட்ப மையத்தை ராணுவ தலைமைத் தளபதி பார்வையிட்டார். இதுகுறித்து ராணுவம் தரப்பில் வியாழக்கிழமை வெளியிடப்பட்ட செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:

லிகாபலி ஆளில்லா விமான தொழில்நுட்ப மையத்தைப் பார்வையிட்ட தலைமைத் தளபதி உபேந்திர துவிவேதி, அங்கு பேசும்போது, 'ஆளில்லா விமான செயல்திறனை மேம்படுத்துவதில் ராணுவம் கவனம் செலுத்த வேண்டும்' என்று வலியுறுத்தினார்.

மேலும், வரும் காலங்களில் இந்திய பாதுகாப்புப் படைகளின் தாக்கும் திறன் பன்மடங்கு அதிகரிக்கும் என்றும் அவர் நம்பிக்கை தெரிவித்தார்.

சென்னையில் உள்ள ராணுவ அதிகாரிகள் பயிற்சிப் பள்ளி, டேராடூன் இந்திய ராணுவ அகாதெமி உள்பட முன்னணி ராணுவப் பயிற்சி நிறுவனங்களில் ஏற்கெனவே இதுபோன்ற ஆளில்லா விமான தொழில்நுட்ப மையங்கள் தொடங்கப்பட்டு செயல்பாட்டு வந்துள்ளன.

ராணுவத்தில் உள்ள அனைத்து வீரர்களும் ஆளில்லா விமானங்கள் இயக்கும் திறனைப் பெறும் வகையில் பயிற்சித் திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளன. அதுபோல, ஆளில்லா விமான எதிர்ப்பு தொழில்நுட்ப மேம்பாட்டிலும் ராணுவம் கவனம் செலுத்தி வருகிறது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# வைஷ்ணவ தேவி கோயில் யாத்திரை மீண்டும் தொடக்கம்

**கத்ரா, செப். 18:** ஜம்மு-காஷ்மீரில் வைஷ்ணவ தேவி கோயிலுக்கான யாத்திரை வியாழக்கிழமை மீண்டும் தொடங்கப்பட்டது.

ரியாசி மாவட்டத்தின் கத்ரா பகுதியில் உள்ள திரிகூட மலையில் பிரசித்தி பெற்ற வைஷ்ணவ தேவி கோயில் அமைந்துள்ளது. இக்கோயில் வழித்தடத்தில் கடந்த ஆகஸ்ட் 26-ஆம் தேதி ஏற்பட்ட பயங்கர நிலச்சரிவில் 34 பக்தர்கள் உயிரிழந்தனர்; 20 பேர் காயமடைந்தனர். இதனால் வருடாந்திர யாத்திரை தற்காலிகமாக நிறுத்திவைக்கப்பட்டது.

தொடர்ந்து மோசமான வானிலை நிலவிய சூழலில், 22 நாள்களுக்குப் பிறகு யாத்திரை புதன்கிழமை (செப். 17) தொடங்கியது. ஆனால், சில மணி நேரத்திலேயே நிறுத்தப்பட்டது. பக்தர்கள் ஏமாற்றமடைந்தனர்.

வியாழக்கிழமை வானிலை சீரடைந்ததால், யாத்திரை மீண்டும் தொடங்கியது. ஹெலிகாப்டர் சேவையைப் பயன்படுத்த விரும்புவோர், அதற்குப் பதிவு செய்து கொள்ளலாம் என்று கோயில் வாரியம் அறிவித்துள்ளது.

யாத்திரை சுமுகமாக நடைபெற்று வருவதாக அதிகாரிகள் தெரிவித்தனர். இதனால், அடிவார முகாமில் பல நாள்களாக காத்திருக்கும் பக்தர்கள் மகிழ்ச்சியடைந்தனர்.


Chola — சோழமண்டலம் இன்வெஸ்ட்மெண்ட் அண்டு ஃபைனான்ஸ் கம்பெனி லிமிடெட்
பெருநிறுவன அலுவலகம்: "சோழா கிரெஸ்ட்", C54 & 55, சூப்பர் B-4, திரு.வி.க. இன்டஸ்ட்ரியல் எஸ்டேட், கிண்டி, சென்னை-600 032.
கிளை அலுவலகம்: முதல் தளம், எண்.42, பச்சையப்பன் தெரு, காஞ்சிபுரம் - 631 501

2002 ஆண்டு கடனீட்டுச் சொத்துகளை ரொக்கமாக்குதல், நிதிச் சொத்துக்களைச் சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்துகள் மீதான உரிமை அமலாக்கச் சட்டம், பிரிவு 13(2)-ன் கீழ் கோரிக்கை அறிவிப்பு

கீழே குறிப்பிட்டுள்ள கடன்தாரர் / அடமானதாரர்களான தங்களுக்கு தெரிவிப்பது யாதெனில் 2002 ஆண்டு கடனீட்டுச் சொத்துகளை ரொக்கமாக்குதல், நிதிச் சொத்துக்களைச் சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்துகள் மீதான உரிமை அமலாக்கச் சட்டம் மற்றும் பிரிவு 13 (2)ன் கீழ் இந்த அறிவிப்பு ஏற்பு அட்டையுடன் கூடிய பதிவு தபாலில் தங்களுக்கு அளிக்கப்பட்டு அது பட்டுவாடா ஆகாமல் திரும்பப் பெறப்பட்டுள்ளதையடுத்து கம்பெனியானது தங்களுக்கு எதிரான செயல்முறைகளை தொடங்கியுள்ளது. எனவே, தாங்கள் இந்த அறிவிப்பு வெளியான தேதியிலிருந்து 60 நாட்களுக்குள் அறிவிப்பில் குறிப்பிட்டுள்ள தங்களின் கடன் கணக்குக்கு எதிராக உள்ள கடன் நிலுவை தொகையை வட்டியுடன் சேர்த்து செலுத்துமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது. தவறும் பட்சத்தில் கம்பெனியானது அதன் கடன்களை வட்டி மற்றும் செலவுகளுடன் சேர்த்து பெறுவதற்காக மேற்படி சட்டம் பிரிவு 13 உபபிரிவு (4)-ன் கீழ் கீழே குறிப்பிட்டுள்ள ஈட்டுறுதி சொத்தினை கையகப்படுத்துவதற்கு தங்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படும். இந்த அறிவிப்பு கம்பெனிக்கு கிடைக்க கூடிய வேறு எந்த தீர்வுக்கும் எந்த பாரபட்சமும் இல்லாமல் தங்களுக்கு அளிக்கப்படுகிறது என்பதை குறிப்பிட தேவையில்லை.

| வ. எண் | கடன்தாரர் / இணை கடன்தாரர்கள் பெயர் மற்றும் முகவரி | கடன் தொகை | கோரிக்கை அறிவிப்பு தேதி மற்றும் நிலுவை தொகை |
|---|---|---|---|
| 1. | கடன் கணக்கு எண்: ML01NAK00000063077, (Linked Loan Account of SHUBH AUTO, bearing Agreement No. XSHUTHT00006707659) 1. B.சுரேஷ் பாபு (விண்ணப்பதாரர்), 2. SS ஈவென்ட் அண்டு டெக்கார்ஸ் (பிரதிநிதியாக அதன் உரிமையாளர் சுரேஷ்) (இணை விண்ணப்பதாரர்), 3. B.சுரேந்திரன் (இணை விண்ணப்பதாரர்), 4. பாபு பெருமாள் (இணை விண்ணப்பதாரர்), 5. B.ஹேமலதா (இணை விண்ணப்பதாரர்), அனைவரின் முகவரி: எண்.50, காமராஜ் நகர், கச்சிப்பட்டு, ஸ்ரீபெரும்புதூர், காஞ்சிபுரம் - 602 105. | ரூ. 25,00,000/- | 25.08.2025 & 25.08.2025 அன்று வரை ரூ. 26,19,442/- மேலும் பின் வட்டியுடன் |

அட்டவணை சொத்து: திருமதி.B.ஹேமலதா அவர்களுக்கு சொந்தமான சொத்து (இணை விண்ணப்பதாரர்): செங்கல்பட்டு பதிவு மாவட்டம் மற்றும் ஸ்ரீபெரும்புதூர் துணைப்பதிவு மாவட்டத்திற்கு உட்பட்ட காஞ்சிபுரம் மாவட்டம், ஸ்ரீபெரும்புதூர் தாலுகா, காஞ்சிப்பட்டு காமராஜ் நகர், எண்.42, ஸ்ரீபெரும்புதூர் B கிராமத்தில் சர்வே எண். 695 பகுதி, நத்தம் பட்டாவின் படி சர்வே எண்.1696/2-ன் படி 2098 சதுர அடி பரப்பளவு வீட்டு மனை மற்றும் வீடு, மேலும் அதனுடன் இணைந்த அனைத்து துண்டுகளும், பகுதிகளும் மற்றும எல்லைகள்: வடக்கில்: தெரு, தெற்கில்: காலி மனை, கிழக்கில்: பெருமாள் அவர்களின் வீடு, மேற்கில்: சேகர் அவர்களின் வீடு, இதன் இடையில் வீட்டு மனை மற்றும் வீட்டின் அளவுகள்: கிழக்கு மேற்காக இருபுறமும்: 10.6 மீட்டர் மற்றும் வடக்கு தெற்காக இருபுறமும் : 20 மீட்டர் மொத்தம் சொத்து 2098 சதுர அடி (0195 சதுர மீட்டர்) பரப்பளவு நிலத்துடன் கூடிய கட்டிடம் மற்றும் அதனுடன் மின்சார இணைப்பு மற்றும் அதன் வைப்பு தொகைகள் உட்பட.

தேதி : 19.09.2025
இடம் : சென்னை
அதிகாரப்பூர்வ அதிகாரி, சோழமண்டலம் இன்வெஸ்ட்மெண்ட் அண்டு ஃபைனான்ஸ் கம்பெனி லிமிடெட்



சுவாதீன அறிவிப்பு (அசையா சொத்துக்களுக்கானது) விதி 8-(1)

2002-ம் ஆண்டு கடனீட்டுச் சொத்துகளை ரொக்கமாக்குதல், நிதிச் சொத்துகளைச் சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்துகள் மீதான உரிமை அமலாக்கச் சட்டத்தின் கீழ், கீழே கையொப்பமிட்டுள்ளவர், IIFL ஹோம் ஃபைனான்ஸ் லிமிடெட் ... சுவாதீனத்தில்(POSSESSION) எடுத்துக் கொண்டுள்ளார் ...

இடம்: சென்னை
தேதி: 13.09.2025
ஒப்/- அதிகாரப்பூர்வ அலுவலர், IIFL ஹோம் ஃபைனான்ஸ் லிமிடெட்



பாரத ஸ்டேட் வங்கி — மையப்படுத்தப்பட்ட சில்லறை சொத்து மேலாண்மை பிரிவு (CRAMC)
பாரத ஸ்டேட் வங்கி, எண்.157, 3வது தளம், SB அனெக்ஸ் பில்டிங், அண்ணாசாலை, சென்னை - 600 002. போன் : 044-28540016, 044-28540017, 044-28540018, Email : rwcramc.lhoche@sbi.co.in

கேட்பு அறிவிப்பு

பின்வரும் கடன்தாரர்கள் வங்கியிடமிருந்து பெற்ற கடன் வசதியின் அசல் மற்றும் வட்டியை திருப்பிச் செலுத்துவதில் தவறிவிட்டார்கள் மற்றும் கடன்கள் வாராக்கடன் (NPA) என வகைப்படுத்தப்பட்டுள்ளன என்று இதன்மூலம் அறிவிப்பு வழங்கப்படுகிறது மற்றும் அவர்கள் கடைசியாகதெரிவிக்கப்பட்ட முகவரிகளில் 2002ம் வருடத்திய கடனீட்டுச் சொத்துக்களை ரொக்கமாக்குதல், நிதிச் சொத்துக்களை சீரமைத்தல் மற்றும் கடனீட்டு சொத்துக்கள் மீதான உரிமை அமலாக்க சட்டம் பிரிவு 13 (2)ன்கீழ் அவருக்கு அறிவிப்புகள் வழங்கப்பட்டுள்ளன. ஆனால் அவைகள் பட்டுவாடா ஆகாமல் திரும்ப பெறப்பட்டுள்ளன எனவே அது இந்த பொது அறிவிப்பு மூலமாக தெரிவிக்கப்படுகிறது.

| கடன்தாரர் பெயர் | சொத்துக்களின் விவரங்கள் / செயல்படுத்தப்பட வேண்டிய கடனீட்டு சொத்துக்களின் முகவரி | NPA தேதி & அறிவிப்பு தேதி & நிலுவைத் தொகை |
|---|---|---|
| HLC அய்யப்பன்தாங்கல் (17938)-ல் இணைக்கப்பட்ட எங்களின் அய்யப்பன்தாங்கல் (17937) கிளையில் திரு. வெங்கடேசன்.E அவர்கள் பெயரில் உள்ள SBI வீட்டுக்கடன் கணக்கு எண். 37909189106. திரு. வெங்கடேசன்.E, (கடன்தாரர்), த/பெ. ஏழுமலை, திருமதி. ஜெயஸ்ரீ.D, (இணை கடன்தாரர்), க/பெ. வெங்கடேசன்.E குடியிருப்பு முகவரி (கடன்தாரர் / இணை கடன்தாரர்): 89, பெருமாள் கோவில் தெரு, தோமூர், திருவள்ளூர் - 631 204. அலுவலக முகவரி (கடன்தாரர்): HEXGO டெக்னாலஜிஸ், 218/2, பஜனை கோயில் தெரு, பட்டரவாக்கம், சென்னை - 600 098. அலுவலக முகவரி (இணை கடன்தாரர்): அரசு மேல்நிலைப்பள்ளி, வடக்குப்பட்டு, காஞ்சிபுரம் - 603204. KYC முகவரி (இணை கடன்தாரர்) : 1/33, பெருமாள் கோவில் தெரு, எழுச்சூர், ஸ்ரீபெரும்புதூர், காஞ்சிபுரம் - 603 204. சொத்தின் முகவரி (கடன்தாரர் / இணை கடன்தாரர்) : மனை எண்.2140, தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம், LIG டைப்-I, காக்களூர், திருவள்ளூர் - 631 204. | திரு. வெங்கடேசன்.E அவர்களுக்கு சொந்தமான சொத்து : காஞ்சிபுரம் பதிவு மாவட்டம், திருவள்ளூர் துணைப்பதிவு மாவட்டத்திற்கு உட்பட்ட திருவள்ளூர் மாவட்டம் மற்றும் திருவள்ளூர் தாலுக்கா, காக்களூர், தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம், LIG - டைப்-I, காக்களூர் - 631202 என்ற முகவரியில் சர்வே எண்.196/2 (பகுதி)ன்படி மனை எண்.2140ல் உள்ள 640 சதுர அடி நிலம். மேலும் அதனுடன் இணைந்த அனைத்து துண்டுகளும், பகுதிகளும். எல்லைகள் : வடக்கில் : 20 அடி சாலை, தெற்கில் : மனை எண்கள்.2125 & 2126, கிழக்கில் : மனை எண்.2139, மேற்கில் : மனை எண்.2141. அளவுகள் : கிழக்கு மேற்காக வடக்க பகுதியில் - 16 அடி, கிழக்கு மேற்காக தெற்கு பகுதியில் - 16 அடி, வடக்கு தெற்காக கிழக்கு பகுதியில் - 40 அடி, வடக்கு தெற்காக மேற்கு பகுதியில் - 40 அடி. | 26.08.2025 அறிவிப்பு தேதி 28.08.2025 28.08.2025 அன்று வரை உள்ள நிலுவைத்தொகை ரூ. 12,86,268/- மேலும் 29.08.2025 முதல் வட்டி மற்றும் கட்டணங்கள், இடை நிகழ் செலவுகள் உட்பட |

மாற்று அறிவிப்பு சேவைக்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. இந்த அறிவிப்பு வெளியான நாளிலிருந்து 60 நாட்களுக்குள் நிலுவைத் தொகையைச் செலுத்துமாறு மேற்குறிப்பிட்ட கடன்தாரர்கள் மற்றும் ஜாமீன்தாரர்கள் (பொருந்தும் போதெல்லாம்) இதன் மூலம் அழைக்கப்படுகிறார்கள், தவறினால் 60 நாட்கள் காலாவதியான பிறகு அடுத்த நடவடிக்கைகள் எடுக்கப்படும். 2002ம் வருடத்திய கடனீட்டு சொத்துக்களை ரொக்கமாக்குதல் நிதி சொத்துக்களை சீரமைத்தல் மற்றும் உரிமை அமலாக்கச் சட்டம் பிரிவு 13 (4)ன் கீழ் இந்த அறிவிப்பு வெளியாகிறது.

சட்டம் பிரிவு 13 துணை பிரிவு 8-ன் படி கடனீட்டு சொத்துக்களை மீட்டு கொள்வதற்கு கால அவகாசம் உள்ளது என்று கடன்தாரரின் கவனத்திற்கு கொண்டு வரப்படுகிறது.

தேதி : 19.09.2025
இடம் : சென்னை
அதிகாரபூர்வ அதிகாரி, ஸ்டேட் பாங்க் ஆப் இந்தியா, CRAMC, சென்னை



பேங்க் ஆஃப் இந்தியா — Relationships beyond banking
ஆயிரம் விளக்கு கிளை
எண்.406, லாயிட்ஸ் சாலை, கோபாலபுரம், சென்னை-600086
தொலைபேசி: 044-2835 0056, 2835 0066
Email: thousandlights.chennai@bankofindia.co.in

கோரிக்கை அறிவிப்பு — 2002ம் ஆண்டு கடனீட்டுச் சொத்துக்களை ரொக்கமாக்குதல் நிதிச் சொத்துக்களைச் சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்தின் உரிமை அமலாக்க சட்டம் பிரிவு 13(2)ன் கீழ் அறிவிப்பு.

வங்கியானது 17.09.2025 தேதியிட்ட கோரிக்கை அறிவிப்பை 13(2) பிரிவின் கீழ் கடன்தாரர்/ஜாமீன்தாரர்களுக்கு வழங்கியுள்ளது. கடன்தாரர் கோரிக்கை அறிவிப்பைத் தவிர்ப்பதால், SARFAESI சட்டத்தின் கீழ் இணங்க இதன் மூலம் அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது.

கடன்தாரர்கள் பெயர் மற்றும் முகவரி: திரு.பாலமகேஸ்வரன்.A & திரு.அழகப்பன்.M (ஜாமீன்தாரர்), இருவரின் குடியிருப்பு முகவரி : 65/32, 5வது தெரு, காமராஜ் சாலை, எண்ணூர், சென்னை-600057.

| கடன் வசதி | NPA தேதி | அனுமதிக்கப்பட்ட கடன் | ROI | நிலுவைத் தொகை |
|---|---|---|---|---|
| Term Loan - Loan Against Property 800662610000042 | 29.05.2025 | Rs.11,00,000/- | 11.35% | ரூ. 5,93,332.09 + 29.05.2025 அன்று முதல் எதிர்கால வட்டி |
| | | | | மொத்தம்: ரூ.5,93,332.09 + எதிர்கால வட்டி |

ஈடுபெறப்பட்ட அடமானத்தில் உள்ள அசையாச் சொத்து: சென்னை - 600057, எண்ணூர், காமராஜர் நகர், 5வது தெரு, ...

தேதி : 17.09.2025 இடம் : சென்னை
அதிகாரபூர்வ அதிகாரி, பேங்க் ஆஃப் இந்தியா



இந்தியன் வங்கி — ஸ்ரீபெரும்புதூர் கிளை
கோரிக்கை அறிவிப்பு வெளியீடு
...
தேதி : 19.09.2025
இடம் : ஸ்ரீபெரும்புதூர்
அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி, இந்தியன் வங்கி



பேங்க் ஆஃப் இந்தியா — சென்னை சொத்து மீட்பு துறை
'ஸ்டார் ஹவுஸ்' நான்காவது தளம், எண்.30, எர்ரபாலு தெரு, சென்னை-600 001. போன்: 044-66777459/468
மின்னஞ்சல்: AssetRecovery.Chennai@bankofindia.co.in

அடமானம் வைக்கப்பட்ட தங்க நகைகள் பொது ஏலத்திற்கான அறிவிப்பு

தொடர்புக்கு: 044-66777468

| வ. எண் | கிளை | கடன்தாரர் பெயர் | கணக்கு எண். | நிலுவை தொகை (ரூ) | மொத்த எடை (கிராமில்) | Z.O.ல் குறிப்பிட்டுள்ள குறைந்தபட்ச விலை (ரூ) |
|---|---|---|---|---|---|---|
| 1 | அண்ணாநகர்(சென்னை) | மகேந்திரன்.S.N | 802474110000074 | 1,42,000 | 26.3 | 2,19,000 |
| 2 | அண்ணாநகர்(சென்னை) | மகேந்திரன்.S.N | 802477610001638 | 4,23,695 | 61.8 | 5,15,000 |
| 3 | கதீட்ரல் சாலை | ராகுல் .M.V | 801277610001300 | 5,17,606 | 100.7 | 8,44,000 |
| 4 | கலைஞர்கருணாநிதிநகர் | பரஞ்சோதி | 801374110000327 | 1,50,000 | 27 | 2,25,000 |
| 5 | கலைஞர்கருணாநிதிநகர் | செங்குட்டுவன்.I | 801373010000776 | 2,97,076 | 70 | 5,83,000 |
| 6 | மயிலாப்பூர்C&Pவங்கி | ராஜேஷ் குமார் தங்கசாமி | 800277610001627 | 2,14,236 | 46.98 | 3,92,000 |
| 7 | நுங்கம்பாக்கம் | C.T.குணசேகரன் | 803873010000039 | 1,00,000 | 22.3 | 1,86,000 |
| 8 | நுங்கம்பாக்கம் | G.மகேஸ்வரி | 803874110000036 | 5,84,000 | 108 | 9,00,000 |
| 9 | நுங்கம்பாக்கம் | G.மகேஸ்வரி | 803874110000037 | 6,41,000 | 119 | 9,92,000 |
| 10 | நுங்கம்பாக்கம் | மொஹ்தின்.M | 803874110000047 | 1,30,591 | 23.8 | 1,99,000 |
| 11 | நுங்கம்பாக்கம் | மொஹ்தின்.M | 803874110000012 | 1,82,000 | 36 | 3,00,000 |
| 12 | பாலவாக்கம் | புவனேஸ்வரி அசோக்குமார் | 803077610005166 | 23,693 | 3.6 | 30,000 |
| 13 | உஸ்மான் சாலை | மகேஸ்வரி.M | 801977610000836 | 6,452 | 1.3 | 11,000 |
| 14 | வீரகம்பாக்கம் | இந்திரன்.B | 803477610002631 | 61,574 | 13 | 1,09,000 |

தேதி : 18.09.2025 ; இடம் : சென்னை
அதிகாரபூர்வ அதிகாரி, சொத்து மீட்பு துறை

ASIA CUP

# ஆப்கனை வெளியேற்றியது இலங்கை

**அபுதாபி, செப். 18:** ஆசிய கோப்பை கிரிக்கெட் போட்டியின் 11-ஆவது ஆட்டத்தில், இலங்கை 6 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் ஆப்கானிஸ்தானை வியாழக்கிழமை வென்றது.

இந்தத் தோல்வியை அடுத்து ஆப்கானிஸ்தான் 'சூப்பர் 4' சுற்று வாய்ப்பை இழந்து வெளியேறியது. குரூப் 'பி'-யில் இருந்து இலங்கை, வங்கதேசம் அணிகள் அந்த சுற்றுக்கு முன்னேறின.

இந்த ஆட்டத்தில் முதலில் ஆப்கானிஸ்தான் 20 ஓவர்களில் 8 விக்கெட்டுகள் இழப்புக்கு 169 ரன்கள் சேர்த்தது. இலங்கை 18.4 ஓவர்களில் 4 விக்கெட்டுகள் இழப்புக்கு 171 ரன்கள் எடுத்தது.

முன்னதாக டாஸ் வென்று பேட்டிங்கை தேர்வு செய்த ஆப்கானிஸ்தான் வீரர்களில் ரஹ்மானுல்லா குர்பாஸ் 14, கரிம் ஜனத் 1, செதிகுல்லா அடல் 18 ரன்களுக்கு ஆட்டமிழந்தனர்.

தொடர்ந்து வந்தோரில், டார்விஷ் ரசூலி 9, அஸ்மதுல்லா ஓமர்ஸாய் 6, இப்ராஹிம் ஜத்ரன் 1 சிக்ஸருடன் 24 ரன்களுக்கு விக்கெட்டை இழந்தனர். இவ்வாறாக, 79 ரன்களுக்கே ஆப்கானிஸ்தான் 6 விக்கெட்டுகளை இழந்து தடுமாறியது.



குசல் மெண்டிஸ் 74*

அப்போது இணைந்த கேப்டன் ரஷீத் கானுடன் இணைந்த முகமது நபி, விக்கெட் சரிவைத் தடுத்து, அணியை சரிவிலிருந்து மீட்டார். ரஷீத் கான் 2 பவுண்டரிகள், 1 சிக்ஸருடன் 24 ரன்களுக்கு பெவிலியன் திரும்ப, நபி 3 பவுண்டரிகள், 6 சிக்ஸர்கள் உள்பட 60 ரன்கள் விளாசி கடைசி விக்கெட்டாக வெளியேறினார்.

ஓவர்கள் முடிவில் நூர் அகமது 6 ரன்களுடன் ஆட்டமிழக்காமல் இருக்க, இலங்கை தரப்பில் நுவன் துஷாரா 4, துஷ்மந்தா சமீரா, துனித் வெலாலகே, தசுன் ஷானகா ஆகியோர் தலா 1 விக்கெட் வீழ்த்தினர்.



நுவன் துஷாரா 4/18

அடுத்து 170 ரன்களை வெற்றி இலக்காகக் கொண்டு விளையாடிய இலங்கை தரப்பில், பதும் நிசங்கா 6, கமில் மிஷாரா 4, குசல் பெரெரா 3 பவுண்டரிகளுடன் 28, கேப்டன் சரித் அசலங்கா 17 ரன்களுக்கு பெவிலியன் திரும்பினர்.

குசல் மெண்டிஸ் 10 பவுண்டரிகளுடன் 74, கமிண்டு மெண்டிஸ் 2 சிக்ஸர்களுடன் 26 ரன்கள் அடித்து, அணியை வெற்றிக்கு வழி நடத்தி ஆட்டமிழக்காமல் இருந்தனர். ஆப்கானிஸ்தான் பௌலர்களில் முஜீப் உர் ரஹ்மான், அஸ்மதுல்லா ஓமர்ஸாய், முகமது நபி, நூர் அகமது ஆகியோர் தலா 1 விக்கெட் எடுத்தனர்.

### புள்ளிகள் பட்டியல்

(இலங்கை - ஆப்கன் ஆட்டம் (11) வரை)

| அணி | ஆட்டம் | வெற்றி | தோல்வி | புள்ளி |
|---|---|---|---|---|
| குரூப் 'ஏ' | | | | |
| இந்தியா | 2 | 2 | 0 | 4 |
| பாகிஸ்தான் | 3 | 2 | 1 | 4 |
| அமீரகம் | 3 | 1 | 2 | 2 |
| ஓமன் | 2 | 0 | 2 | 0 |
| குரூப் 'பி' | | | | |
| இலங்கை | 3 | 3 | 0 | 6 |
| வங்கதேசம் | 3 | 2 | 1 | 4 |
| ஆப்கன் | 3 | 1 | 2 | 2 |
| ஹாங்காங் | 3 | 0 | 3 | 0 |

## இந்தியா – ஓமன் இன்று மோதல்

### குரூப் சுற்றின் கடைசி ஆட்டம்

**துபை, செப். 18:** ஆசிய கோப்பை கிரிக்கெட் போட்டியில் குரூப் சுற்றின் கடைசி ஆட்டத்தில் இந்தியா, ஓமனுடன் வெள்ளிக்கிழமை (செப். 19) மோதுகிறது.

ஏற்கெனவே சூப்பர் 4 சுற்றுக்குத் தகுதிபெற்றுவிட்ட இந்தியாவுக்கும், அந்த வாய்ப்பை இழந்து வெளியேறிவிட்ட ஓமனுக்கும் இந்த ஆட்டம் பெயரளவுக்கானதுதான்.

இந்திய அணியைப் பொருத்தவரை, மீண்டும் பாகிஸ்தான் அணியை சூப்பர் 4 சுற்றில் வரும் ஞாயிற்றுக்கிழமை (செப். 21) சந்திக்கவுள்ளது. எனவே அதற்காக தனது பிளேயிங் லெவனை மீண்டும் பலப்படுத்திக் கொள்ளும் ஒரு வாய்ப்பாகவே இந்த ஆட்டத்தில் இந்தியா களமிறங்கும்.

டாஸ் வெல்லும் நிலையில், பேட்டிங்கை தேர்வு செய்து 20 ஓவர்களும் விளையாடி, பேட்டர்கள் அனைவருக்கும் போதுமான வாய்ப்பை வழங்குவதே அணியின் பிரதான திட்டமாக இருக்கலாம். ஏனெனில் முதலிரு ஆட்டங்களிலுமே எளிதான இலக்குகளை இந்தியா விரைவாகவே எட்டியது.

இதுவரை அபிஷேக் சர்மா, ஷுப்மன் கில், கேப்டன் சூர்யகுமார் யாதவ், திலக் வர்மா மட்டுமே பேட்டிங் செய்திருக்கும் நிலையில், ஹர்திக் பாண்டியா, சஞ்சு சாம்சன், ஷிவம் துபே, அக்ஸர் படேல் போன்றோர் அந்த வாய்ப்புக்கு காத்திருக்கின்றனர்.




நேரம்: இரவு 8 மணி
நேரலை: சோனி ஸ்போர்ட்ஸ்

பிளேயிங் லெவனில் பெரிதாக மாற்றம் இருக்காது என்றாலும், முக்கியமான பாகிஸ்தான் ஆட்டத்துக்கு முன்பாக பும்ராவுக்கு ஓய்வளித்து, அர்ஷ்தீப் சிங்கை களமிறக்க, தலைமைப் பயிற்சியாளர் கௌதம் கம்பீர் யோசிக்கக் கூடும். அதேபோல், வருண் அல்லது குல்தீப் ஆகியோரில் ஒருவருக்கு ஓய்வு வழங்கி, ஹர்ஷித் ராணாவையும் களமிறக்கிப் பார்க்கலாம்.

## காலிறுதியில் சிந்து, சாத்விக்/சிராக் இணை

**சென்ஸென், செப். 18:** சீனா மாஸ்டர்ஸ் பாட்மின்டன் போட்டியில் இந்தியாவின் பி.வி. சிந்து, சாத்விக்சாய்ராஜ் ராங்கிரெட்டி/சிராக் ஷெட்டி ஆகியோர் தங்களது பிரிவில் காலிறுதிச்சுற்றுக்கு வியாழக்கிழமை முன்னேறினர்.



பி.வி.சிந்து



சாத்விக்/சிராக்

காலிறுதிக்கு முந்தைய சுற்றில், மகளிர் ஒற்றையரில் சிந்து 21-15, 21-15 என்ற நேர் கேம்களில், போட்டித்தரவரிசையில் 6-ஆம் இடத்திலிருந்த தாய்லாந்தின் பான்பவிசோசுவாங்கை வீழ்த்தி அசத்தினார்.

இந்த ஆட்டத்தை அவர் 41 நிமிஷங்களில் முடிவுக்குக் கொண்டு வந்தார். சோசுவாங்கை இத்துடன் 11-ஆவது முறையாக சந்தித்த சிந்து, 6-ஆவது வெற்றியுடன் முன்னிலை வகிக்கிறார். அடுத்ததாக காலிறுதியில் அவர், போட்டித்தரவரிசையில் முதலிடத்தில் இருக்கும் தென் கொரியாவின் ஆன் செ யங்கின் சவாலை எதிர்கொள்கிறார்.

ஆடவர் இரட்டையர் பிரிவில், போட்டித்தரவரிசையில் 8-ஆம் இடத்திலிருக்கும் சாத்விக்/சிராக் ஜோடி, 21-13, 21-12 என்ற நேர் கேம்களில் சீன தைபேவின் சியு ஹியாங் சியெ/வாங் சி லின் கூட்டணியை 33 நிமிஷங்களில் வெளியேற்றியது.

இவர்கள் கூட்டணியை 2-ஆவது முறையாக சந்தித்த இந்திய ஜோடி, இரண்டிலுமே வென்றிருக்கிறது. காலிறுதியில், சீனாவின் ரென் ஜியாங் யு/ஜி ஹோனான் இணையுடன், சாத்விக்/சிராக் ஜோடி மோதுகிறது.

## வில்வித்தை ப்ரீமியர் லீக்: அக்டோபர் 2-இல் தொடக்கம்



**புது தில்லி, செப். 18:** இந்திய வில்வித்தை சம்மேளனம் (ஏஏஐ) சார்பில் முதலாவது வில்வித்தை ப்ரீமியர் லீக் போட்டி அக்டோபர் 2 முதல் 12-ஆம் தேதி வரை தில்லியில் நடைபெறவுள்ளது.

இதில் பிரித்விராஜ் யோதாஸ் (தில்லி), மைட்டி மராத்தாஸ் (மகாராஷ்டிரா), காக்கதியா நைட்ஸ் (தெலங்கானா), ராஜ்புதானா ராயல்ஸ் (ராஜஸ்தான்), சேரா ஆர்ச்சர்ஸ் (ஜார்கண்ட்), சோழா சீஃப்ஸ் (தமிழ்நாடு) என மொத்தம் 6 அணிகள் பங்கேற்கின்றன.

அவற்றில் தலா 8 வீரர்கள் வீதம், மொத்தம் 48 போட்டியாளர்கள் களம் காண்கிறார்கள். இதில் 36 இந்தியர்களும், 12 வெளிநாட்டவர்களும் அடங்குவர். ஒரு அணியில் ரீகர்வ், காம்பவுண்ட் பிரிவினர் கலந்து 6 இந்தியர்களும், 2 வெளிநாட்டவர்களும் இருப்பர். இதில் தலா ஆடவர், மகளிர் அடங்குவர்.

உலகக் கோப்பை, ஒலிம்பிக்கில் பதக்கம் வென்ற சிறந்த வீரர், வீராங்கனைகள் களமாடும் இந்தப் போட்டிக்கான பரிசுத் தொகை ரூ.2 கோடியாகும்.

பிரதான போட்டியாளர்களாக, தீபிகா குமாரி, அங்கிதா பகத், ஜோதி சுரேகா, தீரஜ் பொம்மதேவரா, பிரதமேஷ் ஃபுகே, ரிஷப் யாதவ், தருண்தீப் ராய் உள்ளிட்ட இந்தியர்களும், மெக்ஸிகோவின் ஆண்ட்ரியா பெகெரா, அமெரிக்காவின் பிராடி எலிசன் உள்ளிட்ட வெளிநாட்டவர்களும் இப்போட்டியில் பங்கேற்கின்றனர்.

ஃப்ராஞ்சைஸ் முறையில் நடைபெறும் முதல் வில்வித்தை போட்டி இதுவாகும். இந்தப் போட்டியின் மூலமாக நாட்டின் பின்தங்கிய பகுதிகளுக்கும் வில்வித்தை அறிமுகமாவதுடன், சர்வதேச தரத்தில் இந்திய வீரர், வீராங்கனைகள் உருவாகுவார்கள் என்றும் இந்திய வில்வித்தை சம்மேளனத் தலைவர் அர்ஜுன் முண்டா தெரிவித்தார்.

WORLD ATHLETICS CHAMPIONSHIPS TOKYO 25

## 8-ஆம் இடம்; நீரஜ் சோப்ரா ஏமாற்றம்

**டோக்கியோ, செப். 18:** உலக தடகள சாம்பியன்ஷிப் ஈட்டி எறிதலில், நடப்பு சாம்பியனாக களமிறங்கிய இந்திய நட்சத்திரம் நீரஜ் சோப்ரா 8-ஆம் இடம்பிடித்து ஏமாற்றமளித்தார். சக இந்தியரான சச்சின் யாதவ், தனது தனிப்பட்ட பெஸ்ட்டை பதிவு செய்து முன்னேற்றம் கண்டார்.

ஒலிம்பிக் உள்பட பல்வேறு முக்கியமான போட்டிகளில் சாம்பியனான இந்தியாவின் நீரஜ் சோப்ராவும், சச்சின் யாதவும் இறுதிச்சுற்றுக்கு புதன்கிழமை தகுதிபெற்றனர். அந்தச் சுற்று வியாழக்கிழமை நடைபெற்றது.

இதில் நீரஜ் சோப்ரா தனது சிறந்த முயற்சியாக 84.03 மீட்டரை எட்டி 8-ஆம் இடம் பிடித்தார். சச்சின் யாதவ் 86.27 மீட்டர் ஈட்டியை வீசி, 4-ஆம் இடம் பிடித்து நூழிலையில் பதக்க வாய்ப்பை தவறவிட்டார். சச்சின் இந்தத் தொலைவை எட்டியது இதுவே முதல்முறையாகும்.

டிரினிடாட் - டொபாகோ வீரரான கெஷோர்ன் வால்காட் 88.16 மீட்டரை தொட்டு, சீசன் பெஸ்ட்டுடன் தங்கப் பதக்கம் வென்றார்.

### சச்சின் யாதவ் முன்னேற்றம்



சச்சின் யாதவ்



நீரஜ் சோப்ரா

கிரெனாடாவின் ஆண்டர்சன் பீட்டர்ஸ் 87.38 மீட்டருடன் வெள்ளியும், அமெரிக்காவின் கர்டிஸ் தாம்சன் 86.67 மீட்டருடன் வெண்கலமும் வென்றனர்.

இதர பிரதான வீரர்களில், ஜெர்மனியின் ஜூலியன் வெபர் 86.11 மீட்டருடன் 5-ஆம் இடம் பிடிக்க, நடப்பு ஒலிம்பிக் சாம்பியனான பாகிஸ்தானின் அர்ஷத் நதீம் 82.75 மீட்டருடன் 10-ஆம் இடமும், செக் குடியரசின் ஜேக்கப் வட்லெஜ் 78.71 மீட்டருடன் 11-ஆம் இடமுமே பிடித்தனர்.

முன்னதாக சச்சின் யாதவ் தனது 6 முயற்சிகளில், ஒன்றை மட்டும் ஃபௌல் செய்தார். இதர 5 முயற்சிகளில் 86.27, 85.71, 84.90, 85.96, 80.95 மீட்டர் என்ற தொலைவுகளை பதிவு செய்தார். நீரஜ் சோப்ரா 5-ஆவது முயற்சியுடன் வெளியேறிய நிலையில், அந்த 5 முயற்சிகளில் இரு முறை ஃபௌல் செய்தார். எஞ்சிய 3 வாய்ப்புகளில் 83.65, 84.03, 82.86 மீட்டர்களை அவர் எட்டினார்.

**வெளியேறினார் பூஜா:** இதனிடையே, மகளிருக்கான 800 மீட்டர் தகுதிச் சுற்றில், ஹீட் 6-இல் களம் கண்ட பூஜா, அதில் 2 நிமிஷம், 1.03 விநாடிகளில் இலக்கை எட்டி 7-ஆம் இடம் பிடித்தார். ஒட்டுமொத்த வரிசையில் அவருக்கு 32-ஆம் இடமே கிடைத்தது. ஹீட்களில் முதல் 3 இடங்களைப் பிடிப்போர் மற்றும் 3 சிறந்த டைம்களை பதிவு செய்வோரே அரையிறுதிக்குத் தகுதிபெறுவர்.



பூஜா

PKL

## பெங்காலை வீழ்த்தியது ஜெய்பூர்



பெங்கால் – ஜெய்பூர் ஆட்டம்.

**ஜெய்பூர், செப். 18:** புரோ கபடி லீக் போட்டியின் 39-ஆவது ஆட்டத்தில் ஜெய்பூர் பிங்க் பாந்தர்ஸ் 45-41 புள்ளிகள் கணக்கில் பெங்கால் வாரியர்ஸை வியாழக்கிழமை வீழ்த்தியது.

இந்த ஆட்டத்தில் ஜெய்பூர் அணி 28 ரெய்டு புள்ளிகள், 13 டேக்கிள் புள்ளிகள், 4 ஆல் அவுட் புள்ளிகள் வென்றது. அதிகபட்சமாக ரெய்டர் நிதின் குமார் 13 புள்ளிகள் வென்றார்.

மறுபுறம் பெங்கால் அணி 29 ரெய்டு புள்ளிகள், 8 டேக்கிள் புள்ளிகள், 2 ஆல் அவுட் புள்ளிகள், 2 எக்ஸ்ட்ரா புள்ளிகள் பெற்றது. அதிகபட்சமாக ரெய்டர் தேவங்க் 16 புள்ளிகள் கைப்பற்றினார்.

இதனிடையே மற்றொரு ஆட்டத்தில் புணேரி பால்டன் 40-22 புள்ளிகள் கணக்கில் யு மும்பாவை சாய்த்தது.

புள்ளிகள் பட்டியலில் தற்போது ஜெய்பூர் 8 புள்ளிகளுடன் 3-ஆம் இடத்திலும், பெங்கால் 4 புள்ளிகளுடன் 10-ஆம் இடத்திலும் உள்ளன.

புணேரி 12 புள்ளிகளுடன் முதலிடத்திலும், மும்பா 8 புள்ளிகளுடன் 5-ஆம் இடத்திலும் இருக்கின்றன.

### துளிகள்...

- உலக மல்யுத்த சாம்பியன்ஷிப்பில் இந்தியாவின் அனில் மோர் (55 கிலோ), அமன் (77 கிலோ), ராகுல் (82 கிலோ), சோனு (130 கிலோ) ஆகியோர் தங்களின் முதல் சுற்றிலேயே தோல்வி கண்டு வெளியேறினர்.
- ஐபிஎல் கிரிக்கெட்டில் இருந்து அன்மையில் ஓய்வு பெற்ற ரவிச்சந்திரன் அஸ்வின், ஹாங் காங் சிக்ஸஸ் போட்டியில் இந்திய அணிக்காக விளையாட ஒப்பந்தமாகியிருக்கிறார்.
- ஆஸ்திரேலிய 'ஏ' அணிக்கு எதிரான அதிகாரபூர்வமற்ற டெஸ்ட்டின் 3-ஆவது நாள் முடிவில், இந்திய 'ஏ' அணி 4 விக்கெட்டுகள் இழப்புக்கு 403 ரன்கள் எடுத்துள்ளது. ஆட்டம் வெள்ளிக்கிழமையுடன் நிறைவடையும் நிலையில், இந்தியா 129 ரன்கள் பின்தங்கியுள்ளது.
- ஜிம்பாப்வேக்கு எதிரான 3-ஆவது டி20 கிரிக்கெட்டில் நமீபியா 28 ரன்கள் வித்தியாசத்தில் வியாழக்கிழமை வென்றது. முதலிரு ஆட்டங்களில் வென்று ஜிம்பாப்வே தொடரைக் கைப்பற்றிவிட்ட நிலையில், நமீபியாவுக்கு இது ஆறுதல் வெற்றியாக அமைந்தது.

## வெற்றியுடன் தொடங்கிய பிஎஸ்ஜி, லிவர்பூல்

**பாரீஸ்/லிவர்பூல், செப். 18:** சாம்பியன்ஸ் லீக் கால்பந்து போட்டியில் நடப்பு சாம்பியனான பாரீஸ் செயின்ட் ஜெர்மெய்ன் (பிஎஸ்ஜி), லிவர்பூல் அணிகள் தங்கள் முதல் ஆட்டங்களில் வியாழக்கிழமை வெற்றி பெற்றன.

UEFA CHAMPIONS LEAGUE



நுனோ மெண்டெஸ்

இதில் பிஎஸ்ஜி 4-0 கோல் கணக்கில் அடாலன்டாவை வீழ்த்தியது. அந்த அணிக்காக மார்கினோஸ் (3'), கவிசா வராட்ஸ்கெலியா (39'), நுனோ மெண்டெஸ் (51'), கொன்ஸாலோ ரமோஸ் (90+1') ஆகியோர் கோலடித்தனர்.

பிஎஸ்ஜி தனது கடைசி 13 சாம்பியன்ஸ் லீக் ஆட்டங்களில், 11-இல் இரண்டுக்கும் அதிகமான கோல்கள் அடித்து வென்றிருக்கிறது. வேறு எந்த அணியும் இது வரை அவ்வாறு கோல்கள் அடித்ததோ, வென்றதோ இல்லை.

இதனிடையே, மற்றொரு ஆட்டத்தில் லிவர்பூல் 3-2 கோல் கணக்கில் அட்லெடிகோ மாட்ரிட்டை வென்றது. லிவர்பூல் அணிக்காக ஆண்ட்ரு ராபர்ட்சன் (4'), முகமது சலா (6'), விர்ஜில் வான் ஜிக் (90+2') ஆகியோர் கோலடிக்க, அட்லெடிகோ தரப்பில் மார்கோஸ் லோரென்டே (45+3', 81') பங்களித்தார்.

யூரோப்பியன் கோப்பை, சாம்பியன்ஸ் லீக் போட்டிகளில் தனது முதல் ஆட்டத்தை சொந்த மண்ணில் விளையாடியபோது லிவர்பூல் தோற்றதில்லை (10 வெற்றி, 2 டிரா). அதேபோல், மேற்குறிப்பிட்ட இரு போட்டிகளிலுமே தொடர்ந்து 3 முறை அட்லெடிகோ மாட்ரிட்டை வீழ்த்திய ஒரே அணியாக லிவர்பூல் உள்ளது.

**செல்ஸியை சாய்த்த பயர்ன் மியுனிக்:** ஜெர்மனியின் மியுனிக் நகரில் நடைபெற்ற ஆட்டத்தில் பயர்ன் மியுனிக் 3-1 கோல் கணக்கில் செல்ஸியை சாய்த்தது.

மியுனிக்கிற்காக டிரெவோ சலோபா (20'-ஓன் கோல்), ஹேரி கேன் (27', 63') கோலடித்தனர். செல்ஸிக்காக கோல் பால்மர் (29') ஸ்கோர் செய்தார். இந்த வெற்றியின் மூலமாக, சாம்பியன்ஸ் லீக் போட்டியில் செல்ஸியை தொடர்ந்து 3 முறை வீழ்த்திய முதல் அணியாக பயர்ன் மியுனிக் பெருமை பெற்றது.

இதனிடையே மற்றொரு ஆட்டத்தில், இன்டர் மிலன் 2-0 கோல் கணக்கில் அஜாக்ஸை வெல்ல, அந்த அணிக்காக மார்கஸ் துராம் (42', 47') கோலடித்தார்.

### சிகரெட் புகைக்கும் அட்டைப் படம்

## அருந்ததி ராயின் புத்தகத்துக்குத் தடை விதிக்கக் கோரி வழக்கு

**கொச்சி, செப். 18:** பிரபல ஆங்கில எழுத்தாளர் அருந்ததி ராய் சிகரெட் புகைப்பதைப் போன்ற அட்டைப் படத்தைக் கொண்டுள்ள புத்தகத்தின் விற்பனைக்குத் தடை விதிக்கக் கோரி கேரள உயர்நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டுள்ளது.

இது தொடர்பாக கொச்சியைச் சேர்ந்த வழக்குரைஞர் ராஜசிம்மன், கேரள உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்த மனுவில் கூறியிருப்பதாவது:

பிரபல எழுத்தாளர் அருந்ததி ராய் எழுதியுள்ள 'மதர் மேரி கம்டு மீ' என்ற புத்தகத்தின் அட்டையில் அவர் சிகரெட் புகைக்கும் படம் இடம்பெற்றுள்ளது. புகை பிடிப்பது ஆரோக்கியத்துக்கு கேடு என்ற வாசகம் இல்லாமல் அந்த அட்டைப்படம் வடிவமைக்கப்பட்டுள்ளது.



அருந்ததி ராய்

புகைப் பிடிக்கும் வழக்கத்தை பெருமைப்படுத்தும் வகையில் உள்ள இந்த அட்டைப்படம் சமூகத்துக்கு, குறிப்பாக சிறுமிகள் மற்றும் பெண்களுக்குத் தவறான செய்தியைப் பரப்பும் வகையில் உள்ளது. அருந்ததி ராய் போன்ற பிரபல எழுத்தாளர் புகைப் பிடிப்பதைப் போன்ற காட்சி, புகைப் பிடிக்கும் வழக்கத்தால் அறிவுசார் படைப்புத் திறன் அதிகரிக்கும் என்ற தவறான நம்பிக்கையை ஏற்படுத்தும். புகைப் பிடிக்கும் வழக்கத்துக்கும் புகையிலைப் பொருள்களுக்கும் மறைமுகமாக விளம்பரம் அளிக்கும் வகையில் அந்த அட்டைப்படம் உள்ளது.

மேலும், கடந்த 2003-ஆம் ஆண்டு கொண்டுவரப்பட்ட சிகரெட்டுகள் மற்றும் புகையிலைப் பொருள்கள் தடைச் சட்டத்துக்கும் எதிராக சம்பந்தப்பட்ட புத்தகத்தின் அட்டைப்படம் அமைந்துள்ளது. எனவே, இப்புத்தகத்தின் விற்பனைக்கும் விநியோகத்துக்கும் தடைவிதிக்க வேண்டும் என்று வழக்குரைஞர் ராஜசிம்மன் தனது மனுவில் கோரியுள்ளார்.

இந்த மனு கேரள உயர்நீதிமன்ற நீதிபதிகள் நிதின் ஜாம்தார், பசந்த் பாலாஜி ஆகியோர் அடங்கிய அமர்வு முன் வியாழக்கிழமை விசாரணைக்கு வந்தது. மனுவை விசாரித்த நீதிபதிகள், இதுபோன்ற விவகாரங்களைக் கையாள ஏதாவது அமைப்பு உள்ளதா என்று மத்திய அரசுக்கு கேள்வி எழுப்பினர். அதையடுத்து, வழக்கு விசாரணையை வரும் 25-ஆம் தேதிக்கு ஒத்திவைத்தனர்.

### விஸ்வகர்மா சிலை விசர்ஜனம்...



பிகார் மாநிலம் பாட்னாவில் விஸ்வகர்மா சிலையை நதியில் விசர்ஜனம் செய்ய படகில் எடுத்து வந்த பெண்கள்.

# ஆன்டிஃபாவை பயங்கரவாத அமைப்பாக அறிவிக்க டிரம்ப் திட்டம்

**வாஷிங்டன், செப். 18:** அமெரிக்காவில் 'ஆன்டிஃபா' என்று பொதுவாக அழைக்கப்படும் பாசிஸவிரோத இயக்கத்தை பயங்கரவாத அமைப்பாக அறிவிக்க அந்த நாட்டு அதிபர் டொனால்ட் டிரம்ப் திட்டமிட்டுள்ளார்.

வலதுசாரி ஆர்வலரும் டிரம்ப்பின் தீவிர ஆதரவாளருமான சார்லி கிர்க் கடந்த வாரம் சுட்டுக் கொல்லப்பட்டதைத் தொடர்ந்து இந்த முடிவை அவர் எடுத்துள்ளார்.


தற்போது பிரிட்டனில் சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள டிரம்ப் இது குறித்து வியாழக்கிழமை கூறியதாவது: ஆன்டிஃபாவை மிகப் பெரிய பயங்கரவாத அமைப்பாக அறிவிக்கத் திட்டமிட்டுள்ளேன். மிகவும் மோசமான, பயங்கரமான, இடதுசாரி தீவிரவாத இயக்கம் அது.

அந்த இயக்கத்துக்கு நிதியுதவி அளிப்பவர்களுக்கு எதிராக விசாரணை நடத்தவும் உத்தரவிடுவேன் என்றார் அவர்.

இருந்தாலும், இஸ்லாமிய தேசம் (ஐஎஸ்), அல்-காய்தா போன்ற ஏராளமான அமைப்புகள் இடம்பெற்றுள்ள அமெரிக்காவின் பயங்கரவாதப் பட்டியலில் ஆன்டிஃபாவை இடம்பெறச் செய்வது சிக்கலானது என்று கூறப்படுகிறது.

காரணம், ஆன்டிஃபா என்பது பாசிஸவாதிகள், நாஜி ஆதரவாளர்களுக்கு எதிரான பல்வேறு குழுக்களுக்கும் வைக்கப்பட்டுள்ள பொதுப் பெயர். குறிப்பாக, ஆர்ப்பாட்டங்களின்போது மட்டுமே அவற்றின் உறுப்பினர்கள் ஒன்றுசேர்கின்றனர். அந்தக் குழுக்களுக்கென்று ஓர் இயக்க மையம் கிடையாது.

இத்தகைய நிலையிலும் ஆன்டிஃபா இயக்கத்தைபயங்கரவாத அமைப்பாக அறிவிக்கத் திட்டமிட்டுள்ளதாக டிரம்ப் கூறியுள்ளது பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. இது குறித்து விளக்கமளிக்க வெள்ளை மாளிகை மறுப்பு தெரிவித்துவிட்டது.



செய்தியாளர்கள் சந்திப்பில் டிரம்ப், பிரிட்டன் பிரதமர் கியர் ஸ்டார்மர்.

இருந்தாலும், பயங்கரவாத அமைப்புகளின் பட்டியலில் ஆன்டிஃபாவும் இடம் பெற்றால், பாசிஸவிரோத குழுவினருக்கு ஆதரவு அளிப்போர் மீது சட்ட நடவடிக்கை எடுக்க நீதித் துறைக்கு அதிகாரம் கிடைக்கும். வன்முறையில் ஈடுபடாமல், அமைதியான முறையில் ஆர்ப்பாட்டம் நடத்துபவர்கள் மற்றும் அவர்களுக்கு ஆதரவு அளிப்பவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கவும் இது வழிவகை செய்யும் என்று கூறப்படுகிறது.

ஏற்கெனவே, மினியாபொலிஸ் நகரில் வெள்ளை இன காவலரின் கடுமையான நடவடிக்கை காரணமாக கருப்பினத்தைச் சேர்ந்த ஜார்ஜ் ஃப்ளாய்ட் என்பவர் உயிரிழந்த விவகாரத்தில் நாடு முழுவதும் தீவிர போராட்டங்கள் நடந்தபோதும் டிரம்ப் இந்த யோசனையைக் கூறியது நினைவுகூரத்தக்கது.

யூட்டா மாகாணம், ஓரெம் நகரிலுள்ள யூட்டா பள்ளத்தாக்கு பல்கலைக்கழகத்தில் கடந்த 11-ஆம் நடைபெற்ற நிகழ்ச்சியில் சார்லி கிர்க் உரையாற்றிக்கொண்டிருந்தபோது, அருகில் இருந்த கட்டடத்தின் கூரையில் இருந்து ஆன்டிஃபா ஆர்வலர் டைலர் ராபின்ஸன் அவரை துப்பாக்கியால் சுட்டுக் கொன்றார்.

இது தொடர்பாக புலனாய்வுத் துறை வெளியிட்ட சிசிடிவி காட்சிகளைக் கொண்டு தனது மகனை அடையாளம் கண்டு கொண்ட ராபின்ஸனின் தந்தை, அவரை போலீஸாரிடம் சரணடையச் செய்தார்.

டைலர் ராபின்ஸன் எந்த கட்சியையும் அமைப்பை சேர்ந்தவர் இல்லை என்று அவரது ஆவணங்கள் காட்டினாலும், அவர் பாசிஸத்தை மிகக் கடுமையாக எதிர்க்கும் ஆன்டிஃபா ஆதரவாளர்என்பதுவிசாரணையில் தெரியவந்தது.

## தேர்தலில் வாக்களிக்க ஷேக் ஹசீனாவுக்குத் தடை

**டாக்கா, செப். 18:** வங்கதேசத்தில் பதவி நீக்கப்பட்ட முன்னாள் பிரதமர் ஷேக் ஹசீனாவின் தேசிய அடையாள அட்டையை முடக்கியதன் மூலம், அடுத்த ஆண்டு பிப்ரவரி மாதம் நடைபெறவுள்ள பொதுத் தேர்தலில் அவர் வாக்களிப்பதற்கு தேர்தல் ஆணையம் தடைவிதித்துள்ளது.

இது குறித்து ஆணைய செயலர் அக்தர் அகமது கூறுகையில், அடையாள அட்டை பறிமுதல் செய்யப்பட்டவர்கள் வெளிநாட்டிலிருந்து வாக்களிக்க முடியாது. ஹசீனாவின் அட்டை முடக்கப்பட்டுள்ளது என்றார்.

ஹசீனாவின் தங்கை ஷேக் ரெஹானா, மகன் சஜீப் வாஜேத் ஜோய், மகள் சைமா வாஜேத் புதுல், ரெஹானாவின் குழந்தைகள் டூலிப், அஸ்மினா, மருமகன் ரத்வான் முஜிப், உறவினர் தாரிக் அகமது, அவரது மனைவி ஷாஹின், மகள் புஷ்ரா வின் அட்டைகளும் முடக்கப்பட்டுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.



2024 ஆகஸ்ட் 5-இல் மாணவர் போராட்டம்காரணமாகஹசீனாவின் அவாமி லீக் அரசு கவிழ்ந்து, அவர் இந்தியாவுக்கு தப்பினார். நோபல் பரிசு பெற்ற முகமது யூனுஸ் இடைக்கால ஆலோசகராகப் பொறுப்பேற்றுள்ளார்.ஹசீனாவுக்குஎதிராக, மனிதகுலத்துக்கு எதிரான குற்றங்கள் உள்பட வழக்குகளில் நடைபெற்றுவருகின்றன.

## காஸா சிட்டியில் இருந்து 2.5 லட்சம் பேர் வெளியேற்றம்

**ஜெருசலேம், செப். 18:** கடந்த ஒரு மாதத்தில் காஸா சிட்டியில் இருந்து அண்மையில் 2.5 லட்சத்துக்கும் மேற்பட்ட மக்கள் வெளியேறியுள்ளதாக ஐ.நா. தெரிவித்துள்ளது.

இது குறித்து ஐ.நா. அதிகாரிகள் கூறியதாவது:

காஸாவில் இஸ்ரேல் மேற்கொண்டுவரும் ராணுவ நடவடிக்கை காரணமாக கடந்த ஒரு மாதத்தில் 2.5 லட்சத்துக்கும் மேற்பட்டவர்கள் அங்கிருந்து புலம்பெயர்ந்துள்ளனர்.

இஸ்ரேலின் புதிய தாக்குதலால், ஒவ்வொரு நாளும் பல்லாயிரக்கணக்கானோர் தங்களது வீடுகளை விட்டு தப்பி ஓட வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

அந்த நகரின் பல்வேறு இடங்களில் பீரங்கி, போர் விமானங்கள் மூலம் இஸ்ரேல் ராணுவம் வியாழக்கிழமை தாக்குதல் நடத்தியது. இதன் விளைவாக, நகரில் இருந்து பொதுமக்கள் புதிய அலைகளாக புலம்பெயரத் தொடங்கியுள்ளனர் என்று ஐ.நா. அதிகாரிகள் தெரிவித்தனர்.

காஸாவின் குறுகிய கடற்கரையோரப் பாதை, வீட்டு உபயோகப் பொருள்கள், போர்வைகள், மெத்தைகள், எரிவாயு உருளைகளுடன் குடும்பத்தினர் சென்ற வாகனங்களாக நிரம்பியிருந்தது. புலம் பெயர்வதற்கான செலவு வெகுவாக உயர்ந்துள்ளதால், சிலர் தங்கள் உடைமைகளையும் சிறு குழந்தைகளையும் சுமந்து கொண்டு நடந்து செல்ல வேண்டிய நிலை ஏற்பட்டது.


காஸா சிட்டியில் இருந்து தங்களது மீன்பிடி படகு மூலம் வியாழக்கிழமை வெளியேறிய பாலஸ்தீனர்கள்.

இஸ்ரேல் ராணுவம் வெளியிட்டுள்ள தரவுகளில், காஸா சிட்டியில் இருந்து 4.5 லட்சம் பொதுமக்கள் வெளியேறியதாகக் கூறப்பட்டுள்ளது. இந்த மதிப்பீடு, ட்ரோன் கண்காணிப்பு உள்ளிட்ட பல்வேறு ஆதாரங்களை அடிப்படையாகக் கொண்டது என்று அதிகாரிகள் தெரிவித்தனர்.

இஸ்ரேல் படைகள் தற்போது காஸா சிட்டியின் கிழக்கு புறநகர்ப் பகுதிகளை தங்களின் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்துள்ளன. கடந்த சில நாள்களில், ஷேக் ரத்வான் மற்றும் தெல் அல்-ஹவா பகுதிகளுக்கு அவர்கள் முன்னேறியுள்ளனர். அங்கிருந்து, நகரின் மையப்பகுதிக்கு செல்வதற்கான நடவடிக்கைகளை அவர்கள் தொடர்ந்து மேற்கொள்வார்கள் என்று கூறப்படுகிறது.

## பசுமைக்குடில் வாயு வெளியேற்றத்தை 70% குறைக்க ஆஸ்திரேலியா முடிவு

**மெல்போர்ன், செப். 18:** வரும் 2035-ஆம் ஆண்டுக்குள் பசுமைக்குடில் வாயுக்களின் வெளியேற்றத்தை 62 முதல் 70 சதவீதம் வரை குறைக்க ஆஸ்திரேலியா முடிவு செய்துள்ளது.

இது குறித்து அந்த நாட்டு பிரதமர் ஆன்டனி ஆல்பனேசி வியாழக்கிழமை கூறியதாவது:

வரும் 2035-ஆம் ஆண்டுக்குள் காற்றில் கலக்கும் பசுமைக்குடில் வாயுக்களின் அளவை கடந்த 2005-ஆம் ஆண்டில் இருந்ததை விட 62 முதல் 70 சதவீதம் வரை குறைக்க இலக்கு நிர்ணயித்துள்ளோம்.

அறிவியல்ரீதியிலான,சாத்தியக்கூறுகள் நிறைந்த, நிரூபிக்கப்பட்ட தொழில்நுட்பத்தின் அடிப்படையில் இந்த பொறுப்பு மிகுந்த இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது என்றார் அவர்.



உயிரினங்கள் வாழ்வதற்கேற்ப பூமியை வெப்பமாக வைத்திருக்க உதவும் கரியமில வாயு உள்ளிட்ட பசுமைக்குடில் வாயுக்கள், தொழில்புரட்சி காரணமாக வளிமண்டலத்தில் அதிகரித்து வருகின்றன.

இதன் காரணமாக புவியின் வெப்பம் அதிகரித்து, வறட்சி, அனல் காற்று, காட்டுத்தீ,பனிப்பாறைகள் உருகி கடல் மட்டம் அதிகரித்தல், புயல், வெள்ளம் போன்ற இயற்கைப் பேரிடர்கள் அதிகரித்து வருகின்றன.

'பருவநிலை மாற்றம்' என்றழைக்கப்படும் இந்தப் பிரச்னையைத் தீர்ப்பதற்காக சர்வதேச நாடுகள் பிரான்ஸ் தலைநகர் பாரீஸில் கடந்த 2015-ஆம் ஆண்டு ஒப்பந்தம் மேற்கொண்டன. அதன்படி, காற்றில் கலக்கும் பசுமைக் குடில் வாயுக்களின் அளவைக் குறைக்க நாடுகள் உறுதிபூண்டன. அதன் ஒரு பகுதியாக ஆஸ்திரேலியா இந்த இலக்கை நிர்ணயித்துள்ளது.

## தைவானைக் கைப்பற்றுவோம்: சீனா மீண்டும் எச்சரிக்கை

**பெய்ஜிங், செப். 18:** தைவானைக் கைப்பற்றப் போவதாக சீனா மீண்டும் வியாழக்கிழமை எச்சரித்துள்ளது.

இது குறித்து பெய்ஜிங்கில் நடைபெற்ற நிகழ்ச்சியொன்றில் சர்வதேச ராணுவ அதிகாரிகளிடையே அந்த நாட்டு பாதுகாப்புத் துறை அமைச்சர் டாங் ஜன் (படம்) பேசியதாவது:



இரண்டாம் உலகப் போருக்குப் பிந்தைய சர்வதேச ஒழுங்கை நிலைநாட்டுவதில் தைவான் விவகாரமும் உள்ளடங்கும். அந்தப் பகுதி மீண்டும் சீனாவின் கட்டுப்பாட்டுக்குள் வராமல் சர்வதேச ஒழுங்கு ஏற்படாது.

தைவானில் பிரிவினைவாத சக்திகள் தலையெடுத்து, சீனாவிடமிருந்து சுதந்திரம் பெறும் நடவடிக்கைகளை மேற்கொள்ள ஒருபோதும் அனுமதிக்கமாட்டோம். அத்தகைய முயற்சியை இரும்புக் கரம் கொண்டு நசுக்க சீன ராணுவம் தயாராக இருக்கிறது.

சில வெளிநாடுகள் தங்கள் செல்வாக்கை அதிகரித்துக் கொள்வதற்காக இந்த விவகாரத்தில் சார்பு நிலை எடுப்பது சர்வதேச பதற்றத்துக்குத்தான் இடமளிக்கும் என்று அமெரிக்காவை மறைமுகமாகக் குறிப்பிட்டு டாங் ஜன் எச்சரித்தார்.

| கரன்சி நிலவரம் | அமெரிக்கா | ஐரோப்பா | பிரிட்டன் | மலேசியா | சிங்கப்பூர் |
|---|---|---|---|---|---|
| (இந்திய ரூபாயில்) | டாலர் 88.19 | யூரோ 103.88 | பவுண்ட் 119.61 | ரிங்கிட் 21.02 | டாலர் 68.92 |

| | |
|---|---|
| தங்கம் (24 கேரட்) 1 கிராம் | ரூ.11,149 |
| தங்கம் (22 கேரட்) 1 கிராம் | ரூ.10,220 |
| வெள்ளி 1 கிலோ.... | ரூ.1,41,000 |
| வெள்ளி 1 கிராம்....... | ரூ.141.00 |
| சென்செக்ஸ் | 83,014 ▲ 320 |
| நிஃப்டி | 25,424 ▲ 93 |

## இந்தியாவில் ரூ.9 லட்சம் கோடி முதலீடு

### நார்வே



**புது தில்லி, செப். 18:** அடுத்த 15 ஆண்டுகளில் தங்கள் நாட்டு நிறுவனங்கள் இந்தியாவில் 10 கோடி டாலர் (சுமார் ரூ.9 லட்சம் கோடி) முதலீடு செய்யும் என்று நார்வே தெரிவித்துள்ளது.

இது குறித்து இந்தியாவுக்கான நார்வே தூதரகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டுள்ளதாவது:

இந்தியாவுக்கும், நார்வேக்கும் இடையே மேற்கொள்ளப்பட்ட வர்த்தக மற்றும் பொருளாதார ஒப்பந்தம் அடுத்த மாதம் அமலுக்குவருகிறது. அதிலிருந்து அடுத்த 15 ஆண்டுகளுக்குள் இந்தியாவில் நார்வே 10 கோடி டாலர் முதலீடு செய்யும். இந்தியாவும் நார்வேயும் சுற்றுச்சூழல் விவகாரத்தில் நீண்டகாலமாக இணைந்து செயல்பட்டுவருகின்றன.

எனவே, கடலில் பிளாஸ்டிக் கழிவுகள் சேர்வதைத் தடுப்பதற்கான நடவடிக்கையை இரு நாடுகளும் உறுதிப்பாட்டுடன் மேற்கொள்ளும் என்று அந்த அறிக்கையில் நம்பிக்கை தெரிவிக்கப்பட்டுள்ளது.

## எரிசக்தி மையங்களில் குறைந்த கரியமில வாயு வெளியேற்றம்

**புது தில்லி, செப். 18:** இந்திய எரிசக்தி மையங்கள் வெளியிடும் கரியமில வாயுவின் அளவு முந்தைய 2024-ஆம் ஆண்டின் முதல் பாதியோடு ஒப்பிடுகையில் நடப்பு 2025-ஆம் ஆண்டின் அதே காலகட்டத்தில் 1 சதவீதம் குறைந்துள்ளது.

இது குறித்து பிரிட்டனைச் சேர்ந்த கார்பன் பிரீஃப் அமைப்புக்காக எரிசக்தி மற்றும் தூய காற்றுக்கான ஆய்வு மையம் (க்ரியா) வெளியிட்டுள்ள ஆய்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

கடந்த ஜனவரி முதல் ஜூன் வரையிலான ஆறு மாதங்களில் இந்தியாவின் மின்சார உற்பத்தி ஆலைகள் வெளியிட்ட கரியமில வாயுவின் அளவு, முந்தைய 2024-ஆம் ஆண்டின் அதே மாதங்களைவிட 1 சதவீதம் குறைவாக இருந்தது. மேலும், கடந்த 12 மாதங்களில் இது 0.2 சதவீதம் குறைந்துள்ளது. 50 ஆண்டுகளில் குறைவது இது வெறும் இரண்டாவது முறைதான் என்பது குறிப்பிடத்தக்கது.

2025-ஆம் ஆண்டின் முதல் ஆறு மாதங்களில், புதைபடிம எரிபொருள்கள் மற்றும் சிமெண்ட் உற்பத்தியிலிருந்து வெளியாகும் கரியமில வாயு அதிகரிப்பு, 2001-ஆம் ஆண்டின் கரோனா நெருக்கடிக்குப் பிந்தைய மிகக் குறைந்த விகிதத்தில் உள்ளது.



2025-ஆம் ஆண்டின் முதல் ஆறு மாதங்களில் துய எரிசக்தி உற்பத்தித் திறன் 25.1 ஜிகாவாட் என்ற புதிய உச்சத்தை எட்டியுள்ளது. இது முந்தைய ஆண்டின் இதே காலகட்டத்தோடு ஒப்பிடுகையில் 69 சதவீதம் அதிகம் என்று அந்த ஆய்வறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

எரிபொருள் பயன்பாடு, தொழில்துறை உற்பத்தி மற்றும் மின்சார உற்பத்தி ஆகியவற்றின் மாதாந்திர தரவுகளை அடிப்படையாகக் கொண்டு, பல்வேறு அதிகாரபூர்வ ஆதாரங்களிலிருந்து தரவுகள் தொகுக்கப்பட்டு இந்த ஆய்வு மேற்கொள்ளப்படுகிறது.

### சிம் விற்பனை, மொபைல் ரீசார்ஜ்

## அஞ்சல் துறையுடன் பிஎஸ்என்எல் ஒப்பந்தம்

**புது தில்லி, செப். 18:** தங்களது சிம் கார்டுகளை விற்பனை செய்யவும் மொபைல் திட்டங்களுக்கு ரீசார்ஜ் செய்யவும் இந்திய அஞ்சல் துறையுடன் அரசுக்குச் சொந்தமான தொலைத் தொடர்பு நிறுவனமான பிஎஸ்என்எல் ஒப்பந்தம் மேற்கொண்டுள்ளது.

இது குறித்து வெளியிடப்பட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

இந்திய அஞ்சல் துறையின் 1.65 லட்சத்துக்கும் மேற்பட்ட அலுவலகங்களின் பரந்த விநியோகக்கட்டமைப்பைப் பயன்படுத்தி, பிஎஸ்என்எல் சிம் கார்டுகளின் விற்பனை மற்றும் மொபைல் ரீசார்ஜ் சேவைகளை நாடு முழுவதும் வழங்க ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இந்தியாவின் நகர்ப்புற மற்றும் கிராமப் புறப் பகுதிகளில் பிஎஸ்என்எல்-இன் இருப்பை மேம்படுத்துவதற்கு இந்த ஒப்பந்தம் உதவும்.

இணையதள இணைப்பு குறைவாக உள்ள, நாட்டின் தொலைதூரப் பகுதிகளில் வாழும் மக்களுக்கு பிஎஸ்என்எல்-இன் தொலைத் தொடர்பு சேவைகள் எளிதாகவும் மலிவு விலையிலும் கிடைக்கச் செய்யும் நோக்குடன் இந்த ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டுள்ளது என்று அந்த செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## விலையைக் குறைக்கும் மாருதி சுஸுகி

**புது தில்லி, செப். 18:** ஜிஎஸ்டி குறைக்கப்பட்டதன் எதிரொலியாக, இந்தியாவின் மிகப் பெரிய கார் தயாரிப்பு நிறுவனமான மாருதி சுஸுகி இந்தியா, தனது வாகனங்களின் விலையை 1.29 லட்சம் வரை குறைப்பதாக அறிவித்துள்ளது.

இது குறித்து நிறுவனம் வியாழக்கிழமை வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

ஜிஎஸ்டி குறைப்பின் பலனை வாடிக்கையாளர்களுக்கு வழங்குவதற்காக ரகங்களைப் பொருத்து எங்கள் வாகனங்களின் விலைகள் குறைக்கப்படுகின்றன. செப்டம்பர் 22 முதல் இந்த விலை குறைப்பு அமலுக்கு வரும்.

இந்தமாற்றத்துக்குப்பிறகுஎஸ் பிரஸ்ஸோ என்ற ஆரம்பநிலை மாடலின் விலை ரூ.1,29,600 வரை குறையும்; ஆல்டோ கே10 இன் விலை ரூ.1,07,600 வரை, செலரியோ ரூ.94,100 வரை, வேகன்-ஆர் ரூ.79,600 வரை, இக்னிஸ் ரூ.71,300 வரை குறைக்கப்படும்.

பிரீமியம்ஹேட்ச்பேக்மாடலானஸ்விஃப்ட் விலை ரூ.84,600 வரையும், பலேனோ விலை ரூ.86,100 வரையும் குறையும் என்று அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.



திருவான்மியூர் COTTON HOUSE®
காட்டன் ஹவுஸ் திருவான்மியூர் சிக்னலில் மட்டுமே
No.68, L.B.Road, Chennai - 600 041.
Phone: 044- 2445 4442 / 4201 0609

தினமணி
# வெள்ளிமணி
வெள்ளிக்கிழமை, 19 செப்டம்பர் 2025

மருத்துவம்
மாரடைப்பு பைபாஸ் சர்ஜரி, ஆஞ்சியோ கிராம், ஆஞ்சியோ பிளாஸ்டி இவற்றை தவிர்க்க அணுகவும், இருதய மற்றும் நீரழிவு நோய் நிபுணர்
இருதயம்ஸ்
மருத்துவமனை (பி) லிட். இந்து கல்லூரி அருகில், நாகர்கோவில்-2. போன்: 04652-241561 செல்: 9842141561

## குறை தீர்க்கும் குமரன்

புதுச்சேரி மாநகரில் பிரசித்தி பெற்ற முருகன் கோயிலாகத் திகழ்கிறது, சாரம் சுப்பிரமணியர் ஆலயம். பழைமையான மயிலம் முருகனை, ஆண்டு தோறும் மாசிமகத்திற்கு வரவேற்று விருந்தோம்பல் செய்யும் ஆலயமாக இது விளங்குகின்றது. அதுபோல கந்தர் சஷ்டி மற்றும் சூரசம்ஹாரத்திற்கும் பெயர் பெற்ற தலமாகவும் திகழ்கின்றது.

1880-இல் இக்கோயிலின் எதிரில் அரசமரத்தடி விநாயகரும் வீற்றிருக்க, அவரையும் இப்பகுதி மக்கள் வழிபட்டு வந்தனர். அவரை முத்து விநாயகர் என்று அழைத்தனர்.

1907ஆம் ஆண்டில் தேவனூர் கிராமத்தைச் சேர்ந்த சனி வீராசாமி பிள்ளை என்பவர், முருகப்பெருமான் மீது பக்தி கொண்டு முத்து விநாயகருக்கு அருகில் முருகப்பெருமானை நிறுவிட விரும்பினார். மாமல்லபுரத்தில் வள்ளி, தெய்வானை சமேத சுப்பிரமணியர் சிலா வடிவங்களைச் செய்து எடுத்து வந்து, அதனை முத்து விநாயகரின் பின்புறம் வைத்து ஆலயம் எழுப்பினார். தன் சொந்த ஊரான தேவனூரில் உள்ள இருபது காணி நிலத்தை இக்கோயிலுக்குத் தானமாகவும் எழுதி வைத்தார்.



சனிவீராசாமி பிள்ளை ஈடுபாட்டினால் உந்தப்பட்ட நாராயணசாமி என்ற அடியார், புதுச்சேரி அருகேயுள்ள பட்டானூரில் உள்ள தனது 23 காணி நிலத்தைத் தானமாகத் தந்து, சஷ்டி உற்சவம், சூரசம்ஹாரம் உள்ளிட்ட விழாக்களின் உபயதாரராக விளங்கினார். இதனையடுத்து, பல்வேறு முருகன் அடியார்களும், செல்வந்தர்களும் நிலதானம், பொருள்தானம் அளித்தனர். 2001-இல் வைத்தீஸ்வரன், தையல்நாயகி, தட்சிணாமூர்த்தி, சண்டிகேசுவரர், ஐயப்பன் சந்நிதிகள் அமைக்கப்பட்டு குடமுழுக்கு நடந்தேறியது.

ஐப்பசியில் சஷ்டிவிழா, பத்து நாள் பிரம்மோற்சவம் வெகுவிமரிசையாக நடத்தப்படுகின்றன. இதில் சூரசம்ஹாரம், திருக்கல்யாணம் முக்கிய விழாக்களாக விளங்குகின்றன. மாசிமகத்திற்கு புதுச்சேரி வரும் மயிலம் முருகனை வரவேற்று, சாரம் முருகன் ஆலயத்தில், மகாஅபிஷேகம் நடத்தப்படுகின்றது. பிறகு மயிலம் முருகன், சாரம் முழுவதும் வீதியுலா வருவார். மயிலம் திரும்பும் போது மீண்டும் இங்கு வந்து அபிஷேகம் ஏற்பது நூறு ஆண்டுகளைக் கடந்த வழக்கமாக உள்ளது.

இத்தலத்து மாரியம்மனுக்கு, ஆடி வெள்ளிக்கிழமைகளில் விழாவும், சித்திரை முதலாம் நாள் வீதியுலாவும் நடத்தப்படுகின்றன.

இவ்வாலயத்து முருகன் தன்னை நாடிவரும் அடியார்களின் குறை தீர்க்கும் வள்ளலாக விளங்குகின்றான். தடைகளை நீக்கி திருமணப்பேறு, மகப்பேறு அருள்வதில் வல்லவனாகத் திகழ்கின்றான். புதுச்சேரி நகரில், சாரம் பகுதியில் சுப்பிரமணியர் கோயில் அமைந்துள்ளது.

–பனையபுரம் அதியமான்

## வேலைவாய்ப்பு அருளும் வேணுகோபாலன்

சென்னை முத்தியால்பேட்டை, பவளக்காரத் தெருவில் வேணுகோபால கிருஷ்ணசுவாமி திருக்கோயில் அமைந்துள்ளது. திருமழிசை ஆழ்வாரால் வழிபடப்பட்டு மங்களாசாசனம் செய்யப்பட்ட இத்தலம், மண்ணடி கிருஷ்ணர் கோயில் என்றே அழைக்கப்படுகிறது.

முற்காலத்தில் இப்பகுதியில் பவள வர்த்தகம் செழித்திருந்தது. பவள வியாபாரிகள் பலர் இங்கு வாழ்ந்து வந்தனர். இவர்களில் பலர் பகவான் கிருஷ்ணர் மீது பேரன்பு கொண்டிருந்தனர். ஒரு நாள் அவர்களில் ஓர் அன்பரின் கனவில் தோன்றிய கிருஷ்ணர், இத்தலத்தில் ஓர் ஆலயம் அமைத்து, தன்னுடைய விக்ரகத்தை பிரதிஷ்டை செய்து வழிபட்டால் உங்கள் கோரிக்கைகளை நிறைவேற்றி வைக்கிறேன் என்று கூறினார்.

மகிழ்ந்த பக்தர், விரைவில் சக நண்பர்களோடு வடதேசம் சென்றார். வட மதுரையான பிருந்தாவனத்தில் கிருஷ்ணர் விக்ரகம் ஒன்றை சிறப்பாகச் செய்து, யமுனை நதிக்கரை மணலையும், அந்நதி நீரையும் கொண்டு வந்து இங்கே கோயில் எழுப்பி, திருக்குடநன்னீராட்டுப் பெருவிழாவையும் சிறப்பாக நடத்தியதாகக் கூறப்படுகிறது.

பல வண்ணச் சுதை உருவங்களைத் தாங்கி கிழக்கு நோக்கிய ஐந்து நிலை ராஜகோபுரம் கம்பீரமாகக் காட்சி தருகிறது. கோபுரத்தின் பின்புறம் மாடத்தில் தும்பிக்கையாழ்வாரும் நாகராஜரும் அருள்கின்றனர். தீபஸ்தம்பம், பலிபீடம், கொடிமரம் கடந்து சென்று கருவறைக்கு எதிரே உள்ள கருடாழ்வாரை வணங்கிவிட்டு மூலவர் சந்நிதியை அடைகிறோம்.

மூலவர் வேணுகோபால கிருஷ்ணசுவாமி ருக்மிணி - சத்யபாமா சமேதராக எழுந்தருளியுள்ளார். உலகளந்தவன் பாத ஸ்பரிசம் எனக்கு ஒப்பானது என்பது போல் அவரது திருவடியை தன் நாவால் தீண்டியபடி காட்சியளிக்கிறது, அவருக்குப் பின் அமைந்துள்ள பசு.

வேணுகோபாலசுவாமியை வழிபட்டால் திருமண பாக்கியம், குழந்தைப்பேறு, வேலைவாய்ப்பு அமையும்; கடன்பிரச்னை நீங்கும்; வியாதிகள் விலகும் என்பது நம்பிக்கை. மூலவருக்கு அருகிலேயே உற்சவரான கண்ணன், சதுர்புஜனாக ருக்மிணி - சத்யபாமாவுடன் அருள்கின்றார். மூலவருக்கு வலப்புறம் உள்ள சந்நிதியில் திருமங்கையாழ்வார், நம்மாழ்வார், மதுரகவி ஆழ்வார் ஆகியோரும்; இடப்புறம் ராமானுஜர், மணவாள மாமுனிகளும் அருள்பாலிக்கின்றனர்.



மூலவர் சந்நிதிக்கு அருகில் ஒரு சந்நிதியில் ஸ்ரீநிவாசனும், அடுத்துள்ள சந்நிதியில் ஆண்டாளும், அதையடுத்து ராமபிரான், சீதை, இலக்குவன், அனுமன் ஆகியோரும் திருக்காட்சி தருகிறார்கள். ராமர் சந்நிதிக்கு எதிரே பக்த ஆஞ்சநேயர் தனி சந்நிதியில் சேவை சாதிக்கின்றார். அருகில் உள்ள கம்பத்தில் வீர ஆஞ்சநேயரும் அருள்கிறார்.

ருக்மிணி தாயாருக்கு தனி சந்நிதி உள்ளது. மேல் இரு கரங்கள் தாமரை மலர்களைத் தாங்க, கீழ் இரண்டு கரங்கள் அபய வரதமாக அமைய, அமர்ந்த திருக்கோலத்தில் தாயார் அருள்கின்றார். அருகில் உற்சவர் தாயாரும் மந்தகாசப் புன்னகையுடன் காட்சி தருகின்றார்.

தாயார் சந்நிதியை ஒட்டியுள்ள திருமாமணி மண்டபத்தில் 12 ஆழ்வார்களும் ஆச்சார்ய சுவாமிகள் ஆறு பேரும் தனித்தனி சந்நிதிகளில் உள்ளனர். மூலவர் சந்நிதிக்கும் தாயாரின் தனி சந்நிதிக்கும் இடைப்பட்ட மண்டபத்தில் சக்கரத்தாழ்வார் அருள்கின்றார்.

திருமணத்தடை உள்ளவர்கள் ருக்மிணி தாயாரின் பாதத்தில் தங்கள் ஜாதகத்தை வைத்து அர்ச்சனை செய்தால் கூடிய விரைவில் அவர்களுக்குத் திருமணம் கைகூடும் என்பது நம்பிக்கை. தாயாரின் சந்நிதியில் குழந்தை வரம் வேண்டி தொட்டில் கட்டிவிட்டு, தாயாருக்கு பூச்சடை, புடவை, வளையல் தருவதாக வேண்டிக்கொண்டால் விரைவில் குழந்தைப்பேறு அமையுமாம். பார்வை குறைபாடும் இவள் பார்வையால் குணமாகும் என்கிறார்கள்.

சித்திரை பிரம்மோற்சவம், வைகாசியில் வசந்த விழா, ஆவணியில் ஸ்ரீ கிருஷ்ண ஜெயந்தி, புரட்டாசியில் நவராத்திரி உற்சவம், மார்கழியில் வைகுண்ட ஏகாதசி, தை சங்கராந்தி, மாசி மக உற்சவம், ஸ்ரீ ராம நவமி உற்சவம் என வருடத்தில் பல உற்சவங்கள் இக்கோயிலின் சிறப்பு.

சென்னை பிராட்வே பேருந்து நிலையத்திற்கு வடக்கே பவளக்கார தெருவில் மண்ணடி கிருஷ்ணர் கோயில் அமைந்துள்ளது.

–மு.வெங்கடேசன்

## சிவ (நவ) தாண்டவம்

நவராத்திரியில் ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு வகை தாண்டவம் ஆடினாராம் சிவபெருமான். இந்தத் தாண்டவங்களிலிருந்து நவ துர்கை தோன்றியதாக ஞான நூல்கள் விவரிக்கின்றன.

**ஆனந்த தாண்டவம்:** வலக்காலை ஊன்றி, இடக்காலைத் தூக்கி சிவனார் ஆடிய ரிஷி மண்டல கோலத்தில் தோன்றியவள் ஸ்ரீ சைலபுத்திரி.

**சந்தியா தாண்டவம்:** பகலும் இரவும் சந்திக்கும் வேளையில் இடக்கால் விரலால் சிவனார் இடும் கோலம் சப்த ஒலிக் கோலம். இதிலிருந்து தோன்றியவள் கூஷ்மாண்டா.

**திரிபுர தாண்டவம்:** ஈசனின் இடக்கால் பெருவிரலால் வரையப்பட்டது அஷ்ட வகை கோலம். இதில் தோன்றியவள் பிரம்மசாரிணி.

**ஊர்த்துவ தாண்டவம்:** திருவாலங்காடு தலத்தில் தன்னுடன் ஆடிய காளியைத் தோற்கடிக்க சிவனார் ஆடிய தாண்டவம். ஒரு காலை தரையில் ஊன்றி மறு காலை தோளுக்கு இணையாக உயர்த்தி சிவனார் ஆடிய இந்த பிரணவ கோலத்தில் இருந்து தோன்றியவள் சந்திர காந்தா தேவி.



**புஜங்க தாண்டவம்:** பாற்கடலின் ஆலகால விஷத்தை சிவனார் அருந்த, அவரின் கழுத்தைப் பிடித்து, விஷம் உள்ளே இறங்காமல் தடுத்தார் பார்வதி. இதனால் ஈசனுக்கு நீலகண்டன் என்னும் பெயர் உண்டு. அப்போது ஏற்பட்ட புஜங்க தாண்டவத்தில் தோன்றியவள் ஸ்கந்த மாதா.

**முனி தாண்டவம்:** பதஞ்சலி மிருதங்கம் வாசிக்க, சிவனார் ஆடிய ஆட்டம். அப்போது நெற்றிக் கண்ணில் தோன்றியவள் காத்யாயினி.

**பூததாண்டவம்:** கஜாசுரனைக் கொன்று யானைத்தோல் போர்த்தி ஆடிய ஆட்டம். இந்தக் கோலத்தில் தோன்றியவள் காலராத்திரி.

**சுத்த தாண்டவம்:** தண்டகாரண்ய முனிவர்களின் அல்லல்கள் நீங்க அசுரர்களை அழித்து ஆடிய ஆட்டம். இதில் தோன்றியவர் மகாகௌரி.

**சிங்கார தாண்டவம்:** நவரசங்களையும் வெளிப்படுத்தும் சிவ நடனம். இந்த நவரசக் கோலத்தில் தோன்றியவள் சித்திராத்திரி.

– மகாலட்சுமி சுப்ரமணியன், காரைக்கால்.

## வரம் தரும் வாரம்

19.9.2025 முதல்
25.9.2025 வரை



ஜோதிடர்
கே.சி.எஸ். ஐயர்,
சென்னை.

### மேஷம்

அனைவரிடமும் கனிவாகப் பேசி காரியத்தைச் சாதித்துக்கொள்வீர்கள். பூர்விக சொத்துகளில் சுமுகமாக பாகப்பிரிவினை உண்டாகும். உத்தியோகஸ்தர்கள் மேலதிகாரிகளிடம் நெருங்கிப் பழகுவீர்கள். வியாபாரிகள் எதிர்பார்த்த லாபத்தைக் காண்பீர்கள். விவசாயிகள் நல்ல விளைச்சலை எதிர்பார்க்கலாம். அரசியல்வாதிகளிடம் நேரடியாக பிரச்னை செய்தவர்கள் அடங்கிவிடுவார்கள். கலைத்துறையினரின் முகத்தில் மலர்ச்சியும் பொலிவும் காணப்படும். பெண்களுக்கு புத்தாடைகள், அணிகலன்கள் சேரும். மாணவர்களுக்கு கல்வியில் உயர்வு கிடைக்கும்.

**சந்திராஷ்டமம் – இல்லை**

### சிம்மம்

தொழிலில் ஏற்றம் உண்டாகும். உறுதியுடன் செயல்பட்டு வெற்றிவாகை சூடுவீர்கள். சமுதாயத்தில் தனியிடம் பிடிப்பீர்கள். குழந்தைகளைக் கண்காணிப்பீர்கள். உத்தியோகஸ்தர்களுக்கு வேலை மாற்றம் உண்டாகும். வியாபாரிகளின் முயற்சிகள் வெற்றியைத் தரும். விவசாயிகள் மதிக்கப்படுவீர்கள். அரசியல்வாதிகள் கவனமாக இருப்பீர்கள். கலைத்துறையினருக்கு ரசிகர்களின் ஆதரவு சிறப்பாக இருக்கும். பெண்களுக்கு கணவர் வழி உறவினர்களால் மதிப்பு, மரியாதை கூடும். மாணவர்கள் புதிய விளையாட்டுகளைக் கற்றுக் கொள்வீர்கள்.

**சந்திராஷ்டமம் – இல்லை**

### தனுசு

தொழிலில் இருந்த தேக்கநிலை மாறும். பொருளாதாரம் நல்ல நிலையில் இருக்கும். புதிய சேமிப்புத் திட்டங்களில் சேர்வீர்கள். உத்தியோகஸ்தர்களுக்கு அலுவலக பிரச்னைகள் குறையும். வியாபாரிகளுக்கு அரசாங்கத்திடமிருந்து சில நன்மைகள் கிடைக்கும். விவசாயிகளுக்கு சக விவசாயிகளிடமிருந்து உதவி கிடைக்கும். அரசியல்வாதிகள் காரியங்களை சாதித்துக் கொள்வீர்கள். கலைத்துறையினர் திறமைகளை வளர்த்துக்கொள்வீர்கள். பெண்கள் தங்கள் குடும்பத்தில் திருமணம் போன்ற நிகழ்ச்சிகளை நடத்தி மகிழ்வீர்கள். மாணவர்கள் நன்றாகப் படிப்பீர்கள்.

**சந்திராஷ்டமம் – இல்லை**

### ரிஷபம்

அனைத்துக் காரியங்களும் நீங்கள் நினைத்தது போலவே நடக்கும். அசையாச் சொத்து ஆதாயம் தரும். குடும்பத்தில் சுபகாரியங்கள் நடைபெறும். உத்தியோகஸ்தர்கள் பணிகளை செவ்வனே செய்துமுடிப்பீர்கள். வியாபாரிகளுடன் கூட்டாளிகள் நட்பாகப் பழகுவீர்கள். விவசாயிகள் கையிருப்புப் பொருள்கள் மீது அக்கறை காட்டுவீர்கள். அரசியல்வாதிகளுக்கு புதிய பதவிகள் கிடைக்கும். கலைத்துறையினர் சாதனைகளைச் செய்வீர்கள். பெண்களுக்கு வெளியூரிலிருந்து நல்ல செய்தி வரும். மாணவர்களுக்கு விரும்பிய பாடம் படிக்க வாய்ப்பு அமையும்.

**சந்திராஷ்டமம் – இல்லை**

### கன்னி

தொழிலை சீராக நடத்துவீர்கள். அரசாங்க உதவிகள் கிடைக்கும். உத்தியோகஸ்தர்கள் அலுவலக ரகசியங்களை எவரிடமும் பகிர்ந்து கொள்ள மாட்டீர்கள். வியாபாரிகள் நல்ல முறையில் பொருள்களை விற்பனை செய்வீர்கள். விவசாயிகள் நீர்ப்பாசன வசதிகளைப் பெருக்கிக்கொள்வீர்கள். அரசியல்வாதிகள் கட்சிப்பணிகளில் முழுக்கவனத்தையும் செலுத்துவீர்கள். கலைத்துறையினருக்கு புகழும் பாராட்டும் கிடைக்கும். பெண்களுக்கு குழப்பங்கள், மனபயம் மறைந்துவிடும். மாணவர்கள் ஆசிரியர்கள் பேச்சைக் கேட்டு நடந்து கொள்வீர்கள்.

**சந்திராஷ்டமம் – இல்லை**

### மகரம்

ஆரோக்கியம் சீர்படத் தொடங்கும். சிலருக்கு வெளிநாடு செல்ல வாய்ப்பு அமையும். குடும்பத்தில் உங்கள் பேச்சுக்கு மதிப்பு உண்டாகும். உத்தியோகஸ்தர்கள் மேலதிகாரிகளுடன் நட்பாகப் பழகுவீர்கள். வியாபாரிகளுக்கு எதிரிகள் அடங்கி நடப்பார்கள். விவசாயிகள் நல்ல முறையில் பயிர் செய்வீர்கள். அரசியல்வாதிகள் பொதுச் சேவையில் ஏற்றங்களைப் பெறுவீர்கள். கலைத்துறையினர் தன்னம்பிக்கையை வளர்த்துக்கொள்வீர்கள். பெண்கள் உறவினர்களை அனுசரித்து நடந்துகொள்வீர்கள். மாணவர்கள் நல்ல மதிப்பெண்களைப் பெறுவீர்கள்.

**சந்திராஷ்டமம் – செப்டம்பர் 19, 20, 21.**

### மிதுனம்

உடல், மனம் இரண்டும் ஆரோக்யமாக இருக்கும். புதிய வாகனம் வாங்குவீர்கள். உத்தியோகஸ்தர்களுக்கு சக ஊழியர்களுடன் புரிதல் ஏற்படும். வியாபாரிகள் கடையை அழகுபடுத்துவீர்கள். விவசாயிகளுக்கு பழைய பாக்கிகள் வசூலாகும். அரசியல்வாதிகள் தங்கள் கடமையை நேர்த்தியாகச் செய்வீர்கள். கலைத்துறையினர் சிறிய வாய்ப்புகளையும் சாதகமாகப் பயன்படுத்திக்கொள்வீர்கள். பெண்கள் ஆலயத் திருப்பணிகளிலும் தரும காரியங்களிலும் ஈடுபடுவீர்கள். மாணவர்களுக்கு பெற்றோரின் ஆதரவு முன்னேற்றம் தரும்.

**சந்திராஷ்டமம் – இல்லை**

### துலாம்

மற்றவர் பேச்சுக்கு மதிப்புக் கொடுப்பீர்கள். குடும்பத்தில் திருமணம் போன்ற சுபகாரியங்கள் நடைபெறும். பயணங்களால் நன்மை உண்டாகும். உத்தியோகஸ்தர்களுக்கு எதிர்பார்த்த கடன் கிடைக்கும். வியாபாரிகள் வியாபாரத்தில் அதிக ஆர்வம் காட்டுவீர்கள். விவசாயிகள் புதிய குத்தகைகளை நாடிச்செல்வீர்கள். அரசியல்வாதிகள் மாற்றுக்கட்சியினரின் ரகசிய திட்டங்களை அறிந்துகொள்வீர்கள். கலைத்துறையினர் முன்னேற்றங்களைக் காண்பீர்கள். பெண்கள் ஆடை, ஆபரணங்களை வாங்குவீர்கள். மாணவர்கள் நண்பர்களுக்கு உதவி செய்வீர்கள்.

**சந்திராஷ்டமம் – இல்லை**

### கும்பம்

குழந்தைகளால் பெருமை அடைவீர்கள். தொழிலில் முக்கிய இலக்கை எட்டுவீர்கள். சேமிப்புகளை உயர்த்துவீர்கள். உத்தியோகஸ்தர்கள் தங்கள் பணிகளைத் திட்டமிட்டு முடிப்பீர்கள். வியாபாரிகள் வியாபாரத்தை சிறப்பாக நடத்துவீர்கள். விவசாயிகள் புதிய யுத்திகளைப் புகுத்தி பயிர் செய்வீர்கள். அரசியல்வாதிகள் கட்சி மேலிடம் பாராட்டும் வகையில் நடந்துகொள்வீர்கள். கலைத்துறையினருக்கு சில ஒப்பந்தங்கள் கைகொடுக்கும். பெண்களுக்கு கணவருடனான ஒற்றுமை நல்ல முறையில் தொடரும். மாணவர்கள் யோகா, பிராணாயாமம் செய்வீர்கள்.

**சந்திராஷ்டமம் – செப்டம்பர் 22, 23.**

### கடகம்

பொருளாதார நிலை உயரும். நண்பர்கள் உதவி கிடைக்கும். திடீர் பயணங்கள் செய்வீர்கள். முக்கிய முடிவு ஒன்றை எடுப்பீர்கள். உத்தியோகஸ்தர்கள் தங்கள் திறமையை வளர்த்துக்கொள்வீர்கள். வியாபாரிகளுக்கு சேமிப்பு உயரும். விவசாயிகள் கையிலிருக்கும் குத்தகைகளை நேர்த்தியாகச் செய்துமுடிப்பீர்கள். அரசியல்வாதிகள் தொண்டர்களை அரவணைத்துச் செல்வீர்கள். கலைத்துறையினர் முக்கிய கலை நிகழ்ச்சிகளில் கலந்துகொள்வீர்கள். பெண்களுக்கு உடல் ஆரோக்கியம் சீராகும். மாணவர்கள் யோகா, பிராணாயாமம் செய்து மேன்மை பெறுவீர்கள்.

**சந்திராஷ்டமம் – இல்லை**

### விருச்சிகம்

தொழிலில் தொடர் வருமானம் கிடைக்கும். ஆன்மிகத்திலும் தர்ம காரியங்களிலும் ஈடுபடுவீர்கள். அறிவுபூர்வமாகச் சிந்தித்துச் செயலாற்றுவீர்கள். உத்தியோகஸ்தர்களின் வேலைப்பளுவை சக ஊழியர்கள் பகிர்ந்துகொள்வார்கள். வியாபாரிகள் வியாபாரத்தை விரிவுபடுத்துவீர்கள். விவசாயிகள் பால் வியாபாரத்தில் கூடுதல் வருமானத்தைக் காண்பீர்கள். அரசியல்வாதிகள் கட்சிப்பணிகளில் தீவிரம் காட்டுவீர்கள். கலைத்துறையினர் புகழ், பாராட்டு பெறுவீர்கள். பெண்கள் பெரியவர்களை அனுசரித்துச் செல்வீர்கள். மாணவர்கள் பெற்றோருக்கு உதவிகரமாக இருப்பீர்கள்.

**சந்திராஷ்டமம் – இல்லை**

### மீனம்

வீண் வதந்திகளிலிருந்து விடுபடுவீர்கள். தொழிலை வெளியூர்களுக்கு விரிவுபடுத்துவீர்கள். குடும்பத்தில் திருமணம், குழந்தை பிறப்பு ஆகியவை உண்டாகும். உத்தியோகஸ்தர்கள் முன்னேற்றத்தைக் காண்பீர்கள். வியாபாரிகள் கூட்டாளிகளுடன் சகஜமாகப் பழகுவீர்கள். விவசாயிகள் தன்னம்பிக்கையுடன் திகழ்வீர்கள். அரசியல்வாதிகளுக்கு அரசு அதிகாரிகளின் ஆதரவு கிடைக்கும். கலைத்துறையினர் ரசிகர் மன்றங்களுக்கு செலவு செய்வீர்கள். பெண்களுக்கு உடலும் மனமும் பலப்படும். மாணவர்களுக்கு ஆசிரியர்களின் ஆதரவு கிடைக்கும்.

**சந்திராஷ்டமம் – செப்டம்பர் 24, 25.**

## நிகழ்வுகள்...

❖திருப்பத்தூர் வட்டம், கொரட்டி பகுதியில் உள்ள ஸ்ரீ ராமானுஜர் மடத்தில் புரட்டாசி மாதம் 5 சனிக்கிழமைகளிலும் சுவாமிக்கு சிறப்புத் திருமஞ்சனம், ஆராதனைகள், கோவிந்த நாமாவளி பாராயணமும், உலகப் பொது நன்மைக்காக ஸ்ரீ ராம நாம ஜெப கூட்டு பிரார்த்தனையும், பின்னர் பகல் ஒரு மணிக்கு அன்னதானமும் நடைபெற உள்ளது.

❖கோயம்புத்தூர் மாவட்டம், சிறுமுகை, சென்னம்பாளையம் ஸ்ரீ எமதர்மர் கோயிலில், முன்னோர் வழிபாட்டுக்காக செப்டம்பர் 21 (ஞாயிற்றுக்கிழமை) பகல் 11 மணி அளவில் 27 வகைப் பழங்களால் மகா அபிஷேகமும், அதைத் தொடர்ந்து அலங்கார பூஜையும் நடைபெற உள்ளது.

❖திருச்செந்தூர் அருகே உள்ள குலசேகரன் பட்டினம் அருள்மிகு ஞான மூர்த்தீஸ்வரர் உடனுறை அருள் தரும் முத்தாரம்மன் திருக்கோயிலில் தசரா பெருந்திருவிழா செப்டம்பர் 23 (செவ்வாய்க்கிழமை) தொடங்கி, அக்டோபர் 4 (சனிக்கிழமை) வரை நடைபெற இருக்கிறது.

❖ தூத்துக்குடி மாவட்டம், ஆழ்வார் திருநகரி, கட்டிக்குளம் அருள்மிகு சூட்டுக்கோல் சித்தர் ஸ்ரீ மாயாண்டி சுவாமிகளின் 95 ஆவது குருபூஜை விழா செப்டம்பர் 28 (ஞாயிற்றுக்கிழமை) நடைபெற உள்ளது.

## அறிவோம்!

சரஸ்வதிக்கு தனிக் கோயில் தமிழ்நாட்டில் இரண்டே இடத்தில் தான் உள்ளது. ஒன்று திருவாரூர் மாவட்டத்தில் உள்ள கூத்தனூர் சரஸ்வதி கோயில். மற்றொன்று திருநெல்வேலி டவுனில் காந்திமதி அம்மன் கோயிலின் எதிர்புறம் கீழரதவீதியில் உள்ள ஸ்ரீ விஜய சரஸ்வதி கோயில்.

சக்தியின் முக்கிய பீடங்கள்: காசியில் விசாலாட்சி பீடம், நைமிசாரண்யத்தில் லிங்க தாரிணி பீடம், பிரயாகையில் லலிதாபீடம், அத்தினாபுரத்தில் ஜெயந்தி பீடம், கன்னியாகுப்தத்தில் கௌரி பீடம், தானேஸ்வரத்தில் பவானி பீடம், ஸ்ரீசைலத்தில் மாதவி பீடம், சாலக்கிராமத்தில் மகாதேவி பீடம், கயாவில் மங்களா பீடம் மற்றும் ஜலந்தரில் விஸ்வமுகி பீடம்.

திருக்கழுக்குன்றம் கோயிலில் ஸ்ரீ திரிபுரசுந்தரி அம்மனுக்கு ஆண்டில் ஆடிப்பூரம், பங்குனி உத்திரம், நவராத்திரி நவமி ஆகிய மூன்று நாள்களில் மட்டுமே முழு அபிஷேகம் செய்யப்படுகிறது. நாள் தோறும் பாத பூஜை மட்டுமே நடைபெறுகிறது.

அம்பிகையின் மறு பெயர் காளிகா தேவி. இவள் நீல நிறமுடையவள். கையில் கொஞ்சம் நீரை எடுத்துப் பார்த்தால் அது நிறமற்றதாக இருக்கிறது. ஆனால், அதே நீர் பரந்த கடலில் நீல நிறத்துடன் காட்சியளிக்கிறது. அதே போல் தான் அன்னை பராசக்தி எனும் அம்பிகை எங்கும் சக்தியின் தோற்றமே என்பதை உணர்த்தவே நீல நிறத்தில் காட்சி தருகிறாள்.

கர்நாடக மாநிலம், கொல்லூர் என்னும் திருத்தலத்தில் உள்ள மூகாம்பிகை திருக்கோயிலில் தேவியின் சிலைக்கு அபிஷேகமோ பூஜைகளோ செய்வது கிடையாது. எல்லா ஆராதனைகளும் சுயம்பு லிங்கத்திற்கே செய்யப்பட்டு வருகின்றன. இன்றும் கூட இந்தக் கோயிலில் வழிபாடுகளும் ஆராதனைகளும் ஆதிசங்கரரால் உருவாக்கப்பட்ட ஆகம சாஸ்திர முறைகளை பின்பற்றியே நடத்தப்படுகின்றன.

–ஆர்.ஜெயலட்சுமி, திருநெல்வேலி.

DINAMANI, Chennai Phone: 23457601 Fax: 044-23457619 RNI Reg. No. 3459/60 Printed and Published by R.K. Jhunjhunwala on behalf of Express Publications (Madurai) Private Limited., at Express Press, 'Express Gardens', 29, Second Main Road, Ambattur Industrial Estate, Chennai - 600 058. ஆசிரியர்: கே. வைத்தியநாதன் - Editor: K.Vaidiyanathan Chennai. Vol. 92, No. 261
COPYRIGHT: Express Publications (Madurai) Private Limited., All rights reserved. Reproduction in any manner, electronic or otherwise, in whole or in part, without prior written permission is prohibited.